# சொல்லிலக்கணக் கோட்பாடு

டாக்டர் செ. வை. சண்முகம்

# சொல்லிலக்கணக் கோட்பாடு

# 1

## தொல்காப்பியம்

### முதல் பகுதி

டாக்டர் செ. வை. சண்முகம்
பேராசிரியர், மொழியியல் உயர்ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழகம்
அண்ணாமலைநகர்
1984

செங்குந்தபுரம் வைத்திலிங்கம் சண்முகம் (1932)
அனைத்திந்திய தமிழ்மொழியியல் கழக வெளியீடு - 24
உரிமை ஆசிரியருக்கே
முதல்பதிப்பு - 1984
**விலை ரூ. 22**

## ஆசிரியரின் பிறநூல்கள்

1) Naccinarkkiniyar's conception of phonology
2) The language of Tamil Inscriptions:1250-1350 A.D. (co-author)
3) Dravidian Nouns (a comparative study)
4) Third Seminar on Dravidian Linguistics (co editor)
5) Indonesian Studies
6) Aspects of language development in Tamil
7) சுவாமிநாதம் (உரையும் பதிப்பும்)
8) சுவாமிநாதம் மூலமும் விருத்தி உரையும் (பதிப்பு)
9) எழுத்துச் சீர்திருத்தம்
10) எழுத்துச் சீர்திருத்த மலர் (இணை பதிப்பர்)
11) எழுத்திலக்கணக் கோட்பாடு

### கிடைக்கும் இடங்கள்

1) அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம்
அண்ணாமலைநகர் - 608002
2) திருவேரகம்
194, மாரியப்பா நகர், அண்ணாமலைநகர் - 608002
3) பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 600001
4) மீனாட்சி புத்தக நிலையம்
50, மேல கோபுரத் தெரு, மதுரை - 625001
5) மணிவாசகர் நூலகம்
மேல சன்னதி, சிதம்பரம் - 608001

அச்சிட்டோர்: கே. பி. டி. இண்டஸ்ட்ரி, அண்ணாமலைநகர்.

# அணிந்துரை


**டாக்டர் இ. அண்ணாமலை**

இயக்குநர்

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

மைசூர்


தமிழின் முதல் இலக்கணநூலான தொல்காப்பியத்தின் இலக்கண மரபு இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து போற்றப்பட்டு, பேணப்பட்டு வந்திருக்கிறது. சங்க காலத்துக்குப் பின் பாடும் பொருளும் செய்யுள் வகைகளும், இலக்கிய வடிவங்களும் மாறி இலக்கியக் கொள்கை மரபு தொடர்பறுந்து விட்டதைப் பொருளதிகாரத்தைப் பற்றிய இறையனார் அகப்பொருள் உரைச் செய்தி உணர்த்துகிறது. இதற்கு மாறாக எழுத்தையும் சொல்லையும் பற்றிய இலக்கணக் கொள்கை மரபு தொடர்ந்து காக்கப்பட்டு வந்திருக்கிறது. இலக்கியத்தில் போல் மொழியில் பெரும் மாறுதல் ஏற்படாததும் இலக்கணத்தின் நோக்கத்தில் மாறுபாடு எழாததும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தமிழ் வரலாற்றில் தொல்காப்பிய ஆராய்ச்சி சில குறிப்பிட்ட காலங்களில் முனைப்பாக இருந்திருக்கிறது. தொல்காப்பியத்தை ஒட்டியும் மாறுபட்டும் எழுதிய இலக்கண நூல்களாலும் அதை விளக்க எழுதிய உரைகளாலும் தொல்காப்பிய ஆராய்ச்சி வெளிப்படுகிறது. தொல்காப்பியம் எழுதிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் இடைக்காலத்தில் வடமொழி மரபுகளின் தாக்கம் வலுத்த போது தொல்காப்பிய உரைகளும் புது இலக்கண நூல்களும் பலவாக எழுந்தன. இடைக்காலத்தில் மொழியில் ஏற்பட்ட சில பெரிய மாற்றங்களும் இங்கே குறிப்பிடத்தக்கன.

தற்காலத்தில் ஆங்கில மொழிநூல் மரபுகளின் தாக்கம் பரவியிருக்கும் போது மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி முனைப்பாக நடை பெறுகிறது. தற்காலத்தில் மொழியிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தொல்காப்பிய ஆராய்ச்சியில் இரண்டு வகையான போக்குகளைக் காணலாம். ஒன்று, தொல்காப்பியத்தைத் தமிழ் இலக்கண மரபு வழியே விளக்குவது. மற்றொன்று அதை இக்கால மொழியியல் கொள்கைகளோடு ஒப்பிட்டும் பழைய வடமொழி இலக்கண

நூல்களோடு – முக்கியமாகப் பாணினியத்தோடு ஒப்பிட்டும் விளக்குவது. இரண்டு வகையிலும் பல ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள், பட்ட ஆய்வேடுகள் எழுதப்பட்டிருக்கின்றன; கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. வளர்ந்துவரும் தொல்காப்பிய இலக்கியத்தை அளவீடு செய்து நிறுவப்பட்ட உண்மைகளை வகைப்படுத்தி இன்னும் ஆராய வேண்டிய பகுதிகளை இனங்காண்பது இன்றைய தேவையாகும். இந்தத் தேவையை இந்நூல் ஓரளவு முக்கியமாக உரையாசிரியர்களின் கருத்துக்களைப் பொறுத்தவரை நிறைவு செய்கிறது.

தொல்காப்பியம் தமிழுக்கு இலக்கண விதிகளைக் கூறுகிற நூல்; இந்த விதிகள் ஒரு பொதுவான இலக்கணக் கொள்கையின் அடிப்படையில் எழுந்திருக்கவேண்டும். இந்தக் கொள்கையைப் புலப்படுத்துவது தொல்காப்பியத்துக்கு மொழியியல் வரலாற்றில் உள்ள இடத்தைக் காணத் துணை செய்யும். இக்கொள்கையை இக்கால மொழியியல் கொள்கைகளின் மூலம் அணுகாமல் தொல்காப்பியருடைய சிந்தனை வழியே பார்த்தால்தான் தொல்காப்பிய உண்மை வெளிப்படும். இந்த உண்மைத் தேடலுக்குத் தொல்காப்பியரின் கலைக் கருத்துக்களைத் (concepts) தெளிவுபடுத்துவது அவசியம். இதற்குக் கருவியாகத் தொல்காப்பியரின் கலைக் கருத்தகராதி (dictionary of concepts) ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். தொல்காப்பியர் ஒரே கலைச் சொல்லை, பின்னாள் இலக்கண ஆசிரியர்களும், இந்நாள் மொழியியலாளர்களும் வேறுபடுத்தும் ஒன்றுக்கு மேற்பட்ட கலைக் கருத்துக்களைக் குறிக்கப் பயன்படுத்தியிருக்கிறார். இந்நூலில் இயற்பெயர் பற்றிய விவாதம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு 'சொல்' என்ற கலைச் சொல்லைப் பல பொருளில் தொல்காப்பியர் வழங்குவதை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. தொல்காப்பியரின் இந்த வழக்குக்கு நாம் காணும் விடை அவரது இலக்கணக் கொள்கைக்குத் திறவு கோலாக அமையும்.

தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கையைத் தெரிந்து கொள்ள கலைக் கருத்துக்கள் போன்ற அகநிலைச் செய்திகள் மட்டுமல்லாமல் இயல், நூற்பா இவற்றின் வைப்புமுறை, ஒரு இலக்கணக் கூற்றை விரித்துக் கூறல் போன்ற புறநிலைச் செய்திகளையும் இந்நூல் பயன்படுத்துகிறது. இன்றைய மொழியியல் ஒரு இலக்கணத்தில் கூறவிரும்பும் எல்லாச் செய்திகளையும் தொல்காப்பியம் கூறவில்லை. ஆனால் சில செய்திகளையும் மிக விரிவாக விவரிக்கிறது. எழுவாயும் பயனிலையும் பால் காட்டும் தன்மை (concord) பற்றி மற்ற இலக்கணக் கூறுகளோடு ஒப்பிடும்போது, அளவுக்கு அதிகமாகவே தொல்காப்பியம் விவரிக்கிறது. இந்த விவரணைக்காகப் பெயர்களின் திணை, பால் பாகுபாடு பற்றிப் பல இடங்களில் விரிவாகப் பேசுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட திணை காட்டும் பெயர்கள் (விரவுத் திணை),

ஒன்றுக்கு மேற்பட்ட எண்காட்டும் பெயர்கள் (பால்பகா அஃறிணை) என்றெல்லாம் புதியகலைக்கருத்துக்களைஉருவாக்குகிறது. இதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். தமிழை வடமொழியோடு ஒப்பிட்டு நோக்கிய நோக்கில் இரண்டு மொழிகளிலும் பால் பாகுபாடு வேறுபடுவதால் இதற்குத் தொல்காப்பியர் தம் இலக்கணத்தில் இவ்வளவு இடம் கொடுத்திருக்கலாம் என்ற ஒரு கருத்தை இந்நூல் தெரிவிக்கிறது. தொல்காப்பியம் திணை, பால் பாகுபாடு பயனிலையில் வெளிப்படுவதையே விரிவாகப் பேசுகிறது. வடமொழியிலும் பயனிலை பால்பாகுபாட்டை வெளிபடுத்து கிறது. அதனால் பாகுபாட்டு வேறுபாடு காரணமாக இருந்திருக்கலாம் என்பதைவிட வேறு காரணம் இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழில் ஒரு பகுதிப் பேச்சு வழக்கில் (இன்றைய மலையாளம் போல, 'வந்தென' என்பது போன்ற சிறுபான்மை சங்க இலக்கிய வழக்குப் போல) பயனிலை பால் வேறுபாடு காட்டாத நிலை இருந்திருக்கலாம்; செந்தமிழ் வழக்கை வலியுறுத்த எழுந்த தொல்காப்பியம் திணை, பால் பாகுபாட்டையும், அது பயனிலையில் வெளிப்படுவதையும் வலியுறுத்தியிருக்கலாம். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் எழுத்து வடிவங்களைப் பற்றிக் கூறும் சில செய்திகள் அவர் கால பிராமி எழுத்துக்களின் வரி வடிவையும், அந்த எழுத்து முறையைத் தமிழை எழுதப் பயன்படுத்தியபோது எழுந்த சில இடர்ப்பாடுகளையும் காணும்போது தெளிவு பெறுகின்றன என்ற செய்தியும் இங்கு நினைவுகூரத் தக்கது. செந்தமிழ் வழக்கை அவர் காலத்தில் பயன்படுத்திய பிராமி எழுத்தில்நிலைபெறவைக்கத் தொல்காப்பியர் தனிக் கவனம் செலுத்தியிருக்கலாம். எழுத்துக்கள் மயங்கி வருவதைப் பற்றித் தொல்காப்பியர் விரிவாகப் பேசுவதையும் பிராமி எழுத்து முறையில் மெய்மயக்கம் கூட்டெழுத்தாக (Conjunct letter) வரத் தமிழ் எழுத்து முறையில் மெய்கள் தனித்தனியாக வரும் என்ற செய்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம் இந்த ஊகங்களை உறுதிப்படுத்துவதற்கு பிராமிக் கல்வெட்டுகளில் உள்ள தமிழ் மொழியின் இலக்கணக் கூறுகள் பற்றியும், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளின் இலக்கணக் கூறுகள் பற்றியும் பல ஆராய்ச்சிச் செய்திகள் நமக்குத் தெரிய வேண்டும்.

தொல்காப்பியரின் இலக்கிய கொள்கையைத் தெரிந்து கொள்ள அவரது காலம் பற்றியும் அவரது இலக்கண நோக்கம் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. எந்த அறிவுக் கொள்கையும் ஒரு கால கட்டத்தின் சமூகச் சூழ்நிலையையும் தத்துவக் கோட்பாட்டையும் பிரதிபலிக்கும். மொழிபற்றிய இலக்கணக் கொள்கையும் இதற்கு விலக்கல்ல. முக்கியமாக இலக்கணம் தத்துவ, நியாய (logic) விசாரணைகளின் ஒரு பகுதியாகவே வளர்ந்திருக்கிறது. எனவே, இந்நூலில் குறிப்பிட்டிருப்பதைப் போல தொல்காப்பியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள அதன் காலச் சமூக, அறிவியல் சூழலைப் பற்றித் தெரிந்து

கொள்ள வேண்டும். இந்த ஆராய்ச்சி இன்றும் முழுமை அடைய வில்லை.

தொல்காப்பிய இலக்கணக் கொள்கையைப் பேராசிரியர் சண்முகம் உரையாசிரியர்களின் கருத்துக்களை விமர்சனத்தோடு ஒப்பிட்டும், தற்கால மொழியியல் அறிவின் பக்க பலத்தோடும் காண முயல்கிறார். இவர் கருத்திலும் நடையிலும் உள்ள தெளிவும், ஆராய்ச்சி நெறியில் காட்டும் வன்மையும் இந்த முயற்சியில் பெரும் வெற்றியைத் தருகின்றன. எழுத்திலக்கணக் கோட்பாட்டின்பின் அவர் எழுதியுள்ள இந்த சொல்லிலக்கணக் கோட்பாட்டில் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு, சொல்லின் பாகுபாடு, பெயரின் பாகுபாடு என்ற இலக்கணக் கூறுகள் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. சொல்லிலக்கணத் தில் உள்ள மற்றைய இலக்கணக் கூறுகளையும் பேராசிரியர் சண்முகம் இன்னொரு நூலாக எழுதினால் அது தமிழ் இலக்கண ஆராய்ச்சிக்கும், புதிய மொழியியலுக்கு இந்திய மரபிலக்கணம் தரக்கூடிய கொடைக்கும் செய்யும் தொண்டாகும்; பழமையை யும் புதுமையையும் கலந்து தமிழுக்குப் புதிய இலக்கண மரபு அமைக்கவும் அடிகோலும்.

மைசூர்
16—5—84

**இ. அண்ணாமலை**

# முன்னுரை

இலக்கண ஆராய்ச்சியில் எழுத்ததிகாரத்தைவிட சொல்லதிகாரம் பரந்து விரிந்தது. எழுத்ததிகாரத்தைப் போலவே சொல்லதிகாரத்துக்கும் தொல்காப்பியர் ஒன்பது இயலே அமைத்திருந்தாலும் சொல்லதிகாரத்தின் சிறப்பு ஆய்வுலகில் இரண்டு விதத்தில் புலனாகிறது. ஒன்று தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவர் மட்டுமே உரை எழுதியிருக்க சொல்லதிகாரத்துக்கு அந்த இருவரோடு சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய மூவரும் உரை கண்டுள்ளார்கள். பின்னுள்ள மூவரும் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை எழுதியுள்ளார்கள் என்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது இரண்டு: பிற்கால இலக்கணங்களில் சில (வீரசோழியம், நேமிநாதம்) எழுத்ததிகாரத்தை ஒரு இயலாகவும் சொல்லதிகாரத்தை பல இயல்களாகவும் (வீரசோழியம் ஆறு படலம்; நேமிநாதம் ஒன்பது இயல்) விவரித்துள்ளன; வேறு சில இலக்கணங்கள் (இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம்) எழுத்ததிகாரத்தைச் சொல்லதிகாரத்தின் ஒரு கூறாய் (இலக்கணக் கொத்து வேற்றுமையியல், வினையியல், ஒழியியல் என்ற மூன்று இயல்களைக் கொண்டு வேற்றுமையியலின் துவக்கத்தில் எழுத்ததிகார சில செய்திகளை வருணித்துள்ளது; பிரயோகவிவேகம் காரகம், சமாசம், தத்திதம், திங்ஙு என்ற நான்கு படலங்களைப் பெற்று காரக படலத்தின் ஆரம்பத்தில் சில எழுத்திலக்கண உண்மைகளை விளக்கியுள்ளது) அமைத்துக் கொண்டுள்ளது. இந்த உண்மையைச் சிவஞான முனிவர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) வேறுவிதமாகக் கூறியுள்ளார். சேனாவரையர் ஏன் எழுத்ததிகாரத்துக்கும் உரை எழுதவில்லை என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு பதில் கூறும்போது எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் போல அதிக பயன்தராது என்று சொன்னதன் மூலம் (அவர் சேனாவரையர்) சொல்லதிகாரம் போலப் பெரும்பயன்

படாமை கருதி எழுத்ததிகாரத்துக்கு உரை செய்யாது விடுத்தார் – முதல் சூத்திர விருத்தி பக். 28) அதன் சிறப்பைப் புலப் படுத்தியுள்ளார். மொழியியலாரும் இந்தக் கருத்தினரே. எனவே தான் சொல்லிலக்கண ஆய்வு விரிவானதாகவும் சிக்கல் நிறைந் ததாகவும் இன்றும் கருதப்படுகிறது.

இந்த உண்மைக்கு ஏற்பவே சொல்லிலக்கணக்கோட்பாடு பல தொகுதிகளாக எழுதவேண்டி நேரிட்டது. தொல்காப்பிய சொல்லதிகாரம் பற்றி மட்டும் மூன்று தொகுதிகளும் பிற இலக் கணங்களின் சொல்லதிகாரம் பற்றி மூன்று தொகுதிகளும் வெளி யிடலாம் என்று எண்ணியுள்ளேன்.

தொல்காப்பியம் பற்றிய முதல் தொகுதியில் நான்கு கட்டு ரைகள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியரின் 'சொல்' என்ற முதல்கட்டுரை 'சொல்' என்பதன் பலவேறு பொருள்கள் அந்தப் பொருளையெல்லாம் உணர்த்தும் பிற சொற்கள் சொல்லதி காரக்களன்; வருணனைமுறை; சொல்லதிகார அமைப்பு ஆகிய வற்றை விளக்குகிறது. அடுத்த கட்டுரையான 'சொல்பாகுபாடு' தொல்காப்பியத்தில் காணப்படும் பல வகையான பாகுபாடுகளை யும் மூன்றாவது கட்டுரை திணை - பால் பாகுபாடுகளையும் நான்காவது கட்டுரை விரவுத்திணை பற்றியும் விவாதிக்கிறது.

இந்நூல் வெளியிட பல வகையாலும் உதவியவர்களுக்கு நன்றி கூறுவது என் கடன்.

மொழியியல் ஆராய்ச்சியில் இன்று தமிழுக்குச் சிறப்பாகச் செய்ய வேண்டிய பணி புதிய இலக்கணம் எழுதுவதே ஆகும். ஒரு கிளை மொழிக்கோ, தனி நூலுக்கோ இலக்கணம் எழுதா மல் மொழி முழுவதுக்குமோ மொழியின் ஒரு காலகட்டத் துக்கோ இலக்கணம் எழுதுவதே இன்றைய தலையாய கடமை ஆகும். இதை மனதில் கொண்டு சங்கத்தமிழுக்கும் தெய்வத் தமிழுக்கும் (இடைக்காலத்தமிழுக்கும்) பல தொகுதிகளாக இலக் கணம் எழுதும் பெரிய பணியில் ஈடுபட்டிருக்கும் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் பலரும் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும் என்று விரும்பி உதவி செய்பவர்கள். ஊக்கம் தருபவர்கள். அவர்

கள் மணிக்கணக்கில் என்னோடு விவாதித்து கருத்துத் தெரிவிக்கும் ஒட்டத்துக்கும் செய்த உதவிகள் என் நெஞ்சை விட்டு அகலாதவை. அப்படியே என்னுடன் பணியாற்றும் டாக்டர். ந. குமாரசாமிராஜாவும் பணியாற்றிய டாக்டர். க. பாலசுப்பிரமணியனும் (தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை) விவாதத்தின் மூலம் என் கருத்துத் தெளிவுபெற வகைசெய்தார்கள். புலவர் சோம. இளவரசு கையெழுத்துப் பிரதி முழுவதும் படித்துப் பார்த்து உதவினார். டாக்டர் சு. சக்திவேல் அச்சுப்பிழைகளைத் திருத்துவதில் துணை நின்றார். இந்த நூலுக்கு நல்லதொரு அணிந்துரை நல்கியுள்ளார் டாக்டர். இ. அண்ணாமலை. இவர்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றி உரியது.

அனைத்திந்திய மொழியியல் கழகம் தன்னுடைய இதழான மொழியியலில் என்னுடைய இலக்கணக்கட்டுரைகளை வெளியிட்டு ஊக்குவித்ததோடு இந்த நூலை அதன் வெளியீடுகளில் ஒன்றாக ஏற்கவும் முன்வந்துள்ளது. ஆராய்ச்சியே தனக்குப் புகழ் தேடித்தரும் என்று உணர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தன்னுடைய ஆசிரியர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு எல்லாவகையானும் உதவி செய்து வருகிறது. மேலும் அது இந்த நூல் வெளியிட அனுமதி அளித்து என்னை ஊக்குவித்துள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் என் நன்றியும் கடப்பாடும் என்றும் உரியது.

அச்சுப்பிரதியை தயாரிப்பதில் உதவி செய்த மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவர்களான திருவாளர்கள் சு. கிருஷ்ணமூர்த்தி, இரா முரளி, அரங்க. வாசு, செல்வியர்கள் மு. சுசிலா, அ. பூலோகரம்பை ஆகியவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

நூலைச் செம்மையாகவும் விரைவாகவும் அச்சிட்டுத் தந்த கே.பி.டி. இண்டஸ்ட்ஸீக்கும் என் நன்றி.

அண்ணாமலைநகர்
21—5—84

**செ. வை. சண்முகம்**

# உள்ளுறை

*முன்னுரை*

*அணிந்துரை*

*உள்ளுரை*

**1. தொல்காப்பியரின் 'சொல்' 1 — 54**

| | | |
|---|---|---|
| 1.0 | முன்னுரை | 1 |
| 1.1 | 'சொல்'லின் பொருள் | 1 |
| 1.1.1 | 'சொல்' உணர்த்தும் பிற சொற்கள் | 2 |
| 1.2 | கீழ் எல்லையும் மேல் எல்லையும் (களன்) | 4 |
| 1 3 | வருணனை முறை | 8 |
| 1.3.1 | உரையாசிரியர்கள் கருத்து | 8 |
| 1.3.2 | வடிவத்திலிருந்து பொருள் | 9 |
| 1.3.3 | பொருளிலிருந்து வடிவம் | 11 |
| 1.4 | சொல்லின் இலக்கணம் | 12 |
| 1.4.1 | எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன | 12 |
| 1·4.1.1 | தனிமொழியின் பொருள் | 12 |
| 1.4 1.2 | தொடர்மொழியின் பொருள் | 15 |
| 1.4 2 | சொல்லுக்கும் பொருளுக்கும் உறவு | 18 |
| 1.5 | பொருளும் வடிவமும் | 20 |
| 1.5.1 | இளம்பூரணர் | 20 |
| 1.5.2 | சேனாவரையர் | 21 |
| 1.5.3 | தெய்வச்சிலையார் | 22 |
| 1.5 4 | அந்தச் சூத்திரமும் இந்தச் சூத்திரமும் | 23 |
| 1 6 | பொருள் பாகுபாடு | 24 |
| 1.7 | வைப்பு முறை | 27 |
| 1.8 | சொல்லதிகார அமைப்பு | 34 |
| 1.8.1 | உருபனியல் நோக்கு | 34 |
| 1.8.1.1 | இளம்பூரணர் | 34 |

1.8.1.2 சேனாவரையர் 37
1.8.2 தொடரியல் நோக்கு 45

## 2. சொல் பாகுபாடு 55 — 113

2.0 பாகுபாடுகள் 55
2.1 அமைப்பு 55
2.1.1 சிறப்பு உடையது/ சிறப்பில்லாதது 56
2 1.2 தோன்றுதற்கு இடம் 57
2.1.3 இருவேறு வகைகள் 59
2.3 எழுத்து 61
2.4 பொருள் 62
2.5 பண்பாடு 63
2.6 சொற் பொருளியல் 63
2.7 செய்யுள் ஈட்டச் சொல் 64
2.7.1 செய்யுளும் வழக்கும் 65
2.7.2 இயற்சொல் 65
2.7.2.1 நிலைமொழி 65
2.7.2.2 மொழிப் பொதுமை 73
2.7.3 திரிசொல் 75
2.7.3.1 திரிந்த சொல் 75
2.7.3.2 கட்டிய வழக்கு 82
2.7.4 திசைச்சொல் 86
2.7.4.1 நிலைமொழியின் வேறுபட்டது கிளைமொழி 86
2 7.4.2 பொதுச் சொற்கள் அல்லாதவை 89
2.7.4.3 தமிழகத்தைச் சார்ந்த பிற நாட்டு மொழிகள் 91
2.7.4.4 நிலைமொழியை ஒட்டிய கிளைமொழிகளும் அதை ஒட்டிய பிறமொழிகளும் 94
2.7.5 வடசொல் 94
2.7.5.1 தற்சமம்/தற்பவம் 95
2.7.5.2 கடனாளப்பட்ட வடசொற்களின் நிலை 97
2.7.5.3 தற்பவம்/தற்சமம் 104
2.7.6 செய்யுள் ஈட்டச் சொல்லும் சொல்வகையும் 106
2.7.7 பாகுபாட்டின் அடிப்படை 111

## 3. திணை - பால் பாகுபாடு


| | | |
|---|---|---|
| 3.0 | முன்னுரை | 114 |
| 3.1 | சொல்வகைப்பாடு | 115 |
| 3.2 | இலக்கணக் கூறுகள் | 116 |
| 3.3 | சொல்வகைப்பாடும் இலக்கணக் கூறுகளும் | 116 |
| 3.4 | திணை - பால் பாகுபாட்டு முறை | 117 |
| 3.4.1 | இளம்பூரணர் முறை | 118 |
| 3.4.2 | தெய்வச்சிலையார் முறை | 119 |
| 3.5 | பாகுபாட்டின் அடிப்படை | 122 |
| 3.5 1 | தொல்காப்பியர் | 123 |
| 3 5.2 | இளம்பூரணர் | 123 |
| 3.5.3 | சேனாவரையர் | 125 |
| 3.5.4 | நச்சினார்க்கினியர் | 125 |
| 3.5.5 | தெய்வச்சிலையார் | 126 |
| 3.5.6 | கால்டுவெல் | 128 |
| 3 5.7 | சண்முகதாஸ் | 130 |
| 3.5.8 | தொல்காப்பியச் சான்றுகள் | 134 |
| 3.6 | திணை - பால் பாகுபாடும் தொல்காப்பியமும் | 136 |
| 3 6.1 | பெயரும் 'வினையும் திணை - பால் உணர்த்தும் முறை | 137 |
| 3.6 2 | சிறப்புடைய சொல் வகைப்பாடு | 138 |
| 3 6.3.1 | உரையாசிரியர்கள் | 138 |
| 3.6.2.2 | மொழியியல் நோக்கில் | 139 |
| 3.6.2 3 | தொல்காப்பியச் சான்று | 141 |
| 3.7 | பெயரியல் - வினையியல் வருணிக்கும் முறை | 142 |
| 3.7.1 | பெயரியல் - வினையியல் வருணனை ஒற்றுமை | 142 |
| 3.7.2 | குறை நிறைகள் | 142 |
| 3.8 | வருணனையில் உள்ள பாகுபாடு | 148 |
| 3.8.1 | தன்மை - உயர்திணை | 148 |
| 3 8.2 | எல்லாம் - விரவுத்திணை | 151 |
| 3.8.3 | முன்னிலை - விரவுத்திணை | 151 |
| 3.8.4 | எல்லீரும் - உயர்திணை | 152 |
| 3.8.5 | உயிரிகள் விரவுத்திணையா | 152 |
| 3.8 6 | தன்மையும் முன்னிலையும்: புதுநோக்கு | 154 |
| 3.8.7 | புறக்கணிப்புக்குக் காரணம் | 156 |

3.9 முடிவுரை 159

**4. விரவுத்திணை 160 — 229**

4.0 பெயர் விளக்கம் 160
4.1 விரவுத்திணைச் சொற்கள் 161
4.1.1 இயற்பெயர் 162
4.1.1.1 தொல்காப்பியர் பயிற்சி 165
4.1.1.2 மொழியியல் நோக்கு 167
4.1.1.3 இலக்கியப் பயிற்சி 168
4.1 1.4 ஒருமை இயற்பெயர் 171
4.1.1.5 பன்மை இயற்பெயர் 171
4.1.1.6 இயற்பெயர்களின் சிறப்புப் பண்பு 173
4.1.2 சினைப்பெயர் 176
4.1.3 சினைமுதற்பெயர் 181
4.1 4 முறைப்பெயர் 183
4.2 சினைவிரவி வரும்முறை 183
4.2.1 பெண்மை சுட்டிய பெயர்கள் 183
4.2.2 ஆண்மை சுட்டிய பெயர்கள் 184
4.2.3 ஒருமை சுட்டிய பெயர்கள் 186
4.2 4 பன்மை சுட்டிய பெயர்கள் 186
4 2.5 தான்/தாம் 186
4 2.6 எல்லாம் 187
4.2.6.1 இளம்பூரணர் 187
4.2.6.2 தெய்வச்சிலையார் 187
4 2.6.3 சுப்பிரமணிய சாஸ்திரி 188
4.2 7 முன்னிலை 189
4.2 7.1 தொல்காப்பியர் 190
4.2.7.2 இளம்பூரணர் 190
4.2 7.3 சேனாவரையர் 191
4 2.7.4 தெய்வச்சிலையார் 191
4.3 இலக்கண அடிப்படை 195
4.3.1 இலக்கணமும் உலகப்பொருளும் 196
4 3.2 உரையாசிரியர்கள் 197
4 3.2.1 இயற்பெயர் முதலியன 197
4.3.2.1.1 இளம்பூரணர் 197
4.3.2.1.2 சேனாவரையர் 199

| | | |
|---|---|---|
| 4.3.2.2 | தான்/தாம் | 203 |
| 4.3.2.3 | எல்லாம் | 204 |
| 4.3.2.4 | நீயிர் | 208 |
| 4.3.2.5 | விரவுவினைகள் | 209 |
| 4.3.3 | தொல்காப்பியர் | 211 |
| 4.4 | பிற இலக்கணக் கூறுகளில் விரவு | 218 |
| 4.5 | வழக்கும் இலக்கணமும் | 222 |
| 4.5.1 | இயற்பெயர் | 223 |
| 4.5.2 | முறைப்பெயர் | 225 |
| 4.5.3 | சினைப்பெயர் | 227 |
| 4.5.4 | சினை முதற்பெயர் | 228 |
| | **துணை நூல்கள்** | **231–40** |

# I. தொல்காப்பியரின் ‘சொல்’

## 1.0 முன்னுரை

சொல்லதிகாரத்தின் ஆராய்ச்சிப் பொருள் ‘சொல்’ என்பதே அது கலைச்சொல்லாய் இலக்கணப் பொருளில்தான் இங்கு குறிப்பிடப்படுகிறது என்பதைச் சுட்டவே தலைப்பில் மேற்கோள் குறி இடப்பட்டிருக்கிறது. அந்தச் ‘சொல்’ தொல்காப்பியத்திலேயே பல பொருளில் கையாளப்பட்டிருப்பதும் அந்தப் பொருளைக் குறிக்க வேறு சில சொற்கள் பயன்பட்டிருப்பதும் குறிப்பிடத்தகுந்தது.

‘சொல்’லின் பல பொருளையும் அதற்குரிய பிற சொற்களையும் உணருவது சொல்லதிகார ஆராய்ச்சியில், களன், வருணனை முறை, அமைப்பு முறை போன்ற சொல்லதிகாரம் பற்றிய பல பொது உண்மைகளைச் சரியான முறையில் அறிந்து கொள்ள உதவி செய்யும்.

## 1.1 ‘சொல்’லின் பொருள்

‘சொல்’ என்பது நான்கு விதப் பொருளில் தொல்காப்பியத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (திண்ணப்பன், 1972:381). அவையாவன:

1) உருபன் (morpheme) — னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (கிளவி-6)

2) அடிச்சொல் (root) — ஔவென வரூஉம் உயிரிறு சொல் (எழுத்து - 152); தருசொல், வருசொல் (கிளவி - 29)

3) ஒட்டுநிலைச்சொல் (suffix) — அம், ஆம், எம், ஏம்…… பன்மையுரைக்கும் தன்மைச்சொல்லே (வினை - 5)

4) வார்த்தை (word) - நிறுத்த சொல்லே (எழுத்து- 107.6) செய்யும், செய்த என்னும் சொல்லே (வினை - 26)

மேலும் 'தொடர்மொழி' (phrase) என்ற பொருளில் ஓரிடத்தில் 'சொல்' பயன்படுத்தப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது. 'வண்ணச்சினைச்சொல்' (கிளவி – 26) என்பதற்கு உரையாசிரியர்கள் 'செங்கால்நாரை' என்பதனை உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். இது ஒரு தொடர்மொழியே ஆகும். வினையியலில் 'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எம்முறைச் சொல்லும்' (44) என்பதற்குப் பொருள் (object) என்றே உரையாசிரியர்கள் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தகுந்தது

## 1.1.1 'சொல்'லை உணர்த்தும் பிற சொற்கள்

'கிளவி, சொல், மொழி என்னும் தொடக்கத்தன எல்லாம் ஒரு பொருட் கிளவி' என்று சேனாவரையரே (கிளவி-1) குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று சொற்களில் 'கிளவி' என்பது தொல்காப்பியத்தில் (தொல்காப்பியம் முழுமையிலும்) வார்த்தை என்ற பொருளில் மிகுதியான ஆட்சி பெறுகிறது. எஞ்சிய இரண்டினுள் மொழி என்பது எழுத்ததிகாரத்திலும் 'சொல்' என்பது சொல்லதிகாரத்திலும் மிகுதியாக ஆட்சி பெறுகின்றது என்று திண்ணப்பன் சுட்டிக் காட்டியுள்ளார்.[1] ஆயினும் சொல்லதிகாரத்தில் 'எழுத்து' என்பதும் விகுதி (ஒட்டுநிலைச் சொல்) என்ற பொருளில் இரண்டு தடவை (கிளவி-10; இடை-22) வந்துள்ளதும் குறிப்பிடத் தகுந்தது.

---

1 பாலசுப்பிரமணியன் (1981ஆ) அகராதிப்படி கிளவி என்பது கிட்டத்தட்ட 280 தடவையும் 'சொல்' என்பது 134 தடவையும் 'மொழி' என்பது 128 தடவையும் கலைச்சொல்லாய் வந்துள்ளன.

'கிளவி' என்பது ஏழு பொருளிலும் 'மொழி' என்பது நான்கு பொருளிலும் பயின்று வந்துள்ளன. (திண்ணப்பன்: ஷை) அவை யாவன:

கிளவி:

| | |
|---|---|
| 1) எழுத்து | 'சகரக் கிளவி' (எழுத்து-62) |
| 2) அடிச்சொல் | 'ஈயென் கிளவி' (எச்சம்-49) |
| 3) வார்த்தை | 'செய்யும், செய்த என்னும் கிளவி' (எழுத்து-482) |
| 4) ஒட்டுநிலைச் சொல் | 'வினையெஞ்சு கிளவி' (வினை-25.2)<br>'மாரைக் கிளவி' (வினை-10.1) |
| 5) தொகை (Compound) | 'பெண்மையடுத்த மகன் என் கிளவி' (பெயர்-9.2) |
| 6) சொற்றொடர் (வாக்கியம்) | 'இது செயல் வேண்டும் என்னும் கிளவி' (வினை-46.1) |
| 7) பொருள் (object) | 'பால்மயக்குற்ற ஐயக் கிளவி' கிளவி-23 (உரையாசிரியர்கள்) |

மொழி:

| | |
|---|---|
| 1) வார்த்தை | குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபிலவே (எழுத்து – 44)<br>முன்மொழி (எச்சம்-23.2) |
| 2) அடிச்சொல் | அழனே புழனே ஆயிரு மொழிக்கும் (எழுத்து-193) |
| 3) ஒட்டுநிலைச் சொல் | அத்தே, வற்றே ஆயிரு மொழிமேல் (எழுத்து-133) |
| 4) தொகை | பண்பு தொகு மொழி (எழுத்து 482.5) |

மேலும் 'எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே' என்ற சூத்திரத்தில் வாக்கியத்தைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் (கிளவி-61) உரை எழுதியுள்ளதும் அறியத்தகுந்தது. இது தொகையையும் குறிக்கும்.

'எழுத்து' என்பது 'ஈற்றில் நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்' (கிளவி-10.2) என்ற இடத்தும் 'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி; பலர்க்குரி எழுத்தின் வினையொடு வருமே, என்ற இடத்தும் (இடை-22) விகுதி என்ற பொருளிலேயே வந்துள்ளது. எனவே 'எழுத்து' என்பதனையும் 'சொல்' என்ற பொருளில் தொல்காப்பியர் ஆண்டுள்ளார்.

கிளவியும் சொல்லும் உறழ்ச்சியாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதையும் அப்படியே கிளவியும் மொழியும், சொல்லும் மொழியும் உறழ்ச்சியாக வந்துள்ளதையும் இரண்டு சொற்கள் இணைந்து (சொற்கிளவி, மொழிக்கிளவி) அதே பொருளைத் தருவதையும் திண்ணப்பன் எடுத்துக் காட்டியுள்ளார் (பக். 384). இவையெல்லாம் 'சொல்' என்பதோ, பிறவோ, கலைச் சொற் களாய் நிலைபேறு அடையாததையே புலப்படுத்துகின்றன. தொல் காப்பியர் காலத்துக்குப் பிறகும் இலக்கண ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வந்தும், சொல், கிளவி, மொழி, எழுத்து ஆகியன நிலைபேற்றை அடையவில்லை.

## 1.2 கீழ் எல்லையும் மேல் எல்லையும் (களன்)

சொல் என்பது பல பொருளில் கையாளப்பட்டுள்ளதைப் பார்த்தோம். ஆனால் சொல்லதிகாரத்தில் 'சொல்' என்பது 'உருபன்' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதைக் கீழ் எல்லை யாகவும் 'வாக்கியம்' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதை மேல் எல்லையாகவும் கொண்டு ஆராயப்படுகின்றன. இக்கருத்தினை உரையாசிரியர்கள் சொல் இரண்டு வகைப்படும் என்றும் அது தனிமொழி, தொடர்மொழி என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். தனி மொழி என்பது ஒட்டாக வரும் உருபன் (suffix), அடிச் சொல், வார்த்தை ஆகியவற்றைக் குறிக்கும். தனி மொழி என்பது வார்த்தையைச் சிறப்பாகக் குறித்து வார்த்தையின் உள்

அமைப்பை ஆராயும் உருபனியலைக் குறிக்கும். தொடர்மொழி என்பது தொகை, தொடர், வாக்கியம் ஆகியவற்றைக் குறிக்கும். வினையெச்சத் தொடர்களை ஆங்கில இலக்கணத்தில் கூறப்படும் கிளாஸ் (clause) என்பதற்குச் சமமாகக் கொள்ளலாமா என்பது நினைத்துப் பார்க்கலாம். ஏனெனில் அதுவே தனி எழுவாயும், பயனிலையும் (அவன் படித்தால், மழை பெய்ய) பெற்று எச்ச மாக வருவது. ஆயினும் தொடர்மொழி என்பது வாக்கியத்தைக் குறித்து அதனுடைய அமைப்பை ஆராயும் தொடரியலைக் குறிக்கும். மொழியியலாளர் 'அட்டரன்ஸ்' (utterance) என்ற இன்னொரு கலைச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இது இயல்பானது என்றும் அது வார்த்தையாகவோ (வா, போ என்பன) தொகையாகவோ (பச்சைக்கொடி) தொடராகவோ (வந்த பையன்) வாக்கியமாகவோ (கண்ணன் எழுதுகிறான்) இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள் (Lyons, 1968:172)[2]. ஏனெனில் பேச்சுமொழியை எடுத்துக் கொண்டு ஆய்கின்ற மொழி ஆராய்ச்சிக்குரிய தரவில் (data) உருபன், அடிச்சொல், தொடர், வாக்கியம் போன்று எதுவும் இருக்காது; மொழி ஆய்வாளனே தன்னுடைய ஆய்வு வசதிக்காக வரையறுத்த பொருளில் பயன் படுத்தும் அலகுகள் இவை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். 'அட்டரன்ஸ்' என்பதற்குத் தமிழில் 'கிளவி' என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

மொழி ஆய்வில் உருபனியலும், தொடரியலும் திட்டவட்ட மாக வரையறுத்து ஆராய முடியாத பகுதிகள் என்று கொண்டு

2. The utterance is general not identical with the sentence, since a great many utterances in English example consists of single word, phrases, incomplete sentences, etc. Many utterances are composed of parts which are linguistically equivalent to whole utterances occurring elsewhere.

என்று பிற்பகுதியிலும் (P. 172)

The words nor sentences, nor indeed any of the other units of linguistic description are 'given' in the unanalysed materials

என்றும் முற்பகுதியிலும் லயன்ஸ் (Lyons, 1968:171) குறிப்பிட்டுள்ளார். ஆங்கில மொழி என்று சிறப்பாகக் குறிப்பிட்டாலும் இது எல்லா மொழிக்கும் பொருந்தும்.

'இலக்கணம்' (grammar) என்பதைக் கலைச்சொல்லாய் உரு பனியலும், தொடரியலும் சேர்ந்தது என்று சிறப்புப் பொருளில் கையாளுவார்கள் (Hockett, 1958 : 137, Lyons, 1968:54). தமிழில் வார்த்தை, வாக்கியம் என்ற இரண்டையும் ஆராயும் பகுதிகள் முறையே உருபனியல், தொடரியல் என்று குறிப்பிட்டு அவை இரண்டையும் உள்ளடக்கியதைச் 'சொல்லி லக்கணம்' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஆனால் சொல்லியல் என்பதை உருபனியல் என்ற பொருளிலும் சிலர் கையாளுவதால் சொல்லிலக்கணம் என்பதை 'இலக்கண அமைப்பு' (grammatical system) என்ற சிறப்புப் பொருளைக் குறிக்கும் சொல்லாக வேண்டுமானால் உபயோகப்படுத்தலாம்.

சொல்லதிகாரத்தில் குறைந்த பட்ச அலகாக (கீழ்எல்லை) உருபனும், அதிக பட்சமாக (மேல் எல்லை) வாக்கியமும் விளக் கப்பட்டுள்ளதாகவே பொதுவாகக் கருதப்படுகிறது. இதுவும் ஒரு பெரும்பான்மையான உண்மையே; சில இடங்களில் ஒருவர் பேசும் இரண்டு மூன்று வாக்கியங்களைக் கொண்ட கூற்றுகளும் (discourse) இருவர் பேசும் வாக்கியங்களாகிய பாடங்களும் (text) சொல்லதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப் பிடத்தகுந்தது.

இயற்பெயரை உடைய வாக்கியமும், சுட்டுப் பெயருடைய வாக்கியமும் ஒருவரின் தொழிலையே குறிக்குமானால் முதலில் இயற்பெயர் வாக்கியமும் அடுத்தே சுட்டுப் பெயர் வாக்கியமும் அமைய வேண்டும் என்று ஒரு சூத்திரம் (கிள்வி-38) வருணிக் கிறது.

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும்
விண்னக்குஒருங்கு இயலும் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்

என்ற அந்தச் சூத்திரத்துக்கு உரையாசிரியர்கள் 'சாத்தன் வந்தான்; அவற்குச் சோறு கொடுக்க' போன்ற உதாரணங் களையே கொடுப்பதால் இது இரண்டு வாக்கியங்கள் அமைய வேண்டிய முறை பற்றிப் பேசுகிறது எனலாம். இன்னொரு

சூத்திரத்தில் 'சுட்டு முதலாகிய காரண கிளவியும்' (அதனால் என்பது) இதே வரிசையில் பயன்படுத்தப்படவேண்டும் என்று விவரிக்கிறது (கிளவி-40). சாத்தன்-கை எழுதுமாறு வல்லன், அதனால் தந்தை உவக்கும் (சாத்தன் நன்றாக எழுதுவான்; அதனால் தந்தை மகிழ்வார்) என்பதே உரையாசிரியர்கள் தரும் உதாரணம்.

எச்ச இயலில் கூறப்படும் பொருள்கோள் பல வாக்கியங் களைக் கொண்ட செய்யுளுக்கும் உரியது.

> யாப்பிலக்கணத்துக்கு இயையச் செய்யுளின்கண் புலவனால் மாற்றியமைக்கப்பட்ட சொற்களை மொழியின் அடிப்படைத் தொடர் அமைப்புக்குப் பொருந்த முறைப் படுத்தித்தந்து உரிய பொருளைப் பிறழ்வின்றி உணர்த்தும் சிறந்த பணியைச் செம்மையுடன் செய்வதே பொருள்கோள் ஆகும்

என்று அரங்கராசன் (1979:3) பொருள்கோளை விளக்குவார். அப்படியானால் பொருள் கோளும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியத்தைப் பற்றிய ஒருவகை ஆய்வேயாகும்.

உரையாடலில் இருவருக்கிடைய பேச்சுக்கு இடையே சில சூழல்களில் அமைய வேண்டிய இயைபு (concord) பற்றியும் தொல் காப்பியர் வருணித்துள்ளார். வினாவாக்கியத்துக்கும் விடை வாக்கியத்துக்கும் இடையே அமைய வேண்டிய இயைபினைப் பொது நிலையில்,

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்

என்ற சூத்திரம் (கிளவி–13) கூறுகிறது. 'நீ எங்கே படித்தாய்' என்று வினாக் கேட்டால் அதற்குரிய செப்பு (விடை) அந்த அமைப்புக்கு ஏற்ப, 'நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்தேன்' என்றே அமைய வேண்டும் எனவே இது இரண்டு வாக்கியங்கள், அதுவும் இருவர் உபயோகிக்கும் வாக்கியங்களுக் கிடையே உள்ள இயைபு ஆகும். இருவர் பேசும் வாக்கியங்களைப் பாடம் (text) என்று கூறலாம். இன்னொரு சூத்திரத்தில் (கிளவி-35) வாங்குவோனுடைய கேள்விக்கு, விற்போனுடைய பதில் எப்படி இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்

என்பதே அந்தச் சூத்திரம். இதற்கும் உரையாசிரியர்கள் 'பயறு உளவோ வணிகீர்' என்ற கேள்விக்கு 'உழுந்து அல்லது இல்லை' என்ற பதில் அமையவேண்டும் என்று உதாரணம் தந்துள்ளார்கள். எனவே இருவருடைய பேச்சுக்கு இடையே உள்ள ஒருவித இயைபே இங்கு விளக்கப்படுகிறது. எனவே தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் உருபன், வார்த்தை, தொகை, தொடர், வாக்கியம் ஆகியன பற்றி மட்டும் அல்லாமல் கூற்று, பாடம் ஆகியனபற்றியும் சிறுபான்மை விளக்கப்பட்டுள்ளன எனலாம்.

## 1.3 வருணனை முறை

சொல் என்பது வடிவம், பொருள் என்று பிரிக்க முடியாத இரண்டு கூறுகளால் ஆனது (முழுவிளக்கத்துக்கு §1.5 பார்க்கவும்) சொல்லாய்வில் வடிவத்தை வைத்துக் கொண்டு பொருளை விளக்குவதா? (form to meaning), பொருளை எடுத்துக் கொண்டு வடிவத்தை விளக்குவதா? (meaning to form) என்ற கேள்வியை எழுப்பலாம். உரையாசிரியர் எல்லோரும் வடிவத்திலிருந்து பொருள் விவரிக்கப்பட்டுள்ளதாகவே குறிப்பிட்டுள்ளார்கள் என்ற உண்மை சுட்டிக் காட்டத்தகுந்தது.

### 1.3.1 உரையாசிரியர்கள் கருத்து

இளம்பூரணர் முதலில் கிளவியாக்கம் 'கிளவிகள் பொருள் மேல் ஆமாறு உணர்த்தினமையின் பெயர் பெற்றது' என்ற ஒரு இயலுக்குரிய சிறப்பு விளக்கமாகச் சொன்னாலும் வேற்றுமையியலில்

> மேல் ஒத்தினுள் நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள் மேல் ஆமாறு கூறிப் போந்தான்; அவற்றுள் முதலது பெயர்ச் சொல், அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக்கொண்டான்

என்று கூறுவதால் கிளவியாக்கம் மட்டுமே சொற்களை (வடிவத்தை) உணர்த்திப் பொருளை விளக்குவது என்று நினைக்கிறார்.

> சொற்கள் பொருள்கண்மேல் ஆமாறுஉணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து மற்று ஏனை ஒத்துக் களுள்ளும் பொருட்கண்மேல் ஆமாறு அன்றோ உணர்த் தினது; மாறு உணர்த்தியது இல்லையெனின், ஏனை ஒத்துக்களுட் பொருள்கண்மேலாய் நின்றவற்று இலக் கணம் உணர்த்தினார்; ஈண்டு அவை தம்மை யாமாறு உணர்த்தினார்

என்பது கல்லாடர் வாசகம். இங்கு எல்லா இயல்களும் கிளவி பொருள்மேல் ஆமாறு (வடிவத்திலிருந்து பொருள்) உணர்த்து கிறது என்பதை ஒப்புக் கொண்ட அதே சமயத்தில் கிளவியாக் கத்துக்கும் பிற இயல்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது; அதாவது பிற இயல்கள் கூடுதலாக ஒரு செய்தியை (சொல்லின் இலக்கணத்தை) உணர்த்துகிறது என்பதே கல்லாடரின் வாதம்.

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'கிளவியாக்கம்' சொற்கள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினதாகவும் கொள்ள லாம் என்று தங்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். தெய்வச் சிலையாரும் 'சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார்' என்று கூறும்போது இந்தக் கருத்தை உடன்படுவதைக் காணலாம். எனவே இனி எப்படி எல்லா இயல்களிலும் இந்த முறை (வடி வத்திலிருந்து பொருள் உணர்த்தும் முறை) கையாளப்பட்டுள்ளது என்று பார்க்க வேண்டும்.

### 1.3.2 வடிவத்திலிருந்து பொருள்

> னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்

என்ற சூத்திரத்தில் (கிளவி-5) னகரம் (ன்) என்ற வடிவம் ஆண்பாலை உணர்த்தும் என்று கூறுவதால் வடிவத்தை எடுத் துக் கொண்டு பொருள் கூறுவது தெளிவாகிறது. வேற்றுமையி யலில் ஒவ்வொரு வேற்றுமை பற்றிய சூத்திரமும் (சிறப்பாக இரண்டு முதல் ஏழு வேற்றுமை பற்றிய சூத்திரம்) வடிவத்தைக் குறிப்பிட்டு அதன்பொருளையே விளக்குகிறது.

> மூன்றா குவதே
> ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே

என்ற சூத்திரம் (வேற்றுமை-12) ஒடு என்ற மூன்றாம் வேற்றுமை வடிவம் வினை முதல் (கருத்தா-agent), கருவி என்ற இரண்டு பொருளை உணர்த்தும் என்று 'கிளவி பொருள் மேல்' ஆமாற்றையே விளக்குகிறது.

குத்தொக வருஉங் கொடைஎதிர் கிளவி
அப்பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்

என்ற நூற்பா (வேற்றுமை மயங்கு-16) நாகர்க்குப் பலி என்ற தொடர் நாகர் பலி என்று தொகையாக அமைகிற ஆறாம் வேற்றுமைப் பொருளையும் உணர்த்தும் என்பதும் அதே வகை சார்ந்ததே.

அவ்ன்இவன் உவன்என் வருஉம் பெயரும்

பாலறி வந்த உயர்திணைப் பெயரே

என்ற சூத்திரமும் (பெயர்-8)

அவ்வதாம்
அம், ஆம, எம், ஏம், என்னுங் கிளவியும்

பனமை உரைக்குந் தன்மைச் சொல்லே

என்பதும் (வினை-5)

மன்ற என் கிளவி தேற்றம் செய்யுழ்

என்ற நூற்பாவும் (இடை-17)

மல்லன் வளனே ஏபெற்று ஆகும்

என்ற சூத்திரமும் (உரி-7)

ர், தா, கொடுஎனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய

என்பதும் (எச்சம் 48) கிளவி பொருள்மேல் உணாததுவனவே, பாலசுப்பிரமணியம் (1978: 28) இந்தக் கருத்தைப் பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் தொல்காப்பியத்தில் சில இடங்களில் பொருளைக் குறிப்பிட்டு வடிவம் சொல்லப் பட்டிருக்கிறது என்பதும் எடுத்துக்காட்டத் தகுந்தது

### 1 3.3 பொருளிலிருந்து வடிவம்

இயற்கைப் பொருளை இற்றுஎனக் கிளத்தல்

என்பது (கிளவி-19) பொருளின் இயல்பான இயற்கைத் தன்மையை 'இற்று' என்ற வாய்பாட்டால் (நீர் தண்ணிது, தீ வெய்யது) கூற வேண்டும் என்று வருணிக்கிறது எனவே இங்கு பொருளை எப்படி வார்த்தையில் கூறுவது (பொருள் கிளவி மேல் ஆமாறு) என்று வருணிக்கப்பட்டுள்ளது. இது மேலே சொன்ன முறைக்கு நேர்மாறானது. அடுத்த சூத்திரமும் (கிளவி-20) இந்த வகையிலேயே அமைந்துள்ளது

இனைத்துஎன அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்

என்பதும் (கிளவி-32)

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே

என்பதும் (கிளவி-33) இதே முறையில் அமைந்த சூத்திரங்களே வேற்றுமையங்கியலிலும் இப்படிப்பட்ட சில நூற்பாக்கள் உள்ளன.

கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை

என்ற முதல் சூத்திரம் சார்தல் என்பதை நேரடியாக உணர்த்தாதபோது ஏழாம் வேற்றுமை விகுதியைப் பயன்படுத்தலாம் என்று கூறுகின்றது.

வினையியலில் வரும் (41)

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்

என்ற சூத்திரத்தில் எல்லா காலத்துக்கும் பொதுவான பொருளையும் நிகழ்காலப் பொருளை உடைய 'செய்யும்' என்னும் வாய்பாட்டால் கூறுக' என்பதும் பொருளைக் கூறி அதற்குரிய வடிவத்தையே (தீ சுடும்: மலை நிற்கும்) விளக்குகிறது.

விரைசொல் அடுக்கே மூன்று வரம் பாகும்

என்ற எச்சவியல் (28) சூத்திரத்தில் விரைவுப் பொருளை உணர்த்த அடுக்கிச் சொல்லுவதற்கு மேல் எல்லை மூன்று என்று குறிப்பிடுவதும் பொருளுக்குரிய வடிவம் என்ற முறையில் அமைந்ததே (பாம்பு, பாம்பு, பாம்பு).

ஆயினும் சொல்லதிகாரம் முழுமையும் பார்க்கும்போது 'கிளவி பொருள் மேல் ஆமாறு' பெரும்பான்மையாகவும் 'பொருள் 'கிளவி மேல் ஆமாறு' சிறுபான்மையாகவும் உள்ளது என்பதே உண்மை.

## 1.4 சொல்லின் இலக்கணம்

தொல்காப்பியர் சொல்லின் பொது இலக்கணத்தையும் சொல்லின் வகைகளையும் பெயரியல் முதல் ஐந்து சூத்திரங்களில் விளக்கியுள்ளார். எல்லாச் சொற்களும் பொருள் உணர்த்தும் (பெயர்-1) என்றும் சொற்கள் வடிவமும் (சொன்மை தெரிதலும்) பொருளும் (பொருண்மை தெரிதல்) உடையன (பெயர்-2) என்றும் அந்தப் பொருள் தெரிநிலையாகவும், குறிப்பாகவும் உணர்த்தும் (பெயர்-3) என்றும் முதல் மூன்று சூத்திரங்களுமே சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குகின்றன. இவைகளை விளக்கும் போது உரையாசிரியர்கள் மேலும் பல புதிய கருத்துகளையும் சூத்திரங்கள் இருக்க வேண்டிய இடம் அதாவது வைப்பு முறையையும் விவரித்துள்ளார்கள். இனி ஒவ்வொரு சூத்திரமாகப் பார்ப்போம்.

### 1.4.1 எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன

இந்தச் சூத்திரத்தில் உரையாசிரியர்கள் தனி மொழி பொருள் குறிப்பது பற்றியும் தொடர் மொழி பொருள் குறிப்பது பற்றியும் விளக்கும்கருத்து சொற்பொருளியல் நோக்கில் சிறப்பு வாய்ந்தது.

#### 1.4.1.1 தனிமொழியின் பொருள்

தனி மொழிகளில் அசைநிலை (மியா, மோ போன்ற முன்னிலை அசைச் சொற்கள் – கேண்மியா, கேண்மோ) பொருள் உடையனவா என்ற சந்தேகத்தைப் போக்கவே இந்த சூத்திரம் உதவுகிறது என்பதே சேனாவரையருடைய கருத்து.

> அசைநிலை முதலாயினவும் பொருள் குறித்து நிற்கும் என ஐயம் அறுத்தற்கு இச் சூத்திரம் வேண்டும்.

என்பது சேனாவரையர் வாசகம்

நச்சினார்க்கினியர் அசைநிலையும் இசைநிலையும் (இரண்டுமே இடைச் சொற்கள் தான்) எப்படி பொருள் உணர்த்துகிறது என்பதை விளக்கியுள்ளார்.

> தாஞ்சார்ந்த சொற்களின் பொருளை உணர்த்தியும் அச்சொற்களை அசைத்து நிற்றலின் அசைநிறையும் பொருள் குறித்தனவேயாம். சொற்கள் ஓசை நிறைந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டுதலின் இசைநிறையும் பொருள் உணர்த்திற்றேயாம்.

என்பது நச்சினார்க்கினியர் வாசகம். இங்கு அசைநிலை தனக்கெனப் பொருளைப் பெற்றிருக்கவில்லை என்று அவரே ஒப்புக் கொண்டு சொற்களை உச்சரிப்பதற்கு எளிமையாக இருப்பதற்கு உதவுகிறது என்பதை 'அச் சொற்களை அசைத்து நிற்றலில் அசைநிலை' என்று கூறியுள்ளார். இசை நிலையும் சொற்களை எளிமையாக உச்சரிப்பதற்குப் பயன்படும் என்பதே நச்சினார்க்கினியர் கருத்து. ஆனால் அசைநிலை உணர்ச்சிப் பொருள் (emotive meaning) அதாவது பேசுவோனின் உணர்ச்சியைக் காட்டுவதற்கு உதவுவது என்று விளக்குவதே பொருத்தமாக இருக்கும். 'கற்றதனாலாய பயன் என் கொல்' (குறள்-2.1) என்ற தொடரின் இறுதியில் உள்ள அசைநிறை வள்ளுவரின் கோபத்தைக் காட்டிவிடுகிறது. இசைநிறை உச்சரிப்பதற்கு உதவுவது என்பதையும் ஒருவித பொருள்' என்பது செய்யுளிலோ உரைநடையிலோ பயன்பட்டு யாப்பு நிறைத்தற்கு உதவுதாகக் கொள்ளலாம்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் மொழியில் வழங்கும் எல்லாத் தனி சொற்களும் பொருள் உடையன என்ற கருத்தை ஆதரிப்பதாகவும் கொள்ளலாம். இளம்பூரணர் தனி விளக்கம் எதுவும் தராவிட்டாலும் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியோரின் கருத்தை ஆதரிப்பதாகவே கொள்ளலாம்.

தெய்வச்சிலையாரும் கல்லாடரும் எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்தும் என்ற கருத்தில் சேனாவரையர், நச்சினார்க்

கினியார் போல் அவ்வளவு அழுத்தமான நம்பிக்கை உடையவர்களாகக் காணப்படவில்லை.

தெய்வச்சிலையார் முதலில் நச்சினார்க்கினியர் போல 'அவையும் (அசைநிலை, இசைநிலை, ஒருசொல் அடுக்கு) சார்ந்த பொருளைக் குறித்தன என்றும் கொள்க' என்று கூறி விட்டு உடனே,

> அன்றியும் ஏடுத்தோத்துப் பெரும்பான்மை பற்றி என்றும் கொள்க. இவ்வூரார் எல்லாம் கல்வி உடையர்' என்ற வழிக் கல்லாதாரும் சிலர் உளர் ஆயினும் கற்றார் பலர் என்பது குறித்து நின்றாற் போலக் கொள்க.

என்று தெய்வச்சிலையார் கூறும்போது அவருடைய நம்பிக்கை இன்மை புலப்பட்டுவிடுகிறது.

கல்லாடரும் தெய்வச் சிலையாரின் கருத்தை ஆதரித்துள்ளார்.

> மற்று அசைநிலை, இடைச் சொற்கள் பொருள் உணர்த்தா என்னின் அவையும் ஒருவாற்றான் சிறுபான்மை பொருள் உணர்த்தும் என உணர்க. அல்லதூஉம் இது பெரும்பான்மை எனினும் அமையும் என்பது

என்ற கல்லாடர் வாசகத்தில் தெய்வச்சிலையாரின் கருத்தின் செல்வாக்கு நேரடியாகவே காணப்படுகிறது.

சுந்தரமூர்த்தி தன்னுடைய தெய்வச்சிலையார் விளக்கவுரையில் (கழகப் பதிப்பு, பக் 277) 'பெரும்பான்மை பற்றியது என்று கூறுகின்றார். எனினும் இது பொருந்துவதன்று' என்று கூறி அசைநிலை முதலாயின கட்டுரைச் சுவைப்பட வருதலின் பொருள் குறித்தனவேயாம் (பக். 278) என்று விளக்கி, இசைநிறை, அசைநிலை, ஒரு சொல்லடுக்கு என்பனவும் பொருள் குறித்து வரும் என்றலே பொருத்தம் உடைத்தாம்' என்று முடித்துள்ளார்.

சொல்லின் அடிப்படை வரைவிலக்கணமே பொருள் உணர்த்தும் என்பதே. எனவே அதில் பெரும்பான்மை, சிறுபான்மை என்பதற்கே இடம் கிடையாது. எனவே தெய்வச்சிலையார் விளக்கம் சிறப்பானதாகக் கொள்ள முடியாது.

## 1.4.1.2 தொடர் மொழியின் பொருள்

சேனாவரையர், 'சொல் தான் இரண்டு வகைப்படும்; தனி மொழியும் தொடர் மொழியும் என' (கிளவி: 1.) கூறியதற்கு ஏற்ப இங்கு தொடர் மொழியின் பொருள் பற்றி முதலில் விவாதித்துள்ளார்.

முயற்கோடு, யாமை மயிர்க் கம்பலம் (ஆமை மயிரினால் செய்த கம்பளி ஆடை) போன்றவை உலகில் இல்லாத பொருள்கள் ஆகையால் அவை எப்படி பொருள் உடையனவாகக் கருத முடியும் என்ற கேள்வியை எழுப்பிச் சேனாவரையர் பதில் சொல்லியுள்ளார்

> தொடர் மொழிதான் பொருள் குறியாது வருமோ எனின், வாரா அவை மெய்ப் பொருள் குறிப்பனவும், பொய்ப்பொருள் குறிப்பனவும் என இருவகைப்படும், அவற்றுள் பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருள் உணர்த்துவனவேயாம். அல்லாக்கால் இல்லோர் தன்ல் வினாக் வரும் தொடர்நிலைச் செய்யுள் பொருள் உணர்த்தாமையின் அவை புலவராற் கொள்ளப்படா

என்பது சேனாவரையர் வாசகம். இங்குச் சேனாவரையர் மெய்ப் பொருள், பொய்ப்பொருள் என்று தொடர்மொழியின் பொருளை வகைப்படுத்துவதால் தனிமொழி எப்பொழுதும் மெய்ப்பொருள் உணர்த்துகிறது என்று கொள்ளலாம். இந்தக் கருத்தின் சிறப்பு என்ன? இதைச் சரியாக விளங்கிக்கொள்ளச் சொற்பொருளியலார் 'பொருள்' என்பதே இரண்டு விதபொருளைஉடையது அல்லது இரண்டு வித அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது என்று குறிப்பிடும் விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

'வாக்கியங்களும், தொடர்களும் பொருள் உடையதாகவும் பொருள் அற்றதாகவும் இருக்கலாம் என்று கூறினாலும் சொற்கள் பொருள் உடையவை அல்ல என்று நாம் கூறுவதே இல்லை. இந்த உண்மை 'பொருள் உடைமை' என்பது இரண்டு அர்த்தத்தில் பயன்படுகிறது என்பதையே குறிப்பாகக் காட்டுகிறது. இந்தச் சரி என்று கொண்டு வசதிக்காகவும் தெளிவுக்காகவும் பொருள் உடையது அல்லது பொருளைக் குறிக்கிறது (having

meaning) என்றும் பொருளை உணர்த்துவது (significance or being significant) என்று வேறுபாடுசெய்து கொள்ளலாம். இதன்படி சொல் (தனிமொழி) பொருளைக் குறிக்கும்; தொடரும் வாக்கியமும் பொருளை உணர்த்தலாம், உணர்த்தாமலும் இருக்கலாம்'.

என்று லயன்ஸ்[3] விளக்கியுள்ளார். இதன்படி மெய்ப்பொருள் என்பது பொருளைக் குறிக்கிறது. மெய்ப் பொருளும், பொய்ப் பொருளும் உடையன என்பது முறையே பொருள் உணர்த்தியும், உணர்த்தாமலும் வரலாம் என்ற மொழியியலில் கருத்தோடு ஒக்கும்.

நச்சினார்க்கினியர் 'முயற்கோடு பொய்ப் பொருளினைக் குறித்ததாம் இல்லையெனின் வருதலின்' என்று மட்டுமே விளக்கி யுள்ளார். அதாவது முயற்கோடு இல்லை என்ற வாக்கியமாக ஆகும்போது பொருள்குறித்து வருகிறது என்பதுதான். நச்சினார்க்கினியர் தொடர்மொழி என்பதற்குத் தொகைச்சொல் இரண்டு சொற்கள் சேர்ந்து வருவது என்று மட்டும் பொருள் கொண்டதால் இப்படிப்பட்ட விளக்கம் கொடுத்துவிட்டார். உண்மையில் தொடர்மொழி வாக்கியத்தையும் குறிக்கும். நாற் காலி அழுதது; முயற்கோடு வாங்கினான் போன்ற வாக்கியங் களை நச்சினார்க்கினியர் முறையில் விளக்க முடியாது. எனவே சேனாவரையர் பொதுநிலையில் தந்த விளக்கமே எல்லாவற்றுக் கும் பொருந்தும்.

கல்லாடர், நச்சினார்க்கினியர் கருத்தை தழுவியதோடு அப் படிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவோரைப் பற்றியும் குறிப் பிடுகிறார்.

---

3. 'Although we commonly say that *Sentences* or *phrases* are, or are not, 'meaningful, we do not normally say that *words* are not meaningful .. This fact in itself suggests that the term meaningful may be employed in two distinct senses. We will assume that this is so and for convenience and clarity, introduce a terminological distinction between *having meaning* and *significance* (or *being significant*). In terms of this distinction, we will say that words have meaning whereas phrases and senten ces may or may not be significant. Lyons, 1968:412

> முயற்கோடு என்னும் தொடக்கத்தன பொருள் உணர்த்தனவால் எனின் இவை நன்மக்கள் வழக்கின் கண் பொருண்மை திரிந்து முயற்கோடு இல்லையெனப் பின் வரும் சொல்லோடுபடுத்து நோக்க அவற்றது இன்மை விளக்க வந்ததாம்.

என்பது கல்லாடர் வாசகம். முயற்கோடு இல்லை என்று நல்லவர்கள் பேச்சில் அமைந்து பொருள் உணர்த்திவிடும் என்பதே அவருடைய சமாதானம். இங்கே அனாவசியமாக நல்லவர்கள் தான் அப்படி பேசுவோர்கள் என்னும்போது அல்லாதவர்கள் அப்படிப் பேசமாட்டார்கள் என்று ஆகிறது இரண்டுமே உண்மை இல்லை. மேலும் இங்கு யார் எப்படி பேசுவார்கள் என்பது அல்ல பிரச்சனை. எனவே கல்லாடர் விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது அல்ல.

தெய்வச்சிலையார் முயற்கோடு முதலிய தொடர்மொழிகளில் உள்ள தனிமொழிகள் பொருள் குறித்தன என்று கூறி

> தொடர் மொழியாயுழி உள்ள பொருளோடு அதன் கண் இல்லாத பொருளை அடுத்தமையான் ஆண்டு இன்றாயிற்று அல்லது இல்பொருள் மேல் வழக்கு இன்று என்று கொள்க.

என்று மேலும் விளக்கியுள்ளார். இங்கு இரண்டு சமாதானம் உள்ளது. 'இல்லாத பொருளை அடுத்தமையான் 'ஆண்டு இன்று ஆயிற்று' என்பது நச்சினார்க்கினியர் கருத்தை ஒட்டியது இல் பொருள் மேல் வழக்கு இன்று' என்ற இரண்டாவது சமாதானம் முயற்கோடு இல்லாத பொருள் ஆனதால் அது பற்றிய விவாதம் இல்லை என்பது. இது பொருந்தாது, நச்சினார்கினியர் பொதுப்பொருள் இல்லாவிட்டாலும் பொதுப் பெயர் உண்டு என்று வினையியல் 25-ஆம் சூத்திர உரையில் குறிப்பிட்டுள்ளார். எனவே மொழி ஆய்வுக்கு உலகப் பொருள் உண்டா இல்லையா என்பது பிரச்சனை இல்லை. மேலும் மொழியின் சிறப்பே உலகில் இல்லாத பொருள் பற்றியும் பேசமுடியும் என்பதுதான்[4]

---

4. ஹாக்கெட் (Hockett, 1958:7) மொழியியல்'ஆப்வு தர்க்க ரீதியான ஆய்வை விடப் பரந்தது அதாவது மொழியியலைவிட தர்க்க இயல் குறுகியது என்பார். ஏனெனில் மொழியியலார் மொழி உண்மையை மட்டும் உணர்த்துவது அல்ல; பொய்யையும் பொருள் அல்லாததையும் உணர்த்தலாம் 'From the linguist's point of view, the 'logical' approach

எனவே மொழி ஆய்வில் அந்தத் தொடர்மொழி இலக்கண அமைப்புக்கு உட்பட்டதா? இல்லையா? என்பதுதான் முக்கியக் கேள்வி. எனவே தெய்வச்சிலையாரின் விளக்கமும் சிறப்பான தாகக் கொள்ளமுடியாது.

தொடர்மொழியின் பொருள்பற்றிய சேனவரையர் விளக்கமே சிறந்ததும், ஏற்றுக் கொள்ளத்தகுந்ததும் ஆகும்.

## 1.4 2 சொல்லுக்கும் பொருளுக்கும் உறவு

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவு தனிமொழியைப் பொறுத்த வரையில் இடுகுறியானது என்றும் தொடர்மொழியில் காரணக்குறி என்றும் தெய்வச்சிலையாரே விளக்கியுள்ளார்.

தனிமொழி இடுகுறி உறவு உடையது என்பதற்குத் தெய்வச்சிலையார் கூறும் ஒரே காரணம் உலகில் ஒரு பொருளைக் குறிக்க ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமான சொல் இருக்கிறது; இந்த வடிவம் இந்தப் பொருளைக் குறிக்க வேண்டும் என்ற வரன்முறை எதுவும் உலக மொழிகளில் கிடையாது என்பதுதான்.[5]

> எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்றவாறு. எனவே இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறு ஆம் என்னை? உரிமை இல ஆகியவாறு எனின் உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறி குறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான்

---

to language is too narrow. Language is not used just to make assertion of fact. It is used for lies as well as truth, for non-sense as for sense'

5. மொழியியலார் ஒரு மொழிக்குள்ளே காலத்துக்குக் காலம் ஒரு பொருளைக் குறிக்கும் சொல் மாறி வருவதையும் இன்னொரு காரணமாகக் கூறுவார்கள். உதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த பொருள்களின் பெயர்களான ஞாயிறு, திங்கள் என்பது சங்க காலத்தில் வழங்கி வந்த சொற்கள். இந்த காலத்தில் சூரியன், நிலா என மாறிவிட்டன. எனவே பொருளுக்கும் அதைக் குறிக்கும் சொல்லுக்கு இடுகுறி தொடர்பே உடையது என்பது தெளிவாகிறது. அதாவது சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு இருந்தால் ஒரு பொருளைக் குறிக்க பல சொல் இருக்க முடியாது என்பதே கருத்து.

> இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள் பற்றி வரும் பெயர் எல்லாம் இடுகுறி என்பது பெறப்பட்டது இவ்விடு குறியான் அடிப்பட்ட சொல்லோடு ஒட்டி மற்றொரு பொருட்குப் பெயராகி வருவது காரணக்குறியாம்

என்பது தெய்வச்சிலையார் வாசகம்.

இங்கு தொடர்மொழி காரணக்குறி என்பதற்கும் தெய்வச் சிலையார் கூறிய காரணமும் சிறப்பானது. பொன், குடம் என்ற தனிச்சொற்கள் இடுகுறியாக அமைந்தவைதான். ஆனால் பொற் குடம் என்ற பொருளைக் குறிக்கும் சொல் பொன்னால் ஆகிய குடத்தைக் குறிப்பதால் 'பொற்குடம்' என்ற தொடர்மொழி காரணக்குறி என்று கூறுவது சரியானதே.

நச்சினார்க்கினியர் சொல் பொருளைக் குறிக்கும் என்பது கருவி கருத்தாவாய் நின்றது என்று கூறி இரண்டு வித விளக்கம் தந்துள்ளார். இவ்வாள் வெட்டுதலைக் கருதியே இருக்கும் என்றாற் போலஅமைந்துள்ள லாக்கியம் இந்த வாள் என்ற கருவி வெட்டுவதற்குத் தயாராக உள்ளது என்றாகி வாள் வைத்திருப் பவர் (கருத்தா) வெட்டுவதற்குத் தயாராக உள்ளார் என்று பொருள்படும். எனவேதான் இவ்வாள் வெட்டுதலைக் குறிக்கும் என்பது கருவி – கருத்தாக உள்ளது. சொல் பொருளைக் குறிக் கிறது என்றால் பேசுவோன் இந்தப் பொருளைக் குறிக்க இந்தச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளான் என்று பொருள்.

இப்படிப்பட்ட விளக்கத்தை முழுமையாக நச்சினார்க்கினியர் கிளவியாக்க முதல் சூத்திரத்திலேயே தந்துள்ளார்.

> 'பொருளை உணர்த்துவான் ஒரு சாத்தனே எனினும் அவற்கு அது கருவியாக அல்லது உணர்த்தல் ஆகாமை யின் அக்கருவிமேல் தொழில் ஏற்றிச் சொல் உணர்த்தும் என்று கருவிக் கருத்தாவாகக் கூறினார். இவ்வாசிரியர் எவ்விடத்தும் சொல்லைக் கருவி கருத்தவாகக் கூறுமாறு மேலே காண்க. அஃது எல்லாச சொல்லும் பொருள் குறித்தனவே, 'என்றாற் போல்வது.

இந்தக் கருத்து மொழி, மனிதன் பயன்படுத்தும் கருவி என்ற பெயருளையும் புலப்படுத்துகிறது.

## 1.5. பொருளும் வடிவமும்

தொல்காப்பியர் பெயரியல் இரண்டாவது சூத்திரத்தில் பொருளும் வடிவமும் சொல்லால் அறிந்து கொள்ளலாம் என்று பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். இந்தச் சூத்திரத்தை இளம் பூரணர் பொருள் வேறு, வடிவம் வேறு என்ற முறையில் விளக்கி யுள்ளார். சேனாவரையர் அந்த இரண்டு வகையோடு வடிவமும் பொருளும் ஒருங்கு இயைந்து வருதல் என்ற மற்றொரு வகையும் குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் சேனாவரையருடைய கருத்தை ஆதரித்துள்ளார். தெய்வச்சிலையார் 'பொருள்' என்பது உலகப்பொருள் ஆராய்ச்சியாகவும் 'சொல்' என்பது சொல்லிணக் கண ஆராய்ச்சியாகவும் கொண்டு உரை எழுதியுள்ளார் .கல்லா டர் தெய்வச்சிலையார் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் பொதுவாக மொழியியலார் வடிவமும் பொருளும் பிரிக்க முடியாதபடி இணைந்தது என்று கூறுவார்கள். டிசசூர் என்பார் 'சொல்லும் பொருளும் ஒரு தாளின் இரண்டு பக்கம் போன்றது' என்ற ஒப்புமை காட்டியுள்ளார்.[6]

### 1 5.1. இளம்பூரணர்

'தன்னின் வேறாகிய பொருள் தெரியப்படுதலும் பொருள் அறியப்படாது சொல் தன்னை அறியப்படுதலும் ஆகிய இரண்டும் சொல்லான் ஆம்'

என்று இளம்பூரணர் பொழிப்புரை எழுதி

> சாத்தன், வந்தான், பண்டுகாடுமன், உறுகால் என்பன வற்றால் பொருள் உணர்த்தப்பட்டவாறு' 'நீயென் கிளவி', செய்தென் எச்சம், தஞ்சக்கிளவி, கடியென் கிளவி என்பனவற்றால் பொருள் உணரப்படாது அச்சொல் தாமே உணரப்பட்டவாறு காண்க'

என்று உதாரணமும் விளக்கமும் தந்துள்ளார். எனவே இரண்டும் தனித்தனிக் கூறு என்ற கருத்தே இவர் உரையால் பெறப்படு கிறது.

---

6. Each linguistic term is a member, an *articulus* in which an idea is fixed in a sound and a sound becomes the sign of an idea. Language can also be compared with a sheet of paper; thought is the front and the sound the back; one cannot cut the front without cutting the back at the same time.

முதல் வகை உதாரணங்களில் பொருள் மட்டும் உணரப் பட்டது என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில் அங்கு சொல்லும் பொருளுமே உணரப்படுகிறது. இரண்டாவது வகை உதாரணங்களில் சொல் மட்டும் உணரப்படுகிறது என்பது பொருத்தமே. ஏனெனில் அங்கு சொல்லுவோன் நோக்கே வடிவத்தை உணர்த்துவதுதான். இப்படி வடிவம் மட்டும் உணர்த்துவது கருவி மொழி (metalanguage) ஆகும். மொழியைப் பற்றி விளக்கச் சொல்லையே பயன்படுத்தும் போது வடிவம் பற்றிப் பேசுவது உண்டு. மொழி ஆராய்ச்சி என்பது மொழியின் சாதாரண பயன்பாட்டைப் பற்றியதே அல்லாமல் கருவி மொழி பற்றி ஆராய்வதில்லை. எனவே சொல்லும் (வடிவமும்) பொருளும் பிரிக்க முடியாதபடி சேர்ந்தே உள்ளதாகக் கூறுவார்கள் மொழி யியலார்.

### 1.5.2 சேனாவரையர்

'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் ஒருங்கு வந்தன' என்று மூன்றாவது வகையாகச் சில உதாரணங்களைச் சேனாவரையர் காட்டியுள்ளார்.

> 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே', 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே', 'ஈறு பெயர்க்கு ஆகும் இயற்கை என்ப' (வேற்றுமை-8 2) என்புழிச் 'சொல்' என்னும் சொல்லும் 'பெயர்' என்னும் பெயரும் அறியப்படுதற்கண் சொன்மை தெரிதலாம். ஏனைச் சொல்லும் ஏனைப் பெயரும் அறியப்படுதற் கண் பொருண்மை தெரிதலாம். அதனால் ஆண்டுச் சொன்மை தெரிதலும், பொருண்மை தெரிதலும் ஒருங்கு வந்தன எனப்படும். அல்லாக்கால் 'சொல்' என்னும் சொற் பொருள் உணர்த்துதலும் 'பெயர்' என்னும் பெயர் இறுதி உருபு வருதலும் பெறப்படாவாம் என்பது'.

இதுவே அவரது வாசகம். இங்கு 'சொல்' 'பெயர்' என்பன தம்மை மட்டும் குறிக்காமல் மொழியிலுள்ள எல்லாச் சொற் களையும், பெயர்களையும் குறிக்கின்றன. ஏனெனில் இவை பொதுச்சொற்கள். இவற்றைச் சிறப்பாக 'மேனிலைச் சொற்கள், (hyponyms)[7] என்று சொற்பொருளியலார் குறிப்பிடுவார்கள்.

7. One way to describe hyponymy is in terms of 'genus' and 'differentia'. The more specific term is called the hyponym of the more general, and the more general is term called the superordinate term. (Leach, 1974:101)

மரம், பூ போன்றவை எப்படி அந்தந்த சொற்களை மட்டும் குறிக்காமல் முறையே எல்லா மரவகைகளையும், பூ வகைகளையும் குறிக்கிறதோ அப்படிச் 'சொல்' 'பெயர்' என்பன மேலே காட்டிய சூத்திரங்களில் அமைந்துள்ளன.

இங்குச் சேனாவரையர் கருவிமொழியில் மேனிலைச் சொற்கள் இருப்பதை மட்டும் உணர்ந்திருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் மேனிலைச் சொற்கள் இல்லாதவை கூடச் சொல்லும் பொருளும் இணைந்து இருக்கும் என்பது மேலே காட்டப்பட்டது.

நச்சினார்க்கினியர் சேனாவரையருடைய கருத்தைத் தழுவியே உரை எழுதியுள்ளார்.

### 1.5.3 தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையார் 'சொல்' 'பொருள்' என்பதைச் சிறப்புப் பொருள் கொண்டு விளக்கியுள்ளார். அதற்கேற்ப அவருடைய பொழிப்புரையும் அமைந்துள்ளது.

> சொல்லினாற் குறிக்கப்பட்ட பொருளின் தன்மை ஆராய்தலும் சொல்லின் தன்மை ஆராய்தலும் சொல் தன்னாலே ஆகும்.

என்ற பொழிப்புரையும்

> 'நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினான் இயன்றதோர் பூதம் என்று ஆயிற்று. சொல்லின் தன்மை ஆராய்வார்க்குப் பெயர்ச் சொல் என்று ஆயிற்று. அதனால் இருபகுதிய சொல்நிலைமை என்றவாறு' என்ற விளக்கமும் எழுதியுள்ளார்.

'தெரிதல்' என்பதற்கு அறிந்து கொள்ளுதலும் ஆராய்தலும் தேர்ந்தெடுத்தலும் எனப் பல பொருள் உண்டு[8]. ஏனைய உரையா

---

8. பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் (பெயர். 3.1) 'அறிந்து கொள்ளுதல்' அரையளவு குறுகல் மகரம் உடைத்தே; இசையிடன் அருகும் தெரியுங்காலை (எழுத்து.13) - 'ஆராய்தல்' அறிந்த பொருள்வயின் ஐயந்தீர் தற்கு, தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே' (கிளவி. 32.3,4) – தேர்ந்தெடுத்தல் (பாலசுப்பிரமணியன், 1981ஆ)

சிரியர்கள் 'அறியப்படுதல்' என்று பொருள் கொள்ள இவர், 'ஆராய்தல்' என்று பொருள் கொண்டுவிட்டார். கல்லாடர் 'அறியப்படுதல்' என்று பொழிப்புரையில் எழுதினாலும் தெய்வச் சிலையார் கருத்தையே பின்பற்றியுள்ளார்.

தெய்வச்சிலையார் கருத்துப்படி பொருள் என்பது உலகப் பொருள் (object) பற்றிய ஆய்வாகி பிறதுறை ஆராய்ச்சியையும் 'சொல்' என்பது சொல் ஆய்வு ஆகி இலக்கண ஆய்வையும் குறிக்கிறது. தொல்காப்பியர் இந்த இடத்தில் சொல்லின் பண்பைக் குறிக்கிறாரே தவிர பலதுறை ஆராய்ச்சியையும் இலக்கண ஆராய்ச்சியையும் குறிக்கவில்லை. எனவே தெய்வச்சிலையார் கருத்து சிறப்பாக அமையாததாகவே கருத வேண்டியிருக்கிறது

## 1.5.4 அந்தச் சூத்திரமும் இந்தச் சூத்திரமும்

சேனாவரையரும் கல்லாடரும் இந்தச்சூத்திரத்துக்கும் போன சூத்திரத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியும் சிறப்புப் பற்றியும் இந்தச் சூத்திரத்தில் விவாதித்துள்ளார்கள்

சேனாவரையர் கருத்துப்படி இரண்டு சூத்திரமும் வேறுவேறு கருத்தை விளக்குகின்றன. முதல் சூத்திரம் சொற்கள் பொருள் உணர்த்தும் என்ற உண்மையையும் இரண்டாவது சூத்திரம் அந்தப் பொருளின் வகையையும் உணர்த்துகிறது

> 'மேலைச் சூத்திரத்தால் சொற்கள் பொருள் உணர்த்தும் என்பது பெறப்பட்டமையால் தானும் பிறிதும் எனப் பொருள் இரண்டு வகைப்படும் என அதனது பாகுபாடு உணர்த்தியவாறு'

என்பது சேனாவருடைய வாசகம். ஆனால் கல்லாடனார் மேலே கூறிய கருத்தான பொருள் உணர்த்தும் என்பதும் 'பொருண்மை தெரிதல்' என்பதும் ஒன்று எனக் கொண்டு இரண்டாவது சூத்திரத்தில் கூறியது கூறலாக, அமைந்துள்ளது எனக்குறிப்பிட்டு உரையாசிரியர் என்ற முறையில் நியாயப் படுத்துவதற்காக 'நன்கு அந்த உண்மையை நாம் நல்ல முறையில் உணர்த்துவதற்காகச் சொன்னார்' என்று சமாதானம் கூறியுள்ளார்.

> மேல்எய்திய 'பொருண்மை தெரிதல்' ஈண்டுக்கூறல் வேண்டா எனின்' முற்கூறியதில் பிற்கூறியது வலி வுடைத்து ஆகலின் அஃது விலக்குண்ணும் என உம்மை கொடுத்தாயினும் ஓதற்பாலாவதான நன்கு உணர்தற் பொருட்டு உடன் ஓதினார் என உணர்க[9]

என்பது கல்லாடர் வாசகம். உண்மையில் கூறியது கூறல் என்பது தொல்காப்பியருடைய வருணணை உத்திகளில் ஒன்று என்றும் அது வேறு ஒரு உண்மையைப் புலப்படுத்துகிறது என்றும் பின்னால் விளக்கப்படும்.

## 16. பொருள் பாகுபாடு

> 'பொருண்மை தெரிதல் சொன் மாத்திரத்தால் விளங்கி நிற்றலும், சொன்மாத்திரத்தால் தோன்றாது சொல் லொடு கூறிக் குறிப்பால் தோன்றலும் என இரண்டு கூற்றை உடையது'

என்ற பொழிப்புரையும்

> அவன், இவன், உவன், வந்தான், சென்றான் என்புழிப் பொருள் தெரிபு வேறுநின்றன. ஒருவர் வந்தார் என் புழி ஆண்பால் பெண்பால் என்பதூஉம், உண்ணா நின்றான 'கற்கறித்து நன்கு அட்டாய்' என்புழித் தீங்கு அட்டாய் என்பதூஉம் குறிப்பில் தோன்றின

என்ற உதாரண விளக்கமும் கொடுத்துள்ளார் இளம்பூரணர்.

தெரிபு வேறுநிலையல் என்பதற்கு இவருடைய பொழிப் புரை சிறப்பாக அமையவில்லை. எனினும் உதாரணம் மூலம் சொல் தன்னுடைய பொருளை நேரடியாக உணர்த்துவதுதான் தெரிபு வேறுநிலையல் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

குறிப்பில் தோன்றுவதற்குக் கொடுத்த உதாரணமும் விளக்க மும் அந்தக் கருத்தை நன்றாகவே தெளிவுபடுத்தியுள்ளது. இது ஒருவகையில் இடச்சூழலால் (கேட்போர், பேசுவோர் பற்றிய

---

9 கல்லாடர் வாக்கியம் பிழைபட உள்ளது என்று சுந்தரமூர்த்தி தன்னுடைய விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளர். எனினும் கல்லாடருடைய கருத்தைச் சரியாகவே விளக்கியுள்ளார். அத்தோடு கல்லாடருடைய வாசகம் எப்படி திருத்தமாக அமையும் என்பது அடிக்குறிப்பில் காட்டினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

விரிவான விளக்கத்துக்கு ஐந்தாவது இயல் பார்க்கவும்) இங்கு கூறிய சொல்லிலிருந்து மாறுபட்ட பொருள் பெறப்படுகிறது. 'ஒருவர் வந்தார்' என்பதனால் சரியான பால் தெரிவதும் இடச் சூழல்தான். ஆனால் 'ஒருவர்' என்ற சொல்லே ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான சொல் ஆனதால் சரியான பால் தெரியவில்லை. இந்தச் சொல் பால் உணர்த்தும் முறையைத் தொல்காப்பியர் வேறு இடத்தில் வருணித்துள்ளதால் (முழு விளக்கம் ஐந்தாவது இயலில் உள்ளது) இது பொருத்தமான உதாரணம் அல்ல என்றே நினைக்க வேண்டியிருக்கிறது

'தெரிபு வேறு நிலையல்' என்பதற்குச் சேனாவரையர் 'சொன் மாத்திரத்தான் விளங்கி வேறுநிற்றல்' என்று தொல் காப்பிய சொற்களுக்கு ஏற்றபடி எழுதியுள்ளாரே தவிர இதுவும் விளக்கமாக அமையவில்லை. இவர் குறிப்பால் பொருள் உணர்த் துவதற்கு தெங்கு தின்றான், கடுத் தின்றான் என்ற ஆகுபெயர் களையும் உதாரணம் காட்டியுள்ளார். மேலும் அது சொற் சூழல் அல்ல; குறிப்பில் தோன்றியதாகவே கருதவேண்டும் என்றும் வாதாடியுள்ளார்.

தெங்கு (தென்னை) கடு (கடுக்காய்ச்செடி) ஆகியவை முதற் பெயராக இருந்தால் தின்றான் என்ற வினையோடு பொருந் தாது. எனவே வினையோடு இயைவது சினைப்பெயரே (தேங்காய், கடுக்காய்). எனவே தொடர் ஆற்றலால் சினைப்பெயர் பெறப் பட்டது என்று கொள்ளலாமா என்பது கேள்வி. முதற் பெயரோடு அந்த வினை இயையாது என்பதால் சொல்லுவான் வேறு பொருள் நினைத்திருக்க வேண்டும் என்பதே தொடர் ஆற்றலால் தெரிந்து கொள்ளமுடியும்; குறிப்பால்தான் சினைப் பெயரைக் குறிக்கிறது என்று கேட்போன் உணர்ந்து கொள்கிறான் என்பதே சேனாவரையரின் பதில்.

> 'கடுத்தின்றான், தெங்குதின்றான் எனப்பிறிதின் பெய ராற் பிறிது பொருள் தோன்றலும் குறிப்பிற் தோன்ற லாம். தின்றான் என்றும் தொழிலோடு முதற்பொருள் இயையாமையின் அதனோடு இயையும் சினைப்பொருள் அத்தொடர் ஆற்றலால் பெறப்பட்டமையால் குறிப்பில் தோன்றல் ஆகாது எனின்:- அற்றன்று; அவ்வியையாமை சொல்லுவான் குறிப்பு உணர்தற்கு ஏது ஆவது அல்லது

முதற்பெயரைச் சினைப் பொருட்டு ஆக்கும் ஆற்றல் இன்று ஆகலான் அதுவும் குறிப்பில் தோன்றலேயா'ம் என்க'

என்பது அவரது வாசகம். உண்மையில் குறிப்பு என்பதைவிட அந்த மக்களின் கலாச்சாரமே (culture) சரியான பொருளை அறிய உதவுகிறது. எனவே கலாச்சாரக் குறிப்பு என்று வேண்டு மானால் கூறலாம். நச்சினார்க்கினியர் ஆகுபெயராய் வருவனவும் குறிப்பில் தோன்றலாம் என்பதால் அவர் சேனாவரையர் கருத்தையே ஆதரிக்கிறார் எனலாம்.

சேனாவரையர் பிறிதுமொழிதல் அணியாக வருவனவற்றைக் குறிப்பாகக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். அதை நச்சினார்க் கினியர் செய்யுள் ஆதலின் தொல்காப்பியச் செய்யுளியல்படி குறிப்பு எச்சம் ஆகக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள் ளார் பிறிது மொழிதல் வழக்கிலும் உண்டு. சிறுதுளி பெரு வெள்ளம் என்பது பிறிது மொழிதலாக சிறுகச் சிறுக சேமித்தால் முடிவில் நிறைய பணம் சேரும் என்று பொருளில் பொது மக்களிடையே வழங்கப்படுகிறது. பிறர்படும் துன்பத்தைச் சிலர் எள்ளி நகையாடுவார்கள்; ஆனால் அதே துன்பம் தனக்கு வந்தபொழுது அதிகம் அவதிப்படுவார்கள் இதை 'தலைவலியும் கா(ய்)ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்று பேச்சு வழக்கில் வழங்குவது பிறிது மொழிதலான பொருளையே உடையது; நேரடி பொருளை மட்டும் குறிப்பது அல்ல. எனவே அதையும், குறிப்புப் பொருள் என்று கொள்ளலாம். உண்மை யில் பல பழமொழிகள் பிறிது மொழிதலாகவே பயன் படுத்தப்படுகின்றன. அப்படியானால் நச்சினார்க்கினியர் மறுப்பு பொருந்தாது.

தெய்வச்சிலையாரின் பதவுரை கொஞ்சம் மாறுபட்டது

இச்சொற்குப் பொருள் இதுவென உணரப் பல பொரு ளிலும் தெரிந்து வேறாகி நிற்றலும் சொற்பொருள் அன்றிச் சொல்வான் குறிப்பினான் பிறிது பொருள்பட நிற்றலும் என இருபகுதி உடைத்து

என்பது அவரது பொழிப்புரை 'தெரிபு வேறு நிலையல்' என்பதற்கு இவர் கொடுத்த விளக்கம் அறிஞர்கள் ஒரு சொல்லின்

பொருள்களை நிர்ணயிக்கும் ஆராய்ச்சி முறையைக் குறிக்கிறது. இது முந்திய சூத்திரத்துக்குக் கொடுத்த விளக்கத்துக்கு ஏற்ப அமைந்துள்ளது. ஆயினும், நிலம், நீர், தீ, வளி, உண்டான், தின்றான் என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளதால் அவருடைய பொழிப்புரைக்கு ஏற்றமுறையில் உதாரணங்கள் அமையவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

'குறிப்பில் தோன்றல்' என்பதற்கு அவருடைய பொழிப்புரை சிறப்பாகவே அமைந்துள்ளது. புதிய உதாரணமாயினும் அவை ஆகுபெயராகவும் இடச்சூழலால் பொருள் விளக்குவனவாகவுமே அமைந்துள்ளன.

இவன் நெருப்பு, இவன் பசு என்ற உதாரணங்கள் உவமை ஆகுபெயராய்க் கருதலாம். கொடுமை செய்தாரை 'வாழ்வீராக, என்பன இடச்சூழலாலும் சரியான பொருள் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

## 1.7. வைப்பு முறை

பெயரியல் முதல் மூன்று சூத்திரங்களும் எல்லா மொழிக்கும் பொதுவான இலக்கணம். பெயர், வினை, இடை, உரி என்பதைப் பற்றிக் கூறும் இரண்டு சூத்திரங்கள் கூடப் பொது இலக்கணம் என்றாலும் அது தமிழுக்கு உரியது. சொல் பாகுபாடு என்பதால் அது ஒருவகையில்தான் பொது இலக்கணம் எனலாம். சேனா வரையரும் முதல் ஐந்து சூத்திரங்களும் பொது இலக்கணம் கூறுகிறது என்பதை 'இச் சூத்திரம் (பெயர்.1) முதலாக ஐந்து சூத்திரத்தால் கூறப்பட்டன பொது இலக்கணம்' என்று குறிப் பிட்டுள்ளார். இந்த உண்மையை உணர்ந்ததற்கு ஏற்பவே இங்கு எழக்கூடிய பிரச்சனையையும் உணர்ந்திருக்கிறார் என்பது 'இவற்றை ஈண்டு வையாது கிளிவியாக்கத்துள் வைக்க எனின், என்ற அடுத்த வாக்கியத்தால் புலப்படுத்திவிடுகிறார். அதாவது பொது இலக்கணம் ஆனால் சொல்லதிகாரத் துவக்கத்தில்-கிளவி யாக்கத்தின் ஆரம்பத்தில் – சொல்லியிருக்கவேண்டும். என்பதே அந்தப் பிரச்சனை இந்த பிரச்சனையை எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற சூத்திரத்தைப் பொறுத்தமட்டிலும் வேறுவகையாக எழுப்பி விடையை முன்னால் தனியே ஒரு பத்தியில் சொல்லியுள்ளார் என்பதும் அறிந்துகொள்ளவேண்டும்.

பொதுமை என்ற உண்மையும் அவை வைக்க வேண்டிய இடம் (வைப்பு முறை) பற்றிய கேள்வியும் சரியானதே. ஆனால் அதே முறையில் கிளவியாக்க முதல் சூத்திரத்திலும் பெயரியல் இரண்டாவது சூத்திரத்திலும் கேள்வி கேட்காததால் சரியான விடையை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே ஓரிடத்தில் மட்டும் வைப்பு முறை பற்றிக் கேள்வியை எழுப்பித் தொல்காப்பியத்தை எப்படியாவது நியாயப்படுத்த வேண்டும் என்று நினைத்ததால் வாதங்கள் முரணானவையாகவும் சொந்த விருப்பத்திற்கு ஏற்ற முறையாகவும் அமைந்துவிட்டன.

முதலில், முதல் சூத்திரத்தை ஒட்டிய பிரச்சனைகளையும் அதற்குரிய விடைகளையும் பார்ப்போம். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற சூத்திரத்தின் கருத்து கிளவியாக்கத்தின் முதல் சூத்திரத்தின் கடைசி வரியான ஆயிருதிணையின் இசைக்கும் என்ற தொடரால் விளக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தச் சூத்திரம் தேவையற்றது அல்லவா என்பது அவருடைய முதல் கேள்வி.

> 'ஆயிருதிணையின் இசைக்கும்' என்றதனால் இது (பெயரியல் முதல் சூத்திரக் கருத்து) பெறப்படுதலின் இச்சூத்திரம் (பெயர் - 1) வேண்டா எனின்

என்பது சேனாவரையர் வாசகம். இந்தக் கேள்விக்குப் பதில்: அதே கருத்தை வலியுறுத்தவும் (யாப்புறவு பெறப்படுவது) அசைநிலை முதலாயின பொருள் உணர்த்துமோ என்ற சந்தேகத்தை நீக்கவும் (ஐயம் அகற்றல்) பெயரியலில் தனியே இந்தச் சூத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது என்பது.

> 'அற்றன்று: சொல்லிசைக்கும் பொருள் ஆவன இவ்விரண்டு திணையுமே பிறிதில்லை என்பது அல்லது, சொல் எல்லாம் பொருள் உணர்த்துதல் மாலையவே; உணர்த்தாதன இல்லை என்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையின் அசைநிலை முதலாயினவும் பொருள் குறித்து நிற்கும் என ஐயம் அறுத்தற்கு இச்சூத்திரம் வேண்டும் என்பது'

இதுவே சேனாவரையர் வாசகம். இது வழக்கமான சமாதானந்தான். ஆனால் இதைப் படிக்கும்போது ஏற்படும் ஒரு சந்தேகம் அவருடைய கேள்வியே சரியானதா என்பது. அதாவது

ஆயிரு திணையின் இசைக்கும் என்பதற்கு அவர் இங்கு கூறிய பொருள் (எல்லாச் சொல்லும் பொருளை உணர்த்தும்) சரியாக இருந்தால்தானே இந்தக் கேள்விக்கு இடம் உண்டு. எனவே அந்நூற்பாவில் அந்தத் தொடரின் பொருள் பற்றி முதலில் பரிசீலிக்கவேண்டும்.

சேனாவரையரே அந்தத் தொடருக்குக் கிளவியாக்கத்தில் 'அவ்விருதிணை மேலும் சொற்கள் நிகழும்' என்ற பதவுரையும் 'எனவே உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எனச் சொல் இரண்டு என்றவாறாம்' என முடிப்புரையும் எழுதியுள் ளார். ஆனால் முதல் இரண்டு வரிக்குப் பொருள் எழுதும் போது 'மக்கள் என்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர் திணை என்று சொல்லுவர் மக்கள் என்று கருதப்படாத பிற பொருளை அஃறிணை என்று சொல்லுவர்' என்ற பொழிப்புரை யில் 'பொருள்' என்பது குறிப்பிடப்பட்டாலும் அது விஷயம், (object) போன்ற அர்த்தம் உடையது. மேலும் 'சொல் வரை யறுத்தலே இச்சூத்திரத்துக் கருத்து' என்பதையும் ஒரு கேள்வி - பதில் மூலம் வலியுறுத்தியுள்ளார். எனவே சேனாவரையருக்கு ஆயிரு திணையின் இசைக்கும்' என்ற தொடர் 'சொற்கள் பொருள் உணர்த்தும்' என்ற கருத்து இந்தச் சூத்திரத்துக்கு உரை எழுதும்போதே ஏற்பட்டிருக்கவேண்டும். இன்னொருவர் கேட்ட கேள்வியே இது. அதனால் சேனாவரையருக்கு இந்தக் கருத்தில் உடன்பாடு இல்லை என்று கூறமுடியாது. ஏனென் றால் உடன்பாடு இல்லை என்றால் இந்த கருத்துப் 'போலி உரை' என்றோ 'அவர்க்கு அது கருத்து அன்று என்க' என்றோ, சேனாவரையர் கூறியிருக்கவேண்டும் அப்படிச் சொல்லாமல் அதற்கு ஆதரவாகவே பதில் சொல்லியுள்ளார். அப்படியானால் சேனாவரையர் வேறு ஏதாவது காரணத்தை மனதில் வைத்துக் கொண்டே இந்தக் கேள்வியை எழுப்பியிருக்க வேண்டும் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது அவரே சில வரிகள் தாண்டி 'முதல் ஐந்து சூத்திரங்களின் வைப்புமுறையைப் பற்றி நேரடி யாகப் பேசுவதால் அதற்கு முன்னோடியாகத் தன் கருத்துக்கு வாசகர்களை இணங்க வைப்பதற்காக முதலில் வைப்புமுறை யைப் பற்றிப் பேசாமல் வேறுவிதமாகப் பேசி அவர்களைத் தயார் செய்கிறாரா என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இனி, பெயரியல் முதல் ஐந்து சூத்திரங்களையும் கிளவியாக்கத்தில் கூறாததற்கு அவர் கூறும் வாதங்களைப் பார்ப்போம். இங்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1) கிளவியாக்கத்தின் திரண்ட கருத்துக்கு இந்தப் பொதுக் கருத்துகள் உதவுவதாக (உபகாரம் உடைமை) இல்லை; 2) சிறப்பாக நான்கு வகை இலக்கணங்களை விளக்குவதற்கு முன்னால் இவைகளைக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்பது.

> இவை (முதல் ஐந்து சூத்திரக் கருத்துகள்) பொது இலக்கணமே எனினும் ஆண்டு (கிளவியாக்கத்தில்) கூறப்பட்டன வழூஉக் காத்தலும் வழூஉக் காத்தற்கும் உபகாரம் உடையனவும் அன்றே; எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என ஐயம் அகற்றலும் சொற், பொருள் இனைத்து பாகுபாடும் என்றலும் சொல் இனைத்து என்றலும் என வழூஉக்காத்தலும், வழூஉக் காத்தற்கு உபகாரம் உடையனவும் அன்மையான் ஆண்டு உணர்த்தாது.

என்பதே முதல் வாதம். இங்கு 1) கிளவியாக்கத்தின் திரண்ட கருத்தும் 2) பெயரியல் சூத்திரங்களின் கருத்தும் எடுத்து விளக்கி கிளவியாக்கத்தின் திரண்ட கருத்து பெயரியலில் கூறப்படும் கருத்துகளுக்கு உதவி செய்வதாய் இல்லை என்பதே அவருடைய மறுப்பு. மேலே குறிப்பிட்ட முதல் கருத்து ஒத்துக் கொள்ளக் கூடியதாய் அமையாது விவாதத்துக்கு உரியதாய் அமைந்திருக்கிறது.

கிளவியாக்க முதல் சூத்திர முன்னுரையில் சேனாவரையர் வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று, என்று கூறினாலும் வேற்றுமையியலின் முன்னுரையில் அவரே

> 'நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்தினார், அதற்கு இடையீடு இன்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறைமை ஆயினும் வேற்றுமை இலக்கணம் உணர்த்துதற்கு வேறு இடம் இன்மையாலும் பொது இலக்கணம் ஆதல் ஒப்புமையானும் ... ... கிளவியாக்கத்திற்கும் பெயரியற்கும் இடை வேற்றுமை இலக்கணம் உணர்த்திய எடுத்துக்கொண்டார்'

என்று கூறுவதால் கிளவியாக்கம் பொதுஇலக்கணம் விவரிக்கிறது என்பது அவருக்கும் உடன்பாடான கருத்தே.

அப்படியானால் இந்தக்கருத்தைப் பெயரியலில் ஏன் குறிப்பிட வில்லை என்ற கேள்வி எழுகிறது. ஒரு பொருள் பற்றி இரண்டு கருத்து இருந்தால் வாதத்தில் ஒரு கருத்தை மட்டும் குறிப் பிடுவது தனக்குச் சாதகமானதை மட்டும் சொல்கிறார் என்று ஆகும். ஆனால் பிரதிவாதி ஏன் இரண்டாவது கருத்தைக் குறிப்பிடவில்லை என்றோ; அது தனக்குச் சாதகமாய் இருக் கிறது என்றோ வாதிடலாம். இதற்கு முடிவு கட்ட வேண்டு மானால் புதிய காரணம் ஏதாவது கண்டுபிடித்துக் கூறவேண்டும்.

ஆகவே பெயரியலில் கூறியதற்குச் சொன்ன முதல்வாதம் ஒத்துக்கொள்ளத் தகுந்ததாய் இல்லை. சேனாவரையருடைய இரண்டாவது வாதம் நியாயப்படுத்துவதாய் அமைந் துள்ளது என்பதால் அவருடைய கேள்வி-கிளவியாக்கத்தில் கூறாது பெயரியலில் கூறியது ஏன்? என்பதற்கு விடை கிடைத்து விட்டது என்று கொள்ளமுடியாது. அப்படி யானால் அந்தக் கேள்விக்குச் சரியான விடைகாண முயலுவது தொல்காப்பிய அறிஞர்களின் கடமையாகும். ஆனால் இந்த கேள்வியைச் சேனாவரையருக்குப் பிறகு வேறு எந்த உரையாசிரியர்களும் எழுப்பவில்லை; வேறு அறிஞர்கள் யாராவது எழுப்பி யுள்ளார்களா என்பதும் தெரியவில்லை. இது தமிழ் ஆராய்ச்சியில் சிறப்பாகத் தொல்காப்பிய ஆய்வில் உள்ள மந்தத்தையே காட்டு கிறது.

சேனாவரையருடைய கேள்விக்குச் சரியான விடை காண மேலே குறிப்பட்டபடி, சேனாவரையருடைய பாணியில் இன்னும் சில கேள்விகள் கேட்க வேண்டும். அந்தப் புதிய கேள்விகளுக்கு விடைத் தெரிந்தால் ஒருக்கால் மூலக் கேள்விக்கு விடைகாண் பது சுலபமாக இருக்கும்.

முதலில் சொல்லின் பொது இலக்கணத்தைக் கிளவியாக்கத் தில் கூறாது பெயரியலில் ஏன் கூறினார் என்ற கேள்விக்கு எதிர்கேள்வியாகக் கிளவியாக்கத்தின் முதலில் திணை-பால் பாகுபாட்டைக் கூறுவானேன் என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். சொல்லதிகாரம் முழுமையும் படிக்கும்போது தொல்காப்பியர் திணை-பால் பாகுபாட்டிற்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்று தோன்றுகிறது. (இதன் முழு விளக்கம்

இரண்டாவது இயலிலும் மூன்றாவது இயலிலும் உள்ளது). அது ஏன் என்று இன்னொரு கேள்வியும் எழலாம். இந்தக் கேள்விக்கு விடை இரண்டாவது இயலில் விளக்கப்படும். கிளவியாக்கத்தின் முதலில் திணை, பால் பாகுபாட்டைக் கூறியதற்குக் காரணமே அது தமிழ்மொழி அமைப்புக்கே உரிய சிறப்புப் பாகுபாடு என்பது தான். எனவே தொல்காப்பியர் தமிழ்மொழியின் சிறப்பு இலக்கணமான திணை-பால் பாகுபாடுபாட்டை முதலில் விளக்குவதால் 'சிறப்புடை பொருளைத் தான் முதலில் விளக்குதல்' என்ற வருணனை உத்தியைக் கடைப்பிடித்து இலக்கணம் எழுதினார் என்று கூறலாம் போலத் தோன்றுகிறது. இதுஉண்மையானால் இந்த உத்தியை வேறு எங்காவது கடைப்பிடித்திருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.

பெயரியலில் முதல் ஐந்து சூத்திரங்களிலேயே இதற்கு விடை இருக்கிறது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று முதலில் கூறி இரண்டாவது சூத்திரத்தில் 'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லின் ஆகும்' என்று கூறியுள்ளார் அல்லவா, இதைச் சொற்பொருள் இனைத்துப் பாகுபாடு விவரிக்கிறது என்று சேனாவரையர் கூறியது முழுவதும் பொருந்தாது என்பது மேலே (§ 1.6) விளக்கப்பட்டுள்ளது. கல்லாடர் இரண்டாவது சூத்திரத்தில் பொருண்மை கூறியது என்பதே முதல் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டு அதற்குச் சமாதானம் கூறியுள்ளதும் அங்கே விளக்கப்பட்டுள்ளது

அப்படியானால் இரண்டாவது சூத்திரத்தில் ஒரு பகுதியாய் கூறிய கருத்தைத் தனிச் சூத்திரமாக முதலில் கூறுவானேன் என்ற கேள்வியை நாம் எழுப்பலாம். எழுத்து, சொல் என்ற இரண்டு அடிப்படைக் கூறுகளை-தனிமங்களை மொழி உடையது. எழுத்தின் முக்கியபணி சொல்லை வேறுபடுத்தி அறிய உதவுவது தான். சொல்லின் சிறப்புப்பணியோ பொருள் உணர்த்துவது. எனவே சொல்லின் பொது இலக்கணம் கூறும்போது அதனுடைய சிறப்புப்பணியான பொருள் உணர்த்துவதை முதலில் கூறுவது, 'சிறப்புடை பொருளைத் தான் முதலில் விளக்குதல்' என்ற உத்தியைப் பின்பற்றியதுதான்.

இப்பொழுது சேனாவரையர் முதலில் எழுப்பிய கேள்விக்கு வருவோம். கிளவியாக்கத்தில் தமிழ்மொழி அமைப்பில் சிறப்பான இலக்கணக்கூறை முதலிலும் பெயரியலில் மொழிஅமைப்பின் பொதுவான இலக்கணங்களைப் பிறகும் கூறியது ஏன்? இவற்றை இயல் மாற்றியல்லவா தொல்காப்பியர் கூறியிருக்கவேண்டும் என்பதுதானே சேனாவரையருடைய கேள்வி. எழுத்ததிகாரத்திலும் சரி, சொல்லதிகாரத்திலும் சரி, தொல்காப்பியர் முதலில் தமிழ் மொழி அமைப்பில் சிறப்பான உண்மைகளைக் கூறிய பிறகே எல்லா மொழிக்கும் பொதுவான உண்மைகளைச் சொல்வதைக் காணலாம். உதாரணமாக எழுத்ததிகாரத்தில் எழுத்தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய் என்ற முதல் சூத்திரமும் இரண்டாம் சூத்திரமும் தமிழ்மொழியின் எழுத்துப் பாகுபாடுகள். ஆனால் குற்றெழுத்து, நெட்டெழுத்து என்ற உயிரெழுத்தின் பாகுபாடும் (எழுத்து-3.4) மாத்திரை பற்றிய பொது விளக்கமும் (எழுத்து - 7) எல்லா மொழிக்கும் பொருந்துவதே. சொல்லதிகாரத்தில் முதல் பன்னிரண்டு சூத்திரம் தமிழ்மொழி அமைப்பு பற்றியதால் தமிழ்மொழிக்கே உரியது. செப்பு வினா பற்றிய நான்கு சூத்திரங்களும் (13-16) எல்லா மொழிக்கும் பொருந்தும் பொது உண்மைகளாகவே அமைந்துள்ளன.

மேலும் தொல்காப்பியம் தமிழ் இலக்கணம் கூறும் நூலே தவிரப் பொதுமொழிப் பண்புகளை-மொழி இயல்களைக் கூறும் நூல் அல்ல. எனவேதான் தொல்காப்பியர் எல்லா மொழிக்கும் பொருந்தும் சொல்லின் பொது இலக்கணத்தைப் பெயரியலிலும் தமிழ்மொழி அமைப்பின் சிறப்புக் கூறான திணை-பால் பாகுபாட்டைச் சொல்லதிகாரத்தின் முதலில் கிளவியாக்கத்தின் துவக்கத்திலும் கூறியுள்ளார் என்று நாம் சமாதானம் சொல்லலாம்.

இன்னொரு உண்மையையும் இங்குச் சுட்டிக்காட்டவேண்டும். வைப்புமுறை பிரச்சனை இலக்கணத்தில் மொழிஅமைப்பு பற்றிய பிரச்சனை அல்ல. அதாவது அகநிலைப் பிரச்சனை அல்ல; புறநிலைப் பிரச்சனைதான். புறநிலைப் பிரச்சனைக்குப் புறநிலையில்தான் விடை தேடவேண்டும். சேனாவரையர் எழுப்பிய பிரச்சனை புறநிலை பிரச்சனை ஆனாலும் அவர் அகநிலையில் விடை காண முயன்றதால்தான் அவருடைய வாதத் திறமை அவருக்குக்

கை கொடுக்கவில்லை. அப்படி கொடுத்த வாதங்களும் பொருந்து வனவாக அமையவில்லை. மேலும் சரியான விடையும் காண முடியவில்லை. நாம் மேலே குறிப்பிட்ட 1) தமிழ்மொழி அமைப்பை முதலில் கூறிப் பொதுமொழி உண்மைகளைப் பின் னால் கூறுவது; 2) சிறப்புடைப் பொருளைத் தான் முதலில் விளக்குவது என்ற இரண்டுமே புறநிலைப்பட்ட விளக்கமே.

## 1.8 சொல்லதிகார அமைப்பு

சொல்லதிகாரமும் ஏனைய அதிகாரங்களைப் போலவே ஒன்பது இயல்களாக அமைந்துள்ளதால் சொல்லிணக்கணத்தை விளக்கும் வகையில் சொல்லதிகார அமைப்பு எப்படி உள்ளது என்று பார்க்க வேண்டும். இங்கு இளம்பூரணரும் கல்லாடரும் முழுவதும் ஒத்த கருத்தினராயும் சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் ஒரே கருத்தினராயும் தெய்வச்சிலையார் மட்டும் மாறுபட்ட கருத்தினராயும் காணப்படுகிறார்கள். உண்மையில் சில இயல்களில் கருத்தை விளக்குவதில் சேனாவரையர் இளம்பூரணர் இடமிருந்து மாறுபட்டாலும் அவர்களின் சொல்லதிகார அமைப்புக்குரிய பாகுபாட்டின் அடிப்படை ஒன்றேதான்; தெய்வச்சிலையாரின் அடிப்படைதான் மாறுபட்டது. இளம் பூரணர் – சேனாவரையர் கருத்துகளை உருபனியல் அடிப்படை என்றும் தெய்வச்சிலையாரின் கருத்தைத் தொடரியல் அடிப்படை என்றும் சுருங்கச் சொல்லலாம்.

### 1.8.1 உருபனியல் நோக்கு

#### 1.8.1.1 இளம்பூரணர்

> கிளவிகள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து; என்னை? ஒருவன் மேல் ஆமாறு இது, ஒருத்திமேல் ஆமாறு இது, பலர் மேல் ஆமாறு இது, ஒன்றன்மேல் ஆமாறு இது, பல வற்றின் மேல் ஆமாறு இது, வழுஆமாறு இது, எனப் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்தினமையின் இப் பெயர்த்து ஆயிற்று

என்ற இளம்பூரணரின் வாசகம் கிளவியாக்கம் பற்றிய செய்திகளைப் பட்டியல் போட்டுக் காட்டினாலும் வேற்றுமை யியல் முன்னுரையில்

மேல் ஒத்தினுள் (கிளவியாக்கம்) நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள்கள் மேல் ஆமாறு கூறிப்போந்தான்; அவற்றது முதலது பெயர்ச்சொல்; அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டான். இது மேல் ஒத்தினோடு இயைபு.

என்ற அவருடைய கூற்று இரண்டு உண்மைகளைப் புலப்படுத்துகிறது. ஒன்று: நால்வகைச் சொற்களுக்கும் இலக்கணம் கிளவியாக்கம் கூறுகிறது என்பது. இதை 'பொது' இலக்கணம் என்று கூறலாம். மற்றொன்று: வேற்றுமையியல் பெயர்ச்சொல்லின் இலக்கணம் உணர்த்துகிறது என்பது. வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல் ஆகிய மூன்று இயல்களிலும் அந்த இயல்கள் என்ன சொல்கின்றன என்பதை மட்டும் விளக்கி வைப்புமுறையைப்பற்றி ஒன்றும் கூறாது போய்விட்டார். ஆனால் வினையியலில் 'நிறுத்த முறையானே வினைச்சொல் ஆமாறு எடுத்துக்கொண்டார்' என்று குறிப்பிட்டு வினையியல் வினைச் சொல்லை விளக்குவதாக எழுதியுள்ளார். இது வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல் ஆகிய நான்கு இயல்களும் பெயரின் இலக்கணத்தை விவரிக்கிறது என்பதைச் சூசகமாகப் புலப்படுத்திவிடுகிறது. இடையியலிலும், உரியியலிலும் கூட வைப்புமுறை பற்றி எதுவும் குறிப்பு இல்லை. அவை இடை, உரி ஆகிய சொற்களின் இலக்கணத்தை முறையே கூறுகின்றன என்பது தெளிவாக உள்ளது என்று கருதியிருக்கலாம். எனவே கிளவியாக்கம் நான்கு சொற்களின் பொது இலக்கணமும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல் ஆகிய நான்கும் பெயர்ச் சொல்லின் இலக்கணமும் வினையியல், இடையியல், உரியியல் ஆகியவை முறையே வினை, இடை, உரிச்சொற்களின் இலக்கணமும் உணர்த்துவதாகக் கொள்ளலாம். கிளவியாக்கம் பொது இலக்கணம் உணர்த்துகிறது என்பதற்கு ஒப்ப ஏனைய ஏழும் தனிச்சொல் வகையின் இலக்கணம் அதாவது சிறப்பு இலக்கணம் உணர்த்துகிறது என்றும் கொள்ளலாம்.

கடைசி இயலான எச்சவியல் இளம்பூரணர் கருத்துப்படி 'எல்லா ஒத்தினுள்ளும் எஞ்சிய பொருள்களை உணர்த்தினமையின்' பெயர் பெற்றது ஆகும். இது 'எச்சம்' என்றதன் வேர்ப்

பொருளை ஒட்டிய விளக்கம். முன்னால் உள்ள இயல்களுக்குக் கொடுத்த விளக்கத்திற்கு ஏற்ற முறையில் சொல்லவேண்டு மானால் எச்சவியலும் நான்கு வகைச் சொல்லுக்கும் பொது இலக்கணம் உணர்த்துவதாகக் கூறலாம். சேனாவரையர் இதை இன்னொரு நோக்கில் விளக்கியுள்ளார் என்பது பிற்பகுதியில் காட்டப்படும். எனவே சொல்லதிகார அமைப்பு பற்றிய இளம்பூரணர் கருத்து அடிப்படையில் கிளவியாக்கமும் எச்ச இயலும் பொது இலக்கணத்தையும் ஏனைய இயல்கள் நான்கு வகைச் சொற்களின் இலக்கணத்தை அதாவது சிறப்பு இலக் கணத்தைத் தனித்தனியே ஆகவும் விளக்குகின்றன என்று கொள்ளலாம். இயல் அமைப்பு அடிப்படையில் பொது-சிறப்பு-பொது என்றும் கூறலாம்.[10] இங்கு தனிச்சொற்களின் இலக் கணம் பற்றிப்பேசுவதால் 'உருபனியல் நோக்கு' என்று மொழி யியல் நோக்கில் கொள்ளலாம்.

கல்லாடர் கருத்து இளம்பூரணர் கருத்தைத் தழுவியது என்பதை அவரது வாசகம் புலப்படுத்திவிடுகிறது.

> மற்றுப் பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லும் எனச் சொல்லும் நான்கே ஆதலான் ஒத்தும் நான்கே ஆகற்பாலன எனின், ஆகா என்னை? நான்கு வகைப்பட்ட சொல்லிற்கும் பொது இலக்கணம் இவ்வோத்தினுள் (கிளவியாக்கம்) உணர்த் தினார். அவற்றுள் முதற்கண்ணது பெயர்ச்சொல் ஆதற்கு இலக்கணம் வேற்றுமை ஒத்துள்ளும் வேற்றுமை மயங்கியலுள்ளும் விளிமரபினுள்ளும் உணர்த்தினார். உணர்த்திய இலக்கணம் உடைய பெயரைப் பெயரி

10. பிற்கால இலக்கணநூல்களில் பொது-சிறப்பு முறையிலே சொல்லதிகாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஒவ் வொரு ஆசிரியரும் ஒவ்வொரு முறையைக் கடைப்பிடித் துள்ளார்கள். உதாரணமாக நன்னூலார் பெயரியல், வினை யியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்று அமைந் துள்ளதால் சிறப்பு - பொது - சிறப்பு என்ற முறையிலும் இலக்கணக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் பொது வியலைக் கடைசியில் வைத்துள்ளதால் சிறப்பு பொது என்ற முறையிலும் வீரமாமுனிவர் சொற்பொதுவியல் என்ற இயலை முதலில் வைத்துள்ளதால் பொது-சிறப்பு என்ற முறையிலும் சொல்லதிகாரத்தை அமைத்துள்ளதாகக் கொள் ளலாம். (தொன்னூல்விளக்கம் பற்றிய கருத்துக்குச் சண்முகம் 1981ஆ பார்க்கவும்)

யலுள் உணர்த்தினார். உணர்த்தி அதன் பின்னே கிடந்த வினையை வினையியலுள் உணர்த்தினார். உணர்த்தி அதன் பின்னே கிடந்த இடைச்சொல்லை இடைச்சொல் ஓத்தினுள் உணர்த்தினார். உணர்த்தி அதன்பின்னே கிடந்த உரிச்சொல்லை உரிச்சொல் ஓத்தினுள் உணர்த்தினார். பின்னை எல்லா ஓத்தினுள்ளும் எஞ்சி நின்ற சொற்களை எச்சவியலுள் உணர்த்தினார். இவ்வகையான் எல்லாம் உணர்த்தினார் ஆதலின் இவ்வோத்து எல்லாம் வேண்டியதூம் இம் முறையே கிடந்ததூம் ஆயிற்று

என்ற கல்லாடர் கூற்றுக்கு, இளம்பூரணர் கருத்துக்குக் கூறியதற்கு மேலே விளக்கமோ, விமர்சனமோ தேவையில்லை.

### 1.8.1.2 சேனாவரையர்

வழுக்களைந்து சொற்களை ஆக்கிக்கொண்டமையால் இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று .. .. சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கம் ஆயிற்று எனினும் அமையும்

என்று சேனாவரையர் தன்னுடைய கருத்தை முதலிலும் இளம்பூரணருடைய கருத்தை இரண்டாம் பட்சமாகக் கூறி "அமையும்" (அதுவும் ஒரு வகையில் பொருந்தகூடியதே) என்று முடித்துவிட்டார். ஆனால் வேற்றுமையியலின் முன்னுரையில் கிளவியாக்கம் மட்டும் இல்லாமல் வேற்றுமையியலும் பொது இலக்கணம் கூறுகிறது என்று சேனாவரையர் குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணருக்கும் சேனாவரையர்க்கும் தனியே கிளவியாக்கத்தைப் பார்க்கும் போது அது ஒரு கருத்தைக் கூறுவதாகவும் பிற இயல்களோடு வைத்துப்பார்க்கும்போது அது வேறொரு கருத்தைக் கூறுவதாகவும் தோன்றியுள்ளது. இது அவ்வளவு சிறப்பாகக் கொள்ளமுடியாது. (தெய்வச்சிலையார் இப்படி இரண்டு விதமாக விளக்காது ஒரே முறையிலேயே விளக்கியுள்ளார் என்பது பிற்பகுதியில் விளக்கப்படும்)

நான்குச் சொற்கும் பொது இலக்கணம் உணர்த்தினார், அதற்கு இடையீடு இன்றி அவற்றது சிறப்பு இலக்கணம் உணர்த்துதல் முறைமையாயினும் வேற்றுமை இலக்கணம் உணர்த்துதற்கு வேறு இடம் இன்மையானும் பொது இலக்கணம் ஆதல் ஒப்புமையானும் உருபேற்றல்

> பெயர்க்கு இலக்கணம் ஆதலின் வேற்றுமை உணர்த்திப் பெயர் உணர்த்துதல் முறை ஆகலானும் கிளவியாக்கத் திற்கும் பெயர்க்கும் இடை வேற்றுமை இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார்

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு 'நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்தினார்' என்பது கிளவியாக்கம் பற்றியது. ஆனால் வேற்றுமையியல் பொது இலக்கணம் கூறு கிறது என்பதில் தடுமாற்றம் இருக்கிறது என்பதை 'வேற்றுமை உணர்த்துவதற்கு வேறு இடம் இன்மையானும் பொது இலக்கணம் ஆதல் ஒப்புமையானும்' என்ற வரிகள் புலப்படுத்தி விடுகின்றன. ஆயினும் பெயரியலின் முன்னுரையில்

> நான்கு சொல்லும் பொதுவகையான் உணர்த்தி பொது இலக்கணம் ஆதல் ஒப்புமையானும் வேற்றுமை பெய ரோடு இயைபு உடைமையானும் பெயர் இலக்கணத் திற்கும் பொது இலக்கணத்திற்குமிடை வேற்றுமை இலக்கணம் உணர்த்தி இனிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துவான் எடுத்துக்கொண்டு இவ்வோத்தான் அவற்றின் முதற்கண்ணது ஆகிய பெயர் இலக்கணம் உணர்த்துகின்றார்

என்று கூறுவதால் வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளி மரபு ஆகிய மூன்று இயல்களும் ஓரளவு பொது இலக்கணம் என் பதை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு, பெயரியல், வினை யியல், இடையியல், உரியியல் ஆகிய நான்கும் சிறப்பு இலக்கணம் உணர்த்துவதையும் குறிப்பிட்டுவிட்டார். இதற்கு ஏற்பவே அந்த இயல்களின் வைப்பு முறையைப்பற்றி வினையியல், இடையியல், உரியியல் ஆகிய மூன்று இயல்களில் 'நிறுத்தமுறையானே வினைச் சொல் ஆமாறு உணர்த்திய எடுத்துக்கொண்டார்.. நிறுத்த முறையானே இடைச்சொல் உணர்த்திய எடுத்துக்கொண்டார்' என்ற முறையில் மூன்று இயல்களிலும் குறிப்பிட்டுள்ளார். எச்ச வியலில்

> கிளவியாக்கம் முதலாக உரியியல் இறுதியாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற்கு இடம் இன்மையான் உணர்த்தப்படாது எஞ்சிநின்ற சொல் இலக்கணம் எல்லாம் தொகுத்து உணர்த்திய எடுத்துக் கொண்டார். ஆதனான் இவ்வோத்து எச்சவியல் என்னும் பெயர்த்து ஆயிற்று

என்று சேனாவரையர் சொல்வது இளம்பூரணருடைய கருத்தின் விளக்கம் என்பது தெளிவாகிறது. ஆயினும் சேனாவரையர் பெயர், வினை, உரி ஆகியவற்றிற்குரிய செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன என்பதை உணர்த்தும் எச்சவியல் பொது இலக்கணம் கூறுகிறது என்ற முடிவுக்கு வராதது ஆச்சரியமாக இருக்கிறது. எட்டு இயலை ஒரு அடிப்படையில் விளக்கிவிட்டு ஒன்பதாவது இயலை உதிரிப்பொருள்களைத் தொகுத்தது என்று கூறுவது அவருடைய அடிப்படை நோக்கு பிறழ்ந்துவிட்டது என்பதையே காட்டுகிறது. 'எச்சம்' என்ற வேர்ப்பொருளில் அதிக அழுத்தம் கொடுத்துவிட்டதே சொல்லதிகார அமைப்பு அடிப்படையைப் புறக்கணிக்கக் காரணம் என்றாலும் ஆய்வுக் கோட்பாடு தடம் மாறி, தருக்கரீதியாக அமையவில்லை என்பதைக் காட்டிவிடுகிறது. சேனாவரையருடைய விளக்கத்தைப் பார்ப்போம்.

> 1) காண்டீர் என்றா (எச்சம். 29) எனவும் 2) செய்யாய் என்னும் முன்னிலை வினைசொல் (ஷை. 54) எனவும் 3) உரிச்சொல் மருங்கினும் (ஷை. 60) எனவும் 4) ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி (ஷை. 65) எனவும் இவை முதலாகிய சூத்திரங்களால் உணர்த்தப்பட்ட 1அ) அசை நிலையும் 2அ) வினைச்சொல் இலக்கணமும் 3அ) வழு அமைதியும் அவ்வோத்துக்களுள் உணர்த்தாது ஈண்டு உணர்த்தியது என்னையோ வெனின் அதற்குக் காரணம் அவ்வச் சூத்திரம் உரைக்கும் வழிச் சொல்லுதும்[11]

என்பது அவரது வாசகம். இங்கு வினைச்சொல், உரிச்சொல், பெயர்ச்சொல் ஆகிய மூன்று சொற்களை எடுத்துக் காட்டியுள்ளார். இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (ஷை. 59) என்ற சூத்திரம் இடைச்சொல் பற்றியதும் எச்சவியலில் இருப்பதால் அது நான்கு வகைச் சொல்லுக்கு உரிய இலக்கணம் கூறுகிறது என்ற பொதுமை முழுமை அடைகிறது ஆனால் இந்த

11. சேனாவரையர் முதலில் நான்கு சூத்திரங்களை எடுத்துக் காட்டி பிறகு மூன்றுவகை விளக்கங்களையே குறிப்பிட்டிருக்கிறார். உண்மையில் 3அ என்பது 4வதுக்கே (ஒருமை சுட்டிய பெயர்) பொருந்தும். எனவே அதை 4அ என்று மாற்றி '3அ' ஆக 'உரிச்சொல் இயல்பும்' என்பதாக இருக்கலாம். அது இன்றைய பதிப்பில் விடுபட்டிருக்கலாம். அல்லது 3அ என்பது 3, 4 ஆகிய இரண்டையும் சுட்டுகிறதா என்று ஆராயவேண்டும்.

நோக்கில் பார்க்காது சில சிறப்புக்காரணங்களால் அந்தச்சூத்திரங்கள் எச்சவியலில் கூறப்பட்டிருக்கின்றன என்று அவைகளுக்கு விளக்கம் கொடுக்கச் சேனாவரையர் முயற்சித்துள்ளார். எனவே அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளார் என்று அடுத்துப் பார்க்க வேண்டும்.

கண்டீர் என்றா (ஷி. 29) என்ற சூத்திரத்தில்

> ஈண்டு வினைச் சொற் பொருண்மையும் வினாப் பொருண்மையும் இன்மையால் அசைநிலை ஆயினவாறு கண்டு கொள்க

என்று விளக்கியதோடு நின்றுவிட்டார். ஆனால் 'கேட்டை என்றா' (ஷி.30) என்ற அடுத்த சூத்திரத்தில்

> இரண்டு சூத்திரத்தானும் கூறப்பட்டன வினைச்சொல் ஆதலும் இடைச்சொல் ஆதலும் உடைமையான் வினையியலுள்ளும் இடையியலுள்ளும் கூறாது ஈண்டுக் கூறினார்

என்று சமாதானம் கூறியுள்ளார். ஆனால் வினைமுற்றின் வகை கூறும் அடுத்த சூத்திரம் ஏன் வினையியலில் கூறவில்லை என்ற கேள்வி எழும். எனவே வினைபற்றி எச்சவியலில் கூறும் சூத்திரங்கள் எல்லாமே இரண்டு வகையில் பயன்படுவன என்று கூறமுடியாது.

மேலும் செய்யாய் என்னும் வினைச் சொல் என்று அவர் மேலே குறிப்பிட்ட சூத்திர உரையில் சேனாவரையர் இதை எச்ச இயலில் கூறியதற்கு விளக்கம் எதுவும் தரவில்லை. இந்தச் சூத்திரத்தில் முன்னிலை ஏவல் முற்றின் வடிவமான செய் என்பதைத் தொல்காப்பியர் செய்யாய் என்ற வடிவத்திலிருந்து உண்டானதாக விளக்கியுள்ளார். எனவே இது இரண்டு வகைச் சொல்லாக இருப்பதால் இங்குச் சொன்னார் என்று சொல்லமுடியாது.எனவே வினை பற்றிய எச்சவியலில் கூறப்பட்ட சூத்திரங்கள் இங்குக் கூறியதற்குச் சொன்ன காரணங்கள் பொருத்தமாக இல்லை.

உரிச்சொல் மருங்கினும் இரியவை உரிய என்ற சூத்திர உரையில் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்.

> வேறுபடுக்குஞ் சொல்லே ஆவன இவையெனத் தொகுத்துணர்த்தற்கும் 'உரிச்சொல் மருங்கினு உரியவை உரிய' எனச் சூத்திரம் சுருங்குதற்கும் இடையியலுள்ளும்

(போன சூத்திரம்) உரியியலுள்ளும் வையாது இரண்டு
சூத்திரத்தையும் ஈண்டுவைத்தார்

என்பது அவரது வாசகம். இங்கு இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே என்ற போன சூத்திரத்தையும் சேர்த்தே விளக்கம் கொடுத்துள்ளார் என்பது வெளிப்படை மாட்டேறுக்காக ஒரே இயலில் கூறவேண்டும் என்ற நியதி இல்லை இயல் தாண்டியும் மாட்டேறு செல்வதைத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் விளக்கியுள்ளார். எனவே மாட்டேறுக்காக ஒரேஇயலில் கூறினார் என்பதும் முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது அல்ல.

ஒருமை சுட்டிய பெயர் நிலைக்கிளவி (ஷை. 65) என்ற சூத்திரத்தை எச்சவியலில் வைத்ததற்கு

ஈண்டு ஒருமைச் சொல் பன்மைச் சொல்லோடு மயங்கு
தல் உடைமையான் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி
(கிளவி - 27) என்புழி அடங்காமை அறிக

என்பதே சேனாவரையருடைய விளக்கம். தொல்காப்பியரே கிளவியாக்கத்தில் தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி என்று எண்ணுதற்கண் மயங்கி வரும் என்று (43) தனிச் சூத்திரத்தில் பலவகைப் பெயர் சேர்ந்து வருவதைக் கூறியிருப்பதால் இந்தச் சூத்திரத்தையும் அங்கே சொல்லுவதற்குத் தடை எதுவும் இல்லை. எனவே இந்தச் சூத்திரத்தை எச்சவியலில் கூறியதற்குச் சொன்ன காரணமும் பொருந்தவில்லை.

சொல்லதிகார அமைப்பை அறிந்து கொள்ளும் முறையில் ஆராயும்போது இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரும் தந்த விளக்கம் ஒரே அடிப்படையில் அமையவில்லை என்ற குறை ஏற்படுத்திவிடுகிறது, எச்சவியலில் கூறிய செய்திகளைப் பெயரியல், வினையியல், உரியியல் போன்றவற்றில் சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படி தொல்காப்பியர் கூறாததற்குச் சேனாவரையர் சொன்ன காரணங்களும் பொருத்தமாக இல்லை. எனவே சேனாவரையர் எட்டு இயல்களை விளக்கிய கோட்பாட்டின் அடிப்படையில் எச்சவியலும் நான்கு சொல்லுக்கும் பொது இலக்கணம் என்று கொண்டால் சொல்லதிகார அமைப்பு அடிப்படை எங்கும் ஒரு கோட்பாட்டில் அமைந்து ஒரே ஆய்வு நெறி முறை கடைபிடிக்கப்படவில்லைஎன்ற குறையும் நீங்கிவிடுகிறது.

அதே சமயத்தில் சேனாவரையர் விளக்கத்தில் புதைந்துள்ள கேள்வியான அந்தந்த இயல்களில் கூறாது தனி இயலில் கூறு வானேன் என்பதற்குச் சரியான விடை இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அப்படியானால் உண்மையில் எச்ச இயல், என்று தனி இயல் வைத்தது ஏன் என்ற கேள்வியும் எழு கிறது. இது தொல்காப்பியர் சொல்லதிகாரத்தை ஒன்பது இயல் களாக ஏன் பிரித்துச் சொன்னார் என்ற கேள்விக்கு நாம் காணும் விடையைப் பொறுத்தது. எச்சவியலில் சில சூத்திரங் களைச் சொன்னதும் எச்சவியல் என்ற தனி இயல் வைத்ததும் தொல்காப்பியச் சொல்லதிகார அமைப்பு என்ற புறநிலை பிரச் சனையாகும். இதற்குப் புறநிலையில்தான் விடைகாண வேண்டும். அப்படிச் செய்யாமல் சேனாவரையர் தன்னுடைய திறமையை நம்பி அகநிலையாகச் சூத்திரக்கருத்துக்களை விளக்கும் வகையில் சமாதானம் கூற முயன்றதால்தான் அவரால் வெற்றிபெற முடியவில்லை. இதே மாதிரி பிரச்சனை கிளவியாக்கத்துக்கும் பெயரியலுக்கும் இடையே உள்ளது பற்றி முன்னால் (§1.7) விளக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக தொல்காப்பியத்தில் இயல் அமைப்பு முறை என்பது ஒரு முக்கிய மான புறநிலை பிரச்சனை.[12]

நச்சினார்க்கினியருடைய விளக்கம் சேனாவரையருடைய உரையைப் பெரிதும் தழுவியே உள்ளது. ஆயினும் வேற்றுமை யியல் கிளவியாக்கம் போலப் பொது இலக்கணம் உணர்த்துகிறது என்பது மட்டும் எந்தத் தடுமாற்றமும் சந்தேகமும் இல்லாமல் தெளிவான உண்மையாக நச்சினார்க்கினியருக்குத் தோன்றியிருக்

12. பொதுவாக மொழியியலில் பழங்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியை அந்தக் கால சமூக நிலையோடும் தத்துவ ஆராய்ச்சி நிலையோடும் இணைத்துப் பார்க்க வேண்டும் என்று மொழியியலார் (Lyons, 1968:3) கூறுவார்,

Try as far as possible to relate past developments in linguistic theory to the social conditions and the philosophical ideas current at that time' என்பது அவர் கருத்து. அந்த நோக் கில் ஒரு குறிப்பிட்ட சமூக இயல் கோட்பாட்டு நோக்கில் சிவத் தம்பி (1982) சிறு முயற்சி செய்துள்ளார். அந்தக் காலத்தில் தமிழகத்தில் நிலவிய தத்துவ நோக்கையும் இலக்கணக் கோட் பாட்டுகளையும் ஒப்பிட்டு இலக்கண அமைப்பு முறையை ஆரா யும் ஆய்வும் இனி தொடங்கப்பட வேண்டும்.

கிறது என்பது அவர் உரை புலப்படுத்துகிறது. அதில் வேடிக்கை என்னவென்றால்; படிப்பவர்களுக்கு அவ்வளவு உறுதியாக நச்சினார்க்கினியர் விளக்கம் புலப்படவில்லை என்பதுதான்.

> 'முன்னர் (கிளவியாக்கம்) நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்திய அதிகாரத்தானே இப்பொது இலக்கணம் கூறுகின்ற ஓத்தினையும் (வேற்றுமையியல்) சேரக்கூறினார். அப்பொது இலக்கணம் என்னை? எனின் 1) வேற்றுமை தாமும் பெயரும் ஒரு சார் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லுமாகிய பொது இலக்கணம் ஆதல் உடைமையானும் 2) எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (வேற்றுமை. 4) எனவும் ஈறு பெயர்க்கு ஆகும் இயற்கையே என்ப (ஷை. 5) எனவும் பெயர் நிலைக் கிளவிக் காலந்தோன்றா' (ஷை. 9) எனவும் தொழிற்பெயர் காலந் தோன்றும் எனவும் மேற்கூறும் சிறப்புடைய பெயர்க்குப் பொது இலக்கணம் ஈண்டுக் கூறுதல் உடைமையானும்......

என்று வேற்றுமையியலில் நச்சினார்க்கினியர் கூறுவதால் அறியலாம். இங்கு வேற்றுமை நான்கு வகைச் சொல்லுக்கும் பொது என்ற கருத்து எப்படி பொருந்தும் என்று தெரியவில்லை. ஏனெனில் வேற்றுமை பெயரும் இடைச்சொல்லும் சேர்ந்தது என்பதில் ஐயமும் இல்லை; ஒரு சார் வினைச்சொல் என்பது எதைக் குறிக்கிறது என்ற கேள்வி எழுகிறது. கொண்டு (வாள் கொண்டு வெட்டினான்-மூன்றாம் வேற்றுமை), நின்று (மலையின் நின்று அருவி விழும் - ஐந்தாம் வேற்றுமை), உடை/உடைய (நின்னுடை வாழ்க்கை, தன்னுடைய வாழ்வு-ஆறாம்வேற்றுமை) போன்றவை சொல்லுருபுகளாகப் பயன்படுவதை மனதில் கொண்டு கூறினாரா என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சுப்பிரமணியசாஸ்திரி (1930:71) உரிச்சொல் எவ்வாறு வேற்றுமையாகும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளார், என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் 'வேற்றுமையாவது உருபும் அது கொள்ளும் பெயரும் அது கொண்டு முடியும் வினைச் சொல்லும் சேர்ந்ததே ஆகும். ஆதலின் அம்முறையான் நான்கு சொற்கும் உரிய பொதுவிலக்கணம் எனலாம்' என்ற சுந்தரமூர்த்தி (1952 கழகப்பதிப்பு. பக். 302) விளக்கத்தில் இரண்டு ஐயங்கள் எழுகின்றன. அவையாவன:

1) நச்சினார்க்கினியர் கூறும் ஒரு சார்வினைச்சொல் என்பது எப்படி வேற்றுமைத் தொடர் கொண்டு முடியும் வினைச்சொல் லைக் குறிக்கும்? சில வேற்றுமைகள் சில வினைச் சொற்களைக் கொண்டு முடியாதே தவிரப் பொதுவாக எல்லா வேற்றுமைத் தொடர்களையும் எடுத்துக்கொண்டால் எல்லா வினைச்சொற் களையும் கொண்டுமுடியும் சொற்களாக அமையுமே. அப்படியா னால் நச்சினார்க்கினியர் 'ஒரு சார் வினைச்சொல்' என்று அடை கொடுத்துக் கூற வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எழுகிறது. 2) உரிச்சொல்லைப் பற்றி எதுவும் கூறாமல் நச்சி னார்க்கினியரைப் பின்பற்றி 'நான்கு சொற்கும் உரிய பொது இலக்கணம். என்று சுந்தரமூர்த்தி எப்படிக் கூறினார், என்பது தெரியவில்லை. ஆகவே நச்சினார்க்கினியர் கருத்தும் அதை ஒட்டிய சுந்தரமூர்த்தியின் விளக்கமும் தெளிவாக அமையவில்லை.

நச்சினார்க்கினியரின் இரண்டாவது காரணம் வேற்றுமை யியலில் பெயர்ச் சொற்கு இலக்கணம் இந்த இயலிலே கூறப் பட்டிருக்கிறது என்பது. அப்படியானால் வினையியலில் வினைக் கும் இடையியலில் இடைக்கும் உரியியலில் உரிக்கும் பொது இலக்கணம் கூறப்பட்டிருக்கிறதே. வேற்றுமையியலில் பெயர்க் குப் பொது இலக்கணம் கூறியிருப்பதற்கு வேற்றுமையியலும், இளம்பூரணர் விளக்கியபடி, பெயர்ச் சொல்லுக்குரிய இலக்கணம் கூறுகிறது என்று வேண்டுமானால் கூறலாம். எப்படியாயினும் நச்சினார்க்கினியர் வாதமும் அவர் கருத்தை நிலைநாட்டப் போதுமானதாக இல்லை.

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளி மரபு ஆகிய நான்கு இயலும் பொது இலக்கணம் உணர்த்துகிறது என்றும் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய நான்கும் நான்கு வகைச் சொல்லுக்குரிய சிறப்பிலணக்கணத்தைத் தனியே விளக்குகின்றன என்றும் கருதுகிறார்கள். இதுவும் ஒரு வகையில் உருபனியல் அடிப்படையில் அமைந்ததே.

சேனாவரையர் சொல் தனிமொழியும் தொடர்மொழியும் என்று இரண்டு வகையையும் தொடர்மொழியின் வகையையும் அவை தொடரும் முறையும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, தொடர்

மொழி இலக்கணம் சொல்லதிகார அமைப்பில் எப்படி அல்லது எங்கு வருணிக்கப்படுகிறது என்று சொல்லவே இல்லை. அதாவது 'தொடரியல்' என்ற ஒரு பகுதி சொல்லிலக்கணத்தில் இருக்கிறது என்று உணர்ந்திருக்கிறாரே தவிர அது சொல்லதிகாரத்தில் எங்கே, எப்படி வருணிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணரவில்லை போலும். நச்சினார்க்கினியர் கருத்தும் இதே போலத்தான்.

சுப்பிரமணிய சாஸ்திரி (1930: 7) இளம்பூரணர், சேனா வரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவர் கூறும் இயைபும் பொருத்தம் அற்றது' என்று ஓரேயடியாகச் சொல்வதும் பொருத்தம் இல்லை. அவர்களுடைய கருத்தை உபருனியல் நோக்கு என்று கூறிக் குறை உடையது என்று வேண்டுமானால் சொல்லலாம்

## 18.2 தொடரியல் நோக்கு

தெய்வச்சிலையார் சொல்லதிகார இயல்களை விளக்கும் போதும் இயல்களின் வைப்பு முறைகளை விவரிக்கும் போதும் மட்டுமல்லாமல் சொல்லதிகாரத்தைப் பொதுநிலையில் விளக்கும் போது கூடத் தொடரியல் உணர்வோடு வருணித்துள்ளது தனிச் சிறப்பு வாய்ந்தது. இன்று சொல்லதிகாரத்தைத் தொடரியல் நோக்கில் விளக்குவதற்குப் பலரும் முயன்று வருகிறார்கள்.

> பொருள் அறிவிக்கும் சொற்களைப் பாகுபடுத்தலாற்
> சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து

என்ற தெய்வச்சிலையார் விளக்கமே புதுமையானது. அந்தப் பாகுபாடு பலவகைப்படலாம் (தொல்காப்பியர் செய்த பாகு பாடு இரண்டாவது இயலில் விளக்கப்படும்) எனினும் பெயர், வினை போன்ற பாகுபாடுகள் சொல்லியல் நோக்கிலும் முக்கிய மானது. ஆனால் தொடரியல் முக்கியத்துவத்தைச் தெய்வச் சிலையார் அடுத்த வாக்கியத்திலேயே உணர்த்திவிடுகிறார்.

> அஃது யாங்கனம் உணர்த்தினார் எனின் சொற்களைப்
> பொருள்நிலைமை நோக்கித் தொடர்மொழி, தனி
> மொழி என இரு வகைப்படுத்து ... ...

என்பதே அடுத்த வாக்கியம் இதன் சிறப்பைப் பிற்பகுதியி லேயே விளக்கியுள்ளார்.

> பொருள் உணர்த்துவன தனிமொழி ஆதலால் தொடர் மொழி என வகுத்ததனாற் பயன் என்னை? எனின்:- பொருள் உணர்த்துதற்குச் சிறப்பு உடையன தொடர் மொழி என்று கொள்க. என்னை சிறந்தவாறு எனின் சாத்தன் என்றவழிப் பொருண்மை மாத்திரம் உணர்த் துவது அல்லது கேட்டார்க்கு ஒரு பயன்பட நில்லாமை யின் சாத்தன் உண்டான் எனப் பயன்பட வருஉம் தொடர்மொழியே பொருள் இனிது விளக்குவது என்க

என்பது அவருடைய வாசகம் இது, தொடர்மொழிக்கும் பொருளுக்கும் உள்ள சிறப்பான உறவை விளக்குகிறது. ஆயினும் தனிமொழி பொருள் உணர்த்துவதற்கும் தொடர்மொழி பொருள் உணர்த்துவதற்கும் உள்ள வேறுபாட்டைத் தெய்வச் சிலையார் விளக்கிய முறையிலிருந்து மாறுபட்டு மொழியியலார் விளக்குவார்கள். தனி மொழிகளின் சேர்க்கைதான் தொடர் மொழியின் பொருள் என்று கூற முடியாது ஏனெனில் தனி மொழிகளின் சேர்க்கை தரும் பொருளிலிருந்து தொடர் மொழிப் பொருள் மாறுபடும் என்பது தான் சிறந்த கருத்து ஆகும்.

சாத்தன், வந்தான் என்ற தனிச் சொற்களின் பொருளுக் கும் சாத்தன் வந்தான் என்ற தொடர்மொழியின் பொருளுக் கும் வேறுபாடு இல்லை. எனவே தெய்வச்சிலையார் உதாரணம் சிறப்பானது அல்ல.

ஆனால் பழைய, மாணவர், விடுதி என்ற மூன்று சொற்களின் சேர்க்கையால் வரும் பழைய மாணவர் விடுதி என்ற தொடர் இரண்டு பொருள்களை உடையது. ஆகவே தனி மொழிச் சேர்க் கையை விடத் தொடர்மொழியில் வேறு பொருளும் இருக் கிறது என்பது புலப்பட்டுவிடுகிறது. (1) பழைய மாணவர்களு டைய விடுதி, (2) பழமையான மாணவர்களுடைய விடுதி: மாண வர் விடுதி பழமையானது. இந்தப் பொருள் வேறுபாடு சொற் களின் சேர்க்கை முறையினால் ஏற்படுகிறது. முன்னதில் பழைய மாணவர் என்ற தொடர்மொழியே விடுதி என்ற சொல்லோடு சேருகிறது; பின்னதில் பழைய என்ற அடை மாணவர்விடுதி என்ற தொடரோடு சேருகிறது. ஆகவே தொடர்மொழியின் பொருள் தனிமொழியின் பொருள்களோடு தொடரியல் பொரு ளும் உடையது. அதனாலேயே பொருள் உணர்த்துவதில் தனி

மொழியை விடத் தொடர்மொழி சிறந்தது என்று கருதப்படு கிறது.

மேலே காட்டிய தொடர் மூன்று சொல்லாக இருந்ததால் இரண்டு விதமாகச் சேர முடிந்தது. அப்படியில்லாமல், இரண்டு சொற்கள் சேர்ந்த தொடர்மொழியும் தொடர்நிலை உறவு காரணமாகப் பொருள் மாறுபடலாம், என்பதும் குறிப்பிடத் தகுந்தது. பார்த்த. பையன் என்ற இரண்டு சொற்கள் பார்த்த பையன் என்ற தொடர் ஆனால் இரண்டு பொருளைத் தர முடியும். 1) பையனைப் பார்த்தான் என்றும் பையன் பார்த்தான் என்று அவை இரண்டு பொருள் தருவதற்கு அந்த இரண்டு சொற்கள் இடையே உள்ளஇலக்கண உறவே காரணம் :1) இரண் டாம் வேற்றுமைப் பெயரும் வினையும் சேர்ந்த தொடர் மாறி பெயரெச்சம்-பெயர்த்தொடர் ஆனது, 2) எழுவாய் வேற்றுமைப் பெயரும் வினையும் மாறி பெயரெச்சம் - பெயர்த் தொடர் ஆனது - ஆகும். ஆகவே தெய்வச்சிலையார் கூறிய 'பொருள் உணர்த்துதற்குச் சிறப்பு உடையன தொடர்மொழி' என்ற கருத் துச் சிறப்பாக அமைந்து அவருடைய உதாரணந்தான் சிறப்பாக அமையாமல் போய்விட்டது. என்றாலும் இந்தக் கருத்தும் தெய்வச்சிலையாரின் தொடரியல் உணர்வையே வெளிப்படுத்தி விடுகிறது.

> சொல்இலக்கணம் அறிந்ததனாற் பயன் தொடர்மொழி
> யாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல்,
> வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக்
> குறியிட வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது

என்ற தெய்வச்சிலையாரின் வாசகமும் வாக்கியத்தைத் தொடரியல் நோக்கில் ஆராய வேண்டிய முறையைத் தெளிவாக வே விளக்கி விடுகிறது. அதை உறுப்பு அமைப்பு ஆய்வு (constituent structure analysis) என்று இன்று குறிப்பிடுகிறார்கள். எச்சவியலில் (16) பூத்தொடை என்று சொற்கள் சேர்க்கை பற்றிப் தெய்வச்சிலையார் பேசுவதையும் இணைத்துப் பார்த் தால் அண்மை உறுப்பு ஆய்வின் (immediate constituent analysis) கருத்து தெய்வச்சிலையார் உரையில் ஓரளவு காணப்படுவதாகக் கொள்ளலாம்.

எனவே தெய்வச்சிலையாரின் சொல்லதிகார அமைப்புப் பற்றிய விளக்கமும் தொடரியல் நோக்கு முழுமை அடைந்துள் ளதைக் காட்டிவிடுகிறது

சொல்லதிகார அமைப்பை, மூன்று முறையில் தெய்வச்சிலை யார் விளக்கியுள்ளார். முதலில் 1) தொல்காப்பியச் சொல் லதிகார இயல் பொருளைக் கொஞ்சம் விரிவாகப் பேசி, 2) அடுத்து ஒன்பது இயல்களின் அமைப்பு முறையை முன்னுரை யில் சுருக்கமாகக் குறிப்பிட்டு, 3) ஒவ்வொரு இயல்களின் பொரு ளையும் அந்தந்த இயல்களில் விளக்கியுள்ளார். (இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் மூன்றாவது முறையிலேயே சொல்லதிகார அமைப்பை விளக்கியுள்ளார்கள். கல்லாடர் தெய்வச்சிலையாரைப் பின்பற்றியுள்ளார்).

> சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர் மொழி தனிமொழி என இருவகைப்படுத்து: அத் தொடர் மொழியை அல்வழித் தொடர் வேற்றுமைத் தொடர் என இருவகைப்படுத்து, அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலால் அவற்றை வழுவாமல் கூறுதற்காக முற்படச் சொன்னிலைமை யாற் பொருளை உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படுத்து; அவ்வுயர்திணை உணர்த்தும் சொற்களை ஒருவனை அறியுஞ் சொல், ஒருத்தியை அறியுஞ் சொல், பலரை அறியுஞ் சொல்லென மூவகைப்படுத்து; அஃறிணை உணர்த்தும் சொற்களை ஒன்றனை அறியும் சொல் .. . . ... .
>
> அதன்பின் வேற்றுமைத் தொடர் கூறுவார் மயங்கா மர பினவாகி வருவன எழுவகை வேற்றுமை உணர்த்தி, அதன்பின் அவ்வேற்றுமைக்கண் மயங்குமாறு உணர்த்தி அதன் பின் எட்டாவது ஆகிய விளிவேற்றுமை உணர்த்தி, அதன்பின் தனிமொழிப் பகுதியாகிய பெயர்ச் சொற் பாகுபாடும், வினைச்சொல், இடைச்சொல், உரிச் சொல் பாகுபாடும் உணர்த்தி அதன்பின் சொற்கள் விகாரப்படுமாறும் ஒட்டுமாறும் பிறவும் உணர்த்தினார் என்க

என்பது சொல்லதிகார இயல்பொருள் பற்றிய முதல் விளக்கம். இங்கு முக்கிய செய்திகள் சுட்டிக்காட்டத்தக்கன: 1) பொது நிலையிலிருந்து (எல்லா மொழிக்கும் பொருந்தும் நிலையிலிருந்து) சிறப்பு நிலைக்கு (தமிழ் மொழி அமைப்புக்கும்

இன்னும் சிறப்பாகத் தொல்காப்பியத்துக்கும்) வந்து விளக்கியுள்ளமை, 2) கிளவியாக்கம் கூட வேற்றுமைத் தொடரும் அல்வழித் தொடரும் பற்றி விளக்குகிறது என்பது 'அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலான் அவற்றை வழுவாமல் கூறுதற்காக...... என்ற வரிகள் புலப்படுத்துதல். ஆனால் இரண்டாவது செய்தியை அடுத்த விளக்கத்தில் மாற்றிவிட்டார். அதாவது அல்வழித் தொடர் மட்டும் கிளவியாக்கத்துள் விளக்கியதாகக் கூறிவிட்டார். எனவே இது விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது என்பது பிற்பகுதியில் விளக்கப்படும். மேலும் 3) கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகியன தொடர்மொழிபற்றியது என்றும் 4) பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகியன தனிமொழி பற்றியதுஎன்றும் 5) எச்சவியல், உதிரிச் செய்திகள் பற்றியது என்ற பாகுபாடும் இங்கு புலப்படுத்திவிடுகிறார். இதைத் தெய்வச்சிலையார் இரண்டாவது விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> அவற்றுள் அல்வழித் தொடர் கிளவியாக்கத்துள்ளும் வேற்றுமைத் தொடர், வேற்றுமை ஓத்துள்ளும் வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்பனவற்றுள்ளும். தனிமொழிப்பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலுள்ளும் வினையிலக்கணம் வினையியலுள்ளும், இடைச் சொல் இலக்கணம் இடைச் சொல் ஓத்துள்ளும் எஞ்சிய எல்லாம் எச்சவியலுள்ளும் உணர்த்தினார் என்று கொள்க. இவ்வகையினான் ஓத்தும் ஒன்பது ஆயிற்று

என்பதே அவருடைய சொல்லதிகார அமைப்புப் பற்றிய இரண்டாவது விளக்கம். இதற்கு மேலும் விளக்கம் எதுவும் வேண்டியதில்லை. ஆயினும் கிளவியாக்கம் பற்றிய கருத்தும் எச்சவியல் பற்றிய கருத்தும் விமர்சனத்துக்கு உரியதாய் அமைந்துள்ளன மேலே கிளவியாக்கம் அல்வழிக்கும் வேற்றுமை தொடர்மொழிக்கும் பொதுவானது போல முதல் விளக்கத்தில் குறிப்பிட்டவர் இங்கேஅல்வழித்தொடர் பற்றி மட்டும் கூறியதால் சி சுப்பிரமணியன் (1972:156)'கிளவியாக்கம் 21,28,42 முதலிய நூற்பாக்கள் வேற்றுமைத்தொடர் பற்றியன ஆதலின் கிளவியாக்கம் அல்வழித் தொடர்பற்றியே பேசுவது என்பது அவ்வளவு ஏற்புடையதாகத் தெரியவில்லை' என்று சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் தெய்வச்

சிலையார் கிளவியாக்கத்தின் இயல்பொருள் கூறும்போது 'அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு; சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள்மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார்' என்ற அவருடைய மூன்றாவது விளக்கம் இன்னும் பொதுப்படவே உள்ளது.

தெய்வச்சிலையாரும் எச்சவியலை முதல் எட்டு இயலை விளக்கியமுறையில் நோக்கி விளக்காதது குறையே சி. சுப்ரமணியன் (1972:155) 'எச்சவியலும்' தொடரியல் பற்றியது என்று கூறியது தெய்வச்சிலையாருடைய சொல்லதிகார அமைப்பு அடிப்படையை ஒரு சீராக்கி முழுமைப்படுத்திவிடுகிறது. எனவே எச்சவியல் எப்படி தொடர்மொழிச் செய்திகளை விளக்குகிறது என்று அறிந்துகொள்வோம். பொருள்கோள் சூத்திரங்கள் (எச்சம்-7-12) (தொல்காப்பியர் பொருள்கோள் என்பதை மொழி புணர் இயல்பு 'சொற்கள் சேர்ந்துவரும் இயல்புகள்' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மொழியியல் உட்கிடையைத் திருமலை (1983:40) விளக்கியுள்ளார்.) தொகை பற்றிய சூத்திரங்கள் (15-24) அடுக்குத் தொடர்கள் பற்றியவை (26-29) எச்சம் பற்றியவை (31-42) வேறுசிலவும் (57,60) தொடர்மொழி பற்றியனவே. எனவே பெரும்பான்மை நோக்கி எச்சவியல் தொடர்மொழி பற்றியது என்று கருதுவதில் தவறு இல்லை தெய்வச்சிலையார் தொடர்மொழி பற்றிய இயல்களில் தனி மொழியும் விளக்கப்பட்டிருப்பதால் (உதாரணம் பிற்பகுதியில் தரப்பட்டுள்ளது) இதுவும் பெரும்பான்மை என்ற நோக்கில் பொருந்துவதே.

தெய்வச்சிலையார் கருத்துப்படி சொல்லதிகாரம் தொடர்மொழி (முதல் நான்கு இயல்கள்) தனிமொழி (அடுத்த நான்கு இயல்கள்) என்ற முறையில் அமைந்துள்ளது. அதே நோக்கில் பார்த்தால் எச்சவியலும் தொடர்மொழி பற்றியது என்று கூறலாம்.

சுப்பிரமணிய சாஸ்திரி (1945 : 2) தெய்வச்சிலையார் கருத்தான முதல் நான்கு இயலும் தொடர்மொழியை விளக்குகிறது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார் ஏனைய ஐந்து இயல்களைப் பற்றிப் பொதுமைப்படுத்திப் பேசவில்லை.

சி. சுப்பிரமணியன் (1972) தெய்வச்சிலையார் கருத்தை அடியொற்றிச் சிறிது மாற்றங்கள் செய்துள்ளார்.

> சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, எச்சவியல் ஆகியவை தொடரியல் (syntax) பற்றியும் பெயரியல், வினையியல் ஆகியவை உருபனியல் பற்றியும் உரிச்சொல், சொல் பொருள் (word and semantics) ஆகியவை பற்றியும் பேசுகின்றன

என்ற அவருடைய கூற்று சொல்லதிகார அமைப்பை விளக்குகிறது. தெய்வச்சிலையார் தொடர்மொழி என்பதைத் தற்கால மொழியியல் நோக்குக்கு ஏற்ப, தொடரியல் என்றும் தனிமொழி என்பதை உருபனியல் என்றும் அவைகளை ஆராயும் முறையை ஒட்டிய பெயரைக் குறிப்பிட்டுள்ளார். (1) எச்சவியலும் தொடர்மொழியைச் சேர்ந்தது என்பது தெய்வச்சிலையார் நோக்கோடு எச்சவியலுக்குத் தரப்பட்ட புதிய விளக்கம் என்று மேலே குறிப்பிடப்பட்டது. (2) உரியியலைத் தனிமொழி ஆய்வாகக் கொள்ளாது தனிவிதமாகக் கொண்டுள்ளது கவனிக்கத் தகுந்தது. அது தனிச் சொற்களின் பொருளையும் வருணிக்கிறது என்பது தவறு இல்லை அதற்காக அதைத் தனிவிதமான பிரிவாகக் கருதவேண்டுமா என்பதே பிரச்சனை. உரையாசிரியர்கள் அனைவருமே கிளவிகள் ‘பொருள்மேல் ஆமாறு’ விளக்குவதாகக் கூறியுள்ளார்கள் (இது விரிவாக முன்னால் விளக்கப்பட்டது) எனவே எல்லா இயல்களும் ஒருவகையில் பொருள் உணர்த்துவனவே; அப்படியானால் உரியியல் என்பது சொற்பொருள் (lexical meaning) உணர்த்துவதாகவும் கொள்ள வேண்டும். அதே நோக்கில் கருதினால் வேற்றுமையியலும் வேற்றுமை மயங்கியலும் இலக்கணப்பொருள் (grammatical meaning) உணர்த்துவனவே. எனவே உரியியலைத் தனிப் பிரிவாகக் கொள்ளாது அதுவும் தனிமொழிபற்றிப் பேசுவதால் உருபனியலில் அடங்குவதாகவே கொள்ளலாம் அதுவே சுப்பிரமணியன் கொண்ட பிற இயல்களின் பாகுபாட்டோடு ஒத்து அமையும். ஆகவே தெய்வச்சிலையாருடைய கருத்தில் சுப்பிரமணியன் மாறுபட்டதில் இரண்டில் ஒன்றே ஏற்றுக்கொள்ளத் தகுந்தது.

விளிமரபு பற்றிய சுப்பிரமணியன் விளக்கமும் (1972 : 156) ஆராயத்தகுந்தது. 'விளிமரபு இசையழுத்தம் பெற்றதும் விளி நிலையினதும் ஆகிய இருதரச் சொற்றொடர் பற்றிப் பேசுகின்றது' என்பது அவருடைய கருத்து. இசையழுத்தம் பெறுவது என்பது அண்மை விளிக்கு உரியதாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் உயிரீற்றுப் பெயர்ச் சொற்கள் அண்மை விளியில் இயல்பாய் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார் (விளி. 10). நம்பி என்பது தனிபெயராகச் சொல்வதற்கும் விளிப் பெயராகச் சொல்வதற்கும் உச்சரிப்பில் வேறுபாடு உள்ளது. அதைத்தான் 'இசையழுத்தம் பெற்றது' என்று சுப்பிரமணியன் குறித்திருக்க வேண்டும். அதேபோல விளி விகுதி பெற்றதை 'விளிநிலையினது' என்று குறிப்பது பொருந்துமா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. மேலும் தொல்காப்பிய விளிமரபும் தொடரியல் பற்றியதா? என்ற கேள்வியும் விளிமரபை விளக்கும் முறையைப் பார்த்தால் எழுகிறது. ஏனெனில் விளிமரபில் பெயர்ச் சொற்கள் விளியாக மாறும்போது ஏற்படும் மாற்றங்களை மட்டுமே தொல்காப்பியர் வருணித்துள்ளார். எனவே அது தொடர்மொழி பற்றியது என்றோ தொடரியல் பற்றியது என்றோ குறிப்பிட முடியாது (சண்முகம் 1972 : 268). ஆகவே தெய்வச்சிலையார் கருத்தும் அதையொட்டிய சுப்பிரமணியசாஸ்திரி, சுப்பிரமணியன் ஆகியோர் கருத்தும் விளிமரபைப் பொறுத்தவரை பொருந்தாது.

முடிவாகக் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்களும் தொடரியல் பற்றியது என்றும் ஏனையவை உருபனியல் பற்றியது என்றும் கொள்வதே பொருத்தமாக அமையும்.

இங்கு இந்தப் பாகுபாடு பற்றிய ஒரு பொது உண்மையையும் வலியுறுத்துவது அவசியம். அதாவது இந்தப் பாகுபாடுகள் பெரும்பான்மை பற்றியன என்பதே அது. எனவே தொடர்மொழி (தொடரியல்) கூறும் இயல்களின் தனி மொழியும் (உருபனியலும்) தனி மொழி கூறும் இயல்களில் தொடர்மொழியும் சிறுபான்மை விளக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையையும் மனதில் கொள்ளவேண்டும்.

கிளவியாக்கத்தில் னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (5) முதலாக உள்ள ஆறு சூத்திரங்களும், 12, 27, 42 ஆகியவையும் தனிமொழி பற்றியன. வேற்றுமையியலில் வேற்றுமை விகுதிகள் பற்றிய சூத்திரம், வேற்றுமை விகுதி வரும் இடம் பற்றியது (வேற்றுமை- 7), பெயர்ச்சொல்லுக்குரிய இலக்கணம் (ஷை.-8), ஒவ்வொரு வேற்றுமை உருபைக் கூறி அதன் பொருளைக் கூறும் சூத்திரங்கள் ஆகியவை தனிமொழிக்கு உரியனவே. வேற்றுமை மயங்கியலில் சில வேற்றுமையின் மாற்றுவடிவங்கள் பேசும் இரண்டு சூத்திரமும் (24,25) தனிமொழி பற்றியன. எச்சவியலில் செய்யுள் ஈட்டச்சொல் பற்றிய சூத்திரங்களும், ஈ, தா, கொடு என்ற சொற்களின் இலக்கணமும் (45,46) செய்யாய் என்பது செய் என்று ஏவலைக் குறிக்கும் என்பதும் (48) முன்னிலைச் சொற்கள், ஈ, ஏ, ஆகிய எழுத்துகளைப் பெற்று வரும் என்பதும் (49) கடிசொல் இல்லை காலத்துப் படினே என்ற சூத்திரமும் (50) தனிமொழி பற்றியன.

அப்படியே தனிமொழி கூறும் இயல்களில் விளிமரபு, உரியியல் தவிர ஏனைய இயல்களில் தொடரியல் செய்திகள் உள்ளன. பெயரியலில் விரவுப் பெயர்கள் தத்தம் மரபின் வினையோடு வந்து பால் விளக்கும் என்பதும் (18), செய்யும் வினைமுற்று வந்தால் உயர்திணை ஒருமை தோன்றும் என்பதும் (19), முன்னம் பற்றிய சூத்திரமும் (39) தொடர்மொழிக்கு உரியன. வினையியலில் 'செய்கு' என்பது வினையொடு முடியினும் அதே தன்மைத்து (7) என்பதும், 'மார்' பற்றிய சூத்திரமும் (10), வினா பற்றிய சூத்திரங்களும் (13,21) எச்சம் பற்றிய சூத்திரங்களும் (32,36) இது செயல் வேண்டும் என்பதும் (45) தொடர்மொழி பற்றியவை; இடையியலில் இயற்பெயர் முன்னர் 'ஆர்' விகுதி வரும் என்பது (22), எஞ்சு பொருட்கிளவி (36), எண்ணிடைச் சொற்கள் வினையில் வருதல் என்பது (45) முதலானவை தொடர்மொழி பற்றியவை.

மேலே குறிப்பிட்ட பெரும்பான்மை பற்றிய கருத்தை ஒட்டிச் சொல்லதிகார இயல் அமைப்புப் பற்றிய அறிஞர்களின் கருத்துகளை அடுத்த பக்கத்தில் கண்டவாறு படம் போட்டு விளக்கலாம்.

# சொல்லதிகார இயல் அமைப்பு

இளம்.

| பொது | சிறப்பு | | | | | | | (பொது) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயர் | | | | | | | |
| கி | வே | வேம | வி | பெ | வினை | இடை | உரி | எ |

சேனா.

| பொது | | | | சிறப்பு | | | | (பொது) |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | வே | வேம | வி | பெ | வி | இ | உ | எ |

தெய்வ

| தொடர் மொழி | | | | தனி மொழி | | | | (தொ மொ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | வே | வேம | வி | பெ | வி | இ | உ | எ |

சி. சுப்பிரமணியன்

| தொடர் மொழி | | | | தனி மொழி | | | சொல் பொரு | தொ மொ |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | வே | வேம | வி | பெ | வி | இ | உ | எ |

திருத்தமானது

| தொடர் மொழி | | | தனி மொழி | | | | | தொ மொ |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | வே | வேம | வி | பெ | வி | இ | உ | எ |

உரையாசிரியர்கள் எச்சவியல் பற்றிய கருத்து பொதுமைப்படுத்திக் காட்டப் பட்டுள்ளது என்பதைச் சுட்டவே அடைப்புக்குறிக்குள் போடப்பட்டிருக் கிறது.

# 2. சொல் பாகுபாடு

## 2.0 பாகுபாடுகள்

இலக்கண ஆய்வில் பாகுபாடு ஒரு முக்கிய இடத்தைப்பெறும். அந்த முறையில் சொல்லதிகாரத்தில் சொற்களின் பாகுபாடு சிறப்பான இடத்தைப் பெறுகிறது 'சொற்களைப் பாகுபாடு படுத்தலாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' என்று தெய்வச் சிலையார் சொல்லதிகாரத்திற்கு உரிய விளக்கமாகக் கொடுத் துள்ளது (கிளவி-1) சொல்லிலக்கண ஆராய்ச்சியில் அதன் முக்கி யத்துவத்தைச் சுட்டிக்காட்டிவிடுகிறது.

தொல்காப்பியர் சொற்களைப் பலவிதமாகப் பாகுபாடு செய்துள்ளார். அந்தப் பாகுபாடுகள் அமைப்பு, எழுத்து, பொருள் பண்பாடு போன்று பல அடிப்படைகளில் அமைந்துள்ளன. எனவே ஒவ்வொரு அடிப்படையிலும் செய்யப்பட்டுள்ள பிரிவுகளையும் அவற்றின் சிறப்பையும் அறிந்துகொள்ள முயலுவோம்.

### 2.1 அமைப்பு

சொல்லதிகாரத்தில் செய்யப்படும் பாகுபாடுகளில் மிக முக் கியமானது சொல்லிலக்கண அடிப்படையில் - அதாவது மொழி அமைப்பு அடிப்படையில் செய்யப்படும் பாகுபாடுதான். அதுவே சொல்லதிகார ஆராய்ச்சிக்கு அடிநாதம் போன்றது. எனவே அதைப்பற்றி முதலில் பார்ப்போம்.

தொல்காப்பியர் பெயரியலின் முதலில் சொல்லின் பொது இலக்கணத்தை வருணிக்கும்போது பெயர், வினை என்பன வற்றைச் சொல் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன என்றும் (பெயர் - 4) இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அவற்றைச் சார்ந்து வரும் என்றும் கூறியுள்ளார். இப்படி இரண்டு விதமாகக் கூறுவானேன் என்ற கேள்விக்கு உரையாசிரியர்களும் பிறரும் வெவ்வேறு விதமாகப் பதில் சொல்லியுள்ளார்கள்.

உரையாசிரியர்களில் இளம்பூரணரைத் தவிர அனைவரும் சொற்கள் நான்கு வகைப்படும் என்று கூறி அவைகளை மீண்டும் தொகுத்தற்குரிய காரணங்களை விளக்கியுள்ளார்கள். இளம் பூரணர் சொற்கள் மொத்தம் நான்கு வகைப்படும் என்று கூறா விட்டாலும் இரண்டாகப் பிரித்ததற்குக் காரணம் கூறியுள்ளார். அதே காரணத்தைச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.

### 2.1.1 சிறப்பு உடையது/சிறப்பில்லாதது

'பிற சொல்லும் உளவாயினும் இவற்றது சிறப்பு நோக்கிப் பெயரே வினை என்று ஆயிரண்டு என்றார்' என்று முதல் சூத் திரத்திலும் 'சார்ந்து தோன்றும் எனவே அவற்றது சிறப்பின்மை பெறப்படும்' என்று இரண்டாவது சூத்திரத்திலும் உரை விளக் கத்தில் இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். எனவே இரண்டு வகை யான பாகுபாட்டுக்குக் காரணம் சிறப்புடையது/சிறப்பில்லாதது என்பது தான். சேனாவரையர் உரையிலும் இதே வாசகங்கள் காணப்படுகின்றன. தெய்வச்சிலையாரும் இரண்டாவது சூத்திர விளக்கத்தில் (பெயர்-5).

> சொன்மைநிலை பெயர், வினை எனச் சிறப்புடைச் சொல் இரண்டும் இடை, உரி எனச் சிறப்பில் சொல் இரண்டும் நால் வகைப்படும்

என்று கூறியுள்ளார்.

இலக்கண ஆய்வில் சொற்களிடையே உயர்வு, தாழ்வு பேசு வது பொருத்தமானதாகக் கருதப்படாது. மேலும் சிறப்பு / சிறப் பில்லாதது என்பதற்கும் காரணம் கூறவேண்டும். இளம்பூரணர் சார்ந்து வருவது, சிறப்பில்லாதது என்று கூறியதால் சிறப்பு

உடையது என்பது சார்ந்து வராதது, தனித்து வருவது என்று நாம் கொள்ளலாம் இதை மொழியியல் நோக்கில் விளக்கினால் பெயரும் வினையும் கட்டிலாஉருபன் (free morpheme) (கட்டிலா உருபன் – தனித்து இயங்கக் கூடியது) என்றும் இடையும் உரியும் கட்டுண்ட உருபன் (bound morpheme) (கட்டுண்டஉருபன் – தனித்து இயங்காதது) என்றும் கூறலாம். கல், மரம் போன்ற பெயர்களும் நட, படி போன்ற வினைகளும் கட்டிலாஉருபன் களே. அப்படியே இடைச்சொற்களில் வேற்றுமை உருபு, கால விகுதி முதலியன கட்டுண்ட உருபனாகக் கருதத் தடையில்லை) அசைநிலை, இசைநிறை போன்றவற்றை ஒருநிலைச்சொற்கள் (particles) (ஒரு நிலைச் சொற்கள் - ஓரளவு தனித்து இயக்கக் கூடியன; ஆனால் பெயர் போல வேற்றுமை ஏற்றோ வினை போலக் காலம் ஏற்றோ வராது. (எ.டு) கீழ், மேல் முதலியன· இங்கே 'கீழ்' என்னும் இடைச்சொல், எங்கேயுள்ளது என்று வினா எழுப்பினால் கீழ் என்று சொல்லும்போது தனித்தியங்கு கிறது. ஆனால் இச்சொல், உருபும் ஏற்காது; காலமும் காட் டாது என்பார்கள். மற்று, கொன் போன்ற இடைச்சொற்கள் முழுவதும் தனித்து வரும் என்றோ, கட்டுண்டு வரும் என்றோ சொல்ல முடியாது. அப்படியே உறு, தவ போன்ற உரிச் சொற் கள் அடைச்சொற்களாக (attributive) வரக்கூடியன. இவை யும், மற்று, கொன் போன்றவையே. எனவே ஒரு நிலைச்சொற் கள் இருப்பதால் இரண்டு வகைப் பாகுபாட்டுக்கும் சிறப்பு உடைமை/சிறப்பு இன்மை உடையது என்றும் அதற்குக் கார ணம் சார்ந்து வராதது/சார்ந்து வருவது என்றும் கூறுவது பொருத்தமானதாக இல்லை.

## 2.1 2. தோன்றுதற்கு இடம்

நச்சினார்க்கினியரும் கல்லாடரும் பெயர் வினை/இடை உரி என்ற பாகுபாட்டை முறையே தாம் தோன்றுதற்கு இடம் ஆவன; தாம் தோன்றுதற்கு இடம் அல்லாதன என்று விளக்கி யுள்ளார்கள்.

> அவற்று வழி மருங்கில் தோன்றும் (பெயர்-5) என்ப தற்கு 'பெயர் வினைகள் இடத்துத்தாம் தோன்றும் இட மாகிய இடத்தே தோன்றும்'

என்று பொழிப்புரையும்

> தாம் தோன்றுவதற்கு இடமாவன அவன், அவள், உண்டான், உண்டாள். துவைத்தல், துவைக்கும் என்றாற் போல்வன. தாம் தோன்றுவதற்கு இடம் அல்லாதன மரம், மான் என்றாற் போல்வனவாகிய பெயரும் உண், தின் என்றாற் போல்வனவாகிய முதனிலைப் பெயர் தானே நிற்பனவும் என்று உணர்க

என்று விளக்கமும் கொடுத்துள்ளார்.

நச்சினார்க்கினியரின் இக்கருத்தைத் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1974:124) பின் வருமாறு விளக்கியுள்ளார்.

> அவரும் (நச்சினார்க்கினியரும்) இடை, உரிச் சொற்கள் பெயர், வினைகளது உறுப்பாய் வரும் என்றே கொள்கிறார் எனல் வேண்டும். மரம், நட முதலிய போல ஒரே ஒரு உறுப்புடன் வரும் சொற்களிலேயே உரிச்சொல்லும் இடைச் சொல்லும் வருவதில்லை;

என்பது அவரது வாசகம். இதன்படி பெயர், வினைகள் அடிச் சொல்லாயும் கிளவியாயும் தனித்து வரக் கூடியன (monomor phemic word) ஒரே உருபன் ஒரு சொல்லாய் வருவது என்றும் இடை உரிகள் தனித்து வராதவை என்றும் கொள்ளலாம். துவைத்தல், துவைக்கும் என்ற சொற்களின் நிலை என்ன என்பதை மீனாட்சிசுந்தரனார் விளக்கவில்லை. எனவே அதன் தன்மை அறிந்தால்தான் நச்சினார்க்கினியர் கருத்து முழுவதையும் அறியமுடியும். நச்சினார்க்கினியரே உரியியல் முதல் சூத்திரவிளக்கத்தில் 'துவைத்தல் பெயர்க்கு முதனிலை' என்று குறிப்பிட்டுள்ளார். சேனாவரையரும் அதே சூத்திரத்தில் 'துவைத்தல், துவைக்கும் என்பன பெயர், வினைக்கு முதலாயின' என்று எழுதியுள்ளார். எனவே துவை என்பது உரியடிச்சொல் என்று கருதுகிறார் என்பது தெளிவு ஆகிறது. அப்படியானால் துவை- என்பது உரியடியாய் இருந்தாலும் தனித்து வராது என்று கருதுவதாக நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே பெயரும் வினையும் அடிச்சொல்லாயும் தனித்து வருவதாயும் இருக்கும் என்ற இரண்டு தன்மைகளை ஒருசேரப் பெற்றவை என்றும், இடையும் உரியும் தனித்து வராத அடிச்சொற்களும் கட்டுண்ட உருபனாகவும் வரக்கூடியவை என்றும் கொள்ள வேண்டும்.

கல்லாடரும் நச்சினார்க்கினியர் கருத்தைத் தழுவியே உரை எழுதியுள்ளார். 'இடையும் உரியும் பெயர்வினைகட்கு இடமாகிய

இடத்தே தோன்றும், தாமாகத் தோன்றா' என்று பொழிப்புரையும்

> அவ்விடை உரிகள் பெயர் வினைகளை அடைந்து தோன்றுங்கால் தம் மருங்கினால் தோன்றுதலும் பெயரதும் வினையதும் மருங்கினால் தோன்றுதலும் என்பது கொள்ளப்படும். அதுமன், உறுகால் என்பன தம்மருங்கில் தோன்றின. அவன், அவள், உண்டான், உண்டாள், என்பது[1] (உள்ளபடியே எழுதப்பட்டுள்ளது) அவற்று மருங்கில் தோன்றின

என்று விளக்கமும் கல்லாடர் தந்துள்ளார். மீனாட்சிசுந்தரனார் (1974:125) 'அவன், உண்டான் போல்வன முறையே பெயர், வினை ஆகிய இரண்டின் மருங்கினால் தோன்றின' என்பதை அகத்துறுப்பாகத் தோன்றுதல் என்றும் (அ- சுட்டுப்பெயர் ; அன் - விகுதி; உண் - வினைபகுதி-கால விகுதி-ஆன்-ஆண்பால் விகுதி) தம்மருங்கில் தோன்றும் அதுமன், உறுகால் என்பன புறத்துறுப்பாய் வருவதாகக் கொள்ளலாம் என்றும் விளக்கியுள்ளார். அதாவது கட்டுண்ட விகுதியாகவும் கட்டுண்ட அடியாயும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வரும் என்று பொருள். ஆயினும் இடைச்சொல்லே விகுதியாகவும் (எப்பொழுதும் கட்டுண்டது) கட்டுண்ட அடிச்சொல்லாகவும் வந்துள்ளது; உரிச்சொல் கட்டுண்ட அடிச்சொல்லாக மட்டுமே வந்துள்ளது.

மேலே குறிப்பிட்டபடி சொற்கள் நான்கு வகைப்படும் என்று கொண்டு அவை இரண்டாகத் தொகுத்தற்குரிய காரணத்தை உரையாசிரியர்கள் விளக்கியுள்ளார்கள். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (1974) சொல் நான்கு வகைப்படும் என்று கூறுவது தவறு; தொல்காப்பியர் அப்படிக் கூறவில்லை என்று குறிப்பிட்டுச் சொற்கள் வெவ்வேறு நோக்கில் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டன என்று வாதாடியுள்ளார்.

### 2.1.3 இருவேறு வகைகள்

இரண்டு வகையான பாகுபாடுகள் கிடைக்கின்றன. ஒன்று முழுச்சொற்கள் என்ற நிலையில் பெயர், வினை

---

1. அதுமன், உறுமன் என்ற இரண்டு சொற்களை 'என்பன' என்று முடிப்பதால் அவன், அவள், உண்டான், உண்டாள் 'என்பது' என்று இருப்பதும் என்பன என்றே இருக்கவேண்டும் என்று அடிக்குறிப்பில் சுட்டிக்காட்டலாம்.

> என்ற பாகுபாடு; மற்றொன்று குறைச்சொற்கள் என்ற நிலையில் இடை, உரி என்ற பாகுபாடு. இந்த இரண்டு வேறு நிலைகளையும் ஒன்றாக்கிக் குழப்புதல் கூடாது.

என்பது பாகுபாடு பற்றிய மீனாட்சிசுந்தரனாரின் வாசகம் (பக். 123).

> சொல்லின் கருவாக அமையும் அடிச் சொல்லையே உரிச் சொல் குறிக்கிறது. இதற்கு மாறானவை அடிச்சொல் அல்லாத பிற உருபன்கள். இவை தமிழ் போன்ற ஒட்டு மொழிகளில் தெளிவாகப் பிரித்தறியத் தக்க வகையில் பகுதியின் பின்னுறுப்புக்களாகிய விகுதி முதலியனவாக வரும். சொல்லின் கருவினையே நம்பி அவற்றைச் சார்ந்தே வருவதால் இவற்றிக்குத் தனிநிற்கும் உரிமை இல்லை. இவையே உரிச்சொல்லுக்குரிய சொல்லினை இடமாகக் கொண்டு அதன் அகத்துறுப்பாகவும் புறத் துறுப்பாகவும் வரும் இடைச்சொற்கள் ...

என்ற அவர் வாசகம் உரிச்சொல்லை அடிச்சொல்லாகவும் இடைச்சொல்லை விகுதியாகவும் விளக்குகிறது. எனவே மரத்தை நடந்த போன்ற பெயர், வினைகளையும் உரிச்சொல்லும், இடைச் சொல்லும் கலந்து உண்டான முழுச்சொற்கள் என்பது அவர் கருத்து இதனால் தொல்காப்பிய கூறிய 'சால' என்ற உரிச்சொல் லில் இவர் கருத்துப்படி 'சால்' என்பதே உரிச்சொல் (பக்.127) சால என்பது குறிப்பு வினையாக அதாவது பெயரெச்சமாக (சாலப்பேதை) கருதவேண்டும் என்பது அவர் கருத்து. அப்படியே 'இடைச்சொற்கள் பெயரிலோ, வினையிலோ வந்து முழுச்சொல் லின் அகத்துறுப்பாகவோ, புறத்துப்பாகவோ, அமைந்து கிடக்கும்; தனியே கிடப்பதில்லை' என்றும் (பக். 126) விளக்கியுள்ளார்.

அடையாக வரும் பகாப்பதச் சொற்களைப் பெயர்ப்போலி வினைப்போலி என்று இரண்டாகப் பிரித்து வழங்குகிறார். தவ என்ற உரிச்சொல் வினைப்போலி (பக். 126) என்று அவர் குறிப் பிட்டுள்ளார். அடிச்சொல் என்ற நிலையில் உரிச்சொல் என்பதும் முழுச்சொல் என்ற நிலையில் வினைப்போலி என்பதும் கருத்து. பெயர்ப்போலி, வினைப்போலி என்பன அடையாக வந்து வேற்றுமைகளையோ, கால விகுதிகளையோ ஏற்காதவை. எனவே அவைகளைப் பெயர், வினை என்ற இரண்டிலிருந்து மாறுபட்டு 'அடை' என்று மூன்றாவது பிரிவாகக் கருதலாம். எனவே அவருடைய கருத்து முழுமையும் ஒத்துக்கொள்ள முடியாது.

இந்தக் கருத்துக்குத் தற்காலமொழியியலார் செய்யும் பொருள் உள்ளவை — (contentives)அடிச்சொல்; இலக்கணப் பொருள் உள்ளவை — (functors) அடிச்சொல் இல்லாத உருபன் என்ற பாகுபாடே அடிப்படை என்று அவரே குறிப்பிட்டுள்ளார். (பக். 122). பொருள் உள்ளவற்றைப் பெயர், வினை என்று இரண்டாக மட்டும் பிரிக்கமுடியுமா என்பதே நம்முடைய கேள்வி. பகாப்பத அடைகளையும் (உறு, தவ முதலியன) ஒரு நிலைச் சொற்களையும் (மேல், கீழ், இடை, கடை) பொருள் உள்ளவை என்று கருதவேண்டும். பெயர்ப்போலி, வினைப் போலி என்ற பாகுபாட்டை ஒத்துக்கொள்வதன்மூலம் புதிய பாகுபாட்டை ஒத்துக்கொள்கிறார். 'போலி' என்று குறிப்பிட்டுப் பெயர், வினை ஆகிய இரண்டிலும் அடக்கும் முயற்சி சிறப்பாகக் கொள்ள முடியாது மேலும் தொல்காப்பியரின் இடையியலும் உரியியலும் இன்னும் விரிவாக ஆராயப்படவேண்டும் தமிழில் உள்ள சொல்வகைப்பாடு (parts of speech) பற்றியும் ஆராய்ந்த பிறகே பெயர், வினை, இடை, உரி என்ற பாகுபாட்டைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும்.

எனவே தொல்காப்பியத்தில் உள்ள பிற பாகுபாடுகளைப் பற்றி இனி அறிந்துகொள்ள முயலுவோம்.

## 2.3. எழுத்து

தொல்காப்பியத்தில் சிறப்பாக எழுத்ததிகாரத்தில் எழுத்து அடிப்படையில் சொற்களைப் பாகுபடுத்துவது பற்றி முன்னரே விளக்கப்பட்டுள்ளது (சண்முகம், 1980 அ : 162-84). சொல்லதி காரத்தில் அளபெடைப் பெயர் (விளி —7, 17, 23) என்றுகூறுவதும் எழுத்து அடிப்படையே ஆகும்.

இரட்டைக்கிளவி (கிளவி 48) என்று சொல்லதிகாரத்தில் குறிப்பிடுவதும் எழுத்து அடிப்படையில்தான். இங்கு எழுத்துத் தொடர் இரண்டு முறை வந்து ஒருசொல்லாக அமைவதே இரட் டைக் கிளவியாகும். குறுகுறு, சலசல போன்ற இரட்டைக்கிளவி களைப் பிரிக்க முடியாது என்று கூறினாலும், அவைகளைப் பிரித் தால் பொருள் இல்லை என்பதே அர்த்தம்.

அடுக்குத் தொடர் என்று எச்சவியலில் (27-30) குறிப்பிடுவது முழுச் சொற்கள் அடுக்கி வருவதாகும். சொல்லின் முழுவடிவம் திரும்பவருவதால் இதுவும் எழுத்து அடிப்படையில் அமைந்ததே. தொல்காப்பியர் இசை நிறையாக வந்தால் நான்கு முறையும் (27) விரைவுப் பொருளாக வந்தால் மூன்று முறையும் அடுக்கி வரும் என்று கூறியுள்ளார். கண்டீர், சென்றீர், கொண்டீர். போயிற்று ஆகிய சொற்கள் வினா விகுதி பெற்று இரண்டு முறையும், கேட்டை, நின்றை போன்ற சொற்கள் இரண்டு முறையும் அடுக்கி வரும் என்று கூறியுள்ளார்

மொழியில் இன்னும் பலவிதமாக எழுத்துகள் அடுக்கி வருகின்றன. வலியுறுத்தல் பொருளில் எண்ணுப்பெயர் ஏகார விகுதியோடு அடுக்கி வருவதும் (ஒன்றே ஒன்று; இரண்டே இரண்டு) ஒரு சொல் குறிக்கும் பொருளோடு தொடர்பு உடைய பிற பொருளைக் குறிக்க அந்தச்சொல்லையும் அந்தச்சொல்லின் முதலெழுத்தை 'கி/கீ' என்று மாற்றி மீதிப் பகுதியை அப்படி இரட்டித்தும் (பயிர்கியிர், ஊர்கீர்) வருவதும் போன்று பலமுறை உள்ளன. அவைகளை இன்றைய மொழியியலார் இரட்டிப்பு (reduplication) என்ற தலைப்பில் விரிவாக ஆராய்கிறார்கள். இதுவும் சொல்லிலக்கண ஆய்வில் எழுத்தை அடிப்படையாகக் கொண்டதே.

## 2.4. பொருள்

மரப்பெயர், நாட்பெயர், திங்கள்பெயர், கிளைப்பெயர், எண்ணுப்பெயர் என்று எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் பலவகைகளாகக் குறிப்பிடுவது பொருள் அடிப்படையில் அமைந்தது; ஆயினும் அவை பெரும்பாலும் புணர்ச்சியில் வேறுபடுவதால் அந்தப் பாகுபாடு இலக்கணத்துக்கும் உரிய பாகுபாடாக அமைந்துவிடுகிறது.

சொல்லதிகாரத்திலும் பொருள் அடிப்படையில் பலவித பாகுபாடுகள்குறிப்பிடப்பட்டுள்ளன. ச.வே. சுப்பிரமணியன் (1972:141) அவைகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். இந்தப் பாகுபாடுகள் ஒவ்வொன்றும் மொழி அமைப்பில் வேறுபடும் விதத்தைக் கண்டுபிடித்தால் தான் அவைகளை இலக்கண ஆராய்ச்சிக்குரிய பாகுபாடு என்று நியாயப்படுத்த முடியும்.

## 2.5. பண்பாடு

'அவையல் கிளவி' என்று சொல்லதிகாரத்திலும் (எச்சம்.46 47) எழுத்ததிகாரத்திலும் (எழுத்து.250) குறிப்பிடுவது தமிழ் மக்களின் மொழி வழிப்பட்ட பண்பாட்டின் ஒரு கூறு ஆகும். ஏனெனில் சில பொருள்களையும், வினைகளையும் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைக் கையாளுவது வழக்கம். இங்கு சொல் மாற்றமும் பொருள் மாற்றமும் நடைபெறுவதால் இலக்கணத்தில் அவையல் கிளவி வருணிக்கப் படுகிறது. அவையல் கிளவியாகக் கருதப்படும் சொற்களையும் அவற்றிற்குப் பதிலாக உபயோகிக்கப்படும் சொற்களையும் விரிவாக விளக்காததற்குக் காரணம் பண்பாட்டு ஆய்வின் கூறாகத் தொல்காப்பியர் கருதியிருக்க வேண்டும்; என்றாலும் பொதுவாகவே இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## 2.6. சொற்பொருளியல்

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவு அடிப்படையில் சொற்களைத் தொகுப்பதே சொற்பொருளியல் ஆய்வின் ஒரு கூறு ஆகும். தொல்காப்பியர் உரிச் சொல்லின் பண்பாக (உரி-1)

ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்

என்று இரண்டு வகை குறிப்பிடுவது முறையே பலபொருள் ஒரு சொல் (homonyms), ஒருபொருள் பலசொல் (synonyms) ஆகும். இது பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைக்கும் பொருந்தும் (§2.6.7. பார்க்கவும்). ஆயினும் தொல்காப்பியர் பெயர்ச்சொற்களில் வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல்; வினை வேறுபடாப்பல பொருள் ஒரு சொல் என்று பலபொருள் ஒருசொல்லைப் பிரித்து அவை மொழியில் பயன்படும் முறையை விளக்கியுள்ளார் (கிளவி. 52 - 55). எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி வேறுபாட்டை விளக்கச் சொற்பொருளியல் அடிப்படையைக கொண்டதும் முன்னரே விளக்கப்பட்டுள்ளது (சண்முகம், 1980 அ : 213). உதாரணமாக எகின் என்ற பலபொருள் ஒரு சொல், மரப்பெயராயின் அம்சாரியை பெறுதலும் (எழுத்து 33.6) விலங்குப் பெயரயின் அம்சாரியை பெற்று வல்லெழுத்து மிகுத்து வரு

தலும் உண்டு என்று தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

விரவுத் திணை என்று மூன்றாவதாக ஒரு திணை வகுத்ததும் பெயரியலிலும் வினையியலிலும் வருணித்துள்ளதற்குச் சொற் பொருளியலே அடிப்படை என்று மூன்றாவது இயலில் விளக்கப் படும்.

'திரிசொல்' எது என்பது பற்றிய ஆய்விலும் உரையாசிரி யர்கள் சொற்பொருளியல் ஆய்வு பற்றிய சில கேள்விகளைஎழுப்பி விவாதித்துள்ளார்கள். அது பற்றி §2.7.3. இல் விளக்கப்படும்.

## 2.7. செய்யுள் ஈட்டச் சொல்

தொல்காப்பியர் எச்சவியலில் (சூ. 1) 'செய்யுள் ஈட்டச் சொற்கள்' என்று இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்று நான்கு வகையான பாகுபாட்டைக் குறிப்பிட்டுள் ளார். இதுவும் மொழியில் வழங்கும் எல்லாச் சொற்களையும் ஒரு வகையில் பாகுபாடு செய்வதே. இந்தப் பாகுபாட்டின், அடிப்படை, பாகுபாட்டில் அடங்கும் சொல்வகைப்பாடு, இயற் சொல், திரிசொல், திசைச்சொல் ஆகியன எவைகளைக் குறிக்கின்றன என்பது விவாதத்திற்கு உரியன. எனவே அவை களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். இதற்கு முன்னால் 'செய்யுள்' என்ற சொல்லின் பொருள் பற்றியும் விவாதிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் சிலவகைச் சொற்களின் விளக்கமே செய்யுள் என்பதன் பொருளை ஒட்டி அமைந் துள்ளது.

செய்யுள் என்பது செய்யப்படும் எல்லாவற்றையும்-கவிதை, உரைநடை ஆகியவற்றையும் குறிக்கும் சொல்லாகவே தொல் காப்பியர் கருதியிருக்க வேண்டும் என்பதற்குத் தொல்காப்பியத் தில் ஆதாரம் இருக்கிறது. செய்யுளியலில் அடிவரை இல்லாத செய்யுள் அறுவகைப்படும் என்றும் (செய்யுள். 157) அவைகளில் ஒன்று உரை என்றும் (சூ. 158) அந்த உரை நான்கு வகைப்படும் (சூ. 166) என்றும் கூறுவதால் செய்யுள் ஈட்டச்சொல் என்று இங்கு குறிப்பிட்டது கவிதையையும் உரைநடையையும் உணர்த் துவதாகவே கொள்ளவேண்டும். ஆனால் எல்லா உரையாசிரி

யர்களும் 'செய்யுள்' என்பது கவிதையை மட்டும் சுட்டுவதாகவே கொண்டு திரிசொல்லுக்கு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதனால் அவர்கள் கூறும் பொருள் சிறக்காதது அங்கு விளக்கப்படும்.

## 2.7.1. செய்யுளும் வழக்கும்

'செய்யுளும் வழக்கும்' இலக்கணத்துக்குக் கருப்பொருளாய் இருப்பதால் 'செய்யுள் ஈட்டச் சொல்' என்று விதந்து குறிப்பிட்டது வழக்குக்கும் பொருந்துமா என்பதை இளம்பூரணர் நினைத்துப் பார்த்து,

> திரிசொல் செய்யுட்கே உரியது; ஒழிந்த மூன்றும் வழக்கிற்கும் உரியவாகிச் செய்யுட்கும் புகும்

என்று கூறியுள்ளார். திரிசொல்லின் விளக்கமே விவாதத்துக்கு உரியதாய் இருப்பதால் அதுபற்றி அந்தப் பிரிவில் (§2.7.6 4) விரிவாக ஆராயப்படும். ஏனையவை 'வழக்கிற்கு உரியவாகிச் செய்யுட்குப் புகும்' என்றது பேச்சு மொழியே செய்யுளுக்கு அடிப்படை என்ற உண்மைகளைப் புலப்படுத்திவிடுகிறது இலக்கிய மொழிகூடப் பேச்சு மொழியின் அடிப்படை என்ற கருத்து இலக்கிய மொழி பேச்சுமொழியிலிருந்து முழுவதும் வேறுபட்டு விடக்கூடாது என்ற சிறந்த பொது உண்மையும் சுட்டிக்காட்டுகிறது

## 2.7.2 இயற்சொல்

'செந்தமிழ் நாட்டு வழக்கோடு பொருந்தித் தன்னுடைய பொருள் வழுவாமல் இசைப்பதே இயற்சொல்' என்று தொல்காப்பியர் (எச்சம்.2) விளக்கியுள்ளார். இங்கு 'தம் பொருள் வழுவாமல் இசைப்பது என்பது என்ன? என்பது முக்கிய கேள்வி அதை ஒட்டி செந்தமிழ் நிலம் எது? என்றஇன்னொரு கேள்வியும் எழுகிறது. அவற்றிற்கு உரையாசிரிர்கள் இரண்டு விதமான விடைகள் கொடுத்துள்ளார்கள். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் ஒரு கட்சி. தெய்வச்சிலையார் மற்றொரு கட்சி.

### 2.7.2.1 நிலை மொழி

இளம்பூரணர் 'மற்று, இவற்றைத் தம் பொருள் வழாமை இசைக்கும் என்பது என்னை? ஒழிந்தன தம்பொருள் வழுவுமோ' என்ற கேள்வியைக் கேட்டு

> அற்றன்று நாயை ஞமலி என்பர் பூழி நாட்டார்; என்றக்கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங்கு உணரார்; நாய் என்பதனையாயின் எவ்வெத்திசை நாட்டாரும் உணர்ப என்பது

என்று ஒரு உதாரணத்தின் மூலம் பதில் சொல்லியுள்ளார். ஒரு வட்டார வழக்கைப் பிற வட்டார மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள். வட்டார வழக்கு அல்லாததை அதாவது நிலை மொழி (standard) வழக்கை எல்லாவட்டார மக்களும் உணர்வார்கள் என்று நாம் இளம்பூரணர் கருத்தைப் பொதுமைப்படுத்தலாம்

> திரிபு இன்றி இயல்பாகிய சொல் ஆகலின் இயற்சொல் ஆயிற்று. கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற் சொல்லாயிற்று எனினும் அமையும்

என்ற சேனாவரையர் வாசகம் இளம்பூரணர் கருத்தைப் பொதுமைப் படுத்திக் கொடுத்த விளக்கம் போல அமைந்துள்ளது. செந்தமிழ் நிலம் என்று தொல்காப்பியர் குறித்ததால் கொடுந் தமிழ் நிலத்துப் பிற வழக்குகளைச் சேனாவரையர் கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர் தன்னுடைய பொழிப்புரையிலேயே

> செந்தமிழ்நிலத்தின் கண்ணேவழங்குதலோடு பொருந்தி அச்செந்தமிழ்நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் கேட்டார்க்குத் தத்தம் பொருள்வழுவாமல் ஒலிக்கும் சொல்லாம்

என்று எழுதியுள்ளார். இவற்றின் சரியான விளக்கம் என்ன? இதற்கு இன்றைய அறிஞர்களின் விளக்கத்தை ஒட்டி விடை காண்போம்.

சுப்பிரமணிய சாஸ்திரி (1945) 'தாய்மொழிச் சொல்' (indigenous Tamil word) என்று விளக்கி இது வடசொல்லுக்கு மாறானது என்று கருதுகிறார். ஆனால் சேனாவரையர் திரிசொல்லுக்கு மாறுபட்டதாகக் கருதுவதை மேலே குறிப்பிட்டோம். தெய்வச்சிலையாரும் (எச்சம்.3) 'இயற்சொல்லால் உணர்த்தப்படும் பொருள் மேல் வேறுபட்ட வாய்பாட்டான் வருவன திரிசொல்' என்று கூறுவதனால் இயற்சொல் திரிசொல்லுக்கு மாறுபட்டது என்பதை ஒத்துக்கொள்கிறார் எனலாம். மேலும் சேனாவரையரே 'நீர் என்பது ஆரியச் சிதைவு ஆயினும் இயற்சொல்லாகக் கொள்க' என்பதனாலும் இயற்சொல் எல்லாம் வடசொல்லுக்கு மாறுபட்டன என்று கருத முடியாது என்பது தெளிவு ஆகும்.

மொழியியலார் கூறும் பொதுமொழி (standard or common language), சிறப்புமொழி (special language), கிளைமொழி (dialect), கடன்மொழி (borrowing) என்ற பாகுபாட்டைக் கா. மீனாட்சிசுந்தரம் (1973:753) சுட்டிக்காட்டி

> பொது மொழி என்பது ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் அறியக்கூடிய பொதுவான சொற்களைக் கொண்டது ஆகும். இதனை இயற்சொல் என்று தமிழ் இலக்கணங்கள் கூறுகின்றன. ... எனவே மொழிநூலார் கூறும் கூறும் பொதுமொழி என்பதும் இலக்கண நூலார் இயற்சொல் என்பதும் ஒன்றே எனக் கூறின் பிழையாகாது;

என்று முடித்துள்ளார். இவர் கருத்தின் அடிப்படை ஏற்றுக் கொள்ளத்தக்கதே. ஆயினும் பொதுமொழி என்பது மயக்கம் தரக் கூடியது. நிலை மொழி என்பதே (standard language) சரியானது. இதற்குக்காரணம் பின்னால் தெய்வச்சிலையார் உரையை விளக்கும்போது அறியலாம். ஏனெனில் அதுவே உரையாசிரியர்களின் கருத்தினை விளக்கும் முறையில் அமைந்துள்ளது.

நிலைமொழி என்பது ஒரு மொழியில் வழங்கும் பல கிளை மொழிகளில் அரசியல் முக்கியத்துவம், வணிகச்சிறப்பு, கலாச்சார நடவடிக்கைகளின் மையம் போன்ற காரணங்களினால் சிறப்பு வாய்ந்த ஒரு கிளை மொழியே. அந்தக் கிளைமொழி பிறகிளை மொழி மக்களாலும் அறிந்து பயன்படுத்தப்படும் என்று மொழியியலார் நிலைமொழிக்கு விளக்கம் கொடுத்துள்ளார்கள்.[2] இந்தக் கருத்து இளம்பூரணர் கூறிய உதாரணத்தோடும் சேனாவரையர், நச்சினார்க்கினியர் கருத்தோடும் ஒத்திருப்பதால் அவர்கள் இயற்சொல் என்பதை நிலைமொழி என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார்கள் என்று கொள்ளலாம்.

---

2. Standard dialect: That dialect of a language which has gained literary and cultural surpremacy over other dialects and is accepted by the speakers of other dialects as the most proper form of that language;
in *Dictionary of Lingistics*, M. A. Peil F. Gaynor (Ed)

நிலைமொழிச்சொல் தாய்மொழிச்சொல்லாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை என்ற சேனாவரையர் கருத்தும் ஒத்துக் கொள்ளக்கூடியதே. ஆயினும் சேனாவரையருடைய உதாரணமும் அதை அவர் விளக்கியுள்ள முறையும் விவாதத்துக்கு உள்ளான தால் அங்கு அமைந்துள்ள பொதுமை பாராட்டப்படாமல் போய் விட்டது. சேனாவரையரின் கருத்து இயற்சொல்லுக்குப் புதிய விளக்கத்தைச் சேர்ப்பதால் அதனுடைய வன்மை மென்மையைத் தெரிந்து கொள்வது அவசியம்.

> நீர் என்பது ஆரியச் சிதைவாயினும் அப்பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் வழங்கப்படுதலான் இயற் சொல்லாயிற்று; பிறவும் இவ்வாறு வருவன இயற்சொல்லாகக் கொள்க

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு அவர் பிற மொழிச் சொல்லை இயற்சொல்லாகக் கருதுவதற்குரிய இரண்டு நியதி களைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன: 1) அந்தப் பொரு ளைக் குறிக்க பிறமொழிச்சொல் தவிர வேறுசொல் இல்லாமல் இருப்பது 2) எல்லாப் பகுதியிலும் (செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும்) வழங்குவது. இரண்டாவது நியதி மேலே குறிப்பிட்டதுதான் முதல் நியதியே புதியது. எனவே அதுவே விவாதத்துக்கு உரியது. மேலும் 'நீர்' என்பது ஆரியச் சிதைவுதானா என்பதும் கூட சர்ச்சைக்கு உரியது.

திராவிட மொழி ஒப்பிலக்கண உலகில் நீர் என்பது திரா விட மொழியிலிருந்து வடமொழி கடன் ஆண்ட சொல்லாகக் கருதப்படுகிறது. (Caldwell 1875: 571). மொழியியலாரின் கருத்துப்படி நீர் என்பது தமிழ்ச்சொல் என்றும் பிற இந்தோ ஐரோப்பிய மொழிகளில் நீர் என்பதற்கு இனச்சொல் (cognates) இல்லாததால் வடமொழியே தமிழிலிருந்து கடனாளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அது 'நீர்மை' என்ற சொல்லோடு தொடர்பு உடையது என்றும் சுப்பிரமணியசாஸ்திரி (1945: 282) குறிப் பிட்டுள்ளார். எனவே சேனாவரையர் உதாரணம் தவறாகப் போய்விட்டது. ஆனால் பிறமொழிச் சொல்லும் இயற்சொல் லாக அமையலாம் என்ற பொதுக்கருத்து தவறு அல்ல. ஏனெ னில் இயற்சொல் என்பது மேலே குறிப்பிட்டப்படி ஒரு கிளை

மொழியின் வழக்கைக் குறிப்பதால் அந்தக் கிளைமொழியில் வழங்கும் எல்லாச் சொற்களும் இயற்சொல்லாகவே கருதவேண்டும்.

இன்றைய இலக்கிய மொழியிலும் வட சொற்கள் உள்ளன. அவையெல்லாம் இயற்சொல்லாகவே கருதப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் வழங்கும் திங்கள் பெயர், நாட்பெயர் முதலியன வடமொழிச் சொற்களே (வைத்தியநாதன் 1971: 100 சண்முகம், 1981 அ: 58). அவைகளுக்குத் தொல்காப்பியரே புணர்ச்சிவிதிகளும் கூறியிருக்கிறார் (எழுத்து. 247, 248). எனவே வடசொல்லும் எல்லாப் பகுதியிலும் வழங்குமானால் இயற்சொல்லாகக் கருதப் பட வேண்டும் என்பது தொல்காப்பியர்க்கும் ஒத்த கருத்தாகவே கருத வேண்டும்.

சேனாவரையர் கூறிய ஒரு பொருளுக்குப் பிற மொழிச்சொல் தவிர வேறுசொல் இல்லாதபோது இயற்சொல்லாகக் கருத வேண்டும் என்ற கருத்தும் பொருத்தம் உடையதாகத் தோன்ற வில்லை. ஏனென்றால் பிறமொழிச் சொற்களைக் கடனாளும் போது புதிய பொருளைக் குறிக்கும் புதிய சொல்லாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. இந்த உண்மை தமிழுக்கும் பொருந்தும். தொல்காப்பியரே 'அளபு' என்ற தமிழ்ச்சொல் இருக்கும்போது மாத்திரை என்ற வடமொழிச் சொல்லையும் பயன் படுத்தியுள்ளார் (எழுத்து - 7.1). மாத்திரை இலக்கண உலகில் பரவலாக வழங்கப்படுகிறது. முன்பனி என்பது அச்சிரம் என்ற சொல்லாலும் இலக்கியத்தில் வழங்கப்படுகிறது.

எப்படியாயினும் பிறமொழிச் சொல்லும் நிலைமொழி பேசும் பகுதியில் வழங்கிப் பிற பகுதியிலும் புரிந்து கொள்ளும் சொல் லாக இருந்தால் இயற்சொல் என்று அழைக்கப்படலாம் என்ற சேனாவரையரின் அடிப்படைக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளத் தகுந்தது.

இயற்சொல் நிலைமொழியைக் குறிக்கும் என்பதற்கேற்ப இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் தமிழகத்தின் ஒருபகுதியைச் செந்தமிழ்நிலம் என்று குறிப்பிட்டது சரியானதே. ஆனால் அவர்கள் செந்தமிழ்நிலம் என்ற குறிப்பிட்ட

பகுதியின் பொருத்தம் பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படு கிறது.

> செந்தமிழ்நிலம் என்பது வையையாற்றின் வடக்கு; மருத யாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு

என்று இளம்பூரணர் கருத்தையே சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் தங்கள் உரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். இது சோழ நாட்டின் தென்பகுதி ஆகும் என்பார் தேவநேயப்பாவாணர். இளம்பூரணர் முதலியோரின் கருத்தைத் தெய்வச்சிலையார் தான் முதலில் மறுத்துள்ளார். ஆனால் தெய்வச்சிலையாரின் இயற் சொல் கோட்பாடு வேறு ஆனதால் அவருடைய மறுப்பு முழுவதும் பொருந்தாது.

சங்கரநமச்சிவாயர் தன்னுடைய நன்னூல் உரையில் இயற் சொல்லுக்குக் கொடுத்துள்ள விளக்கம் இளம்பூரணர் கருத்தை ஒத்திருக்காவிட்டாலும் அந்தக் கருத்தை இரண்டு காரணங்களால் மறுத்துள்ளார். அவையாவன: 1) கொடுந்தமிழ் நிலமாகக் கூறப் படும் புனல்நாடு என்பது சோழநாடு; 2) பாண்டியனைத் தமிழ் நாடன் என்று சான்றோர் கூறுவது. பாண்டியநாடு செந்தமிழ் நாடு என்பதற்குப் பாண்டிய நாட்டுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் ஒரு பழம்பாடலையும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

> சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
> சவுந்தர பாண்டியன் எனும் தமிழ் நாடனும்
> சங்கப்புலவரும் தழைத்து இனிது இருக்கும்
> மங்கலப் பாண்டி வளநாடு என்ப

என்பதே அந்தப் பாடல். தேவநேயப்பாவாணர் 'சேனாவரை யர் செந்தமிழ் நிலமாகக் கூறிய இடம் பெரும்பாலும் பாண்டி நாட்டிற்கு அப்பாற்பட்டதாய்ச் சோழநாட்டின் தென்பகுதியாய் இருத்தலின் தவறு ஆகும்' என்று குறிப்பிட்டு 1) நிகண்டுகள் கூறியிருப்பது 2) புலவர்கள் பாடியிருப்பது 3) வரலாற்று உண்மை ஆகிய மூன்று காரணங்களைக் கூறித் தெய்வச்சிலையார் கருத்தை யும் மேற்கோள் காட்டி இறுதியில் 'இன்றும் பாண்டிநாடே தமிழ்

வழக்கிற்குச் சிறந்திருப்பது கவனிக்கத்தக்கது' என்று முடித்துள்ளார்.

> 1) பாண்டி நாடே தமிழ்நாடு என்றும் பாண்டியனே தமிழ்நாடன் என்றும் நிகண்டுகள் கூறா நிற்பதும் 2) 'வீயாத் தமிழ் உடையான் ... பாண்டியன்' என்று ஒரு பழம் புலவரும் 'பாண்டிய நின்னாட்டு உடைத்து நல்ல தமிழ்' என்று ஔவையாரும் 'தமிழ் நிலை பெற்ற மதுரை' என்று நத்தத்தனாரும் 'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்று மாணிக்கவாசகரும் பாடியிருப்பவும் 3) முச்சங்கங்களையும் முறையை இரீஇ முத்தமிழ் வளர்த்தவர் பாண்டியராயே இருப்பவும் இவற்றை எட்டுணையும் நோக்காது மதுரைக்கு வடக்கே செந்தமிழ் நாட்டைச் சேனாவரையர் குறித்தது வியப்பிற்கு இடமானது;

என்பது பாவாணர் வாசகம். பாண்டிய நாடே செந்தமிழ் நாடு என்று கூறியதைப் பாண்டிநாட்டுத் தமிழே நிலை மொழியாகக் கருதப்பட்டது என்று நாம் விளக்கலாம். இந்த உண்மை சங்க காலத்தைப் பொறுத்த வரையிலே தான் சரியானது. பாவாணர் கூறியது போல எப்பொழுதும் பாண்டி நாட்டுத் தமிழ் நிலைமொழியாய் அமையவில்லை என்பது வரலாற்று நோக்கிலிருந்து பார்க்கும் போது புலனாகிறது.

சங்ககாலத்தில் பல கிளைமொழிகள் இருந்திருக்க வேண்டும் என்ற உண்மை மேலே கூறப்பட்டது. சங்ககாலத்தில் பெரும்பான்மையான வழக்குகளை நிலைமொழி வழக்கு என்று கொள்ளலாம். மேலே பாவாணர் காட்டிய காரணங்களுக்காகச் சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் பேசப்பட்ட மொழியே செந்தமிழ் ஆக அதாவது நிலைமொழியாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆகவே பாண்டியநாடே செந்தமிழ் நிலம் என்ற சங்கரநமச்சிவாயர், தேவநேயப்பாவாணர் ஆகியோரின் கருத்து சங்ககாலத் தமிழுக்குமட்டும் பொருந்தும் உண்மையாகக் கொள்ளலாம். அப்படியானால் இளம்பூரணர் முதலியோர் எதனால் சோழ நாட்டின் பகுதியைச் செந்தமிழ் நிலமாகக் கருதினார்கள் என்ற கேள்விக்கு விடை காண வேண்டும்.

உரையாசிரியர்கள் பல இடங்களில் தங்கள் கால மொழி வழக்கை ஒட்டி உரை எழுதியுள்ளார்கள் என்ற உண்மை இன்று

பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கு நல்ல சான்று 1) சங்க மருவிய இலக்கியத்தில் ஓரிரண்டு இடங்களில் வந்துள்ள கின்று, கிறு நிகழ்கால விகுதியை எல்லா வினை முற்றிலும் தொல்காப்பிய சூத்திரங்களுக்கு உதாரணமாகக் காட்டுவது; 2) செய்யுள் என்ற சொல்லைத் தொல்காப்பியர் செய்யப்படும் எல்லாவற்றையும் (கவிதை, உரைநடை) மட்டும் குறிக்க உரையாசிரியர்கள் தங்கள் காலவழக்கை ஒட்டி 'கவிதை'யை மட்டும் குறிப்பதாகக் கொண்டது மேலே சுட்டிக்காட்டப்பட்டது. அந்த முறையில் இளம்பூரணர் முதலானோர் சோழநாடு செந்தமிழ் நிலம் என்று கூறுவதற்குத் தங்கள் காலத்தில் அரசியல், பண்பாடு முதலியவற்றில் அந்தப்பகுதி சிறந்து விளங்கியதே காரணம் ஆகலாம். இதற்கு இலக்கியச் சான்று ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

தமிழ்மொழி வரலாற்றை ஆய்வோர் இடைக்காலத் தமிழில் நிலைமொழி மாற்றம் நடந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்கு முக்கிய காரணம் இரண்டு: 1) சங்கத் தமிழில் சிறுபான்மையாக இருந்த வடிவங்கள் பெரும்பான்மையாகவும் பெரும்பான்மையாக இருந்த வடிவம் சிறுபான்மையாகவும் ஆனமை; 2) இடைக்காலத் தமிழில் புதிய வடிவங்களாக வந்துள்ளவை வரலாற்று மாற்றத்தால் விளக்க முடியாதவையாக இருப்பவை.

முதல் வகைக்கு உதாரணம்-செய; செயின் என்ற வாய்பாட்டு வினையெச்சங்கள் வல்வினைகளில் சங்க காலத்தில் பெரும்பான்மையாக பகரமெய்யும் (நடப்ப, பார்ப்ப) சிறுபான்மையாக ககரமும்பெற்றவை (நடக்க, பார்க்க); இடைக்காலத்தில்ககர மெய் பெரும்பான்மையாகவும் பகரமெய் சிறுபான்மையாகவும் மாறிவிட்டன.

இரண்டாவது வகைக்கு உதாரணம் முன்னிலைப் பன்மை வடிவங்கள். தொல்காப்பியர் முன்னிலைப் பன்மை வடிவம் நீயிர் என்று கூறியதற்கு ஏற்பச் சங்க இலக்கியத்தில் அந்த வடிவமும் அதன் திரிந்த வடிவமாகிய நீர் என்பதுமே வந்துள்ளன. இடைக்காலத்தில் புதிதாக நீம்/நீங்கள் என்ற வடிவங்களும் காணப்படுகின்றன. இதை நீயிர் என்ற வடிவத்தின் திரிந்த

வடிவமாகக் கொள்ளமுடியாது. மேலும் நீம் என்பது தொல் திராவிடத்தில் பயின்றிருக்க வேண்டும் என்று ஒப்பிலக்கண ஆசிரியர்கள் (உ.ம். சண்முகம், 1972அ: 189) கருதுகிறார்கள். எனவே சங்க காலத்தில் கொடுந்தமிழாக வழக்கில் இருந்து இடைக் காலத்தில் நிலைமொழி மாறியதால் இலக்கிய வழக்கில் ஏறி யிருக்க வேண்டும் என்று கருத வேண்டியிருக்கிறது. அப்படியே 'சரக்கு' போன்ற சகரத்தை முதலாக உடைய சொற்கள் இடைக் காலத்தில் முதன் முதலாக இலக்கிய வழக்கில் வந்திருப்பதும் இலக்கியக் கிளைமொழி-நிலைமொழி மாற்றத்தைச் சுட்டுகிறது என்று மொழியியல் அறிஞர்கள் விளக்குகிறார்கள் (உ-ம். சண் முகம்; 1971அ). இந்த நிலையில் இடைக்காலத்தில் சிறந்த புலவர் களாகக் கருதப்பட்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் சோழநாட்டில் தோன்றியதும் இடைக் காலத்தில் சோழநாடு அரசியல் செல்வாக்கு பெற்றிருந்ததும் செந்தமிழ்நிலம் சோழநாடு என்று இளம்பூரணர் போன்றோர் கருதியிருக்க வேண்டும். அதாவது தங்கள் கால வழக்கைப் பழங் கால வழக்காகக் கொண்டு விட்டார்கள் அவர்கள்.

## 2.7.2.2. மொழிப் பொதுமை

தெய்வச்சிலையாரின் விளக்கம் இளம்பூரணருடைய விளக் கத்திலிருந்து மாறுபட்டது. ஆனால் அவருடைய பொழிப்புரை யில் புதிதாக ஒன்றும் இல்லை; அவருடைய விளக்கவுரையே மாறுபட்டிருக்கிறது.

> இவை அந்நிலத்து (செந்தமிழ் நிலத்து) பட்ட எல்லா நாட்டிலும் ஒத்து இயறலின் இயற் சொல்லாயின. இவற்றைச் செஞ்சொல் எனினும் அமையும்;

என்ற அவருடைய கருத்து புதுமையானது. தமிழ்நாடு முழு மைக்கும் பொதுவாக இருக்கக்கூடிய சொல்லே இயற்சொல் என்பது அவரது கருத்து. இதற்கு ஏற்பவே திசைச்சொல் பற்றி விளக்கும்போது 'அந்நிலத்து வழங்குஞ் சொல்லாகிச் செஞ்சொல் லின் வேறுபட்டுச் சான்றோர் செய்யுளகத்து வருவன' என்று குறிப்பிடுகிறார். அதாவது ஒவ்வொரு பகுதியிலும் செஞ்சொல்லும் (பொதுச்சொல்) திசைச்சொல்லும் உண்டு என்பதே அவருடைய கருத்து. எனவே இயற்சொல் என்பது தமிழ்நிலம் முழுமைக்கும்

எல்லாப் பகுதியிலும் வழங்கும் செஞ்சொல் அல்லது பொதுச் சொல் என்பதே தெய்வச்சிலையாரின் கருத்து. இது மொழியிய லார் கூறும் கிளை மொழிகளுக்கிடையேஉள்ள பொதுமை-மொழிப் பொதுமை (common core) ஆகும்[3] (Hockett, 1958:332). இதற்கு ஏற்பவே தெய்வச்சிலையார் தமிழகம் முழுமையும் செந்தமிழ்நிலம் என்று விளக்கியுள்ளார்

> வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குண குடலின் மேற்கும், குடகடலின் கிழக்கும் ஆகிய நிலம் செந்தமிழ் நிலம் என்று உரைப்ப

என்பது அவரது வாசகம். இதற்கு முக்கிய காரணம் பாயிரமே. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு உலகத்து' என்றதும் அதில் 'தமிழ் கூறும் நல் உலகம்' என்று விசேடித்ததும் முக்கிய காரணம் என்பது தெய்வச்சிலையார் வாதம். அவருடைய இயற்சொல்லின் விளக்கத்துக்கு ஏற்பவே செந்தமிழ்நிலம் வரை யறுக்கப்பட்டிருப்பதால் உரைக்குள் கருத்து முரண் இல்லாமல் போய்விட்டது.

நிலைமொழி, மொழிப்பொதுமை ஆகிய இரண்டு கருத்து களும் ஓரளவு பொருத்தம் உடையனவே. ஆயினும் அவைகளில் சிறப்புடையது எது? பொருத்தமானது எது? தொல்காப்பியருக்கு அதிக உடன்பாடானது எது? என்று தீர்மானிப்பதற்கு அவைகளை மதிப்பீடு செய்யவேண்டும்.

மொழிப்பொதுமை என்பது இரண்டு கிளைமொழிகளுக்கு இடையே காணப்படும் ஒற்றுமையைச் சிறப்பாக அம்மொழி பேசு வோர் புரிந்து கொள்ளும் பொதுமையைக் குறிக்கும். இதுமொழி பொதுவாக செயல்படும் முறையை ஆராய்வதால் பொதுமொழி யியல் நோக்கு மிகுந்தது.

நிலைமொழி என்பது ஒருமொழியில் வழங்கும் பல கிளை மொழிகளுக்குள் அரசியல், வணிக, சமூகப்பண்பாட்டுக் காரணிக ளால் நிலை மொழியாகக் கருதப்படும் ஒரு கிளைமொழியைக்

---

3. The total number of shared features, we shall call, *the common core* of the idiolects. இங்கு ஹாக்கெட் தனிமனித னின் மொழியை (idiolect) குறிப்பிட்டாலும் நாம் கிளை மொழிக்கும் பொருந்துவதாகக் கொள்வதில் தவறு இல்லை.

குறிப்புதால் தனிமொழி ஆராய்ச்சி நோக்கு மிகுந்தது. தொல்காப்பியர் 'செந்தமிழ் நிலம்' என்று விதந்து பேசுவதாலும் தமிழ்மொழி அமைப்பையே விவரிப்பதாலும் தனிமொழி ஆய்வுக்குரிய நிலைமொழி என்ற கருத்தே தொல்காப்பியர்க்கு உடன்பாடாக இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

## 2.7.3 திரிசொல்

ஒரு பொருள் குறித்த பலசொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என்ற இரண்டு வகையை உடையது திரிசொல் என்று மட்டுமே தொல்காப்பியர் கூறியுள்ளார் (எச்சம்.3). இளம்பூரணர் இந்த இரண்டு வகைக்கும் உதாரணம் கொடுத்ததோடு ஒருகூறு திரிந்து வருதல், முழுவதும் திரிந்துவருதல் என்று திரிதல் இரண்டு வகைப்படும் என்று குறிப்பிட்டு அவற்றிற்கும் உதாரணம் காட்டியதோடு சென்றுவிட்டார். சேனாவரையரே திரிசொல்லின் இலக்கணம், திரிசொல்லின் பாகுபாடு, திரிசொல்லுக்கும் உரிசொல்லுக்கும் உள்ள மாறுபாடு ஆகிய முறையில் உரை எழுதியுள்ளார். தெய்வச்சிலையார் திரிசொல்லின் நிலவழக்குப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக உரையாசிரியர்கள் திரிச்சொல் என்பது இயற்சொல் திரிந்தது என்றும் கருதி அதன் வேர்ப்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் திரிசொல்லுக்குத் தனிச் சிறப்பு இல்லாமல் செய்து விட்டார்கள். அதனால் வேறு ஒரு பொருள் தரமுடியும் என்று கூறிய கருத்தையும் சேனாவரையர் வன்மையாக மறுத்துவிட்டார்.

திரிசொல் என்பதற்கு 1) திரிந்தவழக்கு 2) கட்டியவழக்கு என்று இரண்டு மாறுபட்ட கருத்துகள் உள்ளன. உரையாசிரியர்கள் எல்லோரும் முதல் கருத்துக்கே முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்துள்ளார்கள்.

### 2 7.3.1 திரிந்த சொல்

சேனாவரையரே 'திரிபுடைமையே திரிசொற்கு இலக்கணம் ஆதல் 'சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல் என்பதனாற் பெற வைத்தார்' என்று கூறியுள்ளார். அதாவது சொல்லின் வேர்ப்பொருளே அந்தச் சொல்லுக்குரிய இலக்கணம் என்பது கருத்து. இதற்கு ஏற்பவே திரிசொல் இரண்டு வகையாகத் திரிந்து

வரும் என்று இளம்பூரணர் கூறியதைச் சேனாவரையர் திரி சொல்லின் வகை என்று விளக்கம் கொடுத்துள்ளார்.

> 'கிள்ளை, மஞ்ஞை என்னும் தொடக்கத்தன ஒரு கூறு நிற்ப ஒருகூறு திரிந்தன. உந்தி அடுக்கல் என்னும் தொடக்கத்தன முழுவதூஉம் திரிந்தன

என்று இளம்பூரணர் கூறியதையே சேனாவரையர் உறுப்புத் திரிவது, முழுவதும் திரிவது என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க் கினியர்தான் இவை எப்படித் திரிந்துவந்தன என்பதை விளக்கி யுள்ளார்.

> கிளி, மயில் என்பவற்றைக் கிள்ளை, மஞ்ஞை எனச் சிறிது நிற்பத் திரித்தும் அவற்றைத் தத்தை, பிணிமுகம் எனப் பிற சொற் கொணர்ந்து முழுவதூஉங் திரித்தும் கூறுதல். மலைக்கு வெற்பு, விலங்கல், விண்டு என்பன முழுவதும் திரிந்தன. இவை ஒரு பொருள் குறித்த வேறு சொல். உந்தி என்பது யாழ்ப்பத்தலும் கொப்பூழும் தேர்த்தட்டும், கான்யாற்று இடையும் உணர்த்துதல் முழுவதூஉம் திரித்தது;

என்று பெயர்க்கும் வினைக்கும் உதாரணம் காட்டி எப்படி திரிந்து வந்தன என்று விளக்கியுள்ளார். இங்கு ஒரு பொருள் குறித்த வேறு சொல் உறுப்பு திரிந்தும் முழுவதும் திரிந்தும் வரும் என்பதும் வேறு பொருள் குறித்த ஒரு சொல் எப்பொழு தும் முழுவதும் திரிந்து வரும் என்பதும் நச்சினார்க்கினியர் கருத்து. உண்மையில் பலபொருள் ஒரு சொல் திரிந்து வருவது என்பது ஒரு பொருள் பலசொல் நோக்கில் தான் அமையும். அதாவது உந்தி, கொப்பூழ் என்பன ஒரு பொருள் பல சொல். எனவே, 'உந்தி' என்பதன் வடிவத்திலிருந்து 'கொப்பூழ்' என்ற வடிவம் முழுவதும் திரிந்து வந்திருக்கிறது என்பது தான். இப்படி உந்தி குறிக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் உரிய சொல் லைத் தனியே எடுத்து நோக்கியே முழுவதும் திரிந்தது என்று கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு சொல் எப்பொழுதும் ஒரு பொருளையே உணர்த்த வேண்டும்; ஒரு பொருளைக் குறிக்க எப்பொழுதும் ஒரு சொல்லே இருக்கவேண்டும் என்பதே உரையாசிரியர்கள் கருத் தாக இருக்கவேண்டும். இது ஒரு இலட்சிய நிலை. அப்படி

இல்லாமல் பலபொருள் ஒரு சொல்லும் ஒரு பொருள் பல சொல்லும் இலட்சிய நிலைக்கு மாறுபட்டு இருப்பதால் அத்தகைய சொற்களைத் திரிசொல் என்று கொண்டு விட்டார்கள்.

பல பொருள் ஒரு சொல்லும் ஒரு சொல் பல பொருளும் மொழியில் இயற்கையாய் அமைந்தனவே. ஆயினும் உரையாசிரியர்கள் ஒரு பொருளை உணர்த்தும் சொல்லை இயல்பானதாக -இயற்சொல்லாகக் கொண்டதால் திரிசொல் இலக்கிய இன்பம் பெறுவதாக அமைத்துக் கொள்ளப்பட்டது என்றும் இன்னொரு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதனாலேயே திரிசொல் என்பது செய்யுளுக்கு மட்டும் உரியது என்று வரையறுத்து விட்டார்கள்.

> திரித்துக்கொண்டது இயற்கைச் சொல்லான் இன்பம்
> பெறச் செய்யுள் ஈட்டல் ஆகாமையான் அன்றே;
> அதனால் திரிசொல் எனவே செய்யுட்கு உரித்தாதலும்
> பெறப்படும்

என்று சேனாவரையர் கூறும்போது இயற்சொல்லைவிடத் திரிசொல் செய்யுளின் இன்பம் பெறுவதற்கு உதவுகிறது என்றும் கருத்துப் பெறப்படுகிறது. முதலில் இந்தக் கருத்தின் விளக்கத்தைப் பார்ப்போம்.

அடி, தாள் என்பன ஒரு பொருள் பல சொல். அடி என்பது இயற்சொல். தாள் என்ற திரிசொல்லாக இருப்பதால்

> கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை.

என்ற குறளில் 'கோள்' என்பதற்கு எதுகையாகத் தாள் என்பது பயன் படுத்தப்பட்டிருப்பதால் எதுகை பொருந்தி செய்யுள் இன்பம் நிறைந்து இருக்கிறது அப்படியே வஞ்சி என்றசொல் ஊரையும் பெண்ணையும், வஞ்சிப்பது என்ற வினையையும் குறிப்பதால்

> வஞ்சியேன் என்று அவன்தன் ஊர் உரைத்தான்
> யானும் அவன்
> வஞ்சியான் என்பதால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியார்
> வஞ்சியேன் வஞ்சியேன் என்றுரைத்தும் வஞ்சித்தார்
> வஞ்சியாய் வஞ்சியார் கோ

என்ற பாடல் சொற்சுவை மிகுந்திருப்பதாகக் கருதப்படுகிறது. பல பொருள் ஒரு சொல் செய்யுள் இன்பம் தருவதற்கு இது நல்ல உதாரணம். முதலில் உள்ள 'வஞ்சியேன்' என்பது 'வஞ்சி' என்ற ஊரினன் என்பதும் 'வஞ்சிக்கமாட்டேன்' என்றும் பொருள். இப்படி ஒரு சொல் இரண்டு, மூன்று பொருள் படுவதால் இலக்கிய இன்பம் உடையதாகப் புலவர்களால் கருதப்படுகிறது. இங்கு இயற்சொல்லைப் புலவர்கள் திரித்து இலக்கிய இன்பம் பெற வழி வகுத்துள்ளார்கள் என்பதும் திரிசொல் செய்யுளுக்கே வரும் என்பதும் ஆகிய சேனாவரையர் கருத்து விவாதத்துக்கு உரியது. மேலே சொன்னது போல, திரிசொல் புலவர்கள் செயற்கையாய்ச் செய்து கொண்டது அல்ல; மொழியில் இயல்பாய்ப் பலபொருள் ஒரு சொல்லும் ஒரு பொருள் பல சொல்லும் இருப்பதைப் பயன்படுத்தி இலக்கிய இன்பத்திற்கு வழி வகுத்துள்ளார்களே தவிர இலக்கிய இன்பத்துக்காக இயற்சொல்லைத் திரித்துச் செய்யுளில் கையாளவில்லை. திரிசொல் இயல்பாக இருப்பதால்தான் உலக வழக்கில் கல்லாத மக்கள் கூடக் கையாண்டு ஓசை இன்பத்தையும் நகைச் சுவையையும் ஏற்படுத்துகிறார்கள். பிள்ளை என்ற சொல், பேச்சு மொழியில் மகனையும் தென்னம்பிள்ளையையும் குறிக்கும். அதனால் தன்னுடைய மகன் உதவாக்கரையாக இருந்தால் 'இந்தப் பிள்ளையை வளர்த்ததற்குத் தென்னம்பிள்ளையை வளர்த்திருக்கலாம்' என்று கூறுவார்கள். சாப்பாடு / தின், காண்/பார் ஆகியவை இரண்டும் ஒரு பொருள் பல சொல்லாய் இன்றும் பேச்சு வழக்கில் வழங்குகின்றன. எனவே திரிசொல் செயற்கையாய்த் திரித்துக் கொண்டது என்பதோ செய்யுளுக்கு மட்டும் உரியது என்பதோ பொருந்தாது; அதில் சிறப்பு எதுவும் இல்லை.

திரிசொல் பலபொருள் ஒருசொல், ஒரு பொருள் பலசொல் ஆகிய இரண்டு வகைப்படும் என்று கொண்டதால் இன்னொரு பிரச்சனையும் எழுகிறது என்பதைச் சேனாவரையரே முதலில் கவனித்து அதைக் கேள்வியாக எழுப்பிப் பதில் கூற முயன்றுள்ளார்.

தொல்காப்பியர் உரியியலில்,

ஒரு சொற் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்

என்று கூறியதும் பல பொருள் ஒரு சொல்லும், ஒரு பொருள் பல சொல்லும் தான். அதாவது திரிசொல்லுக்குக் கூறிய இலக்கணம் உரிச்சொல்லுக்கும் கூறப்பட்டிருக்கிறது. எனவே இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்ற கேள்வி எழுகிறது. சேனாவரையர் இந்தக் கேள்வியை எழுப்பியதன் மூலம் சொல்லதிகாரம் முழுமையும் மனதில் கொண்டு உரை எழுதும் பண்பைப் புலப்படுத்தி விட்டார். ஆயினும் உரிச்சொல்லின் பண்புக்கும் திரி சொல்லின் பண்புக்கும் வேறுபாடு இருக்கிறது என்று காட்டுவதற்குப் பதிலாகத் தன்னுடைய சாமர்த்தியத்தால் ஒருபொருள் பலசொல், பல பொருள் ஒருசொல் என்பன திரி சொல்லின் இலக்கணம் இல்லை; அது திரி சொல்லின் பாகுபாடு என்று கூறிச் சமாதானப்படுத்திவிட்டார்.

> பல சொல் ஒரு பொருட்கு உரியவாதலும் ஒருசொல் பல பொருட்கு உரித்து ஆதலும் உரிச்சொல் முதலாகிய இயற்சொற்கும் உண்மையான் அது திரிசொல் இலக்கணம் ஆமாறு என்னையெனின்:- அது திரிசொற்கு இலக்கணம் உணர்த்தியவாறு அன்று; அதனது பாகுபாடு உணர்த்தியவாறு

என்பது சேனாவரையர் வாசகம். உண்மையில் இந்தக்கேள்வி (உரிச்சொல்லின் இலக்கணமும் திரிசொல்லின் இலக்கணமும் ஒத்து இருக்கிறதே ஏன்) திரிசொல்லுக்குக் கொடுத்த விளக்கம் குறை உடையது என்பதையும் உரிச்சொல்லின் இலக்கணத்திலிருந்து மாறுபட்ட விளக்கத்தைத் தரவேண்டும் என்பதையும் புலப்படுத்துகிறது. மேலும் 'செய்யுள்' என்பதைக் கவிதை இலக்கியத்தைக் குறிப்பதாகக் கொண்டு இலக்கிய உலகில் வழங்கும் ஒரு பொருள் பல சொல்லையும் பல பொருள் ஒரு சொல்லையும் உதாரணமாகக் காட்டியது உரிச்சொல்லுக்கும் திரிசொல்லுக்கும் ஒற்றுமை ஏற்படக் காரணம் ஆகும். இதை உணராமல் அது திரி சொல்லின் இலக்கணம் உணர்த்தவில்லை என்று கூறியது இன்னொரு கேள்விக்கு இடம் அளித்துவிட்டது. அதாவது ஒருபொருள் பல சொல், பலபொருள் ஒரு சொல் என்ற இரண்டு வகையோடு ஒருபொருள் ஒரு சொல் என்றே மூன்றாவது வகையும் மொழியில் இருக்கலாம் அல்லவா; அப்படியானால் தொல்காப்பியர் திரி சொல் இரண்டு வகைப்படும் என்று கூறியது குன்றக்கூறலாய்ப்

போய்விடுகிறதே என்பதே அந்தக்கேள்வி. இங்கும் அந்தக்கேள்விக்கு நேரடியான விடை தராமல் —விடை தேடாமல் தொல்காப்பியர் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு தப்பித்து விட்டார்.

> கிளவி, மஞ்ஞை என்பன ஒரு சொல் ஒரு பொருட்கு உரித்தாகிய திரிசொல் ஆதலின் இருபாற்று என்றல் நிரம்பாது எனின்:- அற்றன்று; ஆசிரியர் 'இருபாற்று என்ப திரிசொற் கிளவி' எனத் தொகை கொடுத்தார். ஆகலின் கிள்ளை, மஞ்ஞை என்பனவற்றோடு ஒரு பொருட்கிளவியாய் வரும் திரிசொல் உளவாகல் ஒன்றோ, அவை பிற பொருள்படுதல் ஒன்றோ, இரண்டனுள் ஒன்று திட்பம் உடைத்தாதல் வேண்டும். என்னை? ஆசிரியர் பிற கூறாமையின்;

என்பதே சேனாவரையர் வாசகம். கிள்ளை, மஞ்ஞை என்ற சொல் உணர்த்தும் பொருளைக் குறித்த வேறு சொற்கள் இருக்க வேண்டும். அப்படியானால் அவை ஒரு பொருள் பல சொல் ஆகும்; அல்லது அவை வேறு வேறு பொருள்களை உணர்த்த வேண்டும். அப்பொழுது அவை பல பொருள் ஒரு சொல்லாக அமையும். எனவே எல்லாச் சொற்களும் அந்த இரண்டு வகையில் ஏதாவது ஒன்றில் அடங்கிவிட வேண்டும். ஏனென்றால் தொல்காப்பியர் திரிசொல் இரண்டு வகையேபடும் என்று கூறியுள்ளாரே தவிர வேறு விதமாகக் கூறவில்லை என்பதே சேனாவரையர் வாதத்தின் கருத்து. இந்த வாதத்தைப் பார்த்ததும் சேனாவரையர் தன்னுடைய புலமையைப் பயன்படுத்தி அந்த இரண்டு சொற்களைப் பொறுத்த வரையிலாவது அவைபல பொருள் ஒருசொல்லா? ஒருபொருள் பலசொல்லா? ஒருபொருள் ஒருசொல்லா? என்பதற்கான நேரடியான விடையைக் கூறிக் கேள்வி கேட்டவரின் கருத்து சரியா? தப்பா? என்று ஏன் கூற வில்லை? என்ற சந்தேகம் முதலில் எழுகிறது. விடை சாதகமாக இல்லாமல் பாதகமாக இருக்கும் என நினைத்து அது தொல்காப்பியர் கருத்துக்கு முரணாக இருக்குமே என்று பயந்து விட்டாரா? தொல்காப்பியரின் புலமையில் அதிக நம்பிக்கை வைத்துவிட்டதால் தன்னுடைய புலமைக்கு வேலை இல்லை என்று நினைத்துவிட்டாரா என்றெல்லாம் எண்ண வேண்டியிருக்கிறது. அந்தக் கேள்விக்குச் சரியான பதில் கூறவேண்டும் என்றால் தமிழ் மொழியிலுள்ள எல்லாச் சொற்களில் பொருள் நிலை என்ன என்று ஆராய வேண்டும். அது முடியாவிட்டால் தனக்குத்

தெரிந்த வரையிலாவது தமிழ்ச் சொற்களின் நிலை என்ன என்று அலசிப்பார்த்து முடிவுக்கு வரவேண்டும். சேனாவரையர் கிள்ளை, மஞ்ஞை என்ற இரண்டு சொற்களின் நிலையையே நேரடியாகக் கூறாமல் வாசகரையே முடிவு செய்யச் சொல்லிவிட்டதால் அவரிடம் மேலே குறிப்பிட்ட நெறியை நாம் எதிர்பார்க்க முடியாது.

முதலில் மேலே கொடுத்த உதாரணங்களின் வன்மை மென்மையைப் பார்க்க வேண்டும். கிள்ளை என்பதும் தத்தைஎன்பதும் தொல்காப்பியத்திலேயே உள்ளன. செய்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும் (மரபு-68.3) என்பது தொல்காப்பியம். எனவே கிள்ளை, தத்தை என்பன ஒரு பொருள் பல சொல் ஆகும். சங்க இலக்கியத்தில் கிளி என்ற சொல்லும் அதே பொருளைக் குறித்து வழங்கியுள்ளது தொல்காப்பியத்தில் மயில் என்ற சொல்லே உள்ளது. மஞ்ஞை என்ற சொல் இல்லை. சங்க இலக்கியத்தில் மயில், மஞ்ஞை, பிணிமுகம் ஆகிய சொற்கள் ஒரே பொருளில் உள்ளன. எனவே அவை ஒரு பொருள் பல சொல்லே ஆகும். எனவே கேள்வி கேட்டவர் கொடுத்த உதாரணங்கள் அவர் கூறிய பொதுக்கருத்துக்கு ஆதரவாக இல்லை. அடுத்து ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல் மட்டும் உள்ளதா என்று பார்க்க வேண்டும். கடலை என்ற சொல்லுக்குரிய பொருளைக் குறிக்க வேறு சொல் இல்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. மரம் என்ற சொல்லுக்குரிய பொருளைக் குறிக்க வேறு சொல் இல்லை. இவையெல்லாம் ஒரு பொருள் குறித்த ஒரு சொல் எனலாம். ஆனால் மரம் என்ற சொல் மரத்தையும் மரக்கலத்தையும் குறித்து வழங்கின. எனவே மரம் என்பது பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் ஆகிறது. வாழை என்பது ஒரு பொருள் குறித்த ஒருசொல். செவி என்பதும் அப்படிபட்டதே. இது பிற்காலத்தில் வேறு பொருளையும் குறித்தது. எனவே செவி என்பதும் சங்ககாலத்தில் ஒரு பொருள் குறித்த ஒருசொல் தான். எனவே கேள்வி கேட்டவர் கொடுத்த உதாரணம் தவறாகப் போய்விட்டாலும் அவர் சொன்ன கருத்து தவறு உடையது அல்ல என்று ஆகிறது. அப்படியானால் திரிசொல் மூன்று வகைப்படும் என்று கொள்ள வேண்டுமா என்ற கேள்வி திரும்பவும் எழுகிறது.

தொல்காப்பியர் சில சொற்கள் சிலகாரணங்ளுக்காக வேறு வேறு பொருளைக் குறிக்கப் பயன்படுத்துவதும் ஒருபொருளைக் குறிக்க ஒரு சொல் இருக்கும் போதும் சில காரணத்துக்காக இன்னொரு சொல்லை உணர்த்துவதுமே திரிசொல் என்றார். மேலும் ஒரு பொருள் குறித்த ஒரு சொல் பற்றியோ சொல்லுக் கும் பொருளுக்கும் உறவு முறை பற்றியோ இங்கு விளக்க வில்லை. எனவே திரிசொல் மூன்று வகைப்படும் என்பது பொருந் தாது என்று நாம் வாதிடலாம். உரையாசிரியர்கள் உரிச்சொல் லும் திரிசொல்லும் வேறு வேறு என்று நினைத்ததாலும் இரண்டுக் கும் ஒரே விளக்கம் கொடுத்ததாலும் மேலே எழுப்பிய பிரச்சனை கள் எல்லாம் ஏற்பட்டன. எனவே உரிச்சொல்லுக்குக் கொடுத்த விளக்கத்திலிருந்து மாறுபட்ட விளக்கத்தைத் திரிசொல்லுக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

### 2.7.3.2 கட்டிய வழக்கு

சேனாவரையரே 'கட்டிய வழக்கு' என்று திரிசொல்லுக்கு இன்னொரு விளக்கமும் கொடுக்கலாம் என்ற கருத்தைக் குறிப் பிட்டாலும் 'திரிந்த சொல்' என்ற விளக்கத்தின் குறையை உணராததால் அதை ஏற்றுக் கொண்டு அதற்காக வாதாடி 'கட்டிய வழக்கு' என்பதை மறுத்துவிட்டார். மறுப்புக்கு முக்கிய காரணம் கட்டிய வழக்கு ஆயின் செய்யுளுக்கு வராது என்பதே. மேலே குறிப்பிட்டபடி 'செய்யுள்' என்பது உரையையும் குறிப்ப தாகக் கொணடால் உரைநடையில் கட்டிய வழக்கு பயன்பட லாம் என்று நாம் அதற்குச் சமாதானம் சொல்லலாம்.

இங்கு நன்னூல் உரையில் சங்கரநமச்சிவாயர் திரிந்து வருதல் என்ற கருத்து பொருந்தாது என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளது, 'கட்டிய வழக்கு' என்பதற்கு விளக்கம் போல அமைந்துள்ளது.

> ஈண்டு இயற்சொல், திரிசொல் என்றது அவற்றின் எழுத்துக்கள் திரிந்தும் திரியாமையும் கருதியன்று. வானரத்தின் முகம் தன் இயல்பாய் இருந்ததேனும் நரர்முகச் செல்விக்கு மறுதலைப்பட்டமை கருதி வலி முகம் எனப்பட்டது போலக் கல்வி ஏதுவான் அன்றி இயல்பாகத் தம் பொருளை உணர நிற்றலின் இயற் சொல் என்றும் அவ்வியல்பிற்கு மறுதலைப்பட்டுக் கல்வி ஏதுவால் தம் பொருளை உணர நிற்றலின் திரிசொல் என்றும் கூறப்பட்டன என்க

என்பது சங்கரநமச்சிவாயர் வாசகம் (நன்னூல்–272). இங்கு திரி சொல் தன்னுடைய நிலையில் இயல்பானது என்றும், இயற்சொல்லை நோக்கத் திரிந்தது என்றும் கொள்ள வேண்டும் என்பது முதல் கருத்து. சேனாவரையர் இயற்சொல் திரிந்து வந்ததே திரிசொல் என்று நினைக்க, சங்கரநமச்சிவாயர் இயற்சொல்லோடு ஒப்பிடும் போது திரிந்தது போலத் தோன்றுவது தானே தவிர உண்மையில் திரியவில்லை என்று கொண்டுள்ளார். இதை ஒரு உவமை மூலமும் விளக்கியுள்ளார் குரங்கினுடைய முகத்தை மனிதனுடைய முகத்தோடு ஒப்பிடும்போது திரிந்ததாகத் தோன்றுவதால் 'வலிமுகம்' என்று பெயர் இட்டாலும் இயற்கையில் குரங்கின் முகம் அப்படிப்பட்டதே தவிர மனித முகத்திலிருந்து திரிந்து ஏற்பட்டது அல்ல. இரண்டாவது கருத்துத்தான் திரிசொல்லுக்குள்ள விளக்கம். இங்கும் இயற்சொல்லோடு ஒப்பிட்டே புதிய விளக்கம் கொடுத்துள்ளார். படித்தவர்க்கும் படிக்காதவருக்கும் விளங்கக்கூடியது இயற்சொல் என்றும் படித்தவர்க்கு மட்டும் விளங்கக் கூடியது திரி சொல் என்றும் பொருள். 'இடம்' என்ற சொல் எல்லோருக்கும் தெரியும். அது ஒரு இயற்சொல். அதுவே இலக்கணத்தில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்றையும் கலைச் சொல்லாகக் குறிக்கும் என்பது இலக்கணம் படித்தவர்களே தெரிந்து கொள்ளமுடியும். வேழம் என்பது இயற்சொல்லாய் யானை, கரும்பு முதலியவற்றைக் குறிப்பது இயற்சொல். அதுவே வானநூலிலும், சோதிட நூலிலும் பரணி நட்சத்திரத்தைக் குறிப்பது திரிசொல். ஏனென்றால் வான நூலும் சோதிடநூலும் படித்தவர்க்கே அது ஒரு நட்சத்திரம் என்பது தெரியும். இதன்படி பார்த்தால் திரிசொல் என்பது கலைச் சொல் என்று கூறலாம்; கட்டிய வழக்கு என்பதும் பொருத்தமாக அமைந்துவிடுகிறது கா. மீனாட்சிசுந்தரத்தின் (1973:754) கருத்து இதை மேலும் விளக்குகிறது.

> கற்ற அறிஞர்களால் ஆக்கிக்கொள்ளப்பட்ட சொற்களே திரிசொற்கள் என்ற கருத்து உரையாசிரியர்கள் சிலரிடம் இருந்திருக்க வேண்டும் என்பது சேனாவரையர் உரையிலிருந்து தெரிகிறது. 'முழுவதும் திரிந்தனவற்றைக் கட்டிய வழக்கு எனபாரும் உளர்' எனச் சேனாவரையர் குறிக்கின்றார். கட்டிய வழக்கு என்பது ஆக்கிக் கொள்ளபட்ட வழக்கு என்ற பொருளைத் தரும்,

ஆதலால் இந்நூற்பாவிற்கு அறிஞர்கள் அமைத்து கொண்ட சிறப்புச் சொற்களோ திரிசொல்ஆகும் எனக் கூறும் உரையாசிரியர்களும் இருந்திருக்கின்றனர் என்பதும் தெளிவு. எனவே சிறப்பு மொழிஎன்பதும் திரிசொல் என்பதும் ஒருங்கு வைத்துஎண்ணத் தகுந்தவை என்பது என் கருத்தாகும்;

என்று கூறியது சங்கரநமச்சிவாயர் கருத்துக்கு விளக்கமாகவே உள்ளது. சிறப்பு மொழி என்பது மொழி ஆராய்ச்சியாளர் கருத்து என்று குறிப்பிட்டு அது பற்றிய மொழியியலார் கருத்தையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

பொது மொழியிலிருந்து சிறப்பு மொழி பிறக்கலாம். கற்றுத்துறை போகியவர்கள் ஒரே சொல்லைப் பொதுப் பொருளிலிருந்து பிரித்து சிறப்புப் பொருள்களில் பயன்படுத்தலாம். அப்பொது ஒருசொல்பலபொருளைக் கொண்டது ஆகின்றது. ஒரே சொல்லை ஆகுபெயராகவும் உருவகமாகவும் வழங்கினால் பொருள் வேறுபடுகின்றது அன்றோ. மேலும் பொதுமொழிச் சொற்களை ஒரு வரையறுத்த பொருளில் கலைச் சொற்களாக அறிஞர்கள் அமைத்துக் கொள்கின்றனர். ஒரே பொருளைக் குறிக்க, பல சொற்களை ஆக்கி கொள்வதும் உண்டு. இவ்வாறு அமைகின்ற சொற்களைச் சிறப்பு மொழிச் சொற்கள் என்று மொழி நூலார் விரித்துக் காட்டுகின்றனர்;

என்பது அவரது வாசகம் (1973:753 தொ) இது, சிறப்பு மொழியை நன்றாக விளக்குகிறது. இவரும் திரிசொல்லை இயற்சொல்லின் வேறுபட்டது என்று கருத்து உடையவரே. இவர் இயற்சொல்லைப் பொதுமொழி என்று கூறியதை மேலே குறிப்பிட்டது இங்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இனி இந்தக் கருத்துக்குரிய உதாரணங்களைக் கொண்டு அவை எப்படிப் பல பொருள் ஒரு சொல்லாகவும் ஒருசொல் பலபொருளாகவும் அமைகிறது என்று பார்க்க வேண்டும்.

பெயர் என்பது உலக வழக்கில் ஆள்பெயரை (name) யும் இலக்கணத்தில் பெயர்சொல் (noun) யும் குறிக்கும். முன்னது இயற்சொல்; பின்னது திரிசொல். இயற்சொல்லாய் ஒரு பொருள் குறித்த ஒரு சொல்லாய் இருந்தது திரிசொல்லாய் ஆகி பல பொருள் குறித்த ஒரு சொல்லாக மாறிவிட்டது. அப்படியே

'முல்லை' என்பது செடி, பூ என்ற தொடர்புடைய பொருளை (ஆகுபெயராக) இயற்சொல்லைக் குறித்தது; அகப்பொருளில் இருத்தல் என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தியதும் திரி சொல்லாகிவிட்டது. குறிஞ்சி, நெய்தல், பாலை, போன்ற பூப் பெயர்களும் ஐந்திணைப் பெயர்களாகப் பயன்படும் போது திரி சொல்லாகவும் பலபொருள் ஒருசொல்லாவும் ஆகிவிட்டன. திரிசொல்லாக மாறியதும் அந்தச் சொல்லுக்கு இன்னொரு புதிய பொருள் சேர்ந்து விடுகிறது.

நெருநல் (நேற்று) என்று இயற்சொல் குறிக்கும் பொருளைக் இலக்கணத்தில் இறந்தகாலம் என்று கூறுகிறார்கள். இது ஒரு பொருள் குறித்த பலசொல் ஆகும். இன்று என்பது நிகழ்காலம் என்பதும் நாளை என்பது எதிர்காலம் என்பதும் இந்த வகையைச் சார்ந்ததே. கணவனுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை இல் வாழ்கை அல்லது இல்லறம் என்று குறிப்பிடுவதே அகப்பொருளில் கற்பு எனப்படுகிறது. எனவே இல்வாழ்கை, கற்பு என்றஇரண்டும் ஒரு பொருள் குறித்த பல சொல் ஆகும்.

அடுத்து திரிசொல் என்பது செய்யுள் ஈட்டச்சொல்லாக உரை நடையில் மட்டும் அல்லாமல் கவிதையிலும் கூடப் பயன்படுத்தப் படுகிறது. உயர்திணை என்ற இலக்கணத்திரிசொல், ஊமை யான மனிதன் என்ற கருத்தைக் குறிக்க 'உயர்திணை ஊமன்' என்று குறுந்தொகையில் (224.5) வழங்கியிருப்பதும் சுட்டிக் காட்டத் தகுந்தது. எனவே செய்யுள் என்ற பொதுப் பொருளுக்கு ஏற்பத் திரிசொல் செய்யுள் இலக்கியத்தில் சிறுபான்மையும் உரை நடையில் சிறப்பாக இலக்கியம் தவிரப் பிற துறைகளில் பெரும் பான்மையும் வழங்குகிறது.

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருஎன்றால்அவ்
வுருவைஇஃது ஒருத்தன்என்கோ; ஒருத்திஎன்கோ;
இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றுஓர்
இயற்சொல் இலதுஎனின் மற்றுஎன் சொல்கேனே
(குமரகுருபரர்-சிதம்பரச் செய்யுட்கோவை. 54-2-4)

என்ற பாடலில் இயற்சொல் என்ற கலைச்சொல்-திரிசொல்லாகப் செய்யுளில் பயன்படுத்தப்பட்டிருச்கிறது.

## 2.7.5. திசைச்சொல்

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நிலப்பகுதியிலும் தத்தம் குறிப்பினை உடையது திசைச்சொல் என்பதே தொல் காப்பியர் கருத்து (எச்சம்.4). பன்னிரண்டு பகுதி எது என்பது பற்றி இரண்டு விதக் கருத்துகள் உரையாசிரியர்களிடம் காணப் படுகின்றன. திசைச்சொல் என்பது எதைக் குறிக்கிறது என்பது பற்றி மூன்று விதக் கருத்துகள் உள்ளன. மொத்தமாக நான்கு விதக் கருத்துகள் திசைச்சொல் பற்றி இருக்கின்றன. இவற்றில் 1) இளம்பூரணரும் சேனாவரையரும் ஒரே கருத்து உடையவர்கள்; 2) தெய்வச்சிலையார் தன்னுடைய கருத்தாக ஒன்றும் 3) பிறரு டைய கருத்தாக மற்றொன்றும் குறிப்பிட்டுள்ளார். 4) நச்சினார்க் கினியர் இளம்பூரணர் கருத்தையும் தெய்வச்சிலையர் பிறர் கருத்தாகக் குறிப்பிடுவதையும் சேர்த்துத் திசைச் சொல்லுக்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

### 2.7.4.1. நிலைமொழியின் வேறுபட்டது கிளைமொழி

> "செந்தமிழ் நாட்டை அடையும் புடையும் கிடந்த பன்னிரு நிலத்தார் தம் குறிப்பினையே இலக்கணமாக உடைய திசைச் சொற்கிளவிகள்"

என்று பதவுரையும்

> 'தாயைத் தள்ளை என்ப குடநாட்டார்; நாயை ஞமலி என்ப பூழி நாட்டார்

என்ற உதாரணமும் பன்னிரண்டு நிலத்து பட்டியலும் கொடுத் துள்ளார் இளம்பூரணர். மேலும்

> 'தங்குறிப்பினவே' என்றது அவை ஒரு வாய்பாட்டவே அல்ல; தத்தம் மரபினும் பின் வேறுவேறு வாய்பாட்ட என்றற்கும் அவர் எவ்வாறு குறித்து வழங்கினாரோ அஃதே அவற்றிற்கு இலக்கணம் என்றற்கும் என்பது

என்ற விளக்கமும் இளம்பூரணர் தந்துள்ளார். சேனாவரை யருடைய விளக்கம் இன்னும் கொஞ்சம் தெளிவாகவே உள்ளது.

> அவ்வந்நிலத்துத் தாம் குறித்த பொருள் விளக்குவது அல்லது அவ் வியற்சொற் போல எந்நிலத்தும் தம் பொருள் விளக்கா

என்ற பதவுரையே விளக்கமாக உள்ளது. அப்படியே பன்னி ரண்டு நிலப் பகுதியையும் குறிப்பிட்டதோடு ‘செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பால் இறுதியாக எண்ணிக் கொள்க’ என்று திசை நிலையிலும் விளக்கம் கொடுத்துள்ளார். இங்கு திசைச்சொல் என்பது நிலைமொழி (இயற்சொல்) பேசும் பகுதியைத் தவிர மீதியுள்ள பகுதியில் பேசப்படும் வழக்கே என்பது தெளிவாக உள்ளது. அதாவது இயற்சொல் ‘நிலை மொழி’ என்று கொண்டு அதைச் செந்தமிழ் நிலம் என்று குறிப் பிட்டதற்கு ஏற்ப நிலைமொழியின் வேறுபட்ட கிளை மொழி களே திசைச்சொற்கள் என்று கொண்டு அதற்குப் பொருத்தமாக சோழநாடு நீங்கிய பகுதிகளே திசைச்சொற் பகுதிகள் என்றும் விளக்கியுள்ளது பொருத்தமாக அமைந்துவிட்டது.

திசைச்சொல்லைத் தொல்காப்பியர் பொதுநிலையில் மட்டும் விளக்காமல் செய்யுள் ஈட்டச்சொல்லின் ஒரு வகையாகக் குறிப் பிட்டது, நிலைமொழியில் எழுதப்படும் இலக்கியத்தில் ஓரோ வழி திசைச்சொல்லையும் பயன்படுத்தலாம் என்று அனுமதி அளிப் பதற்குத்தான். எனவே அந்த முறையில் உரையாசிரியர்களின் உதாரணம் அமைந்துள்ளதா என்று பார்க்க வேண்டும். இளம் பூரணர் கூறிய ‘ஞமலி’ என்பது கிளைமொழி வழக்கு என்பது இரண்டு விதத்தால் நிரூபணம் ஆகிறது; 1) தொல்காப்பியர் ஞகர மெய் அகரமெய்யோடு சொல்லுக்கு முதலில் வராது (எழுத்து.64) என்று குறிப்பிட்டது; 2) ஞமலி என்ற குறைந்த எண்ணிக்கையிலே யே வழங்கியுள்ளது. பாண்டிச்சேரி சங்க இலக்கிய அகராதிப்படி பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் மட்டுமே ஞமலி பன்னிரண்டு தடவை வந்துள்ளது. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியவற்றில் நாய் இருபத்தொன்பது தடவையும் சங்கம் மருவிய இலக்கியங்களில் முப்பத்தேழு தடவையும் வந்துள்ளது. எனவே ‘ஞமலி’ திசைச்சொல்லாய் இலக்கிய வழக்கிலும் – நிலை மொழி வழக்கிலும் கையாளப்பட்டுள்ளது என்பது உறுதிப் படுகி றது. சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதியும் தாயைக் குறிக்கும் தள்ளை இலக்கிய வழக்கில் வந்துள்ளதாகக் குறிப்பிட வில்லை. சேனாவரையர் குறிப்பிடும் ‘பெற்றம்’ என்ற திசைச் சொல் வழக்குத் தொல்காப்பியத்திலேயே ‘காளை’ என்ற பொரு

ளில் உள்ளது. ஆனால் சேனாவரையர் 'பசு' என்ற பொருளில் சொல்வது இலக்கிய வழக்கில் இடம் பெறவில்லை. 'தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப' என்று சேனாவரையர் குறிப்பிடும் மற்றொரு உதாரணமும் இலக்கிய வழக்கில் காணமுடியவில்லை. ஆயினும் சிலப்பதிகாரத்தில் 'சிறுமிகள்' என்று வந்துள்ளதை அடியார்க்குநல்லார் 'சிறுபெண்கள்' என்று உரை எழுதி 'குடநாட்டு வழக்கு' என்றும் குறிப்பிட்டுள்ளார் (சிலம்பில் கிளைமொழி வழக்கு பற்றி, சண்முகம் 1983ஆ பார்க்கவும்) இளம்பூரணர் உரைக்கு விளக்கமாகச் சுந்தரமூர்த்தி (1963) எழுதிய அடிக்குறிப்பு சிறப்பானது.

> இயற்சொல் எந்நிலத்தும் தம் பொருளை இனிது விளக்குதல் போல இத்திசைச்சொற்கள் எந்நிலத்தும் தம் பொருளை இனிது விளக்கா. அவ்வந்நாட்டார்க்கு இயற்சொல்லாய்ச் செந்தமிழ் நாட்டார்க்குத் திசைசொல்லாய் விளங்கும்;

என்பது அவர் வாசகம்.

திசைச் சொற்களும் அந்தந்த நாட்டார்க்கு இயற்சொல்லாய் ஆகும் என்பது ஒவ்வொரு கிளை மொழியும் அந்த வட்டார மக்கள் எல்லோருக்கும் புரியும் என்று பொருள். இது வட்டார நிலைமொழி (regional standard dialect) என்று அழைக்கலாம். கிளைமொழி செயல்படுவதை ஆராயும் போதும் – பலருடைய பேச்சை நுண்மையாக ஆராயும் போதும் தம் வட்டாரத்துச் சேர்ந்த மக்களோடு பேசும்போது அந்த வட்டார மொழியிலும் பிற வட்டார மொழியாரோடும் சில பொது இடங்களில் பேசும் போதும் நிலைமொழியிலும் பேசுவதைக் கண்ட மொழியியல் அறிஞர்கள் (உ.ம். சண்முகம் பிள்ளை, 1971:235) வட்டார நிலைமொழி, பொது நிலை மொழி என்று நிலை மொழியிலும் மாறுபாடு இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். சுந்தரமூர்த்தி கூறிய 'அவ்வந்நாட்டார்க்கு இயற்சொல்லாய்ச் செந்தமிழ் நாட்டார்க்குத் திசைச்சொல்லாய் விளங்கும்' என்ற தொடர் அந்த இரண்டுவித நிலைமொழி இருப்பதைப் புலப்படுத்துகிறது. சுந்தரமூர்த்தியின் கருத்து சங்கரநமச்சிவாயரின் 'கற்றோரையும் மற்றோரையும் தழீஇத் 'தங் குறிப்பின' (நன். 273) எனப் பொதுமையிற் கூறினமையின் இத்திசைச்சொற்கள் அந்நிலத்தோர்க்கு

இயற்சொல்லாய்ச் செந்தமிழோர்க்கு அவ்வாறு குறிக்கப்படாத திரிசொல்லாய் நிற்கும்' என்ற விளக்கத்தைத் தழுவியது.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன் (1965:195) பன்னிரண்டு பகுதியையும் தமிழ்நாட்டு வரைபடத்தில் எந்தெந்தப் பகுதியைக் குறிக்கிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

## 2 7.4.2 பொதுச் சொற்கள் அல்லாதவை

'செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலத்தும் உள்ளார் தத்தம் குறிப்பினை உடையது' என்று பதவுரையும் பன்னிரு நிலத்தை விரித்துக் கூறிய பிறகு 'இவை செந்தமிழ் நாட்டகத்த; அந்நிலத்து வழங்கும் சொல்லாகிச் செஞ்சொல்லின் வேறுபட்டுச் சான்றோர் செய்யுள் அகத்து வருவன நீக்கப்படா' என்ற விளக்கமும் தெய்வச்சிலையார் உரையில் காணப்படுவன. தமிழ்நாடு முழுமையும் இயற்சொல்லுக்கு மாறுபட்டு வழங்கும் வழக்குச் சொற்களே திசைச்சொற்கள் என்பதும் தமிழகத்தில் எல்லாப் பகுதியிலும் பொதுசொற்களாக உள்ளவை தவிரச் சிறப்பு வழக்குகளாக உள்ளவையே திசைச்சொற்கள் என்பதும் தெய்வச்சிலையார் கருத்து என்பது புலனாகிறது.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் (1965 : 194) தெய்வச்சிலையாரின் கருத்தே ஒத்துக் கொண்டுள்ளார். தொல்காப்பியர் தம்காலத்து இருந்த தமிழகத்தின் பன்னிரண்டு பகுதியையும் கூறி அவை ஒவ்வொன்றும் தனக்கெனத் தனிக்கிளை மொழிகளைப் பெற்றிருந்தது என்று அவர் கூறுவது பொதுச்சொல் நீங்கிய சிறப்புச் சொற்கள் என்று விதந்து கூறாவிட்டாலும் தெய்வச்சிலையார் கருத்தோடு ஒத்ததுதான்[4]. இஸ்ரேலும் (1973:353) தெய்வச்சிலையார் விளக்கத்தை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

தெய்வச்சிலையார் இயற்சொல்லுக்குக் கொடுத்த விளக்கத்தோடு ஒத்தே திசைசொல்லின் விளக்கமும் உள்ளது.

---

4. 'Tolka:ppiyar speaks of the twelve division of the Tamil land of his times each having a dialect of its own'
Meenakshisundaran. 1965:194

இளம்பூரணர் கொடுத்த பன்னிரண்டு பகுதிகளையே சில பாட வேறுபாடுடன் தெய்வச்சிலையார் கொடுத்துள்ளார்.

| இளம்பூரணர் | தெய்வச்சிலையார் |
|---|---|
| பொங்கர் | பொதுங்கர் |
| சீத (நாடு) | சீதை (நாடு) |
| மலைநாடு | மலநாடு |
| குட்டநாடு | கருங்குட்ட நாடு |

இளம்பூரணர் கருத்துப்படி சோழநாட்டை நீக்கியது பொருத்தம் என்று மேலே குறிப்பிட்டோம். ஆனால் தெய்வச்சிலையார் தமிழ்நாடு முழுமையும் குறிப்பதாகக் கொண்ட பிறகு சோழ நாட்டை நீக்கியது தவறு. அதாவது அவருடைய கருத்துக்கு ஏற்ற முறையில் நிலப்பரப்பைக் குறிப்பிடவில்லை என்பது ஆகிறது.

சங்கரநமச்சிவாயர் கொடுந்தமிழ் பன்னிரண்டு என்று குறிப்பிட்டு பொதுங்கர்நாடு, ஒளி நாடு என்ற இரண்டுக்குப் பதிலாக வேணாடு, புனல்நாடு என்ற பகுதியைக் குறிப்பிட்டுள்ளார் (நன்: 273) புனல்நாடு சோழநாட்டையும், வேணாநாடு கேரளநாட்டில் திருவிதாங்கூர்ப் பகுதியையும் குறிக்கும். எனவே இந்தப் பகுதியைச் செந்தமிழ்ச் சேர்ந்த பன்னிரண்டு நாடு என்பது தெய்வச்சிலையார் கருத்துக்கு ஒத்தது. எனவே தெய்வச்சிலையார் உரை இன்னும் செப்பமுற வேண்டியிருக்கிறது.

தெய்வச்சிலையார் கருத்தை ஒத்தே தமிழகத்து இருபதாம் நூற்றாண்டு கிளைமொழிகளை ஆராயும் மொழியியலார் பலரும் தமிழகத்தை ஐந்து அல்லது ஆறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் சிறப்பு வழக்குகளையே கிளைமொழி வழக்குகளாகக் கொடுத்துள்ளார்கள் (உ.ம் சீனிவாசவர்மா, 1977: 111-164) சீனிவாச வர்மா (1977:103) தொல்காப்பியர் 'திசைசொல் என்றது கிளைமொழிகளை – குறிப்பாக வட்டாரக் கிளைமொழிகளை – குறிக்கின்றது' என்று கூறுவதால் அறியலாம்.

அதனால் தற்கால மொழியியலார் எல்லோரும் கிளைமொழிகளில் நிலைமொழி என்ற ஒன்று உண்டு என்ற கருத்து உடையவர்கள் அல்ல என்று முடிவுக்கு வரக்கூடாது. கிளைமொழி ஆய்வு

இன்னும் விஞ்ஞான பூர்வமாகச் செய்யப்படவில்லை. வருணனை முறையில்கூட வரலாற்று நோக்கில் கிளைமொழிக் கூறுகள் சிறப்பாகக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் (isoglosses) நகருகின்றனவா என்று பார்த்தால் நிலைமொழிப்பகுதி எது என்பது அறிய முடியும் (Hockett. 1958: 480)

தெய்வச்சிலையார் கருத்து அவ்வளவு சிறந்ததாகக் கூற முடியாது. ஏனெனில் கிளை மொழிகள் எல்லாவற்றையும் ஒரே தரம் உடையதாகக் கருதுவது உண்மை நிலைக்கு மாறுபட்டது.

### 2.7.4.3 தமிழகத்தைச் சார்ந்த பிறநாட்டு மொழிகள்

தெய்வச் சிலையாரே 'செந்தமிழ் சேர்ந்தநாடு என்றமையால் பிறநாடு ஆதல் வேண்டும் என்பார் உதாரணம் காட்டுமாறு' என்று குறிப்பிட்டு பன்னிரண்டு பகுதிகள் எவையெவை என்றும் அவற்றிற்குரிய உதாரணங்களும் கொடுத்துள்ளார். சுப்பிரமணிய சாஸ்திரியும் (1945) திசைச்சொல் என்பது தமிழகத்தை ஒட்டிய பன்னிரண்டு நாடுகள் என்று குறிப்பிடுவதால் அவரும் இந்தக் கருத்தினரே.[5] இராகவஐயங்காரும் (1959) திசைச்சொல் என்பது பிறமொழிச் சொற்கள் என்று கொண்டதும் இந்தக் கருத்தின் தழுவலாகவே கருதவேண்டும்.

கா. மீனாட்சி சுந்தரம் (1973:755) 'இதற்குரிய உதாரணங்கள் ஏற்கத் தக்கவையாய் இல்லை' என்றும்; இஸ்ரேல் (1973 : 353) இராகவஐயங்கார் கருத்து தவறு என்றும் உதாரணம் மட்டுமல்லாமல் அந்தப் பகுதிகள் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்க முடியாது என்றும் வாதிட்டுள்ளார்கள்.

கா. மீனாட்சிசுந்தரம் (1973:755) இரண்டு காரணங்களால் தெய்வச்சிலையார் உரையில் உள்ள உதாரணங்கள் ஏற்கத்தக்கவையாய் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அவையாவன: 1) இச்சொற்கள் எல்லாம் சங்க இலக்கியங்களிலே பயின்று வருகின்றன. 2) தமிழிலிருந்து அங்கு சென்றிருக்குமே அல்லாமல் அங்கிருந்து

---

5. 'Ticaiccol is the word borrowed in Tamil from the languages current in the twelve countries bordering the Tamil land.

Subrahmanya Sastri, 1945:283

தமிழுக்கு வந்திருக்க வழியில்லை (மூலத்தில் வழியுண்டா? என்ற கேள்வியாக இருந்தாலும் இல்லை என்ற பொருளே பெறும்படி உள்ளது. அதனால் இப்படி மாற்றிக் கூறப்பட்டுள்ளது). இவற்றின் வன்மை மென்மையைப் பார்ப்போம். தெய்வச் சிலையார் உரையில் அந்தச் சொற்களின் வடிவங்களைப் பற்றிப்பேசாமல் அவற்றின் பொருளைப் பற்றியே பேசப்பட்டிருக்கிறது (இளம்பூரணரும் சேனாவரையரும் தங்கள் உரையில் ஒரு சொல்லுக்கு இணையாகப் பிற கிளை மொழிகளில் வழங்கும் வடிவத்தைக் கொடுத்துள்ளார்கள்). எனவே உரையில் குறிப்பிட்ட சொற்கள் அங்கு கூறிய பொருளில் தமிழில் வந்துள்ளனவா என்று பார்க்க வேண்டும்.

'கரைதல் என்பது கருநாடர் விளிப்பொருள் உணரக் கூறுவது' என்பது உரைக்கருத்து. ஐங்குறுநூற்றில் (391) அஞ்சில் ஓதியை வரக்கரைந்தீமே என்று வந்துள்ளது. அது அழைத்தல் பொருள் உடையது என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது.

'செப்பு என்பது வடுகர் சொல்லுதற்குப் பெயராக வழங்குவது' என்றது உரைக்கருத்து. அந்தச்சொல் அதே பொருளில் தொல்காப்பியத்திலும் (பொருளியல். 14) பரிபாடலிலும் (6.67) வந்துள்ளது.

'பாண்டில்' என்பது தெலுங்கர் பசுவிற்கும் எருதிற்கும் பெயராக வழங்குவது என்பது உரைக்கருத்து. இந்தச் சொல் சங்க காலத்தில் வட்டம், கிண்ணி, குதிரை பூட்டிய தேர், வட்டக் கட்டில், வட்டத்தோல், குதிரை சேணம், விளக்கின்கால் ஆகிய பொருளிலும் எருது என்ற பொருளில் சீவகசிந்தாமணியிலும் வந்துள்ளது

'கொக்கு என்பது துளுவர் மாவுக்குப் பெயராக வழங்குவது' என்பது உரைக்கருத்து. தமிழில் அந்தப்பொருளில் அந்தச்சொல் பயன்படவில்லை. துளுவிலிருந்து கடனாளப்பட்ட சொல் என்று தமிழ்ப் பேரகராதி குறிப்பிட்டுச் சான்றாக இந்த உரையையே கொடுத்துள்ளது.

எனவே மீனாட்சிசுந்தரம் கூறியதில் பாதியே சரி. முதல் இரண்டு சொல்லும் சங்க காலத்திலேயே அந்தப் பொருளில் வந்துள்ளன. பாண்டில் என்பதற்கு உரையாசிரியர் கொடுத்த பொருள் பிற்கால இலக்கியத்தில் இருப்பதால் கடனாளப்பட்டதாகவும் இருக்கலாம். கொக்கு என்பது அந்தப் பொருளில் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடாததால் அந்தச் சொல்லின் பயிற்சியே சந்தேகத்துக்கு உள்ளாகிறது.

இங்கு இன்னொரு உண்மையும் எடுத்துக்காட்டவேண்டும். இஸ்ரேல் குறிப்பிட்டது போல (1973:353) உரையாசிரியர்கள் தங்கள் கால வழக்கை மனதில் வைத்துக் கொண்டு கூறிய உதாரணங்கள் இவை. எனவே நாம் சங்க இலக்கிய வழக்கை வைத்துக்கொண்டு வாதிடுவது அவர்கள் கருதியதற்கு மாறுபட்டது.

மீனாட்சிசுந்தரத்தின் இரண்டாவது கருத்து மொழி வரலாற்றுப்படி பொருந்தாது. தமிழில் உள்ள பிற மொழிச் சொற்களை ஆராய்ந்தோர் தமிழ்மொழி மலையாளம், தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளிலிருந்து சொற்களைக் கடனாண்டிருக்கிறது என்று காட்டியுள்ளார்கள். (T. S. மாணிக்கம், 1963) அப்படி கூறுவதற்குத் தகுந்த காரணங்கள் உள்ளன. பிற்காலத்தில் கையாளப்படுதல், தமிழுக்கும் அந்த மொழிக்குமுள்ள ஒலி இணைக்கு (phonological correspondences) மாறுபட்டிருத்தல் ஆகியவை முக்கிய காரணம். எனவே 'வரமுடியாது' என்று கூறுவதைவிட அந்தப் பொருளில் அந்தச் சொற்கள் முன்னரே வழங்கியுள்ளன; ஆகவே கடனாட்சியாகக் கருதமுடியாது என்றே வாதிட வேண்டும்.

இஸ்ரேல் (1973:355) இராகவ ஐயங்கார் கருத்து பொருந்தாது என்பதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன: 1) தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு தமிழ்மொழி சமஸ்கிருதமும் பிராகிருதமும் தவிர வேறு மொழிகளோடு தொடர்பு பெற்றிருக்கவில்லை; 2) இன்றைய சகோதரி மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன தனி மொழிகளாகத் தொல்காப்பியர் காலத்தில் இருக்கவில்லை; அவை ஒன்றுக்கொன்று புரிந்து கொள்ளக் கூடிய கிளை மொழி

களாகவே இருந்தன; 3) தொல்காப்பியத்துக்குப் பிறகே தமிழ் அயல்நாட்டு மொழிகளோடும் தமிழகத்தை ஒட்டிய பகுதிகளில் உள்ள கிளை மொழிகளாய் இருந்து தனி மொழிகளாக மாறி விட்ட மொழிகளோடும் தொடர்பு கொண்டது. மேலும் இராகவ ஐயங்கார் அப்படிக் கூறுவதற்குக் காரணம் பிற்கால நிலையை மனதில் கொண்டே ஆகும் என்றும், உரையாசிரியர்கள் இதே காரணத்தினால் அப்படி விளக்கியுள்ளார்கள் என்றும் அந்த தவறு ஏற்பட்டதற்கு அடிப்படை என்ன என்றும் இஸ்ரேல் விளக்கியுள் ளார். தவறு நேர்ந்ததற்குக் கூறிய அடிப்படை ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. அப்படியே அவர் கூறிய காரணங்களும் பொருத்த மானதே. எனவே பன்னிரண்டு பகுதியின் மொழிப் பெயர்களும் அந்த மொழியிலிருந்து கடனாளப்பட்டதாகக் கூறிய சொற்களும் பொருத்தம் உடையது இல்லை. சுருங்கச்சொன்னால் திசைச் சொல் என்பது தமிழ் நாட்டை ஒட்டிய பிற மொழிச் சொற்கள் என்ற உரை பொருந்தாது.

### 2.7.4.4 நிலைமொழியை ஒட்டிய கிளை மொழிகளும் அதை யொட்டிய பிற மொழிகளும்

> செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் பன் னிரண்டையும் புறம் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் தாம் தாம் குறித்தபொருளை விளக்கும் தன்மையை உடையன;

என்பது நச்சினார்க்கினியர் பொழிப்புரை. இது இளம்பூர ணர் கருத்தையும் தெய்வச்சிலையார் மற்றொரு கருத்தாகக் குறிப்பிட்டதையும் சேர்த்து ஒன்றாக்கியுள்ளது. எனவே பிற்பகுதி பொருந்தாது என்று மேலே காட்டப்பட்டது. அதனால் நச்சி னார்க்கினியர் உரையே பொருந்தாது போய்விடுகிறது.

## 2.7.5 வட சொல்

'வடமொழிக்குஉரிய (சிறப்பு) எழுத்துக்களைத் தவிர்ந்த எழுத் துக்களால் ஆன வடசொல்' என்றும் (எச்சம்; 5) ; '(வடவெழுத்து) சிதைந்தன வந்தாலும் பொருந்துவனவற்றை ஏற்றுக் கொள்ள லாம்' (எச்சம். 6) என்றும் தொல்காப்பியர் இரண்டு சூத்திரத்தால் வட சொல்லை விளக்கியுள்ளார்.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் முதல் சூத்திரம் 'தற்சமம்' என்ற கருத்திலும் இரண்டாம் சூத்திரம் 'தற்பவம்' என்ற கருத்திலும் விளக்கியுள்ளார்கள். ஆனால் சேனாவரையர் மட்டுமே அதற்கேற்ற முறையில் உதாரணங்களைக் கொடுத்துள்ளார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உதாரணங்கள் அவர்களின் உரையை ஒட்டி அமையவில்லை. இளம்பூரணர்-சேனாவரையர் உரைகளில், கடனாண்ட சொற்களின் நிலை, அதாவது தமிழ்ச் சொற்களாகவே கருத வேண்டுமா? வட சொற்களாகவே கருத வேண்டுமா என்பது பற்றியும் விவாதித்துள்ளார்கள். தெய்வச்சிலையார் தற்சமம், தற்பவம் என்ற அடிப்படையில் உரை எழுதாவிட்டாலும் அவருடைய உதாரணங்கள் அந்த முறையில் அமைந்துள்ளன.

## 2.7.5.1. தற்சமம்/ தற்பவம்

> ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ இருதிறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினை உறுப்பாக உடையவாகும் சொல்

என்ற இளம்பூரணர் பொழிப்புரையும்,

> குங்குமம் (kumkuma-குங்கும) என்றவிடத்து இருசார்க்கும் பொது எழுத்தினால் வருதல் உடைமையும் ஆரியத்தானும் தமிழானும் ஒரு பொருட்கே பெயராகி வழங்கி வருதல் உடைமையும் அறிக;

என்ற அவருடைய உதாரண விளக்கமும் 'தற்சமம்' என்பதை மனதில் கொண்டு எழுதியது என்பதைப் புலப்படுத்திவிடுகின்றன தற்சமம் என்பது தனக்கு சமமானது என்று பொருள்; இது வடமொழி நோக்கில் அமைந்தது.

இளம்பூரணர் இந்தச் சூத்திரத்தில் 'உலகம், குங்குமம், நற்குணம் என்னுந் தொடக்கத்தன' என்று உதாரணம் கொடுத்துள்ளார். உலகம் என்பது லோக (lo:ka) என்று வடமொழியிலிருந்து திரிந்தது. (உலகம் என்பது வடசொல் என்று இளம்பூரணர் கூறியதால் அதற்குரிய வடமொழி மூலம் இங்குக் கொடுக்கப்பட்டது. தமிழ்ச் சொல் என்றால் இளம்பூரணரின் உதாரணம் தவறு என்று குறிப்பிட வேண்டும்). எனவே தற்பவமாக (தன்னிட

மிருந்து தோன்றுவது–வடமொழி வடிவம் திரிந்து வருவது) இருப்பதால் சுப்பிரமணியசாஸ்திரி (1930: 180) அடுத்த சூத்திரத்துக்குப் பொருந்தும் உதாரணம் என்று கூறியது ஏற்றுக்கொள்ளத்தகுந்தது. நற்குணம் என்பது நல் என்ற தமிழ்ச்சொல்லும் குண (guṇa) என்ற வடமொழிச் சொல்லும் சேர்ந்தால் சரியான உதாரணமே. சற்குணம் என்று இருக்க வேண்டும் என்று கருதி சாஸ்திரி அடுத்த சூத்திரத்துக்குரிய உதாரணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இருசார் எழுத்திற்கும் ஒத்த வழக்கினான் வராது
சிதைந்து வந்தனவாயினும் பொருந்தின வந்தன வரை
யப்படா வடசொல் ஆதற்கு;

என்ற இரண்டாம் சூத்திரத்தின் இளம்பூரணர் பதவுரையும்
v
நிதி (nidhi), தசம் (dasa) என்ற உதாரணங்களும் தற்பவம் என்ற கருத்தை ஒட்டி அமைந்தனவே

சேனாவரையர் முதல் சூத்திரத்துக்குக் கொடுத்த உதாரணங்கள் எல்லாம் தற்சம வகையைச் சார்ந்தவையே: வாரி < வாரி; மேரு < மேரு; மணி < மணி ஆகியவை புதிய உதாரணங்கள். அது போல இரண்டாவது சூத்திர உதாரணங்கள் முழுமையும் தற்பவமே. அரமியம் (harmya) என்பதே புது உதாரணம்.

நச்சினார்க்கினியர் முதல் சூத்திரத்துக்குக் கொடுத்த உதாணங்களில் காரியம் (ka:rya), உற்பவம் (udbhava) ஆகிய இரண்டும் தற்பவம் ஆனதால் அடுத்த சூத்திரத்துக்கு உரியதாக சுப்பிரமணியசாஸ்திரி (1930:180) எடுத்துக் காட்டியது பொருத்தமானது.

நச்சினார்க்கினியார் 'வடவெழுத்துக்களை நீக்கி' என்பதற்கு 'உரப்பியும் எடுத்தும் கனைத்தும் கூறும் வடவெழுத்துக்களின் நீக்கி' என்று கூறிய விளக்கம் முறையே வல்லினத்தில் இரண்டாம் எழுத்துக்களையும் (குரல் அதிர்வுடைய ஒலி) மூன்றாம் எழுத்துக்களையும் (குரல் அதிர்வு இலா வெடிப்பொலி) நான்காம் எழுத்துக்கலை (குரல் அதிர்வுடைய வெடிப்பொலி) குறிக்கும்' என்று சுப்பிரமணிய சாஸ்திரி (1930 : 180) விளக்கியுள்ளார்.

சேனாவரையர் 'வடசொல் தற்பவமாக வருவது என்பது பாகதமாய்ச் சிதைந்து வருவனவுங் கொள்க' என்று குறிப்பிட்டதை நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் ஒத்துக் கொண்டுள்ளார்கள். வடமொழியிலிருந்து பிராகிருத மொழியில் தற்பவமாய்த் திரிந்து மறுபடியும் தமிழில் திரிந்து வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

| | பிராகிருதம் | வடமொழி |
|---|---|---|
| ஆணை | ஆணா | ஆஜ்ஞா |
| கண்ணன் | கண்ஹா | க்ருஷ்ண (kṛṣṇa) |
| நட்டம் | நட்ட | |
| வட்டம் | வட்டா | வ்ர்த்தா (vṛtta) |

## 27.5.2 கடனாளப்பட்ட வடசொற்களின் நிலை

எச்சவியல் முதல் சூத்திர உரை விளக்கத்தில் இளம்பூரணர் 'வடசொல் என்பது ஆரியச் சொற்போலும் சொல்' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் கருத்து என்ன? தமிழ் மொழியிலுள்ள சொற்களை வரலாற்று நோக்கில் பார்க்கும் போது தமிழில் வழங்கும் சொற்கள் வடமொழிச் சொற்களோடு ஒத்திருப்பது தெரிகிறது. அந்த ஒற்றுமை இரண்டு விதத்தில் ஏற்படலாம். ஒன்று: தமிழ்ச் சொற்கள் வடமொழியில் கடனாளப்பட்டிருக்கலாம். மற்றொன்று: வடமொழிச் சொற்கள் தமிழில் கையாளப்பட்டிருக்கலாம். இடைக்காலத்தில் வடமொழிக்கும் இன்னொரு மொழிக்கும் இடையே ஒற்றுமை இருந்தால் அது வடமொழியிலிருந்து மற்ற மொழி கடனாளப்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதினார்கள். அதன்படியே தமிழ்-வடமொழி ஒற்றுமை வடமொழி கடனாட்சியால் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தமிழ் அறிஞர்கள் எண்ணி விட்டார்கள். அதன்படி இளம்பூரணர் வடமொழிக்கும்-தமிழ் மொழிக்கும் ஒற்றுமை இருந்தால் அது வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டது என்று முடிவு செய்து விட்டார். இளம்பூரணர் விளக்கத்தில் இன்னொரு உண்மையும் புதைந்துள்ளது. கடனாளப்பட்ட பிறகு அது தமிழ்ச் சொல் ஆகிவிட்டது என்பதே அது. அது வருணனை நோக்கிலிருந்து பார்க்கும் போது தமிழ்ச் சொல்லாகவும் வரலாற்று நோக்கிலிருந்து பார்க்கும் போது வட சொல்லாகவும் ஆகிறது என்ற கருத்

தையும் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம். இன்றைய மொழியியலாளர்கள் இந்தக் கருத்தை விதந்து எடுத்துச் சொல்லியுள்ளார்கள் (உ.ம். Hockett. 1958:420).[6] இப்படிக் கொள்வதற்குக் காரணம் கடனாண்ட பிறகு அந்தச்சொற்கள் வழங்கும் மொழியின் இலக்கண மரபைப் பின்பற்றுவது தான். குங்கும என்ற வட சொல் மகர ஈறாகத் தமிழில் கடனாளப்பட்ட பிறகு பிற மகர ஈற்றுச்சொற்கள் போல வேற்றுமை உருபு ஏற்கும் போது (அ)த்துச் சாரியை பெறுகிறது. குங்குமம்-குங்குமத்தை, குங்குமத்தால். அப்படியே ஆங்கில மொழியிலிருந்து கடனாளப்பட்ட பாரம் (form), ரோடு (road) என்ற சொற்கள் முறையே மகர ஈறு போல் சாரியை ஏற்றும் (பாரத்தை, பாரத்தில்) நெடில் தொடர்க்குற்றியலுகர ஈறு போல இறுதி எழுத்து இரட்டித்தும் (ரோட்டை ரோட்டில்) வேற்றுமை உருபுக்கு முன்னால் வருவது தமிழ் இலக்கண மரபை அவை பின்பற்றுகின்றன என்பதைத் தெளிவுப் படுத்துகிறது. அதனால் தான் கடனாண்டபிறகு கடனாளப்பட்ட மொழிச் சொல்லாகவே கருதவேண்டும் என்று மொழியியலார்கள் கூறுகிறார்கள்.

சேனாவரையர்க்கு இந்தக் கருத்தில் உடன்பாடு இல்லை. (கடனாளப்பட்ட சொற்கள்) வட சொல்லாய் ஈண்டு வழங்கப் பட்டன எனல் வேண்டும் என்பதே அவர் கருத்து. இந்தக் கருத்தை நிலைநாட்ட இளம்பூரணருடைய கருத்தைத் தன்னுடைய வார்த்தைகளால் குறிப்பிட்டு அது பொருந்தாது என்பதனைப் பொது நிலையிலும் மொழி நிலையிலும் வாதாடியுள்ளார்.

இளம்பூரணர் 'வடசொல் என்பது ஆரியச்சொற் போலுஞ் சொல்' என்று கூறிய கருத்தைத்தான் சேனாவரையர் (எச்சம்.4) 'வடசொல்லாவது வடசொல்லோடு ஒக்கும் என்றாரால் உரை

---

6. ஹாக்கெட் ஆங்கிலமொழிக்குக் கூறிய உதாரணம் பொது நிலையில் பார்த்தால் எல்லா நிலைக்கும் பொருந்தும்.

'To the historian, the English words, 1) chair and 2) table are loan words as of a certain date, while, as of that date 3) stone, 4) bench and 5) Pope are not. Viewed descriptively. of course, all five of these words are today simply ordinary English இங்கு சரியாக விளங்கிக் கொள்வதற்காக எண் சேர்க்கப்பட்டது.

யாசிரியர்' என்று தன் வார்த்தைகளால் குறிப்பிட்டு (சுப்பிரமணிய சாஸ்திரி, 1945:284) வாதித்துள்ளார். 1) ஒக்கும் என்றதால் ஒரு சொல்லை இடவேற்றுமையால் இரண்டு சொல்லாகக் கருதலாம் என்ற கருத்துப் பெறப்படுகிறது. அது தவறு. 2) கடனாளப்பட்ட சொற்களைக் கடன் கொடுத்த மொழிச் சொல்லாகவே கருத வேண்டும். கடனாண்ட மொழிச் சொல்லாகக் கருதக்கூடாது என்று இரண்டு விதமாகச் சேனாவரையர் விவாதம் அமைந்துள்ளது.

'ஒக்கும்' என்று சொன்னால் ஒரு விதத்தில் ஒற்றுமையும் மற்றொரு விதத்தில் வேற்றுமையும் இருந்து இரண்டு பொருளாக இருக்கவேண்டும். ஆனால் இங்கு வடமொழிச் சொல் வடிவத்தாலும் பொருளாலும் முழுவதும் ஒத்து இருப்பதால் 'ஒக்கும்' என்பது பொருந்தாது போய் இரண்டு சொல் என்ற கருத்து மறுக்கப்பட்டு ஒரு சொல் என்ற கருத்தே பெறப்படுகிறது என்பது சேனாவரையர் வாதம்.

> ஒக்கும் என்று சொல்லப்படுவன ஒருபுடையான் ஒப்புமையும் வேற்றுமையும் உடைமையான் இரண்டு ஆகல் வேண்டும். இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடு இன்மையாகிய ஒரு சொல்லிலக்கணம் உடைமையான் இரண்டு சொல் எனப்படா; அதனான் ஒத்தல் யாண்டையது; ஒரு சொல்லேயாம்;

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு தற்சமச் சொற்களை மட்டுமே சேனாவரையர் எடுத்துக்கொண்டு வாதித்துள்ளார். தற்பவச் சொற்களையும் எடுத்துக் கொண்டால் இளம்பூரணருடைய கருத்து பொருந்தும். அப்படியானால் சேனாவரையர் ஏன் அப்படிக் குன்றக்கூறலாக எடுத்துக்கொண்டார் என்ற கேள்வி எழுகிறது. ஒருக்கால் அவருடைய வடமொழிப் பற்றுக் காரணமாக வடமொழிச் சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக் கருதக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதற்கு வசதியாக இருப்பதற்காக அப்படி எடுத்துக் கொண்டாரா என்று நினைக்கத் தோன்றுகிறது. இந்த உண்மை பின்வரும் வாதத்தாலும் வலியுறுவதைக் காணலாம்.

சேனாவரையர் கருத்தாகிய ஒரு சொல் என்று கொண்டாலும்தமிழில் இருப்பதால் தமிழ்; வடமொழியில் இருப்பதால் வட

மொழி என்ற வேற்றுமையை-(மொழி பேசும் இடம் வேறுபடுவ தால் இடவேற்றுமை என்றும் கொள்ளலாம்) இடவேற்றுமை என்று கொண்டு இரண்டு சொல் என்று கொள்ளக்கூடாதா என்று ஒரு துணைக் கேள்வி மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு நேரடி யாகப் பதில் கூறாமல் ஒரு உவமை மூலம் பதில் சொல்லியுள்ளது கேள்விக்கு எதிர்க் கேள்வி போல அமைந்துள்ளது.

> ஒரு சொல்லாயினும் ஆரியமும் தமிழும் ஆகிய இட வேற்றுமையான் வேறு ஆயின எனின்:- அவ்வாறு ஆயின் வழக்குஞ் செய்யுளும் ஆகிய இடவேற்றுமையால் சோறு, கூழ், என்னும் தொடக்கத்தனவும் இரண்டு சொல் ஆவான் செல்லும். அதனான் இடவேற்றுமை உடைய வேனும் ஒரு சொல் இலக்கணம் உடைமையான் ஒரு சொல்லேயாகும்;

என்பது சேனாவரையர் வாசகம். இரண்டு மொழியில் வேறு பட்டாலும் இரண்டு சொல்லாகக் கொள்ள வேண்டும் என்றால் செய்யுளிலும் வழக்கிலும் வேறுபடும் பொழுதும் இரண்டு சொல் லாகக் கருதவேண்டி வரும். ஆனால் செய்யுளிலும் வழக்கிலும் வேறுபடுவனவற்றை இரண்டு சொற்களாக யாரும் கருதுவதில்லை என்பது அவர் கருத்து. அதனால் இடவேற்றுமை இருந்தாலும் இரண்டாகக் கருதக்கூடாது என்பது சேனாவரையர் கருத்து. இங்கு செய்யுளிலும் வழக்கிலும் சொற்கள் வேறுபட்டாலும் இரண்டு சொல்லாகக் கருதுவதில்லை என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்ட முடிவு என்ற அடிப்படையிலே சேனாவரைய ருடைய வாதம் அமைந்துள்ளது. எனவே அவருடைய அடிப்படை சரியானதா என்று முதலில் பார்க்க வேண்டியதாகிவிடுகிறது. செய்யுளையும், வழக்கையும் ஒப்பிட்டு ஆராயும்போது செய்யுளில் 'சோறு' என்பதற்கு இணையாக வழக்கில் 'கூழ்' என்பது பயன் படுவது, சொல் நிலையில் இணையே (morphological correspondence) ஆகும். அந்த ஆராய்ச்சி வேறு. சொல்நிலையில் ஒன்றா, இரண்டா என்று ஆராய்வது வேறு. ஒரு சொல் என்பது வடிவ மும் பொருளும் உடையது. வடிவத்தில் மாறுபட்டுப்பொருள் ஒத் திருந்தால் ஒரு சொல் இரண்டு மாற்றுவடிவம் உடையதாகக் கருதுவார்கள். வடிவம் முழுவதும் மாறுபட்டுப் பொருள் ஒத்தி ருந்தால் 'ஒரு பொருள்பலசொல்' என்று அழைப்பதன் காரணமே வேறு வேறு சொல் என்பதுதான். எனவே சோறு, கூழ் என்பன

இடத்தால் மாறுபடுவதோடு வடிவத்தால் மாறுபடுவதால் இரண்டும் வேறு வேறு சொல்லாகவே கருத வேண்டும். சேனாவரையர் நினைப்பது போல யாரும் ஒரு சொல்லாகக் கருதமாட்டார்கள். எனவே சேனாவரையர் காட்டிய உவமை பொருத்தமில்லாததாக - தவறானதாக அமைந்துவிட்டது. உண்மையில் முதல் வாதத்துக்கும் இந்த வாதத்துக்குமே இரண்டு முரண் உள்ளது. 1) முதல் வாதத்தில் தமிழ் - வடமொழி என்று இரண்டு வேறு மொழி இருக்க இரண்டாவது வாதத்தில் செய்யுள், வழக்கு என்று ஒரு மொழிக்குள் இரண்டுவித பயன்பாட்டைக் குறிக்கிறது. 2) முதல் வாதத்தில் வடிவமும் பொருளும் ஒத்த சொல் குறிப்பிட இங்கு வடிவம் வேறுபட்டு பொருள் ஒத்த சொல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக ஒரு மொழியில் செய்யுளிலும், வழக்கிலும் வடிவமும் பொருளும் ஒத்தசொல் வழங்கினால் ஒரே சொல்லாகவும் வடிவம் முழுவதும் வேறுபட்டுப் பொருள் வேறுபட்டால் பல பொருள் ஒரு சொல்லாகவும் கருதுவார்கள். இரண்டு மொழிகளில் வடிவமும் பொருளும் ஒத்திருந்தாலும் அந்தந்த மொழிக்குரிய சொல்லாக - இரண்டாகத்தான் கருதுவார்கள். ஏனென்றால் மொழிஎன்பது வெறும் ஒலிக் குறியீடு மட்டும் அல்லாமல் அந்தக் குறியீடுமூலம்கருத்தைப் பரிமாறிக்கொள்ளும்சமூகத்தையும் குறிக்கும். மேலும் வடிவமும் பொருளும் ஒத்த சொற்கள் கூட அந்தந்த மொழிக்கு ஏற்பச்செயல்படுவதால் வேறு வேறு சொற்களாகவே கருத வேண்டும். எனவே சேனாவரையர் கருத்தான வடிவமும் பொருளும் இரண்டுமொழியில் ஒத்திருந்தாலும் ஒருசொல்லாகக் கருத வேண்டும் என்பதோ, வடிவம் வேறுபட்டுப் பொருள் ஒன்றாக இருக்கும் ஒரு பொருள் பல சொற்களை ஒரு மொழிக்குள்ளே செய்யுள், வழக்கு என்று வேறுபட்டாலும் ஒரு சொல்லாகக் கருதவேண்டும் என்பதோ சரியானது அல்ல; பொருந்தாத கருத்து ஆயினும் ஒரு சொல்லாகக் கருத வேண்டும் என்று அவருடைய கருத்தை ஒட்டி எழும் இன்னொரு கேள்வியும் எழுப்பிச் சேனாவரையரே பதில் சொல்லியுள்ளார். அதாவது ஒருசொல் என்றால் தமிழ், வடமொழி என்ற இரண்டில் எதற்குரிய சொல் என்பதே கேள்வி இதற்குரிய பதிலில் சேனாவரையர் காலத்து மொழி

உணர்வு வெளிப்பட்டுவிடுகிறது. இங்கு வேறு மூன்று உண்மைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

> ஒரு சொல்லாய வழித் 1) தமிழ்ச்சொல் வட பாடைக்கண் செல்லாமையானும் 2) வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும் 3) இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன எனல் வேண்டும்;

என்பது சேனாவரையர் வாசகம். முதல் இரண்டும் இடைக்காலத்தில் தமிழ் அறிஞர்கள் சிலரிடையே நிலவி வந்த கருத்தின் பிரதிபலிப்பு; வடமொழி தெய்வமொழி; தமிழ் மானுடர் மொழி என்று கருதி வடமொழியில் தமிழ்ச்சொற்கள் புகாது என்று கூறியிருக்கவேண்டும். சமயக் கருத்துகளும் சாத்திர நூல்களும் வடமொழியில் இருப்பதால் தெய்வமே படைத்த மொழி என்ற எண்ணத்தைத் தோன்றுவித்திருக்க வேண்டும். உலகில் எல்லா மொழியும் மனிதனால் ஆக்கிக் கொள்ளப்பட்டது என்ற முறையில் இருமொழி பேசும் மக்களுள் தொடர்பு ஏற்பட்டால் ஒரு மொழியின் செல்வாக்கு மற்றொரு மொழியில் பரஸ்பர நிலையில் ஏற்படும் என்று வரலாற்று மொழியியல் சுட்டிக்காட்டுகிறது. அதற்கு வடமொழி விதிவிலக்கு அல்ல. தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்று என்ற பிரயோக விவேகமே (17ஆம் நூற்றாண்டு)

> மணலூர்புரம் என்னும் தமிழ் வியாசபாரதத்தில் சென்றது தேசிகம் அல்லது தற்பவம், தற்சமம் ஆகாது என்க

(காரிகை–2 இறுதி உரை வாக்கியம்) என்று குறிப்பிட்டுள்ளது.

19-ஆம் நூற்றாண்டில் கால்டுவெல், கிட்டல் போன்ற அறிஞர்களும் 20ஆம் நூற்றாண்டில் பர்ரோவும் (1955:386) விரிவாக ஆராய்ந்து வடமொழி கடனாண்ட திராவிட மொழிச் சொற்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார்கள். இந்த உதாரணங்கள் எல்லாம் வடமொழிக்கும் திராவிட மொழிக்கும் தொடர்பு ஏற்பட்டதுவக்ககாலத்தில் கடனாளப்பட சொற்களே. வடமொழி திராவிட மொழியிலிருந்து கடனாண்டது என்பது, இரண்டுக்கும் தொடர்பு ஏற்பட்ட துவக்கக் காலத்தில் தான்.[7]

---

7. It has become clear that quite a considerable portion of the Sanskrit vocabulary is of Dravidian origin and that

இடைக்காலத்தில் வடமொழி பேச்சுமொழியாக இல்லாமல் எழுத்து மொழியாகவே இருந்தது. ஆகையினால் வடமொழியில் தமிழ்ச்சொற்கள் வாங்கப்படவில்லை என்பதும் வடமொழி வரலாறு காட்டுகிறது. எனவே சேனாவரையருடைய கருத்து அவர்கால நிலையை ஒட்டி அமைந்தது என்றும் சமாதானம் சொல்லாம்.

இரண்டாவது கருத்தான 'எல்லாத்தேயத்துக்கும் பொதுவானது' என்பது இந்தியாவின் எல்லாப் பகுதியும் என்பதை மனதில் கொண்டு சேனாவரையர் கூறினாரா என்று தெரியவில்லை. வரலாற்று நோக்கில் தமிழில் வடசொல் இருக்கிறது என்பது யாரும் மறுக்க மட்டார்கள். ஆனால் சேனாவரையர் கூறியபடி 'வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன எனல் வேண்டும்' என்பது தமிழில் அது இரண்டறக் கலக்கக்கூடாது; கலந்ததாகக் கருதக்கூடாது என்று சொல்வது போல் உள்ளது. ஆனால் இரண்டறக் கலந்தே தமிழ்ச் சொல் ஆகிவிடுகிறது என்பது மேலே சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இந்த மூன்று கருத்துகளும் கூட இன்றைய நிலையில் முழுவதும்ஏற்றுக் கொள்ள தகுந்தது அல்ல. ஆயினும் சேனாவரையர் தன்னுடைய வாதப்பிரதிவாதங்களில் இறுதியில் 'அதனால் இது போலியுரை என்க' என்று முடித்துள்ளார். அவருடைய வாதங்கள் பொருந்தாது என்று மேலே காட்டி

---

this influence has operated over a long period in the history of the language ... (P. 380).

Concerning the date when these words are taken into Sanskrit, it may be observed that the majority are post-Vedic. On the other hand, it is important to note that there is a small nucleus already found in the Veda, such as *ulu.kala*, *kaṭuka* .. . The large majority appear first in the classical language but in its early stage being first recorded in Paṇini, Patanjali, Maha:bha:rata, Srautasu:tra etc. The majority appear also in Pali which is important for dating since these canonical texts take us back to a period from 500-300 B.C. The number that occur first only in latter Sanskrit literature is again comparatively small. It is clear that as far as Sanskrit is concerned, the active period of borrowing from Dravidian was well over the Christian era.

T. Burrow, 1955:386

யதால் அவருடைய முடிவும் பொருந்தாது போய்விடுகிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

### 2.7.5.3 தற்பவம்/ தற்சமம்

தெய்வச்சிலையார் இந்த இரண்டு சூத்திரத்துக்கும் வேறுபட்ட உரை கண்டுள்ளார் என்பது மேலே குறிப்பிடப்பட்டது. முதல் சூத்திரம் தற்பவத்தையும் இரண்டாம் சூத்திரம் தற்சமம், தற்பவம் ஆகிய இரண்டையும் குறிப்பதாகவே உரை அமைந்துள்ளது. ஆனால் உதாரணங்கள் மட்டும் தற்சமம், தற்பவம் என்ற முறையில் உள்ளன.

'வடமொழிக்கே உரியவாகிய எழுத்தை நீக்கித் தமிழ் மொழிக்குரிய எழுத்தோடு புணர்ந்த சொல்' என்ற தெய்வச்சிலையார் பொழிப்புரை, தற்பவம் என்ற கருத்து அடிப்படையில் அமைந்ததுதான். 'வடமொழியாவன: வாரி, மணி, குங்குமம் என்னுந் தொடக்கத்தன' என்று குறிப்பிட்ட மூன்று உதாரணங்களுமே தற்சமத்தைச் சார்ந்தது என்று மேலே விளக்கப்பட்டது.

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் பாகதமாய் திரிந்து வருவனவற்றை அடுத்த சூத்திரத்தில் கொடுக்கத் தெய்வச்சிலையார் அவைகளை இந்தச் சூத்திரத்தில் கொடுத்துள்ளார். அவர் பட்டினம் என்ற புதிய சொல்லையும் தந்துள்ளார். தமிழ்ப் பேரகராதி பட்டன என்றே வடமொழிச் சொல்லோடு ஒப்பு நோக்கத்தக்கது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளது. ஆனால் தெய்வச்சிலையார் கருத்துப்படி பாகதச் சொல்லாயினும் அவை மூன்றும் நேரடியாக வாங்கியது என்றால் அவைகளும் தற்சமமாகவே அமையும். எனவே தெய்வச்சிலையார் பொழிப்புரைக்கு ஏற்ற முறையில் உதாரணங்கள் அமையவில்லை.

இளம்பூரணர் முதலியோர் தற்சமம் என்று கொண்டதை எப்படி தெய்வச்சிலையார் தற்பவம் என்று கொண்டார் என்றும் பார்க்க வேண்டும். 'எழுத்தொடு (புணர்ந்த)' என்பதற்கு இருவரும் இரண்டு முறையில் பொருள் கொண்டதே கருத்து மாறுபாட்டுக்குக் காரணம். 'ஆரியத்திற்கே உரிய எழுத்தினையாகி இருதிறத்தார்க்கும் பொதுவாய எழுத்து' என்று இளம்பூரணரும் 'இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்து' என்று சேனாவரைய

ரும் நச்சினார்க்கினியரும் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டும் 'தமிழ் மொழிக்குரிய எழுத்து' என்று பொருள் கொண்டுவிட்டார்.

> எழுத்தொடு பொருந்திய சொல்லேயன்றிச் சிதைந்த சொற்கள் வரினும் தமிழ் வழக்கிற்குப் பொருந்தினவை நீக்கப்படா

என்பது இரண்டாவது சூத்திரத்துக்குத் தெய்வசிலையாரின் பொழிப்புரை. இங்கு 1) எழுத்தொடு பொருந்திய சொல், 2) சிதைந்த சொல் என்று இரண்டு; வகையைத் தெய்வச்சிலையார் குறிப்பிடுகிறார் என்பது தெளிவு. எழுத்தொடு பொருந்தியது தற்சமம் என்றும் சிதைந்தசொல் தற்பவம் என்றும் கொள்ளலாமா என்று நினைக்கத் தோன்றுகிறது. கந்தம் (gandha), சாகரம் (sa:gara), சத்திரம் (sastra), முத்து (mukta), பவளம் (pravala) ஆகிய புதிய சொற்களை உதாரணங்களாகத் தெய்வச்சிலையார் கொடுத்துள்ளார். இவையெல்லாம் தற்பவத்துக்குரிய உதாரணங்கள். தற்சமத்துக்குரிய உதாரணங்கள் போன சூத்திரத்தில் கொடுக்கப்பட்டனவற்றை இங்கு எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் இன்னும் ஒரு பிரச்சனையும் இங்கு எழுகிறது. அதாவது போன சூத்திரத்தில் கூறிய தற்பவமும் இங்கு கூறும் சிதைந்த சொல் என்ற தற்பவமும் ஒன்றாகுமா? ஒன்றானால் கூறியது கூறல் என்னும் குற்றம் ஏற்பட்டுவிடுமே. வேறு வேறு என்றால் அவைகளுக்குரிய உதாரணங்கள் என்ன? என்பதுதான். போன சூத்திரத்தில் குறிப்பிட்ட தற்பவத்துக்குக் கந்தம், சாகரம் போன்று இங்கு குறிப்பிட்ட உதாரணங்கள் அதாவது ஓரிரண்டு மாற்றம் உடையவை மட்டும் பொருந்தும் என்றும் கொள்ளலாம்.

ஆடி (a:ṣaḍha) – ஆஷாட
ஆயிரம் (sahasra) – ஸஹஸ்ர
புரட்டாசி (pro:sṭhapada – ப்ரோஷ்ட்பத
மார்கழி (ma:rgasi:rṣa: – மார்கசீர்ஷா

போன்று அதிக மாற்றம் பெற்ற உதாரணங்கள் வேண்டுமானால் 'சிதைந்த சொற்களுக்கு' உரியவையாகக் கொள்ளலாம்,

### 2.7.6 செய்யுள் ஈட்டச்சொல்லும் சொல்வகையும்

உரையாசிரியர்கள் பெயர், வினை, இடை, உரி, ஆகிய நான்கிலும் செய்யுள் ஈட்டச் சொற்கள் வருபவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இளம்பூரணர் செய்யுள் ஈட்டச்சொல் நான்கும் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

> பெயர், வினை, இடை. உரி எனப்பட்ட நான்கு சொல்லுமே இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப்பட்டன; பிறவில்லை.

என்று எச்சவியல் முதல் சூத்திரத்தில் குறிப்பிட்டாலும் அவர் நான்கு வகைச் சொல்லுக்கும் பெயர்ச் சொற்களை மட்டுமே உதாரணம் காட்டியுள்ளார்.

சேனாவரையர் முதலியோர் இயற்சொல் மட்டுமே நான்கு வகையிலும் வரும் என்றும் திரிசொல், திசைச்சொல் முதலியவற்றில் சிலவகை மட்டுமே வரும் என்றும் கூறியுள்ளார்கள். ஆனால் அந்தக்கட்டுப்பாட்டில் அவர்களிடையே கருத்து ஒற்றுமை இல்லை. சேனாவரையர் கருத்துப்படி திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய மூன்றும் பெயராய் மட்டும் வரும்.

> பெயர், வினை, இடை, உரி என்பன இயற்சொல் பாகுபாடு ஆதலான் இயற்சொல் அந்நான்கு பாகுபாட்டானும் செய்யுட்கு உரித்தாம். திரிசொல் பெயராய் அல்லது வாரா .. திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும் செய்யுட்கு உரித்தாய் வருவது பெயர்ச்சொல்லே ஆம். வடசொல்லுள்ளும் பெயர் அல்லது செய்யுட்கு உரியவாய் வாரா. இவ்வாறாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க

என்ற அவருடைய விளக்கத்தால் (எச்சம்.1) அறியலாம். திரிசொல் பெரும்பான்மை பெயராகவும் சிறுபான்மை வினையாகவும் திசைச்சொல்லும் வடசொல்லும் பெரும்பான்மை பெயராகவும் சிறுபான்மை தொழிற்பெயராகவும் வரும் என்று நச்சினார்க்கினியர் கருதுகிறார்.

> இயல்பாகிய சொற் முற்கூறிய நால்வகைச் சொல்லேயாய் நின்று செய்யுட்கு உரித்தாம். அவ்வியற்சொல் திரிசொல் ஆங்கால் பெரும்பான்மை பெயராகவும் சிறு

> பான்மை வினைத் திரிசொல்லாகவும் திரிதல் இன்றி இடையும் உரியுமாகத் திரிந்து வாரா. திசைச் சொல்லும் வடசொல்லும் பெரும்பான்மை பெயர்ப் பெயராயும் சிறுபான்மை தொழிற்பெயராயும் வருதல் அன்றி ஏனையவாய் வாரா

என்பது நச்சினார்க்கினியர் வாசகம். தெய்வச்சிலையாரோ

> திரிசொல்லும் திசைச்சொல்லும் பெரும்பான்மை பெயரும் சிறுபான்மை வினையுமாகி வரும்; வடசொல்பெயராய் அல்லது வாரா

என்று கூறியுள்ளார் (எச்சம்.6) இந்தக் கருத்துகளைக் கீழ்கண்ட படி விளக்கலாம்.

| சொல் | ஆசிரியர் | பெயர் | வினை | இடை | உரி |
|---|---|---|---|---|---|
| இயற்சொல் | எல்லோரும் | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரிசொல் | இளம். | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சேனா. | ✓ | × | × | × |
| | நச்சி. | பெரும் பான்மை | சிறு பான்மை | × | × |
| | தெய்வ. | பெரும் பான்மை | சிறு பான்மை | × | × |
| திசைச் சொல் | இளம். | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சேனா. | ✓ | × | × | × |
| | நச்சி. | பெரும். பெய. பெ. சிறு. தொ. பெ. | × | × | × |
| | தெய்வ. | பெரும் பான்மை | சிறு பான்மை | × | × |
| வடசொல் | இளம். | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சேனா. | ✓ | × | × | × |
| | நச்சி. | பெரு. பெ சிறு. தொ. பெ. | × | × | × |
| | தெய்வ. | ✓ | × | × | × |

இனி இந்தக் கருத்துகளின் வன்மை மென்மையைப் பார்ப்போம்.

இயற்சொல் நான்கு வகையாயும் வரும் என்பதில் பிரச்சனை எதுவும் இல்லை. திரிசொல் எல்லா வகையாகவும் வரலாம் என்று கூறி பெயர்ச் சொற்களை மட்டும் இளம்பூரணர் உதாரணம் கொடுத்தார் என்று மேலே குறிப்பிட்டோம் சேனாவரையர் பெயர்ச் சொல்லாக மட்டும் வரும் என்றும் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் பெரும்பான்மை பெயராகவும் சிறுபான்மை வினையாகவும் வரும் என்றும் கூறியுள்ளார்கள். உரையாசிரியர்கள் அனைவரும் திரிசொல் என்பது இயற்சொல்லுக்கு மாறுபட்டு வருவது என்று குறிப்பிடுவதால் அவர்கள் கருத்துப்படி நான்கு வகையிலும் வரும் என்பதே பொருத்தம். இளம்பூரணர் கருத்து அளவில் எல்லாச் சொல்லாகவும் வரும் என்று கூறியதற்கு ஏற்ப நன்னூலில் மயிலைநாதரும் சங்கரநமச்சிவாயரும் திரிசொல் நான்கு வித சொல்லும் வரும் என்று எடுத்துக்காட்டியுள்ளார்கள்

> வெற்பு, விலங்கு,விண்டு, அடுக்கல், பொற்றை, பொருப்பு ... என்றும் இவை முறையே பொருள் ஆதி ஆறனுள் ஒரு பொருள் கருதிய பல பெயர்த் திரிசொல். இயங்கினான், ஏகினான் என இவை ஒரு தொழில் குறித்த பல வினைத் திரிசொல். சாத்தனே, வந்தாயே, கூத்தனோ, வந்தாயோ என்றும் 'ஓஒ உவமன் உறழ்வின்றி ஒத்ததே' (களவழி – 36), 'குறவரும் மருளும் குன்றம்' (மலைபடுகடாம். 275) என்றும் வரும் இவை வினா ஒருமையிலும் உயர்வுசிறப்பு ஒருமையிலும் வந்த பலஇடைத் திரிசொல். உறு, தவ, நனி கழி எனும் இவை மிகுதி ஒருமையைத் தழுவிய பல உரித் திரிசொல். பிறவும் அன்ன. இனிப் பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரி சொல் வருமாறு: உந்தி, ஓடை, நறவம், வாரணம் என்றல் தொடக்கத்தன இவற்றுள் உந்தி என்பது கொப்பூழினையும், ஆற்றிடைக் குறையினையும், தேர்த்தட்டினையும், யாழ்ப்பத்தல் துளையினையும் உணர்த்தும் ... துஞ்சினார், மாண்டது என்றல் தொடக்கத்தன பல தொழில் குறித்த ஒரு தொழில் திரிசொல். இவற்றுள் துஞ்சினார் என்பது உறங்கினார் என்பதனையும் இறந்தார் என்பதனையும் உணர்த்தும் . தில், மன், மற்று, கொல் என்றல் தொடக்கத்தன பல பொருள் கருதிய ஓர் இடைத்திரிசொல், கடியென் கிளவி முதலாயின பல குணந் தழுவிய ஓர் உரித் திரிசொல் பிறவும் அன்ன;

என்பது மயிலைநாதர் வாசகம். இந்த உதாரணங்கள் தொல் காப்பியத்துக்கும் பொருந்தும். எனவே சேனாவரையருடைய கருத்தான திரிசொல் பெயராய் மட்டும் வரும் என்பதோ நச்சி னார்க்கினியர் – தெய்வச்சிலையார் கருத்தான பெரும்பான்மை பெயராகவும் சிறுபான்மை வினையாகவும் வரும் என்பதோ பொ ருந்தாது. மொழியில் பெயர்ச் சொற்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதால் பெயர்ச் சொல்லில் திரிசொல் அதிகம் உள்ளதாக வும் அதில் வினைச்சொல் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் திரிசொல் குறைவாக உள்ளதாகவும் தோன்றலாம். அதனால் பெயர்ச்சொல்லில் பெரும்பான்மையும் வினைச்சொல்லில் சிறு பான்மையும் என்று கூறுவது பொருந்தாது.

திசைச்சொல்லைப் பொறுத்த வரையிலும் நான்கு உரையா சிரியர்களும் நான்கு வித கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். திரிசொல்லைப் போல் இளம்பூரணர் எல்லா வகைச் சொல்லும் சேனாவரையர் பெயர்ச்சொல் மட்டும் தெய்வச்சிலையார் பெரும் பான்மை பெயரும் சிறுபான்மை வினையும் வரும் என்று கூற நச் சினார்க்கினியர் மட்டும் வேறு விதமாக திசைச்சொல் பெயர் பெயராயும் சிறுபான்மை தொழிற் பெயராகவும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் பெயர்ச்சொல்லில் செய்த இந்த பாகுபாட்டுக்கு (பெயர்ப்பெயர், தொழிற்பெயர்) திசைச் சொல்லில் எந்தவித சிறப்பும் கிடையாது. திசைச்சொல் கிளை மொழியைக் குறிக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. எனவே கிளைமொழி வேறுபாடு எல்லா வகையிலும் தற்காலத் தமிழில் இருக்கிறது என்பதைக் கிளைமொழியியலார்கள் (சீனு வாசவர்மா. 1977:116-64) எடுத்துக்காட்டியுள்ளார்கள். சீனுவாச வர்மா 'இலக்கணவேறுபாடுகள்' என்று ஒவ்வொரு வட்டாரக் கிளை மொழிக்கும் உதாரணம் காட்டியுள்ளார். சங்கத் தமிழி லும் நான்கு ஐந்து கிளைமொழிகள் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது (சண்முகம்:1972). சங்க இலக்கிய வழக்கில் பெரும் பான்மை வழக்காகச் சில கூறுகளும் சிறுபான்மை வழக்காக சில வும் வழங்கி வந்துள்ளன. உதாரணமாக செய வென்ற வாய் பாட்டு வினையெச்சமும் செயின் வாய்பாட்டு வினையெச்சமும் வல்வினையில் (அதாவது பார், எடு போன்ற வினைச்சொற்கள் அந்த வினையெச்ச வடிவங்களில் வல்லெழுத்தை மிகுதியாகப்

பெற்று வருதல்; செய்-செய/செயின்; பார் பார்ப்ப/பார்ப்பின்) பகரமெய் எழுத்தைப் பெற்று வருதலே (பார்ப்ப, எடுப்ப, நடப்ப, பார்ப்பின் எடுப்பின், நடப்பின்) பெரும்பான்மையும்; ககரமெய் பெற்று வருதல் சிறுபான்மை (பார்க்க, எடுக்க, நடுக்க, பார்க்கின், எடுக்கின் .. ) இது கிளைமொழி வேறுபாடுதான். அது இலக்கணக் கூறில் (இடைச்சொல்லில்) உள்ள வேறுபாடு- அது போலவே செயின் என்ற வினையெச்ச வாய்பாடே சங்க இலக்கியத்தில் மிகுதியாக உள்ளது. செய்தால் என்ற வாய்பாடு சிறு வரவாகவே உள்ளது. இதுவும் வினை விகுதியில்-இடைச்சொல்லில் உள்ள கிளைமொழி வேறுபாடுதான் (சண்முகம்-197 அ) சங்க இலக்கியத்தில் வினைச்சொல்லிலும் கிளைமொழி வேறுபாடும் இருந்திருக்க வேண்டும். எனவே இளம்பூரணர் குறிப்பிட்டபடி திசைச்சொல் லும் நான்கு வகையிலும் வரும் என்ற கருத்தே பொருந்தும்

திசைச்சொல் போலவே வடசொல்லும் அமையும் என்று இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கூற இங்குத் தெய்வச் சிலையார் மட்டும் மாறுபட்டு திசைச்சொல் பெயராகப் பெரும் பான்மையும் வினையாக சிறுபான்மையும் வர வடசொல் பெயராக மட்டும் என்று கூறியுள்ளார்.

தெய்வச்சிலையார் வடசொல் பெரும்பான்மையும் பெயராக வும் சிறுபான்மை வினையாகவும் வரும் என்று கருதுவதாகக் குறிப்பிட்டு '(இழப்பச்) சிந்தியான்' (புறம்:376)-சிந்தி (வடமொழி. சிந்த்) 'தம்மைப் பீழிக்கும் பீழை' (குறள் – 843)- பீழ் (வட. பீட்) என்று இரண்டு உதாரணங்களைக் காட்டி சுப்பிரமணியசாஸ்திரி (1945 : 281) இவர் கருத்தே சரியானது என்று நினைப்பதாகக் கூறியுள்ளார்.[8] உண்மையில் தெய்வச்சிலையார் அப்படி குறிப்பிட

8. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1945) ஆங்கிலமொழி பெயர்ப் பில் தெய்வச்சிலையார்வடசொல்(திசைச்சொல்லும் சேர்த்து) பெரும்பான்மை பெயராகவும் சிறுபான்மை வினையாகவும் வரும் என்று கூறியிருப்பது தவறானது. திசைச்சொல்லுக்கும் திரிசொல்லுக்கும் கூறியதைத் தவறுதலாக வடசொல்லுக்கும் உரியதாகக் கொண்டு விட்டார் அவர்.
Teyvaccilaiyar states that mostly they (*ticaiccol* and *vaṭu-col* are found as nouns and some times as verbs' என்ற கூற்றுதான் பிழை. ஆனால் வடசொல் வினையாகவும் வரும் என்று காட்டிய உதாரணம் சரியானது; ஏற்றுக் கொள்ளத் தகுந்தது.

வில்லை என்பது மேலே காட்டப்பட்டது. ஆயினும் வினைச்சொல் லாகவும் வடமொழிச் சொல் சிறுபான்மையாக வரும் என்ற சுப்பிரமணியசாஸ்திரி கூறிய உண்மை ஏற்றுக்கொள்ளத் தகுந் ததே. சங்கத் தமிழில் வந்துள்ள வடமொழிச் சொற்களை எல் லாம் தொகுத்து ஆராய்ந்த வைத்தியநாதனின் (1971:179)கூற்றும் சாஸ்திரியின் கூற்றுக்கு அரண் செய்வதாகவே உள்ளது. வட மொழிச் சொற்கள் பெரும்பான்மையும் பெயர்ச் சொற்களாக உள்ளன. ஐந்து சொற்கள் மட்டுமே வினைச் சொற்களாக உள் ளன என்பதே அவருடைய கூற்று.[9]

## 2.7.7 பாகுபாட்டின் அடிப்படை

செய்யுள் ஈட்டச் சொல் என்று நான்கு வகையாகப் பிரித்த தன் அடிப்படை என்ன என்பதும் நினைக்கத்தகுந்தது.

தேவநேயப்பாவாணர் (சேனாவரையர் உரைப்பதிப்பில் எச்ச இயல் முதல் சூத்திரத்தின் அடிக்குறிப்பு) சொற்பிறப்பு முறையில் வகுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

> தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச்சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் – அயற்சொல் என்ற முறையில் தென்சொல் – வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன்சொற்குள் செந்தமிழ் – கொடுந்தமிழ் என்ற முறையில் நாட்டுச்சொல் – திசைச் சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல் – திரிசொல் என்ற

9. Most of the borrowed words belong to the noun class and there are five verbs which are borrowings from Sanskrit.

Vaidyanathan. 1971:179. இவர் குறிப்பிட்ட ஐந்து சொற் களில் வசி (பரிபாடல் 5.28) என்பதற்கு வசித்தல், வாழ்தல் என்று பொருள் கொடுத்துள்ளார். ஆனால் 'ஆக்கை' என்ற சொல்லோடு வந்திருப்பதும் அதற்குப் பிளத்தல் என்பதே சரியான பொருள் என்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது (கந் தசாமி, 1961). மேலும் புறநானூற்றில் உள்ள உற்கு என்ற வினைச்சொல்லும் (புறம் 41.4) உல்கா (ulka:) என்ற வட சொல்லிருந்து வந்தது. அதற்கு 'எரிந்து வீழ்தல் என்று பொருள். இந்த இரண்டு உண்மையும் ஒரு உரையாடலின் போது என்னுடைய ஆராய்ச்சி மாணவர் சி. சிவதாணு கூறி னார்.

பாகுபாடும் தோன்ற, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு அமைந்தன;

என்பது தேவநேயப்பாவணர் வாசகம். அவர் கருத்தினை கீழ்க்கண்டபடி படம் வரைந்து விளக்கலாம்.




உரையாசிரியர்கள் இயற்சொல்லுக்கு மாறுபட்டதாகத் திரிசொல்லைக் கூறியதும் சுப்பிரமணிய சாஸ்திரி (1945) இயற்சொல்லைத் தாய்மொழி (indigenous word) குறிப்பிட்டதும் அடிப்படையாகக்கொண்டு பாவாணர் அந்தக் கருத்தை முழுமைப்படுத்தி மேற்கண்டவாறு விளக்கியுள்ளார் என்று கொள்ளலாம்.

தன்சொல், அயல்சொல் என்ற பிரிவை வேண்டுமானால் சொற் பிறப்பியல் அடிப்படை கொண்டது என்று கூறுவது பொருத்தம். ஏனையவற்றைச் சொற்பிறப்பியல் அடிப்படை என்று கூற முடியாது. செந்தமிழ் / கொடுந்தமிழ் அல்லது இயற்சொல்/ திசைச்சொல் பாகுபாடு மொழி உணர்வை அடிப்படையாகக் கொண்டதாக வேண்டும் (சண்முகம் - 1980ஆ); ஏனெனில் தாய் மொழிச் சொற்களுக்குள்ளே இந்த வேறுபாடு செய்யப்படுகிறது.

ஒரு மொழி இலக்கிய மொழியாகப் பயன்படும்போது பெரும் பாலும் நிலைமொழியிலே (இயற்சொல்) எழுதப்படும். தன்னை அறியாமலே சில கிளை மொழிச் சொற்கள் (திசைச் சொற்கள்) புகுந்துவிடும் அல்லது சில காரணங்களுக்காக இலக்கிய ஆசிரியன் புகுத்துவதும் உண்டு. ஆகவே நிலைமொழி/கிளைமொழி என்ற பாகுபாடு மொழியின் அந்தக்கால சமூகப் பொருளாதாரப் பண் பாட்டுச் சூழலினால் அமையும். இதை மொழி பற்றிய உணர்வு என்று கூறுவதே பொருந்தும்.

இயற்சொல்/திரிசொல் என்ற பாகுபாடு மொழி பலதுறை யிலும் பயன்படுதலையும் அப்படி பயன்படும்போது துறைக்கேற்ற சொல் நெறி அறிந்து கையாளுதலையும் புலப்படுத்தும். எனவே இந்தப் பாகுபாடும் சொற் பிறப்பியல் பற்றி அமையாது மொழி கையாள வேண்டிய முறையை - உணர்வை அதாவது மொழி உணர்வைக் சுட்டுவதாகக் கொள்ளலாம். இயற்சொல்/வடசொல் இயற்சொல்/திசைச்சொல், இயற்சொல்/திரிசொல் என்ற மூன்று வகைப் பாகுபாட்டில் பின்னது இரண்டும் மொழி உணர்வையும் முன்னது ஒன்றும் சொற் பிறப்பியலையும் அடிப்படையாகக் கொண்டது என்று ஆகிறது. உண்மையில் சொற் பிறப்பியல் என்பது மொழிவரலாற்று அறிஞர்கள் மட்டுமே முழுமையாக உணர்வது. மொழியைப் பயன்படுத்தும் பொதுமக்களும் அறிஞர் களும் கலைஞர்களும் தாய் மொழிச்சொல், பிற மொழிச்சொல் பற்றி முழுமையாக உணர்ந்திருக்காவிட்டாலும் ஓரளவு அந்த உணர்வு உடையவர்களாகவே இருப்பார்கள்; எனவே இதையும் மொழி உணர்வு என்று ஒருவகையில் சொல்லலாம். அப்படியா னால் செய்யுள் ஈட்டச் சொல் என்ற பாகுபாடு மொழி உணர் வை அடிப்படையாகக் கொண்டது என்பது வரலாற்று நோக்கு எதுவும் இல்லாமல் அந்தந்த காலத்து மொழியிலுள்ள சொற்கள் செயல்படும் பண்பைச் சுட்டுவதாகக் கொண்டு விடமுடியும். அதா ஏனைய இலக்கணப் பாகுபாடுகளைப்போல இந்தப் பாகுபாடும் மக்களிடையே வழங்கும் மொழியின் தன்மையை அதாவது ஓர ளவு பயன்பாட்டை ஒட்டிய பாகுபாடு என்று கொண்டு தொல் காப்பியர் காலத் தமிழகத்தில் வழங்கிய மொழி உணர்வைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

# 3. திணை – பால் பாகுபாடு

## 3.0 முன்னுரை

ஒரு மொழியிலுள்ள உருபன்களைப் பலவகையாக வகைப் படுத்தலாம். அவைகளில், தட்டிலா உருபன் (free morpheme), கட்டுண்ட உருபன் (bound morpheme) என்பது ஒருவகை. கட்டிலா உருபன் என்பது தனித்து நின்று சொல்லாகவோ கிளவியாகவோ பயன்படக்கூடியது. மரம், வாள், தலை, நட, பார் போன்றவை தனிநிலை உருபன்கள். வேற்றுமை விகுதி, கால விகுதி, திணை – பால் விகுதி போன்றவை கட்டுண்ட உருபன்கள். கட்டுண்டநிலை உருபன்களை ஆக்க ஒட்டுகள் (derivational suffixes) என்றும் திரிவொட்டுகள் (inflectional suffixes) என்றும் பிரிப்பார்கள், திரிவொட்டுகள் அவை சேரும் சொற்களின் அடிப் பண்பை மாற்றாமலும் எல்லாச்சொற்களோடும் வரும். பெயர்ச் சொற்களில் வேற்றுமை உருபு எல்லாச் சொற்களுடனும் வருவ தால் வேற்றுமை திரிவொட்டுக் கூறாகும். ஆனால் - இ விகுதி சில பெயர்ச்சொற்களோடு சேர்ந்து (காதல் – காதலி; துண்டு – துண்டி) வந்து அவற்றை வினைச்சொற்களாக மாற்றுகின்றன. எனவே அது ஆக்கவொட்டு என்று கருதப்படுகிறது. அப்படியே எல்லா வினைச்சொற்களும் காலவிகுதி ஏற்றும் வினையாகவே கருதப்படுவதால் காலவிகுதி திரிவொட்டு ஆகும். ஆனால் அவை தொழிற் பெயர் விகுதி பெற்று (நட – நடை; வாழ் – வாழ்வு, வாழ்க்கை) பெயராக ஆகும்போது ஒரே விகுதி எல்லா வினை யோடும் வருவதில்லை; மேலும் வினைச்சொல் பெயராகவும் மாறிவிடுகிறது. எனவே தொழிற் பெயர் விகுதிகள் ஆக்கவொட் டுகளாகவே கருதப்படவேண்டும். கட்டிலா உருபன்கள் விகுதி

ஏற்கும்போது சில சொற்கள் எந்த மாற்றமும் இல்லாது விகுதி ஏற்கும் (தலை - தலையை; வாள்-வாளால்; நட-நடந்து) வேறு சில சொற்கள் சில ஒட்டுகளைச் சேர்த்த பிறகே விகுதி ஏற்கும். மரம் என்ற சொல் -த்து என்ற ஒட்டு ஏற்று மரத்து- என்று ஆன பிறகே வேற்றுமை உருபு ஏற்க முடியும், (உ.ம். மரத்தை, மரத்தால்). எனவே கட்டிலா உருபன் விகுதி ஏற்கும் நிலையில் இருப்பதைத் தண்டு (stem) என்று அழைப்பார்கள். அது விகுதி ஏற்கும் நிலையில் இருப்பதால் அதைக் கட்டுண்ட உருபனாகவே கருதுவார்கள். ஆயினும் கட்டிலா உருபன், மாற்றம் எதுவும் இல்லாமல் இருந்தாலும் விகுதி ஏற்கும் நிலையில் இருக்கும் என் பதால் அதையும் தண்டு என்ற முறையில் கட்டுண்ட வடிவமாக வே கருதுவார்கள்.

தண்டுகள், விகுதிகள் ஏற்கும் முறையையும் வாக்கியத்தில் வரும் நிலையையும் ஒட்டிப் பாகுபாடு செய்வது சொல்வகைப் பாடு (parts of speech) எனப்படும். சொல்வகைப்பாட்டில் வரும் விகுதிகள் - திரிவொட்டுகள் - எல்லாம் இலக்கணக்கூறு (grammatical category) என்று அழைக்கப்படும். சொல்வகைப்பாட்டையும் இலக்கணக்கூறாகக் கருதலாம். அப்போது அதை ஆதார இலக் கணக்கூறு என்றும் ஏனைய இலக்கணக் கூறுகளைத் துணைநிலை இலக்கணக்கூறு என்றும் குறிப்பிடுகிறார்கள்.

## 3.1 சொல்வகைப்பாடு

தமிழில் சொல்வகைப்பாடு பற்றி இன்னும் தீவிர ஆராய்ச்சி நடைபெறவில்லை. பொதுவாகப் பெயர், வினை ஆகிய இரண்டுந் தான் சொல்வகைப்பாடு என்று கருதுவோரும் (உ.ம். தெ. பொ. மீனாட்சிசுந்தரன், 1974:124) இடைச்சொற்களில் ஒரு நிலைச் சொற்களைச் (particles) சேர்த்து மூன்று சொல் வகைப்பாடு என்று கருதுவோரும் (உ.ம். இஸ்ரேல் 1973:252; சிவதாணு 1983: 137) இருக்கிறார்கள். இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் விரிவாக ஆராய்ந்த பிறகே தமிழில் சொல்வகைப்பாடு பற்றித் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

பொதுவாகச் சொல்வகைப்பாடு பரந்தது; அடிப்படையானது. ஆனால் இலக்கணக்கூறு குறுகியது; துணை நிலையானது என்று

கருதப்படுகிறது (முழு விளக்கத்துக்கு அகத்தியலிங்கம், 1979:61-68 பார்க்கவும்).

## 3.2 இலக்கணக் கூறுகள்

தொல்காப்பியத்துள் திணை, பால், எண், இடம், வேற்றுமை காலம் ஆகிய இலக்கணக் கூறுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒருமை எண்ணின் பொதுப் பிரிபாற் சொல் (கிளவி. 44.1) என்பதால் எண் (number) என்ற இலக்கணக் கூறும்,

தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப

என்பதால் (கிளவி. 28. 3,4) இடம் (person) என்ற இலக்கணக் கூறும் விளக்கப்பட்டிருக்கின்றன.

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்றல் ஆறே

என்னும் நூற்பாவில் (வினை. 28) முன்னிலை ஒழிந்த சொற்கள் மூன்றிடத்துக்கும் ஐந்து பாலுக்கும் பொதுவாக வரும் என்று சொல்வதால் இரண்டு இலக்கணக்கூறுகள் இடம்,பால் சேர்ந்து செயல்படுகின்றன என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது. வேற்றுமை பற்றியும் காலம் பற்றியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. திணை, பால் பற்றி இந்த இயல் விரிவாக ஆராயும்.

## 3.3 சொல்வகைப்பாடும் இலக்கணக்கூறுகளும்

தொல்காப்பியர் சொல்வகைப்பாட்டை இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் விளக்கியுள்ளது குறிப்பிடத்தகுந்தது. பெயர்ச்சொல்லை வேற்றுமை என்ற இலக்கணக்கூறு அடிப்படையிலும் வினைச்சொல்லைக் காலம் என்ற இலக்கணக்கூறு அடிப்படையிலும் தொல்காப்பியர் வருணித்துள்ளார்.

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப.

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே.

என்ற சூத்திரங்களால் (வேற்றுமை. 7,8) பெயர் என்ற சொல் வகைப்பாடு வேற்றுமை என்ற இலக்கணக்கூறை ஏற்று, காலம் என்ற இலக்கணக்கூறை வினையாலணையும் பெயர்கள் தவிர ஏனையவை ஏற்காது வரும் என்ற உண்மையைப் புலப்படுத்தியுள் ளார். அப்படியே (வினை. 1)

வினை யெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

என்ற சூத்திரத்தால் வினை என்ற சொல்வகைப்பாடு, காலம் என்ற இலக்கணக்கூறை ஏற்று வேற்றுமை என்ற இலக்கணக் கூறை ஏற்காது வரும் என்று விளக்கியுள்ளார்.

திணை, எண், பால், இடம் என்ற இலக்கணக் கூறுகள் சொற் களின் பாகுபாட்டுக்கு, அதாவது உட்பிரிவுக்குப் (sub classification) பயன்படுபவை. இவைகளில் திணை-பால் பாகுபாடு பற்றித் தொல் காப்பியர் விரிவாகவே கிளவியாக்கம், பெயரியல், வினையியல் ஆகிய மூன்று இயல்களிலும் வருணித்துள்ளார். எனவே, திணை-பால் பாகுபாடு (§3.4), அப்பாகுபாட்டின் அடிப்படை (§3.5), சொல்வகைப்பாடும் திணை பால் பாகுபாடும் (§3.6), பெயரியல், வினையியல் வருணனை முறை (§3.7), அங்கு காணப்படும் இந்தப் பாகுபாடு பற்றிய செய்திகள் (§3.8) ஆகியவை பற்றி இங்கு விளக்கப்படும்.

## 3.4 திணை - பால் பாகுபாட்டு முறை

தமிழில் திணை அடிப்படையில் உயர்திணை, அஃறிணை என்று இரண்டாகச் சொற்கள் பிரிக்கப்படுகின்றன. அந்த இரண்டு திணைச்சொற்களை மீண்டும் ஐந்து பாலாகப் பிரிப்பார்கள். திணையின் உட்பிரிவாகவே பால் அமைந்துள்ளது. இதைத்தான் சேனாவரையர் 'திணை உணராக்கால் அதன் உட்பகுதியாகிய பால் உணர்தல் ஆகாமையின்' (கிளவி. 11) எனவும் தெய்வச் சிலையார் 'பால் எனவே திணையும் அடங்கும்' (பெயர். 18) என் றும் கூறியுள்ளார்கள். எனவே அவை திணை-பால் என்று இங்கு பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

திணை-பால் எண்ணிக்கையில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. திணையைப் பாலாகப் பிரிக்கும் முறையில் - சிறப்பாக

உயர்திணையைப் பிரிக்கும் முறையில்தான் தொல்காப்பிய உரையாசியர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அது மொழி அமைப்பைச் சரியான முறையில் விளக்கப் பயன்படுவதால் மொழியியல் நோக்கில் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

தொல்காப்பியர் உயர்திணையை மூன்று பாலாகப் பிரிக்கலாம் என்பதை (கிளவி.2)

> ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
> பல்லோர் அறியுஞ் சொல்லொடு சிவணி
> அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே

என்ற நூற்பாவால் விளக்கியுள்ளார். இதை இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஒரு வகையாகவும் தெய்வச்சிலையார் மற்றொரு வகையாகவும் பிரித்து விளக்கியுள்ளார்கள். முன்னதை இளம்பூரணர் முறை என்று முதல் உரையாசிரியர் பெயரால் அழைக்கலாம். பின்னதைத் தெய்வச்சிலையார் முறை என்று பெயரிடலாம்.

### 3.4.1 இளம்பூரணர் முறை

> ஆடூஉவினை அறியுஞ்சொல்லும் மகடூஉவினை அறியுஞ்
> சொல்லும் பல்லோர் அறியுஞ் சொல்லோடு பொருந்தி
> அம்முப்பாலை அறிவிக்குஞ்சொல் உயர்திணை உடையன

என்பது இளம்பூரணர் பொழிப்புரை. சேனாவரையர் மேலும் சில விளக்கங்கள் கொடுத்திருப்பதைத் தவிர இந்தப் பாகுபாட்டைப் பற்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை. நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் இதே முறையைப் பின்பற்றியுள்ளார்கள். இந்தக் கருத்தைக் கீழ்க்கண்டவாறு வரைபட முறையில் விளக்கலாம். இப்படியேதான் இஸ்ரேலும் (1973:16; 1976:20) படம் வரைந்து காட்டியுள்ளார்.



அஃறிணைப் பால்பாகுபாட்டில் கருத்து வேறுபாடு இல்லாததால் அதுவும் இங்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தப் பாகுபாட்டில் 'எண்' என்ற இலக்கணக்கூறும் இருப்பதைச் சுப்பிரமணியசாஸ்திரி (1945:3) சுட்டிக்காட்டியுள்ளாரே தவிர அதையொட்டி எப்படிப் பிரிப்பது என்று விளக்கவில்லை. இஸ்ரேலும் (1976:20)

> இருவகை எண் வேறுபாட்டினைத் தொல்காப்பியனார் தெள்ளிதின் புலப்படுத்தியுள்ளார்;

என்று கூறி அதற்குக் கீழ்க்கண்டவாறு படமும் வரைந்து காட்டியுள்ளார்.




இங்கு எண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் திணைப் பாகுபாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டது. அதாவது 'எண்' என்ற இலக்கணக்கூறு தமிழில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது; அவ்வளவுதான். இதனால் 'எண்' திணை–பால் பாகுபாட்டில் எப்படி இணைந்து செயல்படுகிறது என்பது புலப்படுத்தப்படவில்லை. எனவே இந்தப் பாகுபாட்டில் சிறப்பு எதுவும் இல்லை.

### 3.4.2 தெய்வச்சிலையார் முறை

தெய்வச்சிலையார் மேலே குறிப்பிட்ட சூத்திரத்திற்கு எழுதிய பொழிப்புரையில் கருத்து மாற்றம் எதுவும் இல்லை. ஆனால் உரை விளக்கத்தில்,

> ஒன்று, இரண்டு, பலவென வடமொழிப் புலவர் கூறிய வாறுபோலப் பாகுபடும் வழக்கின்மையின் ஒன்று, பல வெனத் தமிழ்நடை இரண்டு பாலாம். அவற்றுள், உயர்திணை ஒருமை, ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல் என இரு முடிபுடைத்தாகலின் அச்சொற்கள் பலரறி சொல்லோடு கூடி மூன்று பாலாயின அல்லது பால் உள்ளன இரண்டு என்பது அறிவித்தற்கு எனக் கொள்க;

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு உயர்திணை ஒருமை என்று பிரிவு உண்டாக்கி அதனையே ஆண், பெண் என்ற இரண்டு பிரிவாகச் செய்கிறார். அதாவது உயர்திணையை ஒருமை, பன்மை என்று முதலில் இரண்டாகப் பிரித்துப் பின்னரே ஒருமையை ஆண், பெண் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது பொருள். இந்தக் கருத்தை ஒட்டி அகத்தியலிங்கம் & சுந்தரம் (1969) கீழ்க்கண்டபடி படம் வரைந்து காட்டியுள்ளார்கள்.




தொல்காப்பியரும் உயர்திணைப் பெயர்களை வகைப்படுத்தும் போது, (பெயர். 12)

> அன்ன பிறவும் உயர்திணை மருங்கிற்
> பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
> என்ன பெயரும் அத்திணை யவ்வே

என்ற சூத்திரத்தில் உயர்திணை ஒருமை, உயர்திணைப்பன்மை என்ற பாகுபாட்டைப் பேசுவதும் அறியத்தகுந்தது. இதேபோல வினையியலிலும் (11) ஒரு சூத்திரம் உள்ளது.

இங்கு அதிகபட்சம் திணை, எண், பால் ஆகிய மூன்று இலக்கணக்கூறுகள் அமைந்துள்ளதைக் கவனிக்க வேண்டும். மேலும் உயர்திணையில் எண் அடிப்படையில் பிரித்துப் பால் பிரிவு செய்ததால் 'ஒருவர்' என்ற சொல்லையும் திணை-பாலுள் அடக்கமுடிந்தது. சில சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுக்குப் பொதுவாக வரும். அதாவது இரண்டு பிரிவுக்கும் வருவதோடு அந்தப் பிரிவின் வேறுபாட்டைக் காட்டாது இருக்கும். தமிழில் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் இருப்பது 'ஒருவர்' என்ற சொல். அது போலவே 'யார்' என்ற வினாச்சொல் பால்வேறுபாடோ எண்

வேறுபாடோ இல்லாமல் உயர்திணையில் எல்லாப் பாலுக்கும் வரும். இப்படிப்பட்ட பொதுச்சொற்களே பாகுபாட்டை நிர்ணயிக்க உதவுகின்றன.

தெய்வச்சிலையார் கருத்தை விளக்கும் முறையில் அமைந்துள்ள இரண்டு உண்மைகள் சுட்டிக்காட்டத்தக்கன: 1) இப்படிப் பிரிக்க வேண்டும் என்பதில் நாம் மேலே சொன்னது போல் மொழி அமைப்பைக் காரணம் காட்டாது தமிழ் இலக்கண அமைப்பைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு பொருளை மூன்றாகப் பிரித்தால் ஒருமை, இருமை, பன்மை என்ற இலக்கணப் பாகுபாடு ஏற்பட்டு விடும்; ஆனால், தமிழில் ஒருமை, பன்மை என்ற இலக்கணப் பாகுபாடுதான் உள்ளது; அதனால் அது பொருந்தாது என்பது அவருடைய கருத்து. இது அவ்வளவு சரியான–பொருத்தமான காரணம் இல்லை. ஆயினும் நாம் காட்டியபடி அது தமிழ் மொழி அமைப்பை ஒட்டிய பாகுபாடு ஆனதால் இன்று அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் அவருடைய பாகுபாடு சரியானது; அதற்கு அவர் கூறும் காரணந்தான் சரியானது அல்ல. இதனால்தானோ என்னவோ தெய்வச்சிலையாரின் உரைச்சிறப்பு இதுவரை உணரப்படாமல் போய்விட்டது. 2) சூத்திரத்தில் உள்ள 'சிவணி' என்ற சொல்லுக்குத் தெய்வச்சிலையார் கொள்ளும் இலக்கண விளக்கமே அவருடைய புதிய விளக்கத்துக்குக் காரணம். இளம்பூரணர், சேனாவரையர் போன்றோர் சிவணி (கிளவி. 2.2) என்பதை வினையெச்சமாகக் கொள்ளத் தெய்வச்சிலையார்

> 'சிவணி' என்பது வினையெச்சமன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது

என்று விளக்கியுள்ளார். இதன்படி பொழிப்புரையில்

> ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறியுஞ் சொல்லோடு கூடி அம் மூன்று கூற்றுச் சொல் உயர் திணையிடத்த

என்று விளக்குகிறார். ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்றும் ஒரு பிரிவாக அமையாமல் ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்து ஒரு பிரிவாகிப் பிறகு பலர்பாலோடு சேருகிறது. இது அண்மை உறுப்பு ஆய்வின் (immediate constituent analysis)

அடிப்படையாகும். தெய்வச்சிலையாரும் பூத்தொடை (எச்சம்.16) என்று கூறுவதே, அண்மை உறுப்பு என்ற கருத்தின் அடிவேராக உள்ளது.

> முற்பட இரண்டு பூவை எடுத்து ஒன்றாகக் கட்டும்; அதன் பின் அவ்விரண்டு, ஒன்றாகி நின்ற தொடை யோடே கூடப்பின்னும் ஒரு பூவை எடுத்துக் கட்டும். அதன் பின் அம் மூன்று பூவும் ஒன்றாகக் கட்டப்பட்ட தொடையோடே பின்னும் ஒரு பூவை எடுத்துக் கட்டும்

என்பதே அவர் வாசகம். பொதுவாக உம்மைத் தொகையாக வரும்போதுதான் மூன்றையும் ஒரே விதமாகப் பிணைக்கலாம். ஏனைய இடங்களில் இரண்டு சேர்த்த பிணையில்தான் மூன்றாவது சேரும்.

தெய்வச்சிலையார் உரையில் எண் என்ற இலக்கணக்கூறு திணை-பால் பாகுபாட்டில் அடங்கியிருப்பது சூசகமாகக் காட்டப் பட்டுள்ளது.

> தமிழில் எண்ணையும் பாலையும் ஒன்று சேர்த்து ஆண் பால், பெண்பால், ஒன்றன்பால், பலர்பால் பலவின்பால் என இலக்கண அறிஞர்கள் பகுத்தனர். எனினும் தமிழில் எண் பகுப்பு எனத் தனியாகக் காண வேண்டுவதில்லை எனக் கூறுவது தவறாகும்

என்று அகத்தியலிங்கம் (1979:151,) கூறுவதும் கவனிக்கத்தக்கது.

திணை-பால் பாகுபாட்டில் உயர்திணையில் திணை, எண், பால் என்ற மூன்று இலக்கணக் கூறுகள் அமைந்திருக்கின்றன, அதனால் உயர்திணையில் 'பால்' என்பது ஜென்டர் (gender) என்ற பொருளிலும், அஃறிணையில் திணை-எண் என்ற இரண்டு கூறே இருப்பதால்-எண் அடிப்படையில் பாகுபாடு அமைந்திருப் பதால் 'பால்' என்பதும் 'எண்'ணும் ஒரே பொருளிலும் உள்ளன. பொதுவாக 'பால்' என்பதற்குப் பாகுபாடு, பிரிவு என்பதே பொருள்.

## 3.5 பாகுபாட்டின் அடிப்படை

திணை-பால் பாகுபாடு எந்த அடிப்படையில் அமைந்தது என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். இதற்குப் பலவிதமான

விடைகள் இலக்கண உலகில் அளிக்கப்பட்டு வந்துள்ளன. எனவே அவற்றின் அடிப்படையைப் புரிந்து மதிப்பீடு செய்யவேண்டும்.

### 3.5.1 தொல்காப்பியர்

தொல்காப்பியர் உயர்திணையை மக்கட்சுட்டு என்றும், அஃறிணையை அவரலபிற 'அவரல்லாத பிற' என்றும் சுருக்கமாகக் குறிப்பிட்டிருப்பது உயிரியல் (biological) அடிப்படை என்றே கருத வேண்டியிருக்கிறது. அதாவது உலகில் மனிதன் தனி இனம் என்பதில் ஐயமில்லை. ஏனையவற்றைப் பல வகையாக உயிரியல் நிலையில் பகுக்கலாம் என்றாலும், மொழி அமைப்பில் அது தேவையற்றது என்று கருதியே அவர் குறிப்பிடவில்லை. எனவே உயிரியல் அடிப்படை என்றால் உயிரியல் முறையில் செய்யப்படும் பலவிதப் பாகுபாடுகளைக் குறித்தது அல்ல. தொல்காப்பியர் உயிரியல் உண்மைகளை ஓரளவு உணர்ந்தவர் என்பது மரபியலால் அறியலாம். இங்கு மொழி அமைப்பு முறைக்குத் தேவையான உயிரியல் உண்மையை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளார் அவர்.

### 3.5.2 இளம்பூரணர்

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியவர்கள் தரும் விளக்கத்தில் சமூக மதிப்பீடு (social values) அடிப்படையும் உயிரியல் அடிப்படையும் கலந்து காணப் படுகின்றன. இரண்டு அடிப்படைகளுக்கும் ஒவ்வொருவர் தரும் அழுத்தம் சிறிது வேறுபடுகிறது. நச்சினார்க்கினியர் உரையில் சமூக மதிப்பீட்டுக் கருத்து அதிகமாக அழுத்தம் பெற்றுள்ளது; ஏனையோரிடத்து இரண்டும் காணப்படுகின்றன.

> உயர்திணைச் சொல்லும் உயர்திணைப் பொருளும் அஃறிணைச் சொல்லும் அஃறிணை பொருளும் எனச் சொல்லும் பொருளும் அடங்கின. உலகத்தின் மக்கள் என்ற பொருளை உயர்திணை என்றது கூறுபாடின்மையின்; அஃறிணை கூறுபாடுடைமையின் அஃறிணை என்மனார் அவரல என்னாது பிற என்றான். அவை உயிருடையனவும் உயிரில்லனவும் இரண்டு கூற்றன என்றற்கு

என்ற இளம்பூரணர் வாசகம் உயிரியல் அடிப்படையை ஒத்துக் கொண்டு அஃறிணைக்கும் அதைப் பொருத்தி அஃறிணை உயி

ருடையன, உயிர் இல்லாதன என்று இரண்டு உட்பிரிவு உடையது என்று கூறுவதன் நுட்பம் சுட்டிக் காட்டத்தகுந்தது. மக்களில் உயிர் உடையது போலவே அஃறிணையிலும் உயிருடையன இருப்பதாலும் அதனால் சில பண்புகள் பொதுவாகக் காணப்படுவதாலும் விரவுத் திணை என்ற பாகுபாடு அமைக்க வேண்டியதாயிற்று. மேலும் உயர்திணைக்கும் அஃறிணையில் உயிருடையனவற்றுக்கும் பொதுவான சில இலக்கணப் பண்புகள் உண்டு. எனவேதான் மொழியியலாளர் உயிருடையனவற்றை உயிரி (animate) என்றும் உயிரில்லாதனவற்றை உயிரிலி (inanimate) என்றும் பெயர்ச் சொற்களைத் தமிழில் இன்னொரு வகையில் பாகுபாடு செய்வதும் உண்டு. (சண்முகம், 1971அ:20) உதாரணமாக ஏழாம் வேற்றுமை உருபாக உயிரிலிகள் 'இல்' என்பதையும் (மரம் என்பது உயிரிலி. இது 'இல்' வேற்றுமை உருபு ஏற்று மரத்தில் எனவரும். ஆனால் 'கிளி' என்ற உயிரி; இல் வேற்றுமை உருபுஏற்காது) உயிரிகள் 'பக்கல்', 'கண்' போன்றவற்றையும் ஏற்கும். எனவே இளம்பூரணர் குறிப்பிட்ட அஃறிணையின் உட்பிரிவு, இலக்கண நோக்கிலும் பொருள் உடையது. இத்தோடு இளம்பூரணர்,

> மக்கட்சுட்டே என்பது மக்கள் என்று வரைந்து சுட்டு
> தற்குக் காரணமாகிய தன்மை என்னும் ஒருவன்

என்று கூறும்போது மக்களுக்குள்ளே கொஞ்சம் உயர்வு தாழ்வு கற்பித்து, உயர்வுடையோரை உயர்திணை என்னும் போது சமூக மதிப்பீடு இலை மறை காயாகத்தான் புலப்படுத்தப்படுகிறது. இக்கருத்தை ஒத்துக் கொள்ளாதவர்கள் இருந்திருக்க வேண்டும் அதனால்தான்

> மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லிய
> வாறு என்பர் ஒரு திறத்தார்.,

என்று அவர்காலத்தில் நிலவி வந்த மற்றொரு கருத்தைக் குறிப்பிடுகிறார். இதன்படி திணைபாகுபாடு உயிரியல் அடிப்படையில் அமைந்தது என்பதே பொருள்.

## 5.3.2 சேனாவரையர்

சேனாவரையர் சமூக மதிப்பீட்டை வலியுறுத்திப் பேசினாலும் இந்தப் பாகுபாடு மொழி அமைப்பை ஒட்டியது என்றும் உணர்ந்திருக்கிறார் என்று அவர் உரையால் அறிய முடிகிறது.

> மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை. எனவே மக்களே ஆயினும் மக்கள் என்று சுட்டாது பொருள் என்று சுட்டியவழி உயர்திணை எனப்படாது என்பதாம்;

என்று கூறும்போது சமூக மதிப்பீட்டு உணர்வு தெளிவாகவே விளக்கப்பட்டுவிட்டது. அதாவது பேசுவோன் செய்யும் மதிப்பீடே திணைபாகுபாட்டுக்கு அடிப்படை ஆகிறது. ஆயினும்

> உயர்திணை என்பன தொல்லாசிரியர் குறியாகலான் ஆடூஉ, மகடூஉப் போல வழக்கொடு படுத்தும் பொருள் உணரலாகாமையின்

என்று குறிப்பிடும்போது இலக்கணக் கலைச்சொல்லாய் உலக வழக்கோடு சம்பந்தப்படாததாய் அமைந்தது என்ற கருத்தும் வெளிப்படுகிறது. எனவே சமூக மதிப்பீடு முழுவதும் பொருந்தாது; பொருத்திப் பார்க்கக் கூடாது என்ற உண்மையும் அவர் உணர்ந்திருக்கிறார் என்பதும் புலப்படுகிறது.

## 3.5.4 நச்சினார்க்கினியர்

> மக்கட்சுட்டு என்பதற்கு 'மக்களாகிய நன்கு மதிக்கப் படும் பொருள்' என்றும் உயர்திணை என்பதற்கு 'உயர்ந்த ஒழுக்கம்' என்றும் அஃறிணை என்பதற்கு 'அவ் வொழுக்கம் அல்லவாகிய ஒழுக்கம்'

என்றும் விளக்கியதோடு

> 'உயர்ந்த ஒழுக்கம்' என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி அதன் பயன் எய்துவிப்பத் தாமும் 'மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள்' என்று அச்சொற்குப் பொருள் கூறினார் என்று உணர்க; அவர் கூறிய உணர்ச்சி தோன்றத் தாமும் 'உயர்திணை' என்றே ஆளுதல் பற்றி

என்று உரை விளக்கம் தருவது சமூக மதிப்பீட்டைக் குறிப்பதாகவும் அதாவது மானிடத்தின் சிறப்புப் பேசுவதாயும் அமைந்திருக்கிறது.

கல்லாடனார் நச்சினார்க்கினியரைத் தழுவியே உரை எழுதியுள்ளார்.

### 3.5.5 தெய்வச்சிலையார்

> மக்களாவார் ஒரு நீர்மையர் அன்றி, ஆணும் பெண்ணும் அலியும் வடிவு வேற்றுமை உடையராகலின், அவரெல்லார் மாட்டும் பொதுவாகக் கிடக்கும் மக்கள் தன்மையைக் குறித்து மக்கள் இவர் என்னும் பொதுப் பொருண்மை உயர்திணை ஆவது என்பது அறிவித்தற்குச் சுட்டு என்றார்.

என்று சொல்லியுள்ளது உயிரியல் வேறுபாட்டிலும் ஒற்றுமையையே கவனிக்க வேண்டும் என்ற உயிரியல் அடிப்படைக்குக் கூடுதல் விளக்கும் ஆகும். மேலும் திணை என்பதற்கு நச்சினார்க்கினியர் கொண்ட பொருள் தவறு என்பதை மறைமுகமாக

> உயர்பொருள் என்னாது திணை என்றது என்னையெனின் அவ்வாறு ஆடல் வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறியென்று உணர்க;

என்ற விளக்கத்தால் கூறியுள்ளார். அடுத்த சூத்திர உரையில் 'ஆண், பெண், அலி, ஆண்பன்மை, பெண்பன்மை, அலிப்பன்மை, இவரெல்லாம் தொக்க பன்மை என்று உயர்திணையை ஏழு வகைப்படுத்தாமல், தொல்காப்பியர் ஆண், பெண், பலர் என்று மூன்று வகையே குறிப்பிடக் காரணம் என்ன? என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு பொதுமையாகவும் அந்தக் கேள்விக்கு நேரடியாகவும் பதில் சொல்லியுள்ளது பாகுபாட்டு அடிப்படைக்கு மொழி அமைப்பே காரணம் என்பதைத் தெளிவாக்கி விடுகிறார்.

> ஆண், பெண், அலி, ஆண்பன்மை, பெண்பன்மை, அலிப்பன்மை இவரெல்லாம் தொக்க பன்மையெனப் பல வகைப் படுமாலெனின் பொருள் நோக்கிக் கூறினார் அல்லர்; சொல் முடிபு மூவகையென்று கூறினார் என்க. என்னை? அலிப்பன்மை மகடூஉ அறி சொல்லானும் கூறப் படுதலானும் ஆண்பன்மையும் பெண்பன்மையும் எல்லாரும் தொக்க பன்மையும் 'வந்தார்' எனவே முடிதலானும் மூவகையாகி அடங்கிற்று என்க.[1]

---

1 தெய்வச்சிலையார் வாசகம் திருப்தியாக அமையவில்லை. 'அலிப் பன்மை மகடூஉ அறிசொல்லானும் கூறப்படுதலானும் ஆண் பன்மையும்...' என்பதில் இரண்டு குறைகள் உள்ளன.

(கருத்து சிறப்பு வாய்ந்தது என்பதற்காகத் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.) என்ற தெய்வச்சிலையார் கூற்றில் 'பொருள் நோக்கிக் கூறினாரல்லர்; சொல்முடிபு மூவகை என்று கூறினார்' என்ற பொதுமை சிறப்பு வாய்ந்தது. இதைத்தான் மொழியியலாளர் அமைப்பியல் நோக்கு (structural point of view) என்று அழைக்கிறார்கள். அலிப்பன்மை, பெண்பன்மை, ஆண்பன்மை எல்லோரும் சேர்ந்த பன்மை ஆகிய நான்கும் 'வந்தார்' என்று முடிவதால் ஒரேவித பன்மையாக-பலர்பாலாக அழைக்கப்படுகிறது. அப்படியே அலியும் வந்தாள் என்ற பெண் பாலாக முடிவுபெறும். எனவே

| | | | |
|---|---|---|---|
| 1. ஆண் | | — வந்தான் | I |
| 2. பெண் | } | — வந்தாள் | II |
| 3. அலி | | | |
| 4. ஆண்கள் | } | — வந்தார் | III |
| 5. பெண்கள் | | | |
| 6. அலிகள் | | | |
| 7. ஆண், பெண் | | | |

அலிகள் மூன்றும் தொக்கபன்மை

ஏழு பெயர்கள் மூன்று வகையான வினைமுற்றுக் கொண்டு முடிவதால் இந்தக் காரணம் கொண்டு உயர்திணை - ஆண், பெண், பலர் என்ற மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பது தெய்வச்சிலையார் கருத்து. இதே முறையில் உயர்திணை - அஃறிணை என்ற பிரிவிற்கும், உயர்திணை ஒருமை, உயர் திணைப் பன்மை என்ற பிரிவிற்கும், அஃறிணை ஒருமை அஃறி

---

முதலில் ஏழு பிரிவு (1) ஆண் ஒருமை,(2) பெண் ஒருமை, (3) அலி ஒருமை, (4)ஆண் பன்மை, (5) பெண் பன்மை, (6) அலிப்பன்மை, (7) இவரெல்லாம் தொக்க பன்மை என்று குறிப்பிட்டுவிட்டுப் பின்னால் நான்குவிதப் பன்மையை மட்டும் விதந்து பேசிவிட்டு அலி ஒருமை பற்றி ஒன்றும் விளக்கம் தரவில்லை. இரண்டாவதாக 'அலிப்பன்மை மகடூஉ அறி சொல்லானும் கூறப்படும்' என்பதும் தவறு; ஏனெனில் அலிப் பன்மையும் 'வந்தார்' என்றே முடியும் ஆகவே உரையைக் கீழ்க்கண்டவாறு செப்பம் செய்து அடிக்குறிப்பில் கொடுக்க வேண்டும்:

'அலி மகடூஉவறிசொல்லானும் கூறப்படுமாதலானும் அலிப் பன்மையும் ஆண் பன்மையும் ' என்று இருந்தால் தான் வாதப் பிரதி வாதங்கள் சரியாக அமையும்.

ணைப் பன்மை என்ற பிரிவிற்கும் காரணம் கூற முடியும் (பிற உதாரணங்களுக்கு § 3.8 பார்க்கவும்).

எனவே 'சொல் முடிபு நோக்கி' என்ற தெய்வச்சிலையார் கருத்து அமைப்பியல் நோக்கில் (structural point of view) அமைந்துள்ளது. இன்று மொழியியலார் எல்லாவிதமான பாகு பாட்டுக்கும் இதே கருத்தினை அடிப்படையான நோக்காகக் கொள்கிறார்கள். எனவே தெய்வச்சிலையார் திணை - பால் பாகுபாட்டுக்குக் கூறியது பொதுமை மிகுந்து பாராட்டுதற்கு உரியதாய் உள்ளது. ஆயினும் தமிழ் இலக்கண ஆராய்ச்சியில் தெய்வச்சிலையாரின் கருத்து, புரிந்துகொள்ளப்படாமல் புறக் கணிக்கப்பட்டுள்ளது என்பதையே தமிழ் இலக்கண ஆராய்ச்சி வரலாறு காட்டுகிறது.

## 3.5.6 கால்டுவெல்

கால்டுவெல் திணை-பால் பாகுபாட்டை வரலாற்று நோக்கில் இருந்து விளக்கம் தந்துள்ளார். தொல் திராவிடத்தில் பெயர்கள் திணை-பால் வேறுபாடு அற்றனவாக இருந்து பின்னரே ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாக வளர்ந்திருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். ஏனெனில் தெலுங்கில் ஒருமையில் பெண் பாலும் ஒன்றன்பாலும் ஒன்றாகவும் (ஒரேவித பதிலீடு பெயரை யும் (அதி), வினைமுற்று விகுதியையும் (உம். ஒச்சனதி — (அவள்) வந்தாள் / (அது) வந்தது) ஏற்று வரும்; பன்மையிலோ பெண் ஆணோடு சேர்ந்து பலர்பால் ஆகவும் ஏனையவை பலவின்பால் ஆகவும் அமையும். அதனால் தமிழில் உள்ள பாகுபாடு சிறப்பு வாய்ந்ததாகத் தோன்றியிருக்க வேண்டும். ஆகவே தமிழில் திணை - பால் பாகுபாடு தத்துவார்த்தமானது என்றும் அது திராவிடர்களின் அறிவு வளர்ச்சியைக் காட்டுவதாகவும் கால்டு வெல் (1875:220) சிறப்பித்துக் கூறியுள்ளார். கால்டுவெல் கருத் தை இலக்கண நோக்கில் தத்துவார்த்த நோக்கு (philosophic point of view) என்று கொள்ளலாம்.[2]

---

2 'This classification of nouns (i.e , tiṇai classification) though not so imaginative as that of the Indo-European and Semitic tongues is decidedly more philosophical; for the difference between rational beings and beings or things

கால்டுவெல் கருத்து 19-ஆம் நூற்றாண்டின் மொழியியல் உலகில் காணப்பட்ட கருத்தின் பிரதிபலிப்புதான். ஆனால் இன்று பழங்குடி மக்கள் எனக் கருதப்படுவோரின் மொழியை ஆராய்ந்த போது மொழி பேசுவோரின் நாகரிகப் பண்பாட்டு நிலைக்கும் மொழி அமைப்புக்கும் எந்தவித நேரடி உறவும் இல்லை என்பதைக் கண்டுகொண்டுவிட்டார்கள். ஆகையினால் இன்றைய மொழியியல் உலகில் மொழிஅமைப்புக்கும் அந்த மொழி பேசும் மக்களின் நாகரிகத்துக்கும் தொடர்பு இல்லை என்று கண்டு மொழியியல் நூலில் வற்புறுத்துகிறார்கள்.[3]

சுப்பிரமணிய சாஸ்திரி (1930) தொல்காப்பிய சொல்லதிகாரக் குறிப்பில் தெய்வச்சிலையார் உட்பட எல்லா உரையாசிரியர் கருத்தையும் விமர்சித்துக் குறிப்புரை எழுதி இருந்தாலும் ஆடூஉ அறிசொல் என்ற இரண்டாம் சூத்திர உரையில் தெய்வச்சிலையார் கூறும் சிறந்த கருத்தைக் குறிப்பிடாமல் போய்விட்டது அவருடைய விளக்கத்தின் சிறப்பைச் சாஸ்திரியார் உணரவில்லை என்பதையே காட்டுகிறது. எனவேதான் சாஸ்திரியார் 1934இல் தெய்வச்சிலையார் கருத்துக்கு மாறாக 'பொருள் அடிப்

---

which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes ...... The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation; for the masculine, feminine, and epicene suffixes which form the terminations of Dravidian high - caste nouns are properly fragments of pronouns.

கால்டுவெல் இங்கு திராவிடமொழி என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் ஆண், பெண், பலர்பால்கள் உயர்திணையாகக் கருதப்படுவது தெலுங்கு மொழியில் இல்லாமல் தமிழில் (மலையாளம், கன்னடம் ஆகியவற்றிலும்) காணப்படுவதால் தமிழ் மொழியிலுள்ள பாகுபாட்டுக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம்.

3 'There is absolutely no correlation between the different stages of cultural development through which societies have evolved and 'type of language' spoken by in these stages of cultural development'

Lyons, 1968 : 44

படையில் அமைந்தது' என்றும் குறிப்பிட்டுள்ளார் (1934:108).[4] இஸ்ரேலும் (1973:16) பொருள் அடிப்படையிலும், பகுத்தறிவு அடிப்படையிலும் திணை – பால் அமைந்தது என்று கருதுவது[5] கால்டுவெல் கருத்தின் பிரதிபலிப்பே ஆகும். திணை – பால் பாகு பாடு மொழி அமைப்பிலுள்ள வேறுபாட்டால் (அதாவது அமைப் பியல் நோக்கு) அமைந்தது என்று அகத்தியலிங்கம் & சுந்தரம் 1969இல் தெய்வச்சிலையார் கருத்தை ஒட்டி விளக்கியுள்ளார்கள்.

சமீபத்தில் சண்முகதாஸ் (1982) திணை பாகுபாடு சமண தத்துவ அடிப்படையில் அமைந்தது என்று கூறியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

3.5.7 சண்முகதாஸ்

> மக்களையும் ஏனையவற்றையும் வேறுபடுத்துவது உயிர் எனக் கொண்டால் தொல்காப்பியர் உயிரிகளை உயர் திணை என்றும், உயிரிலிகளை அஃறிணை என்றும், பாகுபடுத்தியுள்ளார் எனக்கூறலாம். ஆனால் உயிருடை யனவாகவுள்ள மிருகங்கள், பறவைகள், ஊர்வன தொல் காப்பியரால் உயர்திணையாகக் கொள்ளப்படவில்லை. தமிழ்மொழியிலே இவ்விலக்கண மரபு நன்கு வேரூன்றி விட்டது. இதனாலே காளை என்னுஞ் சொல் ஓடுதல் என்னுந் தொழிலைச் செய்யும் வினைச் சொல்லைப் பயனிலையாகக் கொள்வதென்றால் காளை ஓடினான்; காளை ஓடிற்று; என இருவகையான வாக்கியங்களை அமைக்க வேண்டியதாயிற்று.

சண்முகதாசின் (1982:46) இந்தக் கூற்று, திணை பாகுபாட்டின் அடிப்படையை விளக்கி அதை விமர்சித்திருக்கிறது எனலாம். இங்கு அவர் திணை – பால் பாகுபாட்டில் இரண்டுவித குறைகள்

---

4 'The pa:l or the gender and number in Tamil noun, are determined more from their meaning than from their ending'

சுப்பிரமணிய சாஸ்திரி, 1934 : 108

5 'This division of classes is not based on morphology of words but on semantics, i.e., this division is made from the point of view of the meaning of words only....... Tamil has a natural (or lexical) division of classes according to the reasoning faculty of beings and things'

இஸ்ரேல், 1973 : 16

இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்: 1) திணை – பால் பாகு பாடு குறை உடைய்து; 2) அதனால் வாக்கிய அமைப்பில் அதாவது வினைமுற்று விகுதியில் கொஞ்சம் சிக்கல் உள்ளது என்று நாம் பொதுமைப்படுத்தலாம். இவை எவ்வளவுதூரம் உண்மையானது என்று பார்க்கவேண்டும்.

திண்ண - பாகுபாடு குறை உடையது என்ற முதல் கருத்து அதன் அடிப்படையைத் தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற் பட்டது. ஏனெனில் உயர்திணை – அஃறிணையை மக்கள்/அவரல் லாத பிற என்று விளக்கியதை உயிரி/உயிரிலி என்று பொதுமைப் படுத்தியதே தவறு. மக்களை உயிரி என்று கூறியது மிகைபடக் கூறல் என்ற குற்றம் ஆகும். ஏனெனில் உயிரி என்பது மக்களை யும் பிற உயிரிகளையும் குறிக்கும். ஆகவே உயிரியின் ஒரு பகுதி யாகிய மக்களைக் குறிக்கும் உயர்திணையை உயிரி என்று பொதுமைப்படுத்துவது மிகைப்படக் கூறல் ஆகிவிடுகிறது. அது போல அஃறிணையை உயிரிலி என்பது குன்றக்கூறல் என்ற குற் றம் ஆகும். ஏனெனில் மக்கள் அல்லாத பிற அஃறிணை என்றால் உயிரியின் ஒரு பகுதியும் (மக்கள் அல்லாதவை) உயிரிலியும் அடங் கும். ஆகவே திணைக்கு அடிப்படை உயிரி/உயிரிலி என்ற சண்முக தாசின் கருதுகோள் தவறாக அமைந்து விட்டது. ஆனால் இன் னொரு இடத்தில் (பக் 48. அந்தக் கருத்து கீழே கொடுக்கப்பட் டுள்ளது) அவர் திணை் பாகுபாட்டைச் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறார்.

திணை பாகுபாட்டை அமைத்த முறையால் ஒரு சொல் இரண்டு பொருளைக் குறிக்கும்போது இரண்டு விதமாக வினை முற்று விகுதியைப் பயன்படுத்தவேண்டியிருக்கிறது என்பது இரண்டாவது கருத்து. இங்கு இலக்கியம் முதலாவதாகவும் இலக் கணம் இலக்கியத்திலிருந்து பெறப்படுகிற பொதுமை என்ற முறையில் இரண்டாவதாகவும் அமைவதற்குப் பதிலாக இலக் கணம் முதலானதாகவும், இலக்கியம் இரண்டாவதாகவும் கருதப்பட்டிருக்கிறது. மேலும் இலக்கணம் மொழிப் பயிற்சியை உருவாக்குவது போலக் கூறுவதும் தவறு. ஏனெனில் இலக்கியப் பயிற்சியின் அடிப்படையில் இலக்கணம் உருவாகிறதே தவிர, இலக்கணம் இலக்கியப் பயிற்சியை உருவாக்குவதில்லை. இந்தக்

கருத்தை இன்னொரு விதமாகவும் விளக்கலாம். மொழிப் பயிற்சியோ, வாக்கிய அமைப்போ சிறப்பாக மொழியோ இயற்கையாய் இருப்பது; அவைகளில் காணப்படும் ஒழுங்கை, அமைப்பு முறையைக் கண்டுபிடிப்பதே இலக்கணம். அது ஒருவருடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப அமைவது. எனவே இலக்கண மரபால் 'இரு வகையான வாக்கியங்களை அமைக்க வேண்டியுள்ளது' என்று அவர் கூறுவது இலக்கணத்திற்கு முதலிடமும், மொழி அமைப்புக்கு இரண்டாவது இடமும் தருவதால் பொருந்தாது போய்விடுகிறது.

தொல்காப்பியர் காளை போன்று வேறு பல பெயர்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் அமைந்து வினை முற்றால் திணை – பால் வேறுபடுவதை உணர்ந்ததினாலேயே விரவுத்திணை என்ற இன்னொரு பாகுபாடும் பெயரியலில் அமைத்துள்ளார். (அதுபற்றி அடுத்த இயலில் விரிவாக விளக்கப்படும்).

மேலே குறிப்பிட்டபடி உயிரியல் நோக்கிலும் மக்களைத் தனி இனமாகவே கருத முடியும். மனித இனம் உயிரியோடு, மூளை வளர்ச்சியும் நிமிர்ந்த தன்மையும் உடையது. ஏனைய உயிரிகள் மூளை வளர்ச்சி குன்றி குனிந்த தன்மையும் உடையவை. சண்முகதாஸ் உயிரியல் நோக்கில் அமையும் பாகுபாட்டைத் தவறாகப் புரிந்துகொண்டதாலும் இலக்கணம் மொழிப்பயிற்சியை உருவாக்குகிறது என்று கருதியதாலும்தான் அவருடைய கருத்து தவறாகப் போய்விட்டது.

சண்முகதாஸ் திணைப் பாகுபாட்டின் அடிப்படையை விளக்கியதோடு அதற்குரிய காரணம் என்ன என்ற கேள்வியையும் எழுப்பிச் சமண சமயத்தத்துவமே காரணம் என்று பதிலும் கூறியுள்ளார்.

> ஒரு காளையை உயர்திணை என்றும் மற்றைய காளையை அஃறிணை எனவும் செய்ததன் அடிப்படை என்ன?

(பக். 47) என்ற கேள்வியை எழுப்பிச் சமண சமயக் கருத்துகள் அடிப்படையில் மரபியலில் உயிரிகளின் பாகுபாடு விரிவாகக்கூறப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி,

> சமண சமயக் கோட்பாட்டினை எவ்வாறு தொல்காப்பி யர் தன்னுடைய மரபியற் சூத்திரங்களிலே குறிப்பிட்டுள் ளார் என்பதனை மேலும் வலியுறுத்த வேண்டியது அவ சியமில்லை எனக் கருதுகிறோம். அச்சமயக் கோட்பாட் டிலே நன்கு மனம் ஊன்றிய தொல்காப்பியர் திணைப் பாகுபாடு செய்யுமிடத்து உயிரிகளாகிய ஆறறிவு அற்ற விலங்குகளையும் வீடுபேறு அடையா நரகர், தேவரை யும் விலக்கி உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே என்று வகுத்துள்ளார். ஆகவே ஒரு காளை உயர்திணை யாகவும் மற்றைய காளை அஃறிணையாகவும் தமிழ் மொழியிலே கொள்ளுதற்கு அடிப்படையாக அமைந்தது சமய தத்துவமேயாகும் (பக். 48)

என்று முடிவு செய்துள்ளார். இங்கு சமணசமயக் கோட்பாடும் மொழி அமைப்பும் ஒத்துப்போகிறது. அப்படியிருக்கும் போது சமயக்கோட்பாடே அடிப்படை என்று எப்படிக் கூறுவது? மொழி அமைப்பில் வேறுபாடு இல்லாமல் இருந்து இலக்கணத்தில் வேறு படுத்தியிருந்தால் தான் சமயச் செல்வாக்கு என்று உறுதியாகக் கூறமுடியும். மொழி அமைப்பையே இலக்கண ஆசிரியர் உரு வாக்குகிறார் என்று தவறாகக் கருதியதால் அப்படி உருவாக்கு வதற்குச் சமயச் செல்வாக்குக் காரணம் என்று சண்முகதாஸ் கருதிவிட்டார். மொழி அமைப்பே இயல்பானது; இலக்கண ஆசிரி யர் உருவாக்காதது என்னும் போது சமயச் செல்வாக்குதான் இலக்கணத்தில் செய்யும் பாகுபாட்டுக்குக் காரணம் என்பதும் சிறப்பு இழந்து விடுகிறது.

இதுவரை திணை - பால் பாகுபாட்டுக்கு அடிப்படையாகக் கருதிய கருத்துகளை கீழ்க்கண்டபடி தொகுத்துச் சொல்லலாம்.

| | | |
|---|---|---|
| தொல். | – | உயிரியல் கூறு |
| இளம். | – | சமூக மதிப்பீடு, மரபு |
| தெய்வ. | – | மொழி அமைப்பு |
| கால்டுவெல் | – | தத்துவம், பொருள் |
| சண்முகதாஸ் | – | சமணசமயம் |

இன்று மொழி அமைப்பிலுள்ள வேறுபாட்டை ஒட்டிய பாகு பாடே (தெய்வச்சிலையாரின் கருத்தை ஒட்டியது) சிறப்பானதா கக் கருதப்படுகிறது.

திணை – பால் பாகுபாட்டுக்கு மொழி அமைப்பை ஒட்டிய காரணங்கள் தொல்காப்பியத்திலேயே சிதறிக் கிடக்கின்றன என்பது மொழியியல் நோக்கில் பார்க்கும் போது புலனாகிறது. எனவே அவற்றைத் தொகுத்துப் பார்த்தால் பாகுபாட்டுக்கான காரணங்கள் கிடைத்துவிடும்.

### 3.5.8 தொல்காப்பியச் சான்றுகள்

சொற்களை உயர்திணை, அஃறிணை என்று பிரிப்பதற்கு யார்/எவன் என்ற வினாச் சொற்கள் காரணமாகக் கருதலாம். 'யார்' என்ற கேள்வியை ஏற்பவை உயர்திணை என்றும், 'எவன்' என்ற கேள்வியை ஏற்பவை அஃறிணை என்றும் பிரிக்கலாம். எனவே தொல்காப்பியர் வினையியலில் 'யார்' என்பது உயர் திணை மூன்று பாலுக்கும் பொதுவானது (சூ. 13); 'எவன்' என்பது அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவானது (சூ. 22); என்று கூறியதைத் திணைப் பாகுபாட்டின் அடிப்படையாகக் கொள்ளலாம்.

யாஅர் என்னும் வினாவின் கிளவி,
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப 'எவன்' என் வினாவே

இங்கு இரண்டு உண்மைகளை வற்புறுத்த வேண்டும். ஒன்று: மொழி அமைப்பு. இலக்கண உண்மை என்பது அந்த மொழிக்குள் பொதுவாகவோ சிறப்பாகவோ அமையும் பிரயோகத்தை ஒட்டியதாக அமைவது ஆகும். அதன்படி உயர்திணை/அஃறிணை வேறுபாட்டுக்கு வினாச் சொற்கள் உதவுவது அகநிலையிலேயே சான்று கிடைத்துவிட்டது என்று பொருள். இரண்டு: சொற்களையோ, விகுதிகளையோ பலவிதமாகப் பாகுபடுத்த முடியுமானாலும் அந்தப் பாகுபாட்டுக்குள் அடங்காது இரண்டு மூன்று பிரிவுகளுக்குப் பொதுவானவையாகவும் சில இருக்கக் கூடும். அப்படிப் பொதுவாக இருப்பவையே பலபடியான பாகுபாட்டுக்கு உதவும். யார்/எவன் என்பவை பொதுவாக வரும் சொல்லாகும்.

உயர்திணையை ஒருமை/பன்மை என்று இரண்டாகப் பிரிப்பதற்குத் தமிழில் ஒருவர்/பலர் என்ற வேறுபாடே காரணம் ஆகும். தமிழில் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு இருந்

தாலும் ஆண்பால், பெண்பால் இரண்டுக்கும் பொதுவாக 'ஒருவர்' என்ற சொல் இருப்பதே உயர்திணையை இரண்டாகப் பிரிப்பதற்குக் காரணமே தவிர ஒருமை, பன்மை எண் வேறுபாடு இருப்பது அல்ல. தொல்காப்பியர் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக 'ஒருவர்' வரும் என்பதை (பெயர். 37)

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒருவர் என்பது சிறப்பு ஒருமைச் சொல். மேலும் அது பன்மை வினைமுற்று கொண்டு முடியும் (ஒருவர் வந்தார்). எனவே ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக இருந்தாலும் பொருள் வேறுபாடும் (சிறப்பு ஒருமை) தொடரியல் வேறுபாடும் (பலர்பால் வினை முற்றைக் கொண்டு முடிவது) இருப்பதையும் மறந்துவிடக் கூடாது.[6]

உயர்திணை ஒருமையை ஆண்/பெண் என்ற இரண்டாகப் பிரிப்பதற்கு அவன்/அவள் என்று வரும் பதிலீடு பெயர்களும் வினைமுற்று விகுதியாக அன்/அள் என்ற விகுதிகளும் காரணமாக அமையும். பலர்பால் பற்றித் தெய்வச்சிலையார் வாதம் மேலே குறிப்பிடப்பட்டது. அவர் குறிப்பிட்ட வினைமுற்று விகுதியோடு 'அவர்' என்ற ஒரு பதிலீடு பெயர் இருப்பதும் சுட்டிக்காட்டத்தகுந்தது. அஃறிணையை ஒன்று/பல என்ற இரண்டாகப் பாகுபாடு செய்வது அது/அவை என்ற பதிலீடு பெயர்களில் உள்ள வித்தியாசத்தையும் வினைமுற்றில் (வந்தது) அது/அன (வந்தன) என்று வரும் விகுதி வேறுபாட்டையும் ஒட்டியது. எனவே திணையில் பாகுபாடு முழுமைக்கும் மொழி அமைப்பில் உள்ள வேறுபாடே முக்கியக் காரணம் ஆகும். இவற்றில் உயர்திணை/அஃறிணைப் பாகுபாட்டுக்கும் உயர்திணை ஒருமை/பன்மைப் பிரிவுக்கும் தொல்காப்பியத்திலே நேரடியாகவே சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றவற்றிற்குத் தொல்காப்பிய வருணணையிலிருந்து நாம் சான்றுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

---

6 இந்தக் கருத்தை ஒரு உரையாடலின் போது கூறிய பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களுக்கு என் நன்றி உரியது.

## 3.6 திணைபால் பாகுபாடும் சொல்வகைப்பாடும்

தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் திணைப்பாகுபாடு எல்லா வகைச் சொல்லுக்கும் பொருந்துவது போல (கிளவி 1.3) ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே என்று பொதுவாகச் 'சொல்' என்று குறிப்பிட்டிருக்கிறார். சேனாவரையர் இந்த வரியைச் சொல்லின் பொது இலக்கணம் உணர்த்தும் வரியாக நினைக்கிறார் என்பது பெயரியல் முதற் சூத்திர உரையால் புலப்படுகிறது. எனவே அவர் திணைப் பாகுபாட்டோடு தொடர்பு இல்லாததாய் நினைத்ததால் சொல்லே என்று பொதுவாகக் கூறியதன் சிறப்புப் பற்றிக் கவலைப்படவில்லை. நச்சினார்க் கினியரும் சேனாவரையர் கருத்தை ஒத்துக் கொண்டுவிட்டதால் அவருக்கும் பிரச்சனை இல்லாமல் போய்விட்டது. தெய்வச் சிலையார் பெயரியல் சூத்திரத்தோடு தொடர்பு உடையதாக நினைக்காவிட்டாலும் 'சொல்லே' என்று பொதுவாகக் கூறிய தைப் பற்றி எந்த விளக்கமும் தராமல் போய்விட்டார்.

'சொல்' என்று பொதுவாகச் சொன்னதால் எல்லாச் சொல் லுக்கும் பொருந்தும் ஒரு இலக்கணக் கூறா என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது. ஆனால் நூல் முழுமையும் பார்க்கிறபோது பெயர், வினை என்ற இரண்டு வகைக்கு மட்டுமே பொருந்து வதாகத் தொல்காப்பியர் கருதியிருக்கிறார் என்பதை

வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்

என்ற கிளவியாக்கச் சூத்திரமும் (11) பெயரியலையும் வினையிய லையும் திணை–பாகுபாட்டு அடிப்படையில் வருணிப்பதும் புலப் படுத்தும். அப்படியானால் முதல் சூத்திரத்தில் 'சொல்' என்று பொதுவாகக் குறிப்பிடுவானேன் என்ற இன்னொரு கேள்வி எழுகிறது.

தொல்காப்பியர் பெயரியலில் (4)

சொல்லெனப் படுப பெயரே, வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்தி னோரே

என்பதே 'சொல்' என்று கூறியிருப்பதைக் கொண்டு இந்தச் சிறப்புப் பொருளில், கிளவியாக்க முதற்சூத்திரத்திலும் கையாண்

டிருப்பதாகக் கொண்டு சமாதானம் அடையலாம் ஆனால் இதைக் கவனிக்கத் தவறிவிட்டதால் தான் நன்னூலார் சொல்லின் பொது இலக்கணமாகத் திணையையும் பாலையும் சேர்த்து விட்டாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.[7] எப்படியாயினும் தொல்காப்பியர் 'சொல்லே' (கிளவி. 1.3) என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் திணை பாகுபாடு பெயரிலும் வினையிலும் மட்டுமே காணப்படுவதாகத் தொல்காப்பியர் கூறுவதாலும் அந்த இரண்டுவகைச் சொல்லுக்கு மட்டுமே அதுஉரியதாகக்கொள்ளவேண்டும். அடுத்து, பெயரும் வினையும் எப்படித் திணைபால் உணர்த்துகிறது என்று அறிந்து 'கொண்டால்தான் அந்த இரண்டு சொல் வகைப்பாட்டிலும் எந்தச் சொல்வகைப் பாட்டுக்குச் சிறப்பாக உரியது என்று நிர்ணயிக்க முடியும்.

## 3.61 பெயரும் வினையும் திணை-பால் உணர்த்தும் முறை

தொல்காப்பியர் பெயரும் வினையும் வேறு வேறு விதமாகத் திணை-பால் உணர்த்துகிறது என்பதை அறிந்துள்ளார். வினைச் சொற்கள் வினை முற்றில் வரும் இறுதி விகுதியால் திணை-பால் உணர்த்துகிறது என்பதை வினை-விகுதிகள் இறுதியில் வரும் என்பதால் கூறியுள்ளார் (கிளவி. 10)

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றுநின்று இசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே

என்பதே அந்தச் சூத்திரம்.

பெயர்ச் சொற்களில் முழுச்சொல்லுமே பால் உணர்த்துவதாக அமைகிறது. இதைத் தெய்வச்சிலையார் 'பெயர்களுள் அவ்வப் பாற்குரிய பெயரைப் பாலறி கிளவியாகக் கொள்க' (பெயர். 7) என்று கூறியுள்ளார். இந்தக் கருத்தே (பெயர். 7)

7 ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே'

என்ற நன்னூல்சொல்லதிகாரத்தின் இரண்டாவது சூத்திரத்தில் (259) சொல்லின் பொது இலக்கணமாக 'இருதிணை ஐம்பாற் பொருள்' என்பது சொல்லின் பொதுப்பண்பாகப் பேசப்பட்டுள்ளது.

> இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
> உரியவை உரிய பெயர் வயினான

என்ற சூத்திரத்தால் குறிப்பிடப்படுகிறது. (விளக்கத்துக்குச் சண்முகம், 1982 ஆ பார்க்கவும்.)

## 3.6 2 சிறப்புடைய சொல் வகைப்பாடு

வினையும் பெயரும் திணை-பால் உணர்த்தும் முறையும் வேறுபட்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே அடுத்த கேள்வி: பெயர், வினை இரண்டிலும் திணை-பால் பாகுபாடு எதில் அடிப்படையானது, எதில் துணை நிலையானது என்பதுதான். உரையாசிரியர்கள் எல்லோரும் வினையே சிறப்புடையது என்று கூறுவதன்மூலம் வினையில் தோன்றும் பாலறிகிளவி அடிப்படையானது என்று கருதியதாகக்கொள்ளலாம்.

### 3.6.2.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் வினையில் தோன்றும் பாலறி கிளவியும் என்ற கிளவியாக்கச் சூத்திரத்திலும் (11.1) போன பிரிவில் குறிப்பிட்ட பெயரியல் சூத்திரத்திலும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இளம்பூரணர் (பெயர்.7)

> அவன், பெண்மகன், சாத்தன் என னகார ஈறு ஆடூஉ விற்கும் மகடூஉவிற்கும் அஃறிணை ஆண்பாற்கும் உரித்தாய் வருதலானும் ... வினைச் சொற்கள் போல இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து என்னப் பெயர்ச்சொல் ஈறு பற்றி உணர்த்தலாகாமையின்

என்று கூறுவது பெயரும் வினையும் பால் உணர்த்தும் முறையில் உள்ள வேறுபாட்டை எதிர்மறை நிலையில் கூறியதாகும். அதாவது நாம் மேலே குறிப்பிட்டபடி பெயரும் வினையும் வெவ்வேறு வகையாகப் பால் உணர்த்துகிறது என்று குறிப்பிடாமல் வினை போலப் பெயர் பால் காட்டவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

சேனாவரையர் இளம்பூரணருடைய இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டதோடு 'இருதிணை மருங்கின் ஐம்பாலறிய' (கிளவி. 10) உன்ற சூத்திர உரையில்

> பெயரோடு வருவழித் திரிபின்றிப் பால் விளங்காமையின் வினையொடு வரும்

என்று விளக்கும்போது பெயர்க்கு விகுதி சொல்லாததற்குக் காரணம் கூறினாலும் இரண்டுக்குமுள்ள வேறுபாடு உணர்த்தப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தெய்வச்சிலையார் 'வினையில் தோன்றும் பாலறி கிளவி' (சூத்.11) என்ற சூத்திர உரையில்,

> திரிபின்றிப் பால் உணர்த்துவது வினையாதலின் சிறப்பு நோக்கி முற்கூறினார்

என்று விளக்கும்போது மதிப்பீடும் செய்து விட்டார் எனலாம். இங்குத் தெய்வச்சிலையார் சூத்திரத்தின் முதலில் 'வினை' என்று உள்ளதற்குக் கூறிய விளக்கமாக அமைந்தாலும் இலக்கண உலகில் வினையே பால் உணர்த்துவதில் சிறப்புடையது என்ற கருத்தின் பிரதிபலிப்பாகவே இதைக் கொள்ளலாம்.

### 3.6.2.2 மொழியியல் நோக்கில்

வினை சிறப்பாகத் திணை - பால் காட்டுகிறது என்பது வினைமுற்றில் வரும் விகுதியால் உணர்த்துகிறது என்று பொருள் படும். அதுவும் கேட்போன் நோக்கில் மட்டுமே உண்மை. அதாவது பேசுவோன் முன்னரே பெயர்ச்சொல் என்ன பால் உணர்த்துகிறது என்பதை முடிவுசெய்து அதற்கேற்ப விகுதியைப் பயன்படுத்துவதாலேயே கேட்போன் வினை மூலம் திணை - பாலை உணர்ந்து கொள்கிறான். இங்குகூட ஒரு பிரச்சனை இருக்கிறது. உதாரணமாகத் 'தந்தை' என்ற சொல் ஆண்பாலுக்கு உரியது என்று எல்லோரும் அறிவோம். 'தந்தை வந்தாள்' என்ற வாக்கியத்தை ஒருவன் பயன்படுத்தினால் கேட்போன் வினைமுற்றைக் கொண்டு பெண்பால் என்று உணர்ந்துகொள்வானா? தந்தை என்பது ஆண்பால் என்று தெரியுமாதலால் ஆண்பாலுக்குரியது என்று கொண்டு பேசுவோன் தவறான விகுதியைக் கையாண்டு விட்டான் என்று கருதுவானா? என்பது ஆராய்வதற்கு உரியது.

பால் தெரியாத அல்லது இரண்டு பாலுக்கும் உரிய பெயர்ச் சொல்லைப் பயன்படுத்தும்போது பேசுவோன் என்ன பால்

என்று கருதுகிறான் என்ற உண்மையே வினைமுற்றின் மூலம் வெளிப்படும். எனவே வினைமுற்று திணை-பால் உணர்த்துகிறது என்பது பேசுவோன் என்ன பால் என்று உணர்ந்திருக்கிறான் என்பதன் புறநிலை வெளிப்பாடே ஆகும். நச்சினார்க்கினியர் வினையியலில் (சூத். 25)

> அவ்விரவுத் தொழிலைக் கூறுகின்றவன் அதனை நிகழ்த்திய வினை முதல் உயர்திணை, அஃறிணை என்பது உணர்ந்தே கூறுமாயினும் பால் காட்டும் ஈறு இன்மை காரணத்தாற் கேட்டோர் உணர்வு இரு திணை வினை முதல் சேறலான்

என்று விளக்கம் தந்திருப்பது இந்த உண்மையைத் தெளிவு படுத்தும். ஆகவேதான் வினைமுற்றில் வரும் திணை-பால் விகுதி புறநிலையானது; அடிப்படையானது அல்ல என்று கருத வேண்டியிருக்கிறது. இதற்கு ஆதாரமாக உலகமொழிகள் பலவற்றில் (உதாரணம்: மலையாளம், ஆங்கிலம் முதலியவை) வினைமுற்றில் திணை பால் விகுதி இல்லாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டலாம். இந்தக் கருத்தை மொழியியலார் தெளிவுபடுத்தியுள்ளதற்கு உதாரணமாக அகத்தியலிங்கத்தின் (1979:152) கூற்று எடுத்துக்காட்டத்தகுந்தது.

> இப் பகுப்புகளுக்கு (எண்-பால் பகுப்பு) அடிப்படையே பெயர்ச் சொற்கள்தாம். பெயர்ச் சொற்களில் காணப்படும் எண்-பால் பகுப்பே அடிப்படையானது. எனவே தான் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை என்றும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால் என்றும் பகுப்பர் இலக்கண அறிஞர்கள். வினைச் சொல்லில் காணப்படும் எண், பால் பகுப்பு இவற்றின் சாயலேயன்றித் தனியான ஒரு கூறன்று. புறநிலையே (surface phenomenon) அன்றிப் புதை நிலை (deep) யன்று

என்று தெளிவாகப் பெயர்ச்சொல்லில் உள்ள திணை-பால் பாகுபாடே அடிப்படையானது என்பதைப் புலப்படுத்திவிட்டார். மேலே நாம் முதல் சூத்திரத்தில் உள்ள 'சொல்' என்பதற்குப் பெயரும் வினையும் என்று கொள்ளவேண்டும் என்பதற்குச் சில சான்றுகள் காட்டினோம். இந்தக் கருத்து நோக்கில் பார்க்கிற போது தொல்காப்பியர் கருத்தாகப் பெயருக்கும் வினைக்கும்

உரியது என்று நாம் கூறியதை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதாகிறது.

### 3.6.2.3 தொல்காப்பியச் சான்று

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் முதல் மூன்று சூத்திரங்களில் பொதுவாகத் திணை-பால் பாகுபாடு பற்றி வருணித்து விட்டு நான்காம் சூத்திரத்தில்

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந் தம்தமக்கிலவே
உயர்திணை மருங்கில் பால்பிரிந் திசைக்கும்

என்று சில பெயர்ச்சொற்களின் திணை – பால் பாகுபாடு பற்றிக் குறிப்பிட்டு விட்டுத்தான் அடுத்து ஐந்து சூத்திரங்களில் வினை முற்றில் வரும் விகுதிகளை வருணித்துள்ளார்.

ஆகவே தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தில் (கிளவி. 4) சில பெயர்ச் சொற்களின் திணை-பால் பாகுபாடு பேசுவதன் மூலம் முதல் மூன்று சூத்திரங்களும் பெயர்ச் சொற்களின் பாகுபாட்டுக்கு உரியது என்பதைச் சூசகமாகப் புலப்படுத்தியுள்ளார் என்று கொள்ளலாம்.

பெயர்ச் சொற்களிலும்கூடப் படர்க்கைச் சொற்களுக்கே (அவன், அவள்), திணை–பால் பாகுபாடு பொருந்தும்; தன்மை, முன்னிலைச் சொற்களுக்குப் பொருந்தாது. ஆயினும் தன்மைப் பெயர்களை உயர்திணையிலும் முன்னிலைப் பெயர்களை விரவுத் திணையிலும் தொல்காப்பியர் சேர்த்துள்ளதால் அவையும் திணை-பால் பாகுபாட்டில் அடங்குவதாகக் கருதிவிட்டாரா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இதற்குத் தன்மையும் முன்னிலையும் படர்க்கைச் சொற்களைக் கொண்டுமுடிவது ஒரு காரணமாக இருக்கலாம். (வந்தேன் அஞ்சல்) மணிமேகலை யான் (சிலம்பு. 15-33); (என்னாகுவை கொல்) நன்னுதல் நீயே (குறுந். (96-4); (வருந்தினை போலும) நீ மாதவி (கொடி)(சிலம்பு 13.51); ஆகிய இடங்களில் படர்க்கைப் பெயர்கள் தன்மை, முன்னிலைப் பெயர்களைக்கொண்டு முடிந்திருக்கின்றன. இப்படிப்பட்ட வழக்குகளை மனதில் கொண்டு தொல்காப்பியர் தன்மை, முன்

னிலைப் பெயர்களையும் திணை-பால் பாகுபாட்டில் அடக்கி விட்டாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

## 3. 7. பெயரியல்-வினையியல் வருணிக்கும் முறை

முன்னரே குறிப்பிட்டபடி பெயரியலிலும் வினையியலிலும் திணை-பால் பாகுபாடு பேசப்பட்டுள்ளது. இங்கு மூன்று முக்கியச் செய்திகள் குறிப்பிடத்தக்கவை: 1) பெயரியலும் வினையியலும் ஒரே மாதிரியாக வருணிக்கப்பட்டுள்ளமை; 2) திணை-பால் பாகுபாட்டில் புதிதாகச் சில சொற்களைச் சேர்த்துள்ளமை; 3) திணை எண்ணிக்கையை மாற்றியமை: அதாவது கிளவியாக்கத்தில் ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே என்று குறிப்பிட்டவர் இரண்டு இயல்களிலும், அம்மூவுருபின தோன்றலாறே (சூத். 160,121) என்று மூன்று வகையாகப் பிரித்தமை. மூன்றாவது செய்தி 'விரவுத்திணை' என்று அடுத்த இயலில் ஆராயப்படும். எனவே முதல் இரண்டு செய்திகளை மட்டும் இங்கு ஆராய்வோம்.

### 3.7.1 பெயரியல் - வினையியல் வருணனை ஒற்றுமை

தொல்காப்பியர் பெயர்ச்சொல்லை, மேலே குறிப்பிட்டபடி உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்று மூன்று வகைப் படுத்தி அந்தப்பாகுபாடுகளின் விளக்கமாகப் பெயரியலை முடித்து விட்டார். அப்படியே வினையியலிலும் உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்று பெயரியல் போல் வினைச் சொற்களையும் மூன்று வகையாகப் பாகுபடுத்தியதோடு அந்தப் பாகுபாடுகளின் விளக்கமாக 42 சூத்திரங்கள் அமைத்து விட்டு கால மயக்கம் பற்றிக் கடைசியில் ஒன்பது சூத்திரங்கள் செய்து வினையியலை முடித்துவிட்டார்.

### 3.7.2 குறை நிறைகள்

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன: 1) ஏன் வினையியலைப் பெயரியல் பாணியில் அமைத்தார்? 2) இரண்டும் ஒரே மாதிரி அமைத்ததால் ஏற்பட்ட குறை-நிறைகள் என்ன?. இவைகளுக்கு முன்னால் பெயரியலைத் திணை-பால் பாகுபாட்டின்

விளக்கமாக அமைத்ததன் வன்மை, மென்மைகளைத் தெரிந்து கொண்டால்தான் இந்தக் கேள்விகளுக்கு விடை புலப்படும்.

பெயர்ச் சொற்களின் திணை - பால் பாகுபாடு என்பது சொல்லின் முழுப்பகுதியினுடைய பாகுபாடாக அமைந்து விடுகிறது. எனவே பெயர்ச்சொல்லின் பட்டியலாகப் பெயரியல் வருணனை அமைந்துவிட்டது; சொல்லியல் பகுப்பு (திணை, பால் விகுதிகள்) காணப்படவில்லை. ஆயினும் பெயர்க்குரிய இலக்கணக் கூறான வேற்றுமை பற்றி வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்று மூன்று இயல்களில் விரிவாகவும் ஆழமாகவும் வருணிக்கப்பட்டுவிட்டது. அத்தோடு, பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அடையக்கூடிய வடிவ மாற்றங்கள் புணரியல், உருபு புணரியல் ஆகிய இரண்டு இயல்களில்-எழுத்ததிகாரத்தில் விளக்கமாகவும் சிறப்பாகவும் விவரிக்கப்பட்டுவிட்டன. எனவே பெயரியல் திணை - பால் பாகுபாட்டை மட்டும் வருணித்ததுப் பெரும்பாலும் குறைஇல்லாமல் போய்விட்டது.

வினைச் சொற்களின் இலக்கணம் எப்படி விவரிக்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம். படர்க்கையில் வரும் வினை விகுதிகளைச் சுருக்கமாக ஐந்து சூத்திரங்களில் கிளவியாக்கத்தில் வருணித்ததோடு சரி; வேறு செய்திகள் வேறு எந்த இடத்திலும் விளக்கப்படவில்லை. வினையியலில் வினை முற்றுக்களில் திணை-பால் விகுதிகளைப் பகுத்தும் எச்சங்களைப் பட்டியல் போட்டும் (சொல்லடுக்கு முறையிலும்) சில தொடரியல் உண்மைகளை விளக்கியும் சென்றுள்ளார். வினைப்பகுதி, பிறவினைப்பகுதி, காரண வினைப்பகுதி, காலவிகுதி, தொழிற் பெயர்விகுதி, ஆகியவை பேசப்படவே இல்லை. வினைக்குரிய இலக்கணக்கூறாகக் 'காலத்தை' விளக்கிவிட்டு அது பற்றிக் கூட ஒன்றும் கூறாமல் போய்விட்டது கொஞ்சம் ஆச்சரியமாகவே இருக்கிறது. எப்படியாயினும் வினையின் முழு இலக்கணமும் தொல்காப்பியத்தில் வருணிக்கப்படவில்லை. இந்தக் குறை ஏன் ஏற்பட்டது?

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் தொடரியலுக்குக் கொடுத்த முக்கியத்துவம் உருபனியலுக்குத் தரவில்லை என்பதாகப் பொதுவாகத் தொல்காப்பியச் சொல்லதிகாரம் பற்றிப் பேசப்படு

கிறது. (இது புற்றிய சில கருத்துகளுக்கு சண்முகம், 1980அ:11, 12 பார்க்கவும்). அதைவிடத் திணை – பால் பாகுபாடு ஒரு முக்கிய மான இலக்கணக்கூறு என்று நினைத்துவிட்டதும் வினைச்சொல் லை ஒரு அலகாகக் (unit) கருதிவிட்டதும் ஒரு காரணமாக இருக்கலாமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. திணை-பால் என்ற இலக்கணக் கூறு தமிழுக்குரிய சிறப்பான இலக்கணக் கூறு என்று தொல்காப்பியர் நினைத்தார் என்பதற்கு ஆதாரங்கள்: 1) சொல்லதிகாரத்தின் ஆரம்பத்தில் சொல்லின் பொது இலக் கணம், சொல்வகைப்பாடு முதலியனவற்றை வருணிக்காது அவை களைப் பெயரியலுக்குத் தள்ளிவிட்டு அந்த இடத்தில் திணை – பால்பாகுபாட்டைக் கூறியது: 2) அந்தத் திணை – பால் பாகு பாட்டையும் எல்லாச் சொல்லுக்கும் பொருந்துவது போல ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே (கிளவி. 1.3) என்று பொது வாகக் கூறியது; 3) பெயரியலையும் வினையியலையும் திணை பால் பாகுபாட்டை ஒட்டி வருணித்தது. 4) விளிமரபு வருணனை யையும் கூட இந்த முறையில் அமைத்தது. 5) திணை – பால் பாகுபாட்டில் அடங்காத தன்மை, முன்னிலைப் பெயர்களையும் இந்தப் பாகுபாட்டில் அடக்கியது. 6) 'விரவு வகை' என்பதை வேறு எதற்கும் அமைக்காமல் திணை - பால் பாகுபாட்டுக்கு மட்டும் அமைத்தது (இது பற்றிய முழு விளக்கத்துக்கு அடுத்த இயல்§ 45 பார்க்கவும்).

இதற்குத் தமிழ்மொழி அமைப்பை ஒட்டியகாரணம் இருக்க முடியாது என்றே எண்ண வேண்டியிருக்கிறது அப்படியானால் வேறு ஏதாவது புறக் காரணம் இருக்கலாமா என்று யோசிக்க வேண்டும். தொல்காப்பியர் தமிழ்மொழி அமைப்பை வருணித்தா லும் ஆங்காங்கே வடமொழி அமைப்பை மனதில் கொண்டு அதற் கும் தமிழ்மொழி அமைப்புக்கும் உள்ள ஒற்றுமை-வேற்றுமையை மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்; துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (களவியல் 1.4) அதாவது வடமொழி கந்தருவ திருமண முறையோடு களவு ஒத்தது என்றும்; அகத்தெழு வளியிசை அளபிற் கோடல் அந்தணர் மறைத்து அஃது இவண் நுவலாது (பிறப்பியல். 20) என்றும் (மூலாதாரத்திலிருந்து எழும் காற்றுக்கு மாத்திரை கூறுவது வேதத்தில் உள்ளது; அந்தமுறை இங்குச் சொல்லப்படவில்லை என்றும் வேறுபாட்டை கூறியுள்ள

செய்தி நினைவுபடுத்திக் கொள்ளத் தகுந்தது. மேலும் சில சூத் திரங்களில் வடமொழி பற்றிக் குறிப்பிடாவிட்டாலும் அவை வடமொழியை மனதில் கொண்டு எழுதப்பட்டன என்றே பலரும் நினைக்கிறார்கள். உதாரணமாக எழுத்ததிகாரத்தில் மூவளபு இசைத்தல் ஒரெழுத்து இன்றே என்ற சூத்திரம்(5) தமிழில் வட மொழியிலுள்ளதைப் போல மூன்று மாத்திரை உடைய எழுத்து இல்லை என்பதையே கூறுகிறது. அப்படியே உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா (எழுத்து. 60) என்பது வடமொழி போலத் தமிழில் சொல்லுக்கு முதலில் மெய் மயக்கம் இல்லை என்பதை யே தெரிவிக்கிறது. வேற்றுமையியலில் வேற்றுமை உருபுகளைக் கூறும் போது (2)

அவை தாம்
பெயர், ஐ, ஒடு, கு
இன், அது, கண், விளி என்னும் ஈற்ற

என்று வேற்றுமை உருபு இறுதியில் வரும் ('ஈற்ற') என்று கூறிய வர் மறுபடியும்

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப

என்று (வேற்றுமை. 7) கூறியது ஏன் என்ற கேள்வியை எழுப்பித் தெய்வச்சிலையார்

> மேலைச் சூத்திரத்து 'பெயர் ஐ, ஒடு... என்னும் ஈற்ற' என்பதனாற் பெறுதும் எனில், அது கருதி அன்று கூறி யது: வடமொழிக்கண் எழுவாயாகிய பெயர் ஈறுகெட்டு உருபு ஏற்கும்; அவ்வாறு அன்றித் தமிழ் மொழிக் கண் ஈறுதிரியாது எழுவாய் ஆகிய பெயரின் மேலே உருபு நிற்கும் என்பது அறிவித்தற்கு எனக்கொள்க;

என்று கூறும்போது இந்த உண்மை வலியுறுகிறது.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது வடமொழி யின் திணை-பால் பாகுபாடும் தமிழின் திணை-பால் பாகுபாடும் மாறுபடுவதால் இதைத் தமிழின் சிறப்புப் பண்பு என்று கருதி முதலில் கூறினாரா என்று எண்ண வேண்டியிருக்கிறது. வட மொழிப் பால்பாகுபாடு முழுவதும் இலக்கணக் கூறாகவே அமைந்

துள்ளது. சொற்பொருளுக்கும் அது உணர்த்தும் இலக்கண பாகு பாட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. அதனால்தான் மனைவியைக் குறிக்கும் தாரா (da:ra:) என்பது ஆண்பாலாகவும் பார்யா (bha:rya:) பெண்பாலாகவும் களத்தரம் (kaḷatram) அஃறிணையாகவும் கருதப்படுகிறது. தமிழிலோ மகன் என்ற சொல் ஆண்மகன் எனத் தொடரில் வந்தால் ஆண்பாலைக் குறிப்பதாக வும் பெண்மகன் என்ற தொடரில் வந்தால் பெண்பாலைக் குறிப் பதாகவும் கருதப்படுகிறது. தமிழுக்கும் வடமொழிக்கும் இலக் கணம் ஒன்று என்று கருதும் பிரயோக விவேகமும் (49.2)

> திணை - பால் உணர்த்தும் வினை விகுதி மாற்றருந்
> தெய்வ மொழிக்கு இல்லை

என்று வினை விகுதியில் மட்டும் உள்ள மாறுபாட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறது. கால்டுவெல் (1875: 49) வடமொழிக்கும் தமி ழுக்குமுள்ள முக்கிய வேறுபாடுகளில் திணை - பால் பாகுபாட் டைச் சிறப்பானதாக முதலில் குறித்துள்ளார். எனவே தொல் காப்பியர் திணை - பால் பாகுபாட்டைச் சொல்லதிகாரத்தின் முதலில் வருணித்ததற்கு வடமொழியிலிருந்து தமிழ் மாறுபடுவன வற்றுள் மிக முக்கியமான கூறாகக் கருதியதே காரணமாக இருக் கலாம்.[8]

இன்னொரு காரணமும் இருக்கலாமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. அது இலக்கண வருணனை உத்தியை ஒட்டியது. தொல்காப்பியருடைய வருணனையில் அமைப்பு அழகு புறநிலை யிலும் அகநிலையிலும் உண்டு. மூன்று அதிகாரமாகப் பகுத்து ஒவ்வொன்றையும் ஒன்பது-ஒன்பது இயலாகப் பிரித்து விளக்கு வது புறநிலை அமைப்பு அழகு ஆகும். அகநிலையில் புணர்ச்சியை வருணிக்கும் போது பொதுமை உண்டாக்க அவர் கடைப்பிடித்த சில இலக்கண உத்திகள் முன்னரே (சண்முகம், 1980அ: 233-34) விளக்கப்பட்டுள்ளன. அது போலச் சொல்லதிகாரத்தில், பெயரி லையும் வினையியலையும் ஒரே மாதிரியாக விவரித்தது இலக்கண வருணனையில் பொதுமையும் எளிமையும் ஏற்படுத்த நினைத் தாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் இது ஒரு

---

8 இப்படி நினைத்துப் பார்க்கலாம் என்று யோசனை சொன் னவர் பேராசிரியர் அகத்தியலிங்கம்.

இயலில் (பெயரியலில்) நிறைவையும் இன்னொரு இயலில் (வினையியலில்) குறைவையும் உண்டாக்கிவிட்டது. இப்படி ஒரு நிலைக்கோ சொல்வகைப்பாட்டுக்கோ சிறப்பாகப் பொருந்துகிற வருணனை முறையை-உத்தியை மற்றொன்றுக்கும் பொருத்திப் பார்த்ததில் வெற்றியும் தோல்வியும் ஏற்பட்டதை இருபதாம் நூற்றாண்டின் மொழியியல் வரலாற்றாலும் அறிய முடிகிறது.

ஒலி, மாற்றொலி, ஒலியன் என்று எழுத்தியலில் வருணித்த முறையைச் சொல்லியலுக்கும் நீட்டித்து அதற்கேற்ப உருபு மாற்றுருபு, உருபன் என்று வருணிக்கும் முறை உண்டாயிற்று. (Robins 1976: 18)[9] இது சிறப்பானதாக அமைந்துவிட்டது, அதே முறையை பைக் தொடரியலுக்கும் நீட்டித்து வருணிக்கும் முறை அவ்வளவு சிறப்பானதாகக் கருதப்படவில்லை. சுருங்கச் சொன்னால் சோதனையாகக் கருதப்படுகிறதே தவிரச் சாதனையாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. அப்படியே தொடரியலில் வெற்றி பெற்ற அண்மை உறுப்பு ஆய்வு (immediate constituent analysis) முறை, எழுத்தியலுக்கு-எழுத்து மயக்கம் (clustering) அசை (syllable) ஆகியவற்றை விளக்க ஹாக்கெட் (Hockett .1955) செய்த முயற்சி சிறப்பாகக் கருதப்படவில்லை எனவே இலக்கண ஆராய்ச்சியில் மட்டுமல்லாமல் பிறதுறை ஆராய்ச்சியிலும் காணப்படும் முறை என்று சமாதானம் அடையலாம்.

எனவே தொல்காப்பியர் திணை-பால் பாகுபாட்டை மிக முக்கியமான இலக்கணக் கூறாகக் கருதிவிட்டதும் வருணனை முறையில் பொதுமை கடைப்பிடிக்க முயன்றதும் இரண்டு இயல்களிலும் வருணனை ஒற்றுமை ஏற்பட வழி வகுத்திருக்க வேண்டும் என்று கருதவேண்டியிருக்கிறது. இதுவே வினையியல் அமைப்பை முழுமையாய் வருணிப்பதற்குத் தடையாய் அமைந்துவிட்டது.

---

9 'Among the structuralists in the 1940's morphological analysis was deliberately modelled on the admittedly better worked out methods of phonemic analysis'
Robins, 1976 : 28

## 3.8 வருணனையில் உள்ள பாகுபாடு

தொல்காப்பியர் யான், யாம், நாம் என்ற மூன்று தன்மைப் பெயர்களையும் (பெயர். 8.5) 'எல்லீரும்' என்ற முன்னிலை முழு மைப் பதிலீட்டுப் பெயரையும் (பெயர். 10.2) உயர்திணைக்கு உரி யதாகவும் 'எல்லாம்' என்பதை விரவுப் பெயராகவும் (பெயர்.10.3) பெயரியலில் சேர்த்துள்ளார். ஆனால் வினையியலில் தன்மை ஒருமை, பன்மை ஆகிய விகுதிகளை மட்டும் உயர்திணைக்கு உரியதாகக் குறிப்பிட்டு (வினை. 5, 6, 7, 11) முன்னிலை விகுதி களை விரவுத்திணைக்கு உரியதாக மட்டுமே விளக்கியுள்ளார். இந்த முரண்பாடு எப்படி ஏற்பட்டது என்பது ஒரு கேள்வி. இதற்கு முன்னால் தன்மைப் பெயர்களையும் வினைகளையும் உயர்திணையாகக் கொண்டதால் திணை-பால் பாகுபாட்டு அடிப் படை மாறாமல் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

### 3.8.1 தன்மை – உயர்திணை

சேனாவரையர்தான் (191 ஆம் சூத். உரை) முதன் முதலில் 'தன்மைப் பெயர்கள் பாலறி வந்த உயர் திணைப் பெயராக எப் படி அமைகிறது' என்ற கேள்வியை மனதில் எழுப்பிக் கொண்டு பதில் சொல்லியுள்ளார்.

> யான் என்பது ஒருவன், ஒருத்தியென்னும் பகுதி உணர்த் தாது ஆயினும் அத்திணை ஒருமை உணர்த்தலின் பாலறி வந்த பெயராம். அல்லதூஉம் பாலறி வந்தவெனப் பன்மை பற்றிக் கூறினார் எனினும் அமையும்

என்பதே அவருடைய வாசகம்.

இங்கு இரண்டு வகையான சமாதானம் மாற்று முறையில் உள்ளன என்பது தெளிவு. ஒன்று பிடிக்காவிட்டால் இன் னொன்று என்றுதான் இரண்டைக் குறிப்பிட்டிருக்கிறார். முதல் சமாதானம்: ஒருமை/பன்மை என்ற (எண்) வேறுபாடு உடையது என்பது. இங்கு 'பால்' என்ற சொல்லைப் பிரிவு பொதுப் பொருளில் கையாண்டுள்ளார் சேனாவரையர். யான் என்பதை உயர்திணை ஒருமைக்குரிய பொதுச்சொல்லாகக் கொண்டால் ஏனைய உயர் திணை ஒருமைச் சொல் (ஒருவர்) போல வினைமுற்றில் 'ஆர்' (வந் தார்) கொண்டு முடிய வேண்டும். ஆனால் அது அப்படி முடியாமல்

என்/ஏன் (வந்தனென்/வந்தேன்) கொண்டே முடிகிறது. ஆகவே இந்தச் சமாதானம் அவருக்கே முழுத் திருப்தியைத் தராததால் இரண்டாவது சமாதானத்தைக் கூறியுள்ளார்.

'பன்மை பற்றிக் கூறுதல்' என்பது பெரும்பான்மையான வழக்கு என்று பொருள் பதினைந்து பெயர்கள் உயர்திணைக்கு உரியவையாகக் கூறப்பட்டவற்றில் தன்மைப் பெயர்கள் மூன்று நீங்கிய ஏனைய பன்னிரண்டு பெயர்கள் பால் வேறுபாடு உடையன. எனவே அப்பதினைந்தும்; பாலறிவந்த உயர்திணைப் பெயரே (பெயர். 8.7, 8) என்றது பெரும்பான்மையான வழக்கு என்பது சேனாவரையர் வாதம் தொகுத்துப் பெயரிடும்போது தான் பெரும்பான்மை வழக்கு பற்றிப்பெயரிடலாம். பாகு படுத்தும்போது அந்த முறையைக் கையாளக்கூடாது. பாகுபாட்டில் சில சொற்கள் அடங்கவில்லை என்றால் புதிய பாகுபாடு செய்ய முயலவேண்டும் அல்லது இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்து அவைகளை உட்பிரிவுகளாக மறுபடியும் பிரிக்க வேண்டும் (தன்மைப்பெயர்கள் வேறு பெரும் பாகுபாட்டுக்கு உரியன என்பது பின்னால் விளக்கப்படும்). எனவே சேனாவரையரின் இரண்டு சமாதானமும் பொருத்தமாக அமையவில்லை.

நச்சினார்க்கினியரும் இந்தப் பிரச்சனையை நினைத்துப் பார்த்து விடைகாண முயற்சித்திருக்கிறார்.

> யான், யாம், நாம் என இருபாற்கும் பொதுவேனும்
> குறிப்பால் உணர்ந்துழி ஒருபால் உணர்த்தியே நிற்றலின்
> பால் அறிய வந்த உயர்திணைப் பெயராயிற்று

என்பது நச்சினார்க்கினியர் கூறும் சமாதானம். இங்கு நச்சினார்க்கினியர் கூறும் தன்மைப் பெயரின் பண்பும் (இருபாற்கும் பொது என்பது) அதற்குரிய காரணமும் (குறிப்பால் உணர்த்துவது) பொருத்தமாக இல்லை பொதுவாக உயர்திணைப் பெயர்கள் மூன்று பாலுக்கு (ஆண், பெண், பலர்) உரியவை. ஆனால் தன்மைப் பெயர்கள் இரண்டு பாலுக்கு (ஒருமை, பன்மை) மட்டும் பொது ஆகிறது. மேலும் அவற்றில் ஒருமை/பன்மை வேறுபாடு தெளிவாக உள்ளது. ஆகையினால் தன்மை 'இருபாற்கும் பொது' என்பது தவறாகி விடுகிறது. அடுத்து, குறிப்பால் பால் உணர்த்துவது என்பது விரவுத்திணைப் பெயர்களில் நீ, நீயிர், ஒருவர் என்ற

மூன்று சொற்கள்தான் (பெயர். 29). ஏனைய விரவுத்திணைச் சொற்கள் கூட தத்தம் வினையொடு பால் உணர்த்தும் (பெயர். 18). ஆனால் தன்மைப் பெயர்கள் வினையாலும் திணை-பால் உணர்த்தாது. உண்மையில் முன்னிலைப் பெயர்கள் போலவே தான் தன்மையும் செயல்படுகிறது. எனவே அவை விரவுத் திணைச் சொற்களில் ஒரு தனிப்பிரிவாக அமைகின்றன. ஆகவே நச்சினார்க்கினியர் வாதம் தன்மைப் பெயர்களை ஏன் உயர்தி ணையாகக் கருதவேண்டும் என்பதற்கு உதவி செய்யவில்லை.

தன்மைப் பெயர்கள் பால் உணர்த்தவில்லை என்ற மொழி அமைப்பின் உண்மையை ஒத்துக்கொண்டிருந்தால் அவை வேறு எந்தக் காரணத்தினால் உயர்திணையாக ஆகும் என்ற சிந்தனை பிறந்திருக்கும். அப்படிச் செய்யாமல் தொல்காப்பியர் கூறிய பாலறி வந்த உயர்திணைப் பெயரே (பெயர் 8.8) என்பதை வேத வாக்காகக் கொண்டு சமாதானம் கூற முற்பட்டதால்தான் அவர்களால் சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

மொழி என்பது அடிப்படையாக உரையாடலைக் குறிக்கும். அது பேசுவோர், கேட்போர், பிறர் அல்லது பிறபொருள் ஆகிய மூன்று கூறுகளை உடையது. இங்கு தன்மை என்பது பேசுவோ ரையும் முன்னிலை என்பது கேட்போரையும் படர்க்கை பிறரை யும் பிற பொருள்களையும் குறிக்கும் (Lyons, 1968 : 276).[10] இந்தக் கோணத்தில் பார்க்கும் போது பேசுவோரைக் குறிக்கும் தன்மைச் சொற்கள் பேசும் ஆற்றலை உடைய மக்களைக் குறிக் கின்றன. எனவேதான் தன்மைச் சொற்கள் உயர்திணையாகத் தொல்காப்பியரால் கருதப்பட்டன என்று நாம் விளக்கலாம். பேசுவோர் - கேட்போர் உறவு பின்வரும் குறுந்தொகைப் பாட லால் சிறப்பாக வெளிப்படுகிறது (96).

---

10 'The category of persons is clearly definable with reference to the notion of participant roles; the 'first' person is used by the speaker to refer to himself as subject of discourse; the 'second' person is used to refer to the hearer; and the 'third' person is used to refer to persons or things other than the speaker or hearer'
Lyons, 1968:276

அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யான் எவன் செய்கோ என்றி, யான் அது
நகையென உணரேன் ஆயின்
என்னா குவைகொல் நன்னுதல் நீயே.

இந்தப் பாடல் தலைவிக்கும் தோழிக்கும் இடையே நடைபெறும் உரையாடல் ஆகும். முதலில் வரும் 'யான்' என்பது தலைவியை யும் இரண்டாவது 'யான்' தோழியையும் 'நீ' என்பது தலைவி யையும் சுட்டுகின்றன. அதாவது பேசுவோர் 'யான்' என்றும் கேட்போர் 'நீ' என்றும் குறிக்கப்படுகிறார்கள். ஆயினும் தன்மையை உயர்திணையில் சேர்த்தது மூலம் உயர்திணை மொழி அமைப்பை ஒட்டியது – அதாவது பதிலீட்டுப் பெயர்களும் வினைமுற்று விகுதிகளும் அடிப்படையில் அமைந்தது என்று மேலே கூறிய கருத்துப் பொருந்தாமல் போய் உயிரியல் அடிப் படை என்பதே பொருந்துகிறது.

### 3.8.2 எல்லாம் – விரவுத்திணை

தொல்காப்பியர் எல்லாம் என்ற தன்மைப் பெயரை விரவுத் திணையாகக்(பெயர்.29.4) கருதியுள்ளமையும் குறிப்பிடப்பட்டது. இதற்குக் காரணம் 'எல்லாம்' என்பது அஃறிணைப் பன்மையாக வும் வருவதுதான். இது அவருடைய விரவுத்திணைக் கோட் பாட்டை ஒட்டியது. அது நியாயமானதுங் கூட (விளக்கத்துக்கு அடுத்த இயல் பார்க்கவும்).

### 3.8.3 முன்னிலை – விரவுத்திணை

முன்னிலைப் பெயர்களைப் பொறுத்தவரையில் தொல்காப் பியத்தில் ஒரு தடுமாற்றம் காணப்படுகிறது. நீ, நீயிர் என்ற முன்னிலை இடப்பெயர்களை (personal pronouns) விரவுத் திணையாகக் கருதிவிட்டு 'எல்லீரும்' என்ற முன்னிலை முழுமைப் பதிலீட்டுப் பெயரை (universal pronoun) மட்டும் உயர்திணை யாகக் கருதியுள்ளார். முதலில் இவற்றின் உட்கிடக்கையைப் புரிந்து கொண்டு மதிப்பீடு செய்ய முயலுவோம்.

முன்னிலை என்பது கேட்போரைக் குறிக்கும் என்று மேலே குறிப்பிட்டோம். முன்னிலை விரவுத்திணை என்றால் கேட்போர் மனிதராகவும் விலங்கு முதலியனவாகவும் கொள்ளவேண்டும்.

தொல்காப்பியர் திணைபாகுபாட்டின்படி பார்த்தால் மனிதருக்கு (உயர்திணைக்கு) பேசும் ஆற்றலும் கேட்கும் ஆற்றலும் உண்டு. விலங்கு முதலியனவற்றுக்குக் (அஃறிணைக்கு) கேட்கும் ஆற்றல் மட்டும் உண்டு என்று ஆகிறது. நாம் வீட்டில் வளர்க்கும் சில விலங்குகள் நாம் சொல்லும் சொற்கள் சிலவற்றைப் புரிந்து கொள்கின்றன என்பதற்காக முன்னிலையை விரவுத்திணையாகக் கருதி விட்டாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

### 3.8.4. எல்லீரும் – உயர்திணை

எல்லீரும் என்ற சொல்லை உயர்திணையில் அடக்கினால் நம்முடைய விளக்கம் (அதாவது விலங்கு போன்ற உயிரிகள் கேட்கக் கூடிய ஆற்றல் மட்டும் உடையதால் விரவுத் திணை) பொருந்தாது போய் விடுகிறது. விலங்குகள் கேட்கும் ஆற்றல் மட்டும் உடையன என்ற கருத்தும் பொருந்தாது. வினைமுற்றில் எல்லா முன்னிலைகளையும் விரவுத்திணையாகக் குறிப்பிட்டிருப்பதால் எழுவாய்க்கும் பயனிலைக்கும் திணை இயைபு (concordance) இல்லாமல் போய்விடுகிறது என்பதும் அறிந்துகொள்ளவேண்டும். ஆயினும் தொல்காப்பியரின் உட்கிடை என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ள முயலுவோம்.

எல்லீரும் என்பது முன்னிலைப் பன்மை முழுமையும் உணர்த்தும் பெயர். எனவே கூட்டமாகச் சேர்ந்து கேட்டுச் செயல்படும் ஆற்றல் மனிதருக்கே உண்டு; விலங்குகளுக்கு இல்லை. விலங்குகள் தங்களுக்குள் கலந்து செயல்படாதநிலை உடையது என்று தொல்காப்பியர் கருதி இதனை உயர்திணைக்குரியதாக மட்டும் கூறிவிட்டாரோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

### 3.8.5. உயிரிகள் விரவுத் திணையா

உயிரிகளை எந்த நிலையிலும் விரவுத்திணையாகச் சேர்ப்பதால் வேறுசில பிரச்சனைகள் எழும்புகின்றன. சில விலங்குகள் கேட்கும் ஆற்றல் உடையன என்பதற்காக முன்னிலை விரவுத் திணை என்றால் கிளி, பூவை முதுலியன பேசும் ஆற்றல் உடையன என்ற உண்மையையும் புறக்கணிக்கக் கூடாது.

இந்தக் கேள்வியை எழுப்பித் தெய்வச்சிலையார் (வினை. 19) குறிப்பிடுவதாவது:

கிளியும் பூவையும் தன் வினை உரைக்கும் ஆதலின், அஃறிணைக்கண் தன்மைவினை இன்று என்றதுஎன்னை? எனின்; கிளியும் பூவையும் ஆகிய சாதி எல்லாம் உரை யாடும் என்னும் வழக்கு இன்மையானும் அவை உரைக் குங்கால் ஒருவர் உரைத்ததைக் கொண்டு உரைக்கும் ஆதலானும்; ஒருவன் பாடின பாட்டை நரம்புக் கருவியின் கண் ஓசையும் பொருளும்பட இயக்கிய வழிக் கருவியும் உரையாடிற்று ஆதல் வேண்டும் ஆகலானும்; அவ்வாறு வருவன மக்கள் வினையாதலால் தன்மைவினை அன்று என்க. யான் என்னும் பெயரை விரவுப் பெயர்க்கண் ஓதாது உயர் திணைக்கண் ஓதினமையானும் அஃறிணைக் கண் தன்மை வினை இன்று என்க

என்பது அவருடைய வாசகம். இங்கு மொழி என்பது ஒருவர் மட்டும் பேசுவது என்பது இல்லை. இருவர் உரையாடுவதே மொழி ஆகும். எனவே விலங்குகள் சில பேசுகின்றன என்றால் அது ஒரு பகுதியே உண்மை. ஏனெனில் அவை உரையாடலின் மூலம் கருத்துப் பரிமாறிக்கொள்வது இல்லை என்பது தெய்வச் சிலையாரின் முதல் வாதம். விலங்குகள் பேசுவது என்பது பிறர் பேசியதைத் திருப்பிப் பேசுவதே தவிரத் தானே பேசுவதுஇல்லை என்பது இரண்டாவது வாதம். வாய்ப்பாட்டை இசைக் கருவி களில் வாசிக்கும் போது அங்கும் ஒலியும் பொருளும் தோன்று கின்றன. எனவே இசைக் கருவியும் பேசும் ஆற்றல் உடையது என்று கருத வேண்டும். ஆனால் இசைக்கருவி பேசும் ஆற்றல் உடையதாக நாம் சொல்வது இல்லை என்பது மூன்றாவது வாதம். ஆகவே பேசுவது மக்களுக்கே உரிய தொழில். ஆதலால் விலங்கு பேசுவது என்பதோ, கருவி இசை ஒலியும் பொருளும் உடையது என்பதோ பொருந்தாது. மேலும் உயர்திணைக்கு மட்டும் தன்மையைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பதால் அஃறிணைக்குத் தன்மை கிடையாது. இந்த வாதங்கள் சிறப்பான வையாக அமைந்து போற்றுவதற்கு உரியன.

இலக்கண விளக்க உரையில் தன்மையை விரவுப் பெயராகக் கருத வேண்டும் என்று கூறியதும் இதற்கு சிவஞானமுனிவர் மறுப்பும் இங்குக் குறிப்பிடத்தகுந்தன.

'பேய், பூதம், மந்தி, கிளி, பூவை பேசுதலான்; ஆகுமே தன்மை பொது' என்ப ஆகலின் தன்மையும் விரவுப் பெயராயிற்று

என்பது இலக்கணவிளக்கஉரை (சூத்.187).

பொதுவாக விலங்குகள் பேசும் ஆற்றலும் கேட்கும் ஆற்றலும் உடையன என்னும்போது மொழியின் மிகச்சிறிய பகுதியையே அவை கையாளவும் புரிந்துகொள்ளவும் செய்கின்றன; என்பதே உண்மை. அதாவது அவை சில சொற்களும் சொற்றொடர்களும் மட்டுமே அறிந்தவை. இதற்கு மறுப்பாக சிவஞானமுனிவர் இலக்கண விளக்கச்சூறாவளியில் விலங்குகள் பேசும் ஆற்றலைப் கூறுவது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

> கிளி, பூவை கூறியவாறு கூறுதலல்லது இச் சொல்லை இவ்வாறு கூற வேண்டும் எனச் சொல்லுண்மை அறிந்து கூறுதல் உலகத்து இன்மையான் 'பூவையும் கிளியும் கேட்டு' (சீவக. 2510) என்றாற் போல்வனவும் புனைந் துரை வகையான் கூறியதேயாம் ஆகலானும்

என்ற சிவஞானமுனிவரின் விளக்கம் மனிதன் பயன்படுத்தும் மொழிக்கும் விலங்கு மொழிக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவு படுத்துவதாய் உள்ளது. அப்படியே மனிதனின் கேட்கும் ஆற்றலுக் விலங்குகளின் கேட்கும் ஆற்றலுக்கும் வேறுபாடு உண்டு. தொல் காப்பியரே 'எல்லீரும்' என்பதை விரவுத்திணையில் சேர்க்காத தால் இந்த உண்மையை ஓரளவு உணர்ந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது. எப்படியாயினும் விலங்குகளைத் திணை பாகுபாட் டில் சேர்ப்பது மொழி அமைப்பு ஆராய்ச்சியை உயிரியல் ஆராய்ச்சியின் கைக்குழந்தையாக அமைப்பதாகும். அது சிறப் புடையது அல்ல. ஏனெனில் மொழி அமைப்பை விளக்கும் இலக் கண ஆய்வு மொழி அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு செய்ய வேண்டியது.

### 3.8.6. தன்மையும் முன்னிலையும்: புதுநோக்கு

தொல்காப்பியர் தன்மையையும் எல்லீரும் என்ற சொல்லை யும் உயர்திணையில் சேர்த்ததும் சரி; நன்னூலார் தன்மை, முன் னிலைப் பெயர்கள் எல்லாவற்றையும் விரவுத் திணையில் சேர்த்த தும் சரி; அவ்வளவு சிறப்பானதாகக் கொள்ள முடியாது. இன் னொரு நோக்கிலும் இந்த முறை போற்றுதற்குரியது இல்லை என்று வாதிட முடியும்.

பொதுவாக மனிதனே பேசவும் கேட்கவும் முழு ஆற்றல் உடையவன் என்பதே உண்மை. அந்த நோக்கில் சிலர் தன்மை

யையும் முன்னிலையையும் மக்கள் சுட்டுக்கு உரியதாகக் கருத வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள் (Lyons, 1968:276)[11] இதைத் தமிழ் இலக்கண நோக்கில் விளக்கினால் தன்மையும் முன்னிலையும் உயர்திணையாகக் கருதவேண்டும் என்பது பொருள்.

தமிழ் இலக்கியப் பயிற்சியை நோக்கினாலும் தன்மையும் முன்னிலையும் உயர்திணையாகக் கருதலாம் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. உயர்திணையில் மூன்று பாலுக்கும் பொதுவாக வரும் என்று தொல்காப்பியர் கூறிய 'யார்' என்ற வினா தன்மைப் பெயரையும் முன்னிலைப் பெயரையும் கூட ஏற்று வந்துள்ளது:

தன்மை: சால்பு அளந்து அறிதற்கு யாம் யாரோ - (குறுந். 366.2)

முன்னிலை: யாரே நீ எமக்கு - (நற். 39.51)

யார் இவண் நின்றனீர் எனக்கூறி - (கலி 65.11)

எனவே 'யார்' என்ற வினா உயர்திணை மூன்று பாலுக்கு மட்டும் பொதுவானது என்பதைவிடத் தன்மை, முன்னிலை ஆகியவை சேர்ந்த உயர்திணைக்கும் உரியது என்று பொதுமையை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். இப்படி உயர்திணையில் தன்மையையும் முன்னிலையையும் சேர்க்கலாம் என்று ஒத்துக் கொள்ளும் போது உயிரியல் அடிப்படையே முக்கியத்துவம் பெற்று விடுகிறது. ஆனால் பால்பாகுபாடு இந்த அடிப்படையில் செய்ய முடியாது.

இலக்கணம் என்பது மொழியின் அமைப்பை, மொழிக்குள் இருக்கும் வேறுபாடுகளை ஒட்டி விளக்குவது: நாம் வாழும் உலகத்தில் உள்ள எத்தனையோ வேறுபாடுகளைப் பற்றிக் கவலைப் படாதது. உதாரணமாக விலங்குகளில் ஆண், பெண் வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு பற்றிய அறிவு வாழ்க்கைக்கும் பயன் படுவது. ஆயினும் தமிழ் இலக்கணநூல்கள், அஃறிணையில் ஆண்-பெண் வேறுபாடு செய்வதில்லை. ஏனெனில் அந்த வேறுபாடு

11 'Pronouns of the first and second persons refer to human beings'
Lyons, 1968:276

பதிலீட்டுப் பெயரிலோ, வினை முற்றிலோ பிரதிபலிப்பதில்லை என்பதுதான். அப்படி இருக்கும்போது மனிதன் பேசும் ஆற்றல் உடையவன் என்ற உலகஅறிவைக் கொண்டு, மொழிஅமைப்பில் தன்மைச் சொற்களுக்கும் அவன், அவள் போன்ற உயர்திணைப் பெயருக்கும் உள்ள வேறுபாட்டைப் புறக்கணித்து எல்லாவற்றை யும் (தன்மையையும் அவன், அவள் போன்றவையும்) ஒரேதிணை யில் சேர்ப்பது இலக்கணத்தின் அடிப்படை லட்சியத்துக்கே மாறு பட்டுப்போய்விடுகிறது. என்றாலும் தொல்காப்பியரும் பிற தமிழ் இலக்கண ஆசிரியர்களும் எப்படி இந்த மொழி அமைப்பு உண்மையைப் புறக்கணித்தார்கள் என்ற இன்னொரு கேள்வி எழுகிறது.

### 3.8.7 புறக்கணிப்புக்குக் காரணம்

1) தொல்காப்பியர் திணை - பால்பாகுபாடு பொதுவானது; சிறப்பான இலக்கணக்கூறு என்று நினைத்து எல்லாச் சொல்லை யும் அதாவது திணை - பால்பாகுபாடு இல்லாத சொல்லையுங்கூட அந்தப் பாகுபாட்டில் அடக்க முயற்சித்துவிட்டதால் இந்தக் குறை ஏற்பட்டது என்று ஒரு வகையில் சமாதானம் சொல்லலாம். இது பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது.

2) தமிழுக்கு ஐரோப்பிய அறிஞர்கள் எழுதிய இலக்கணங் களை நோக்கினால் சொற்பாகுபாடு பற்றி இன்னொரு உண்மை புலனாகிறது. இன்றைய மொழியியல் நோக்கில் பார்க்கும்போது புதிய பாகுபாட்டிற்குரிய காரணமும் அடிப்படையும் பளிச்செனப் புலப்பட்டுவிடுகின்றன.

ஐரோப்பியர் எழுதிய தமிழ்மொழி இலக்கணங்களில் பெயர்ச் சொற்கள், பதிலீட்டுச்சொற்கள் (pronouns) என்று பாகுபடுத்தித் தன்மை, முன்னிலைப் பெயர்களைப் பதிலீட்டுப் பெயர்களில் அடக்கியுள்ளதைக் காணலாம். (மீனாட்சி சுந்தரன், 1961:178). இன்று நன்னூலின் சுருக்கமாக வெளிவரும் இலக்கணப் பாட நூல்களைத் தவிர ஏனைய இலக்கண நூல்களில் பதிலீட்டுப் பெயர்கள் தனி வகையாகவே இடம்பெறுகின்றன. இந்தப் பாகு

பாடு ஐரோப்பிய அறிஞர்கள் தமிழ் இலக்கணத்துக்கு அளித்த கொடை என்று கூறலாம்.[12]

மொழியியல் நூல்களில் இடம் (person) என்ற இலக்கணக் கூறும் (விளக்கத்துக்கு Lyons, 1968 : 276 பார்க்கவும்; அடிக் குறிப்பு, 10), பதிலீட்டுப் பெயர்கள் என்ற தனிப் பாகுபாடும் (விளக்கத்துக்கு அகத்தியலிங்கம், 1979 : 79-131 பார்க்கவும்) அமைந்திருப்பதைப் பார்த்தால் தொல்காப்பியர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூன்று இடங்களைக் குறிப்பிட்டாலும் அந்தக் கருத்து அடிப்படையில் பெயர்களைப் பாகுபடுத்தாமல் போய்விட்டார்; அல்லது இடம் என்ற இலக்கணக்கூறு இருப்பதை உணர்ந்திருந்தும் சொல் பாகுபாட்டில் அது ஒரு தனி வகுப்பாக அமைகிறது என்பதைப் பொருத்திக் காட்டாமல் போய்விட்டார் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. 'இடம்' என்பது உரையாடலில் கலந்து கொள்வோரின் பங்கைப் பொறுத்தது. பேசுவோர் தன்மையாகவும் கேட்போர் முன்னிலையாகவும் பிறரையும் பிற பொருளையும் படர்க்கையாகவும் கொள்ள வேண்டும். இது ஒரு விதத்தில் பொருள் நிலையை ஒட்டிய இலக்கணக் கூறாகும்.

ஆயினும் பதிலீட்டுப் பெயர் என்பது மொழிஅமைப்பு நோக்கிலும் பெயர்களிலிருந்து மாறுபடுவதால் தனிப்பிரிவாகக் கருதுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் உள்ளது.[13] பதிலீட்டுப்பெயர்கள்

---

12 வடமொழியில் பெயர்ச்சொற்களில் பதிலீட்டுப்பெயர் சர்வ நாமம்' என்று தனிப் பிரிவாக (பாணினி, அஷ்டத்யாயி 1.1.27) கொடுக்கப் பட்டுள்ளது. கிரேக்க மொழியிலும் முதன் முதலில் தனி இலக்கண நூல் எழுதிய டயோனிசியஸ் த்ரேக்ஸ் (சுமார் கி மு. முதல் நூற்றாண்டு) சொற்களை எட்டுவகையாகப் பாகுபடுத்தி அதில் பதிலீட்டுப் பெயரைத் தனிப் பிரிவாகக் கொண்டுள்ளார். Robins, R.H , 1967:33

13 இஸ்ரேல் (1973:38 & 1976:25) 'மாற்றுப் பெயர்களும் (Pronouns) 'பெயர்' என்னும் சொல்லின் கீழ்த் தொகுக்கப் பெற்றாலும் அவை தனி நூற்பாக்களில் விளக்கப்பெற்றமையே அவை பெயரின் சிறிது வேறுபட்ட வகையின என்பதைக் கொள்ள இடம் தருகின்றன என்று குறிப்பிட்டு தொல். 162, 167, 183-89, நன். 246, 247 என்ற சூத்திரங்களைச் சான்று காட்டியுள்ளார். உண்மையில் தொல்காப்பியர் 162ல் சுட்டுப்பெயர்கள் தெளிவாக உயர்திணைப் பால் காட்டுவதால் அவற்றை முதலில் குறிப்பிட்டு, தன்மைப்

பெயரடை ஏற்றுவராது. ஏனைய பெயர்களே பெயரடை ஏற்று வரும் (அகத்தியலிங்கம். 1979:81). மேலும் பதிலீட்டு பெயர்கள் முழுமை பதிலீட்டுப்பெயரான 'எல்லாம்' என்பதையும் நாங்கள் எல்லாம்) எண்ணுப் பெயர்களையும் (நாம் இருவர்) பெயருக்குப் பின்னால் மட்டுமே ஏற்று வரும். பதிலீட்டுப்பெயர்கள் விளி வேற்றுமையை ஏற்காது.[14] எனவே தமிழ் இலக்கண நூல்களில் வருணிக்கும் திணை-பால் பாகுபாட்டில் அடங்கும் சொற்

---

பெயர்களை மட்டும் அங்குக் குறிப்பிட்டுள்ளார். 167ல் அஃறிணைப் பெயர்களின் பட்டியல் பேசப்பட்டுள்ளது. 184-89 என்ற சூத்திரங்கள் விரவுப் பெயர்களைத் தொகுத்துச் சொல்லியதில் அடங்கிய சில சொற்களின் விளக்கமே தவிர மூவிடப் பெயர்கள் என்பதால் தனியே விளக்கப்படவில்லை. இங்கு தன்மை மூவிடப் பெயர்களை ஓரிடத்திலும் முன்னிலை, படர்க்கை மூவிடப் பெயர்களை மற்றொரு இடத்திலும் கூறுவதால் மாற்றுப் பெயர் என்பது தனி உட்பிரிவு என்ற கருத்து, தொல்காப்பியருக்கு இல்லையென்றே கருத வேண்டி இருக்கிறது.

14 இதற்கு மாறாக இஸ்ரேல் (1976:65), மாற்றுப் பெயருக்கு (Pronouns) முன்னர் இவ் வெண்ணின் (ஒன்று) பெயரடை வடிவம் வருதலைச் சங்க இலக்கியத்தில் காணலாம்: 'ஓர் யான்' (குறுந். 6; புறம். 137); 'ஒரு நின்பாணன்' (குறுந். 127); (ஒருதான் ஆகி) (குறுந். 76) என்று குறிப்பிட்டுள்ளது வருணனை உண்மையாகும். அதனால் 'சங்க இலக்கியத்தில் ஒரு சில இடங்கள் தவிர பொதுவாக அவை பெயரடை, பெயரெச்சம் ஆகியவற்றால் தழுவப்படவில்லை' என்று இன்னொரு இடத்தில் (பக். 8) கூறுவது பொருந்தாது. ஏனெனில் பதிலீட்டுப் பெயர் சிறப்புப்பெயர்களைப் போலக் குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒன்றைக் குறிப்பது எனவேதான் அவை வரையறுக்கும் எண்ணுப் பெயரடைகளையோ பொதுவான வேறு பெயரடைகளையோ ஏற்பதில்லை என்பது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் பொது உண்மை. அப்படியானால் மொழியின் பொதுப்பண்புக்குச் சங்கத்தமிழ் மட்டும் மாறி வருகிறது என்று ஆகிறது. அதாவது சங்கத் தமிழ் மொழிகளின் பொதுப் பண்பைப் புறக்கணித்து விட்டது என்பதல்ல இதன் பொருள். தமிழிலும் பிறமொழிகளிலும் பதிலீட்டுப் பெயர்கள் எண்ணுப் பெயர்களைப் பின்னால் பெற்று வரலாம்.

நான் ஒருவன்<br>
நீ ஒருத்தி<br>
அவர் இருவர்<br>
I, one who is interested.<br>
We two will be coming.

களில் 'இடம்' என்ற இலக்கணக் கூறும் பதிலீட்டுப்பெயர் என்ற உட்பிரிவும் கூட அடங்கியுள்ளன. எனவே 'இடம்' என்ற இலக்கணக்கூறைப் பெயர்ச் சொற்களிலும் அங்கீரித்துப் பதிலீட்டுப் பெயர்களை ஒரு உட்பிரிவாகக் கொண்டு வருணிக்கவேண்டும்.

## 3.8 முடிவுரை

திணை - பால் பாகுபாடு பெயர்ச் சொற்களைப் பாகுபடுத்துவதற்கு உரிய இலக்கணக்கூறு. அதில் 'எண்' என்ற இலக்கணக் கூறும் சேர்ந்துள்ளது என்பது சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தமிழ் இலக்கண நூல்களில் பெயர்ச் சொற்களில் பதிலீட்டுப் பெயர்கள் என்ற ஒரு உட்பிரிவு இருப்பதை விளக்கவில்லை; எல்லாவற்றையும் திணை - பால்பாகுபாடாகக் கருதிவிளக்கிவிட்டன. 'இடம்' என்ற இலக்கணக் கூறை அங்கீகரித்து அதைத் தனியே விளக்கி விட்டுப் பெயர்ச்சொற்களைப் பாகுபாடு செய்யும்போது பொருத்திப் பார்க்காததுதான் சில சொற்களை (தன்மை முன்னிலைப் பெயர்களை) எந்தத் திணையில் சேர்ப்பது என்ற கருத்து வேறுபாடு தோன்றக் காரணமாகும். மற்றபடி திணை பால் பாகுபாட்டிற்குரிய செய்திகள் தமிழ் இலக்கண நூற்களில் சிறப்பாகத் தொல்காப்பியத்தில் சீரிய முறையில் வருணிக்கப் பட்டிருக்கின்றன.

---

என்ற வாக்கியங்கள் சரியானவையாகக் கருதப்படுபவையே. பாரதியாரும் 'நான்-ஒருவன் மட்டிலும் பிரிவு என்னும் நரகத்தில் உழலுவதோ' என்று பயன்படுத்தியுள்ளார். பொதுவாகத் தமிழில் பெயர்ச் சொற்களும் பின்னால் வரும் எண்ணுப் பெயர்களும் சேர்ந்த தொடர்களும், எண்ணுப் பெயரடைகளும் பெயரும் சேர்ந்த தொடர்களும் ஒத்த பொருளுடையனவாகக் கருதப்படுகின்றன.

மாணவர் இருவர் = இருமாணவர்
பால் மூன்று = முப்பால், மூன்றுபால்

எனவே 'நான் ஒருவன்' என்பதை ஒப்புமையாக்கத்தால் 'ஒரு நான்' என்று மாற்றியமைத்து விட்டார்கள். இது போல அமைந்த வாக்கியங்களே இஸ்ரேல் எடுத்துக் காட்டியவை. இவைகளை வழுவமைதியாகக் கொள்ளலாம். வழு அமைதியாக வருபவை பொது இலக்கணத்தைப் பாதிக்காது. அதனால் பொது இலக்கணமான மாற்றுப் பெயர்கள் பெயரடையை ஏற்காது என்ற கோட்பாடு தவறு ஆகாது. ஆகையினால் 'ஒரு சில இடங்கள் தவிர மாற்றுப் பெயர்கள் பெயரடையைத் தழுவப்படுவதில்லை' என்று கூறாமல் பொதுவாகவே பெயரடையைத் தழுவுவது இல்லை என்று கூறலாம்.

# 4. விரவுத்திணை

## 4.0 பெயர் விளக்கம்

தொல்காப்பியர் சொல்லதிகார முதல் சூத்திரத்தில் உயர் திணை, அஃறிணை என்ற இரண்டு திணைகளைக் குறிப்பிட்டாலும் பெயரியலிலும் (6.3-5), வினையியலிலும் (4.3-5)

உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம் மூவுருபின தோன்றலாறே

என்று மூன்று வகையான பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார். ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமை என்பது திணைப் பாகுபாட்டைக் குறிக்கிறது. தொல்காப்பியரும் எழுத்ததிகாரத்திலும் (சூ. 115) சொல்லதிகாரத்திலும் (விளி.32) அஃறிணை விரவுப்பெயர் என்று விரவுத் திணைச்சொற்களைச் சுட்டியுள்ளார். எனவே 'விரவுத் திணை' என்று நாம் சுருக்கமாகக் குறிப்பது தொல்காப்பியர் கருத்துக்கு ஒத்ததாகக் கொள்ளலாம்.

விரவு என்பது 'கலத்தல்' என்ற பொருளில் பல இடங்களிலும் (உ.ம் வியங்கோள் எண்ணுப்பெயர்திணை விரவுவரையார் (கிளவி.45) - வியங்கோள் ஏற்கும் பெயர்களில் உயர்திணைப்பெயரும் அஃறிணைப் பெயரும் கலந்து வருதலை நீக்க மாட்டார்கள்- பசுவும் இடையனும் செல்க) ஒரு இடத்தில் 'உறழும்' என்ற பொருளிலும் (உ.ம். இகர யகரம் இறுதி விரவும் (எழுத்து.58) இறுதியில் இகரமும், யகரமும் உறழ்ந்துவரும்.-நாய்~நாஇ) தொல்காப்பியத்தில் வந்துள்ளன. ஆனால் 'அஃறிணை விரவுப் பெயர்' என்று விரவுத்திணைச் சொற்களைக் கூறும்போது ஒருதிணைக்கு உரிய சொல் மற்றொரு திணையில் பயன்படுத்துவதையும் அல்

லது ஒருசொல் இரண்டு திணைக்கும் பொதுவாக இருப்பதையும் குறிக்கும். நச்சினார்க்கினியர் அஃறிணை இயற்பெயருக்குத் தந்த விளக்கம் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

> அஃறிணைக்கும் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறு அன்றி, ஆண்பாலும், பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின் அங்ஙனம் உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும், பெண்பாலையும் உணர்த்துதலின் அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்று என்று அவற்றின் உண்மைத்தன்மைத் தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார்

என்பது நச்சினார்க்கினியர் வாசகம் (எழுத்து-155)

இங்கு விரவுத்திணைப் பாகுபாட்டில் அங்கும் பெயர்களையும் (§4.1), அவை திணை விரவிவரும் முறையையும் (§4.2), அதனுடைய இலக்கண அடிப்படையையும் (§4 3), பிற இலக்கணக் கூறுகளிலுள்ள விரவுவகைகளையும் (§4.4), கடைசியில் (§4 5) விரவுத்திணை வழக்கில் அமைந்துள்ள முறைகளையும் விளக்கமாகப் பார்ப்போம்.

## 4.1. விரவுத் திணைச்சொற்கள்

தொல்காப்பியர் விரவுத்திணையைப் பெயரியலிலும், வினையியலிலும் அமைத்துள்ளது முன்னரே குறிப்பிடப்பட்டது. விரவுத் திணைச் சொற்களைப் பொதுவாகவும் (இயற்பெயர், சினைப் பெயர், வியங்கோள், முன்னிலை) தனிச்சொற்களாகவும் (எல்லாம், வேறு) ஆக இரண்டு விதமாக விளக்கியுள்ளார். இவைகளில் விரவுப்பெயர்களாகப் பொதுவாக கூறிய இயற்பெயர், சினைப் பெயர், சினைமுதற்பெயர் ஆகியவை எந்தப் பெயர்களைக் குறிக்கின்றன என்பதில் உரையாசிரியர்களிடையே கருத்து மாறுபாடு காணப்படுகிறது. மேலும் உரையாசிரியர்கள் கொடுத்துள்ள உதாரணங்களும் சந்தேகத்துக்கு உரியனவாக உள்ளன. எனவே பொதுப் பெயர்களுக்குரிய சிறப்பான உதாரணங்களும் உரையாசிரியர்கள் தந்த உதாரணங்களின் வன்மையும் மென்மையும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவை விரவுச் சொற்களாக எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைச் சரியாகப்

புரிந்துகொண்டு சரியான விரவுத்திணைச்சொற்களைக் கண்டு பிடிக்க முடியும்.

### 4.1.1 இயற்பெயர்

> இயற்பெயராவன சாத்தன், கொற்றன் என்னும் இரண்டு பெயர்

என்பதே இளம்பூரணர் விளக்கம். சேனாவரையருடைய விளக்க மாவது: (பெயர். 20)

> இயற்பெயராவன: சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருளே பற்றி வரும் இடுபெயர். இயற்பெயர் எனினும் விரவுப் பெயர் எனி னும் ஒக்குமாயின் அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு அப் பெயர் கொடுத்தது என்னையெனின்:- அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார். பாணியும், தாளமும் ஒரு பொருள ஆயினும் இசைநூலார் தாளத்துள் ஒருசார னவற்றிற்குப் பாணி என்றும் பெயர் கொடுத்தாற் போல் வது என்பது

இங்கு இயற்பெயருக்கான விளக்கமும் அதன் ஒரு பண்பும் குறிப்பிடப்பட்டுள்ளன: 1) வழங்குதல் பயத்தது (குறிப்பிட்டு வழங்குவதற்காக அமைந்தது),2) நிமித்தம் (காரணம்) இல்லாதது, என்ற இரண்டு பண்பும் எல்லாச் சொல்லுக்கும் பொதுவானவை. 3) பொருள் பற்றி வருவது என்பது பெயர்ச்சொல்லுக்கு உரிய விளக்கம். 4) இடுபெயர் (ஒருவர்க்கு இடப்பட்டபெயர்) என்பதே இயற்பெயர்க்குரிய சிறப்புப்பண்பு. ஒரு குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்காகக் காரணம் இல்லாமல் இடப்பட்ட பெயர் என் பதே இயற்பெயருக்குச் சேனாவரையர் தரும் இலக்கணமாகக் கொள்ளலாம்.

விரவுப்பெயரும் இயற்பெயரும் ஒன்றே; ஆனாலும் விரவுப் பெயரும் இயற்பெயரும் சிறிது வேறுபட்ட பொருளில் வழங்கப் படுகின்றன என்பதை இயற் பெயர் கிளவியும் சுட்டுப் பெயர் கிளவியும் என்ற சூத்திரத்தில் (கிளவி.38) சேனாவரையரே

> அவன் வந்தான், அவன் ஒருவனும் அறங்கூறும் ... என இயற்பெயரல்லா விரவுப்பெயர்க்கும் உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் முற்கிளக்கப்படுவதால் ...

என்பதால் விரவுப்பெயர் பெரிய பாகுபாடு; இயற்பெயர் அதில் அடங்கிய சிறிய பிரிவு என்று கருதுகிறார் என்பது தெளிவு. இந்த முறையில் இலக்கண ஆராய்ச்சியிலும் பிறதுறையிலும் பொதுப்பண்பால் ஒத்து இருக்கின்றவற்றுள் அதற்குள் இருக்கும் சிறிய வேறுபாடு காரணமாக வேறு பெயர் கொடுத்து வழங்கு வதைப் பார்க்கலாம். உண்டல், தின்றல். உண்டான், தின்றான் என்பன வினையடியாகப் பிறந்த தொழிற் பெயர்கள். ஆனால் உண்டல், தின்றல் என்பனவற்றைத் தொழிற்பெயர் என்றும் பின்னவற்றை வினையாலணையும் பெயர் என்றும் இன்று வழங் குகிறோம். அதுபோல விரவுப் பெயர் பெரிய பாகுபாடு, இயற் பெயர் என்பது அதன் உட்பிரிவு.[1]

> சாத்தன், கொற்றன் என வழங்குதற்பயத்தவாய் நிமித் தம் இன்றிப் பொருள் பற்றிவரும் இயற்பெயர்

என்ற நச்சினார்க்கினியர் விளக்கம் சேனாவரையருடைய விளக் கத்தை முக்கால் பங்கு அடியொற்றியது என்றாலும் இது பொதுப் பெயரின் விளக்கமாகவே உள்ளதே தவிர, இயற்பெயரின் சிறப்புப் பண்பை விளக்கவில்லை.

> இயற்பெயராவது ஒரு பொருட்கு இடுகுறியாகி வழங்கும் பெயர். மேற் சினைப்பெயர் கூறுகின்றார் ஆதலின் இதனை முதற்பெயர் என்று கொள்க,

என்ற தெய்வச்சிலையாரின் விளக்கம் பொதுப்பெயர்க்கு உரியது. மேலும் இயற்பெயருக்கு இன்னொரு பெயரும் (முதற்பெயர்) கொடுத்து வழங்கலாம், என்பதிலும் சிறப்பு இல்லை. ஏனெனில், அதுவும் இயற்பெயரின் பண்பை விளக்குவதாய் இல்லை. நன்னூ

---

1 இயற்பெயர் எனினும் விரவுப்பெயர் எனினும் பெயர் கொடுத்தாற்போல என்பது' இடைச்செருகலாகலாம், என்று பூவராகம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். ஆனால் சேனா வரையரே கிளவியாக்கத்தில் (கி. 38) 'அவன்தான் வந்தான், அவன் ஒருவனும் அறங்கூறும். என இயற்பெயரல்லா விரவுப் பெயர்க்கும்' என்று கூறுவதால் இயற்பெயரும். விரவுப்பெய ரும் ஒன்றாயினும் இயற்பெயரே விரவுப்பெயரின் ஒருவகை என்று கருதுகிறார் என்பது தெளிவு. அப்படியானால் பூவ-ராகம் பிள்ளை கருதுவதுபோல இடைச்செருகலாக இருக்க முடியாது.

லாரும் இயற்பெயரை முதற் பெயர் (சூ. 282) என்று அழைத்துள்ளது இங்கு நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

> இருதிணைக்கண்ணும் வாளாது (காரணம் இல்லாமல்)
> இயன்று வருதலான் இயற்பெயர்

என்ற கல்லாடர் விளக்கமும் பொதுவானதுதான்.

உரையாசிரியர்களுடைய விளக்கம் சிறப்பாக அமையவில்லை; மேலும் தொல்காப்பியர் இயற்பெயரை நான்காகப் பிரித்த பிரிவுகளுக்குக் கொடுத்த உதாரணங்களும் பொருத்தமாக இல்லை. தொல்காப்பியர் இயற்பெயரைப் பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர். பன்மை இயற்பெயர் என்று நான்காகப் பிரித்துள்ளார் (பெயர். 22). பெண்மை இயற்பெயருக்கு எல்லா ஆசிரியர்களும் [உரையாசிரியர்களும், சுப்பிரமணிய சாஸ்திரியும் (1945) இஸ்ரேலும் (1973)] 'சாத்தி' என்ற பெயரையும் ஆண்மை இயற்பெயருக்குச் 'சாத்தன்' என்பதையும் ஒருமை இயற்பெயருக்கு 'கோதை' என்பதையும் பன்மை இயற்பெயருக்கு 'யானை' என்பதையும் உதாரணங்களாகக் கொடுத்துள்ளார்கள்.

சாத்தன் என்பது அகநானூறு (178.5), சிலம்பு ஆகியவற்றில் இயற்பெயராகவும் சாத்தி என்பது சிலம்பில் (12.1.26) இயற்பெயராகவும் வந்துள்ளன.

கோதை என்பது சங்க இலக்கியத்தில் பெரும்பான்மையாக 'பூமாலை' என்ற பொருளிலேயே வந்துள்ளது. பெண்களின் 'தலைமயிர்' என்று சிலம்பில் ஓரிடத்திலும் அரசனின் இயற்பெயராக அகநானூறு (93.20, 263.11) புறநானூறு (48.2, 49.2-3) ஆகியவற்றிலும் வந்துள்ளது.

> கோதை மார்பிற் கோதையானும் (புறம். 48.1)
>
> யாங்கனம் மொழிகோ ஓங்குவாட்கோதையை (ஷை 49.3)

இங்கு கோதை என்ற அஃறிணை பொதுப்பெயர்தான் திணை விரவி உயர்திணை ஆண்பாலாக வந்துள்ளது. எனவே 'கோதை' என்பதை ஒருமை இயற்பெயராகக் கொள்ளமுடியாது; அது அஃறிணை ஒருமைப் பொதுப்பெயரே ஆகும்.

பன்மை இயற்பெயர் என்பதற்கு உரையாசிரியர்கள் கொடுத்த 'யானை' என்பதும் அஃறிணை ஒருமைப் பொதுப்பெயரே; அது இயற்பெயராக வழங்கக் காணோம்.

உரையாசிரியர்கள் கருத்துப்படி 'இயற்பெயர்' என்பது உயர் திணையில் சிறப்புப் பெயரையும் (proper names) அஃறிணையில் பொதுப்பெயரையும் குறிக்கிறது என்று ஆகிறது. அப்படியானால் 'இயற்பெயர்' என்பதற்கு இரண்டு பொருள் எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடை காண மூன்று வழிகள் உள்ளன. அவையாவன: 1) தொல்காப்பியர் அந்தச் சொல்லை எந்தெந்தப் பொருளில் கையாண்டுள்ளார் என்று பார்ப்பது. 2) மொழியியலார் இயற்பெயருக்குக் கொடுக்கும் விளக்கம் புதிய உண்மை எதையாவது சுட்டுகிறதா என்று காண்பது. 3) இலக்கியப்பயிற்சி – (சங்க இலக்கியப் பயிற்சியும் பிற்காலப் பயிற்சியும்) இயற்பெயருக்கு மொழியியலார் தந்த விளக்கத்துக்கு ஏற்ப அமைந்திருக்கிறதா என்று நோக்குவது.

### 4.1.1.1 தொல்காப்பியர் பயிற்சி

தொல்காப்பியர் கிளவியாக்கம், பெயரியல், இடையியல் ஆகிய மூன்றிலும் இயற்பெயர் என்ற கலைச்சொல்லைப் பயன் படுத்தியுள்ளார்.

கிளவியாக்கத்தில் இயற்பெயர்க்கிளவியும், சுட்டுப்பெயர் கிளவியும் என்ற சூத்திரத்தில் (38) மனிதர்களின் சிறப்புப் பெயரையே குறிப்பதாக உரையாசிரியர்கள் முதலில் கருதினாலும் (சாத்தன் வந்தான்; அவனுக்குச் சோறு கொடுக்க) கடைசியில் எல்லாப் பெயர்களுக்கும் உரியதாகவே விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். ஏனென்றால் பதிலீட்டுப்பெயராக வரும் சுட்டுப் பெயர்கள் மனிதச்சிறப்புப் பெயர்க்கு மட்டுமல்லாமல் பொதுப் பெயர்க்குப் பின்னாலும் வரும். உ.ம். மாடு வந்தது; அதற்குப் புல் கொடுக்க. எனவே, இயற்பெயர் என்பது திட்டவட்டமாகச் சிறப் புப் பெயரைக்குறிக்கிறது என்று கூறமுடியாது; அப்படிச் சொன் னால் இலக்கணம் 'குன்றக்கூறல்' ஆய் அமைந்து விடும்.

இடையியலில் (22) இயற்பெயர்க்குப் பின்னால் 'ஆர்' என்ற விகுதி வந்து பலர்பால் வினைமுற்றைப் பெறும் என்ற சூத்திர

மும் விரவுப்பெயரையும், பொதுப்பெயரையும் குறிப்பதாகவே உரையாசிரியர்கள் கொண்டுள்ளார்கள் 'ஈண்டு இயற்பெயர் என்றது இருதிணைக்கும் அஃறிணை இருபாற்கும் உரிய பெயரை' என்று விளக்கமே சேனாவரையர் கொடுத்துள்ளார். எனவே இந்தச் சூத்திரமும் 'இயற்பெயர்' எது என்பதை வரையறுக்கப் பயன்படவில்லை.

பெயரியலில் கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர் (சூ.15) என்று குறிப்பிடும்போது அஃறிணைப் பொதுப்பெயர் (பிற்காலத்தில் பால் பகா அஃறிணைப் பெயர் என்று அழைக்கப்படுவது) என்பது தெளிவு.

> அ.'.றிணை இயற்பெயபெயராவன: ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு ... என்னுந் தொடக்கத்துச் சாதிப் பெயர். ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற்பெயர் என்றார்:

என்பது சேனாவரையர் வாசகம். ஆனால் அவரே 'அ.'.றிணை இயற்பெயர் எனவே பாலறிபெயரேயன்றி அ.'.றிணைப் பொதுப் பெயரும் உள என்பது பெற்றாம்' என்று அடுத்துக் கூறியிருப்பது சில சந்தேகத்தை எழுப்புகிறது. இதன்படி அ.'.றிணை இயற்பெயர் இரண்டு வகைப்படும் என்று ஆகிறது. பாலறிபெயர் என்பதற்கு 'அது, இது, உது, பல்ல, பல, சில என்ற சூத்திரங்களில் கூறப்பட்டவை' என்று பூவராகம்பிள்ளை விளக்கம் கொடுத்துள்ளார். அப்படியானால் பாலறி பெயரும் இயற்பெயராகும். அவை 'கள்' விகுதி ஏற்காமலும், பலவின்பால் வினைமுற்றைக் கொண்டு முடியும் என்று கொள்ளவேண்டும். இது பொருந்தாது. எனவே, சேனாவரையருடைய விளக்கமான அ.'.றிணைப் பொதுப்பெயர் என்பதும் பிரச்சனைக்கு உரியது.

தெய்வச்சிலையார் 'உயர்திணைப் பொருள்மேல் விரவிவரும் இயற்பெயர் ஒருமையும் பன்மையும் தோன்ற நிற்றல்' என்று குறிப்பிடும் பண்பு (பெயர்.17) எது என்பது தெளிவாக அமையவில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. தொல்காப்பிய சூத்திரங்களும் அவற்றை ஒட்டிய உரையாசிரியர்களுடைய விளக்கங்களும் 'இயற்பெயர்' என்பது எது என்று தெளிவாக அறிந்து கொள்ளப் பயன்படவில்லை.

### 4.1.1.2 மொழியியல் நோக்கு

மொழியியலார் தருகிற விளக்கமும் அமைப்பு உண்மையும் 'இயற்பெயர்' என்பது என்ன என்று நிர்ணயிக்கப் பயன்படுகிறதா என்று அடுத்துப் பார்ப்போம்.

உல்மன் என்ற சொற்பொருள் இயல் அறிஞர் (1962 : 79) சிறப்புப்பெயர் (proper nouns) என்றும் பொதுப் பெயர் (common nouns) என்றும் பிரித்துச் சிறப்புப்பெயரை வெறும் அடையாளச் சின்னம் என்றும் பொதுப்பெயர் பொருளை உடையது என்றும் விளக்குகிறார்.[2] மொழியியலாரும் இரண்டுக்குமுள்ள வேறுபாட்டையும் இரண்டும் மொழி அமைப்பில் வேறுபடும் விதத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். உதாரணமாக அகத்திய லிங்கம் (1979:76) கூறுவதாவது:

> குறிப்பிட்ட ஒரு மனிதனின் அல்லது இடத்தின் அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளின் பெயரைக் குறிப்பது சிறப்புப்பெயர் எனப்படும்... சிறப்புப் பெயர்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு பொருளையோ மனிதனையோ அல்லது இடத்தையோ குறிப்பனவாகும்...
>
> பொருட்களை அல்லது மக்களைப் பொதுவாகச் சுட்டும் பெயர்கள் பொதுப்பெயர் எனப்படும். (ப. 77)

பொதுப் பெயர்கள் பன்மை ஏற்பதும் [சில பொதுப் பெயர்களும் பன்மை ஏற்பதில்லை: அவை திரட்பெயர் (mass nouns )என்று பொதுப்பெயர்களின் ஒரு உட்பிரிவாகக் கருதப்படும். அகத்திய லிங்கம் 1979:77], இனஞ்சுட்டும்அடைகளை ஏற்றுவருவதும்ஆகிய இரண்டு மாறுபட்ட பண்புகளை உடையனவாகக் கருதலாம்.

இங்கு இரண்டு உண்மைகள் புலப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவன: 1) மனிதர்களுக்கு இடப்படும் சிறப்புப் பெயர்களை மட்டும் அல்லாது ஊர், ஆறு, மலை முதலிய குறிப்பிட்ட பொருளைச் சுட்டுவதற்கு இடப்படும் சிறப்புப் பெயர்களையும் இயற்பெயர் என்பது குறிக்கும். 2) அது பொதுப்பெயரிலிருந்து மொழி அமைப்புத் தன்மையில் - இலக்கண அமைப்பில் மாறுபட்டது

2 The essential difference between common nouns and proper names lies in their function: the former are meaningful units;the latter mere identification marks. Ullmann,1962:79

என்பன. முதலில் உரையாசிரியர்கள் ஒருமை இயற்பெயர்க்கும் பன்மை இயற்பெயர்க்கும் கொடுத்த உதாரணங்கள் பொதுப் பெயராய் இருப்பதால் இலக்கியப்பயிற்சி எப்படி அமைந்துள்ளது எனப் பார்த்து அவைகளுக்குரிய சரியான உதாரணங்களை நிர்ணயிக்க முயலுவோம்.

### 4.1 1.3 இலக்கியப் பயிற்சி

சங்க இலக்கியப்பெயர்களை மொழியியல் நோக்கில் ஆராய்ந்த வி.ஐ. சுப்பிரமணியம் (1955) தமிழர்களுக்கே உரிய சிறப்புப்பெயர்கள் பெரும்பாலும் இயற்கைப் பொருளான கொடிகள், மரங்கள், விலங்குகள் போன்றவற்றின் பெயர்களே என்றும் இப்படி இயற்கைப் பொருள்களின் பெயர்களை இயற்பெயராகக் கொள்ளுவது முற்காலத்தில் பழங்குடி மக்களிடையே காணப்படும் முறை என்றும் குறிப்பிட்டுப் பல உதாரணங்களையும் தந்துள்ளார்.[3]

| சொல் | விலங்கு/மரம்/ செடிகளின் பெயராக வருமிடம் | இயற்பெயராக வருமிடம் | பால் |
|---|---|---|---|
| ஓரி (முதுநரி) | பத்து. 9 257 | பத்து. 3. 111 | ஆண் |
| எருமை | அகம். 56. 3 | அகம் 115.5 | ,, |
| ஏற்றை | தொல் 604 | அகம் 44: 7.9 | ,, |
| அத்தி (மரம்) | | அகம் 376. 10 | ,, |
| மாதவி(செடி) | சிலம்பு 13. 49 | சிலம்பு 13.51 | பெண் |

எனவே சங்க இலக்கியப் பயிற்சியும் பொதுப்பெயர்தான் இயற்பெயர்களாக வழங்குவதற்கு ஆதரவாக உள்ளது. இதற்காக 'ஒருமை இயற்பெயர்' என்பதற்கு ஒருமைப் பொதுப்பெயர் என்று கொள்ளலாமா என்ற எண்ணம் தோன்றலாம். இங்கும் ஒரு சிக்கல் உள்ளது.

---

3 The indigenous names of the Tamils are mostly the names of the natural objects like plants, trees, and animals etc. This practice of giving the names of natural objects is common in the primitive and ancient Societies. Subramoniam V. I. 1955:16

தொல்காப்பியர் பெயரியலில் வேறு இடத்தில் அஃறிணை இயற்பெயர் என்று அஃறிணைப் பொதுப்பெயரைக் குறிப்பிட்டு இருந்தாலும் ஒரே சூத்திரத்தில் வரும் 'ஆண்மை இயற்பெயர்', 'பெண்மை இயற்பெயர்' என்ற இரண்டு தொடர்களுக்குச் சிறப்புப் பெயர் என்றும் அதே சூத்திரத்தில் வரும் 'ஒருமைஇயற்பெயர்' என்பதற்கு ஒருமைப் பொதுப்பெயர் என்றும் பொருள் கொள்வது பொருத்தமானதாகவோ, சிறப்பானதாகவோ கருத முடியாது. எனவே 'வழக்கு'ப் பற்றிய வரலாற்றைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்.[4]

சோழர்காலச் சிறப்புப்பெயர்களை ஆராய்ந்த நயினாரின் கருத்து (1982:77) இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

> ஆட்பெயர்கள் ஊர்களுக்கு அமைவது போன்று ஊர்ப் பெயர்களும் ஆட்பெயர்களாக வருதல் உண்டு.

என்று பொதுவாகக் குறிப்பிட்டு அதில் இரண்டுவகை இருப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

> இவ்வாறு வரும் பெயர்களில் ஊர்ப் பெயருடன் ஆட்களைக் குறிக்கும் 'அன்' அல்லது 'ஆள்' விகுதி ஈறாக வரும் ஆரூரன், வட்டாறன், குன்றன், உறையூரன் என இயற்பெயர்கள் அமைகின்றன. கூடல்காரி, குளத்தூர் பனையன், சந்திரன் களத்தூர், முனையன் ஆரூர், பனையன் களக்குடி. ஆனூர், கருவூர் என 'அன்' ஈறு பெறாமலும் ஊர்ப்பெயர்கள் ஆட்பெயர்களாக வரலாம். பெண்களுக்கும் இவ்வகைப் பெயர்கள் இருந்தன என்பதற்கு நக்கன் திருமாகாளம், நக்கன் ஒற்றியூர், நக்கன் கருவூர். நக்கன் காரைக்கால் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம்.

---

4 சுப்பிரமணியன் ந. (1967:307) சங்க காலத்தில் ஆற்றின் பெயர் உயர்திணை பெண்பாற் பெயராக வந்துள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார். அவருடைய வாசகம்:

'மகளிர்க்கு ஆறுகளின் பெயர்களை இடும் மரபு இன்றுள்ளது போல அன்றும் (பண்டைத்தமிழகத்தில்) இருந்திருக்கிறது. கங்கா, யமுனா என்பனபோல'சோணை' என்பது பெண்பாற் பெயர். இஃது சேரன் செங்குட்டுவன் தாயின் பெயராம். இமயவரம்பன் குலத்தாருக்கும் கரிகாலன் குலத்தாருக்கும் பழக்கம் உள்ள பாடலீபுத்ர நகரத்தின் அருகே ஓடும் சோணையாற்றின் பெயர் செங்குட்டுவன் தாய்க்கு இட்டது

இங்கு ஆண்/பெண் பால் விகுதி இல்லாமலும் ஊர்ப்பெயர் ஆட்பெயராக வருவதே சிறப்பாகக் கவனிக்கத்தகுந்தது. அப்படியே இன்றைய தமிழிலும் ஊர்ப்பெயர்கள் ஆண்பால் பெயர்களாகவும் (சிதம்பரம், பழனி, விருத்தாசலம் முதலியன) ஆற்றுப்பெயர்கள் பொருந்துவதே' என்பது. ஆயினும் இதற்கு ஆதாரம் என்ன என்று பார்க்கலாம். பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின்பதிகத்தில்

குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்கு
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன் (2-3)

என்ற வரிகளில் 'குடநாட்டில் உள்ள அரசன் ஆகிய நெடுஞ் சேரலாதனுக்குச் சோழன் மணக்கிள்ளியின் மகன் ஈன்ற மகன் .. செங்குட்டுவன்' என்று செங்குட்டுவன் தாய்வழி தாத்தாவின் பெயரும் அவருடைய சோழ குலமும் குறிப் பிடப்பட்டுள்ளன.

சிலப்பதிகார வாழ்த்துக்காதையின் துவக்கத்தில் உள்ள உரை பாட்டு மடையின் ஆரம்பத்திலும் பொதுவாகவே உள்ளது.

'குமரியொடு வடஇமயத்து ஒரு மொழி வைத்து
உலகு ஆண்ட சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்றுச்
சோழன் மகள் ஈன்ற மைந்தன்... செங்குட்டுவன்'

என்ற வரிகளில் தாய் வழி தாத்தாவின் குலம் மட்டுமே கூறப்பட்டுள்ளது. ஆதனால் சிலப்பதிகாரப் பதிகத்துள்ள

குணவாயிற் கோட்டத்து அரசு துறந்து இருந்த
குடக்கோ சேரல் இளங்கோ அடிகட்கு

என்ற முதல் இரண்டு வரிகளுக்கு அடியார்க்குநல்லார் (14ஆம் நூற்றாண்டு) உரையில்தான்

'சோழன்தன் மகணற்சோணை ஈன்றமக்கள் இருவருள்..' என்று முதன்முதலாக செங்குட்டுவன் தாயின்பெயர் 'நற்சோணை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சோணை என்பது பாடலிபுரத்தில் உள்ள ஆற்றின் பெயர் என்பது

வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய் கேட்டனை காதலர் வரவே

என்ற குறுந்தொகை வரிகள் (175. 2-4) உணர்த்து கின்றன. அப்படியானால் இது ஒருமை இயற்பெயர் உயர்திணையில் பெண்பாலுக்குத் திணை விரவி வந்துள் ளதற்கு நல்ல உதாரணம் ஆகும் ஆனால் இங்கு நமக்கு இதனுடைய சரித்திர உண்மை பற்றியே சந்தேகம் எழு கிறது. ஏனென்றால், பதிற்றுப்பத்து பதிகமும் சிலப்பதி காரமும் 'சோழன் மகள்' என்று மட்டுமே குறிப்பிடப் பிற்காலத்தில் வந்த அடியார்க்குநல்லார்க்கு மட்டுமே

பெண்பாற் பெயர்களாகவும் (காவேரி, கங்கா, யமுனா) முதலியன வழங்குவதும் பழைய மரபின் எச்சசொச்சங்கள் ஆகும்.

### 4.1.1.4 ஒருமை இயற்பெயர்

மொழியியலார் கொடுத்த விளக்கத்தை ஒட்டியும் இடைக் கால, தற்கால வழக்குகளை ஒட்டியும் இயற் பெயர் என்பது மனிதப் பெயர்களை மட்டும் அல்லாமல் ஊர், ஆறு, போன்ற பொருளின் பெயர்களையும் குறிப்பதாகக் கொண்டால் ஒருமை இயற்பெயர் என்பது ஊர், ஆறு, மலை முதலியனவற்றின் பெயராகவும் அமையும். அவை திணை விரவி உயர்திணை இயற் பெயராக வழங்குவதும் இந்தக் கருத்துக்கு அரணாக இருக்கிறது. உரையாசிரியர்கள் இயற்பெயர் என்பதற்கு மனிதப் பெயர்களைக் குறிக்கும் பெயர்கள் என்று மட்டும் கொண்டதால்தான் அவர் களால் ஒருமை இயற்பெயர்க்குச் சரியான உதாரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டது.

### 4.1.1.5 பன்மை இயற்பெயர்

உரையாசிரியர்கள் பன்மை இயற்பெயர் எப்படி அமையும்? யானை என்பது பன்மை இயற்பெயராக எப்படி ஆகும் என்ற முக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. அதற்குப் பதிலாக பன்மை எந்தப் பொருளில் கையாளப்பட்டுள்ளது; அதன் தொடர் இலக் கணம் என்ன என்பதிலேயே கவனம் செலுத்தியுள்ளார்கள். பன் மைப்பெயர் ஆண், பெண், ஒன்று, பல ஆகிய நான்குக்கும் வரும் என்றால் மிகுதியான எண்ணிக்கை என்று கொண்டு பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் அதாவது இனம்சுட்டும் அடை என்றும்

---

எப்படி இயற்பெயர் தெரியவந்தது என்பதே. இது வெறும் செவிவழிச் செய்திதானா? அல்லது அவருக்குக் கல்வெட்டு, செப்பேடு போன்று வேறு எங்கிருந்தாவது ஆதாரம் கிடைத்ததா? இந்தச் செய்தியின் உண்மை வேறு சில வரலாற்று முடிவுகளுக்கு இடம் கொடுக்கவல்லது. எனவே இவைகளின் ஆதாரம் மேலும் ஆராய்ச்சிக்கு உரியது.

பதிற்றுப்பத்து, சிலப்பதிகார மேற்கோள்களைச் சுட்டிக்காட்டிய திரு. சோம. இளவரசு அவர்களுக்கு என் நன்றி.

பன்மையிலும் வரும் என்று கொண்டு பிறிதின் இயைபு இன்மை நீக்கிய விசேடணம் அதாவது இனம் சுட்டாத அடை என்றும் இரண்டு வகைப்படும். பன்மை சுட்டிய பெயர் என்பது சேனா வரையர் கருத்துப்படி இயைபு இன்மை நீக்கிய விசேடணம் ஆகும். நச்சினார்க்கினியர், சேனாவரையர் கருத்தையே ஆதரித் துள்ளார். வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கவுரையில் சேனாவரையர் கருத்தையே ஒத்துக்கொண்டுள்ளார். சங்கர நமச்சிவாயரும், சிவஞான முனிவரும் பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் என்ற கருத்து உடையவர்கள். மேலும், இதுபற்றி விரிவாகவே சிவஞான முனிவர் நன்னூலில் வாதாடியுள்ளார். பொதுவாகக் கூறினால் முக்கிய பிரச்சனையாக பன்மை இயற் பெயர் எதைக் குறிக்கிறது என்பதில் (அதாவது பொருளில்) கருத்து செலுத்தாமல் அந்தத் தொடரின் இலக்கணத்தில் அதிக அக்கறை செலுத்தியது பாராட்டுவதற்கு உரியது அல்ல: முக்கிய பிரச்சனையில் கருத்து செலுத்தாமல் தங்கள் இலக்கணப்புலமை யை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்திவிட்டார்கள்.

பன்மை இயற்பெயர் என்பதற்கு உரையாசிரியர்கள் கொடுத்த 'யானை' என்பதும் பொதுப்பெயரே. அது இயற்பெய ராகக் கருதமுடியாது. ஆனால் விலங்கின் பெயர்கள் மட்டுமல் லாது சில அஃறிணைப் பொதுப் பெயர்கள் திணை விரவி உயர் திணை இயற்பெயராக வருவது பற்றி முன்னரே குறிப்பிட்டோம். எனவே, இங்கு இரண்டு பிரச்சனைகள் எழுகின்றன. 1) பன்மை இயற்பெயருக்குச் சரியான உதாரணம்- இலக்கியச் சான்றோ வழக்குச் சான்றோ கிடைக்கவில்லை. அதாவது இலக்கணத்துக்கு இலக்கியம் இல்லை. 2) இலக்கிய வழக்கில் அஃறிணை பொதுப் பெயர்கள் (தொல்காப்பியர் மொழியில் கூறினால் அஃறிணை இயற்பெயர்கள்) திணை விரவி உயர்திணை ஆண்பால், பெண் பால் இயற்பெயர்களாக வந்துள்ளதற்கு இலக்கணம் இல்லை. அதாவது இலக்கியத்துக்கு இலக்கணம் இல்லை.

பொதுவாகத் தொல்காப்பியர் புறநிலையிலும் அகநிலை யிலும் அமைப்பு அழகில் ஓரளவு ஈடுபாடுடையவர் என்பது புலனாகியுள்ளது (சண்முகம், 1980அ.230-234). எனவே 'பன்மை இயற்பெயர்' என்பது அஃறிணை பொதுப் பெயரைத் தான்

குறித்து நிற்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படி யானால் ஒருமை இயற்பெயரில் எழுப்பிய பிரச்சனை (ஒரே சூத்திரத்தில் 'இயற்பெயர்' இரண்டு பொருளில் கையாளப்பட்டது என்பது) இங்கும் எழுகிறது. ஆனால் இதற்கு மாறாக மூன்று எதிர்க் கேள்விகள் எழுகின்றன. அவையாவன: 1) சரியான உதாரணம் கிடைக்காதது. 2) இலக்கிய வழக்குக்கு இலக்கணம் இல்லாதது என்ற மேலே எழுப்பிய பிரச்சனைகளோடு இன்னொரு பிரச்சனையும் உள்ளது. அதாவது 3) பன்மை இயற்பெயர் மட்டும் அல்லாமல் பன்மை சுட்டிய எல்லாப் பெயரும் உயர் திணையில் ஆண், பெண் பால்களோடு அஃறிணை ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவாக வரும் என்று தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார் (பெயர். 27).

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவ ரென்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.

எனவே இங்கு அஃறிணைப் பன்மையாகவும் வரும் என்பதே முக்கியம். வெறும் இயற்பெயராய் மட்டும் இருந்தால் பன்மை ஏற்காது. மேலும் பன்மை ஏற்றால் இயற்பெயரும் பொதுப்பெயராகி விடும். எனவே பன்மை இயற்பெயர் அஃறிணைப் பன்மைக்கும் வரும் என்பதன் சரியான விளக்கம் என்ன? இந்த மூன்று எதிர்க்கேள்விகளுக்கும் பன்மைஇயற்பெயர் என்பது 'அஃறிணைப் பொதுப்பெயர்'தான் என்றால் விடை கிடைத்துவிடுகிறது. ஒரே கலைச்சொல்லுக்கு ஒரே சூத்திரத்தில் இரண்டு பொருள் கொள்ளுவதா என்ற மூலக் கேள்விக்குப் பதில் தொல்காப்பியர் சொல்நிலையில் அமைப்பு அழகு உண்டாகும்படி அமைத்துவிட்டார் என்று வேண்டுமானால் சமாதானம் சொல்லலாம்.

### 4.1.1 6 இயற்பெயர்களின் சிறப்புப் பண்பு

மொழியியலார் இயற்பெயர்கள் பொதுப்பெயர்களிலிருந்து மாறுபடுவதாகக் குறிப்பிட்ட மொழி அமைப்பு ((4.1.1.2) பற்றி இங்குப் பார்ப்போம். மொழியியலார்களே இரண்டு விதமான விதி விலக்குகளைக் குறிப்பிட்டு அவைகளுக்குச் சமாதானமும் கூறியுள்ளார்கள். தெய்வச்சிலையாரும் ஒரு விதிவிலக்கைக்

குறிப்பிட்டு அவரே அதற்குக் காரணமும் சொல்லியுள்ளார்.[5] மொழியியலார் ஒரு ஷேக்ஸ்பியர் என்ற உதாரணத்தைக்காட்டி அதற்கு ஷேக்ஸ்பியர் போன்ற ஒரு ஆசிரியர் என்று விளக்கி இங்கு சிறப்புப்பெயர் பொதுப்பெயராக மாறிவிட்டது என்றும் அதனால் அடை எடுத்து வந்துள்ளது என்றும் விளக்கியுள்ளார்கள் (Quirk et al, 1972:16)[6]. டர்னர் என்பவர் வரைந்த ஓவியங்களைப் பார்த்து 'நான் பல டர்னர்களை அரங்கில் பார்த்தேன்' என்று உதாரணத்தைச் சுட்டி இங்கு 'டர்னர்கள்' என்பது டர்னர் வரைந்த ஓவியங்களைப்பார்த்ததைக் குறிக்கும் என்று கூறிஇதுவும் சிறப்புப்பெயர் பொதுப்பெயராக மாறிவிட்டதைக் காட்டுகிறது. என்றும் உல்மன் (Ullmann, 1962.77) விளக்கியுள்ளார்[7] இப்படிப் பட்ட உதாரணங்கள் தமிழிலும் உண்டு. சங்க இலக்கியத்தில் நெடுஞ்செழியன் போன்ற பெயர்கள் ஒருவர்க்கு மேற்பட்ட பெயராக அமைந்தால்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்றும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்றும் இயற்பெயர்கள் அடைகொடுத்து வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய தமிழிலும் இந்த வழக்குத் தொடர்ந்து வந்துள்ளது. பாலு, பழனியப்பன் போன்ற சிறப்புப்பெயர்கள் இரண்டு மனிதர்களுக்கும் பெயராக அமையும்போது அவர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை ஒட்டி பெரியபாலு, சின்னபாலு என்றும்

5 தெய்வச்சிலையார் காலத்துக்குப் பின்னர்தான் மொழியியலார் வந்தாலும் மொழியியல் வெளிச்சத்திலே தெய்வச் சிலையார் உரையின் சிறப்பும் அதன் சரியான விளக்கமும் தோன்றுவதால் மொழியியலார் கருத்துக்குப் பிறகு தெய்வச் சிலையார் கருத்து விளக்கப்படுகிறது.

6 (Proper) names have 'unique' reference and do not share the characteristics of common names என்று முதலில் கூறிவிட்டு அடுத்து proper names can be classified as common nouns in which case they assume the characteristics of count nouns. a Shakespeare (an author like Shakespeare) என்று கூறியுள்ளார். Quirk et al 1972:16. இங்கு ஒரு ஷேக்ஸ்பியர் என்பது ஷேக்ஸ்பியர் போன்ற ஒரு ஆசிரியர் என்ற பொருள் படும்.

7 'These cases must be distinguished from the plural of proper names as common nouns. I saw several Turners (Paintings by Turner) in the gallery' Ullmann 1962: 77. இங்கு டர்னர்கள் என்பது டர்னர் எழுதிய ஓவியங்கள் என்ற பொருள்படும்.

கறுப்புப் பழனியப்பன், சிவப்புப் பழனியப்பன் என்றும் பிரித்து வேறுபடுத்துவதை இன்றும் காணமுடிகிறது. ஆகவே இந்த நிலையில் மேலேகுறிப்பிட்ட இலக்கணம் மாறிப்போவது போலத் தோன்றினாலும் இங்கு இயற்பெயரின் அடிப்படை இலக்கண மான தனிப்பட்ட மனிதனைக் குறிக்கும் அடையாளப் பெயர்-அடையாளச் சின்னம் என்பது மாறிப் போய் இருவரைக் குறிக்க வழங்குவதால்தான் இந்த முரண் ஏற்பட்டது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். இலக்கண ரீதியில் சொன்னால் ஒருபெயர் இருவர்க்கு அமைந்துவிட்டால் இயற்பெயர் பொதுப்பெயராக மாறிவிட்டது என்றும், அதனால்தான் இயற்பெயரின் இலக்கண மும் மாறிவிட்டது என்றும் புரிந்து கொள்ளவேண்டும்.

இயற்பெயரை ஆகுபெயராகப் பயன்படுத்தும்போதும் அதன் இலக்கணம் மாறுபடுவதற்கும் தமிழ் இலக்கியத்திலும் வழக்கி லும் சான்றுகள் கிடைக்கின்றன கம்பராமாயணத்தில் 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' (அயோத்தியாகாண்டம், குகப்பட லம். 35.4) என்ற தொடரில் 'இராமர்' என்ற சிறப்புப்பெயர் அடையடுத்து வந்துள்ளது. இங்கு 'இராமர்' என்பது இராமர் போன்ற சிறந்த பண்புடைய மனிதர்கள் என்ற பொருளையே உணர்த்துகிறது. அதாவது சிறப்புப்பெயர் பொதுப் பெயராக மாறிய காரணத்தினால்தான் 'அடை' எடுத்து வந்திருக்கிறது. இன்றும் இந்தச் சூழலை, நிகழ்ச்சியைப் பாடுவதற்கு ஒரு கம்பன் இல்லை, ஒரு பாரதி இல்லை என்ற தொடர்கள் பயன்படுத்து வதைக் கேட்கலாம் இங்கு தனி மனிதரின் அடையாளச் சின்ன மாக வழங்கும் இயற்பெயர் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்களுக் கும், ஆகுபெயராய் அந்தப்பண்புடைய மனிதர்களுக்கும் அல்லது அவர்களுடைய பொருளுக்கும் பெயராக மாறுவதால்தான் இனம் சுட்டும் அடையை ஏற்றும் பன்மை விகுதியோ, எண்ணுப்பெயர் அடையோ ஏற்றும் வருகின்றன. எனவே, மேலே குறிப்பிட்ட சிறப்புப்பெயர் இலக்கணம் எப்பொழுதும் பொருந்துவதாகக் கொள்ளலாம்.

தெய்வச்சிலையார் இயற்பெயர்கள் பன்மைவிகுதி ஏற்று வருவதைச் சுட்டிக்காட்டியதோடு அதற்கான காரணத்தையும் விளக்கியுள்ளார். இது மேலே குறிப்பிட்ட பண்பிலிருந்து மாறு பட்டது; சிறப்பானதும் கூட.

> சாத்தன் என்னும் பெயருடையார் இருவர் மூவர் சேர வந்தவிழிச் சாத்தன் வந்தான், சாத்தன் வந்தான் எனத் தனித்தனிக் கூறின் பொருள் வேற்றுமை உணர்த்தாது ஒரு பொருளை இருகாற் சொன்னாற்போலப்படும். ஆண்டுச் சாத்தன்மார் வந்தார். சாத்திமார் வந்தார் எனக் கூறுதல் வேண்டுதலாலும் அப்பொருள் உயர் திணை ஆகலானும் . ஓதப்பட்டது

என்பது தெய்வச்சிலையார் வாசகம் (பெயர். 11. உரைவிளக்கம்). இங்கு முதலில் காரணம் கூறப்பட்டு அது ஒட்டிய மொழி அமைப் பில் எழும் பிரச்சனையும் அதற்கு உரிய பதிலும் கூறப்பட்டுள்ளன. உலகில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் தனித்தனிப் பெயர்கள் இயற்பெயராக அமைவது இல்லை. ஒரு பெயர் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்களின் இயற்பெயராக அமைந்துவிடுகிறது. அந்த உலக வழக்கை ஒட்டி இயற்பெயர் பன்மை ஏற்றுவந்திருக் கிறது என்பதே தெய்வச்சிலையார் வாதம் அதாவது இலக்கண ரீதியில் சொன்னால் இயற்பெயர் பொதுப்பெயராக மாறிவிட்ட தால்தான் பன்மை ஏற்றுவந்திருக்கிறது என்று நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

## 4.1.2 சினைப்பெயர்

இளம்பூரணர் முடவன் (ஆண்), முடத்தி (பெண்), நெடுங் கழுத்தல் (பன்மை), செவியிலி (ஒருமை) என்ற உதாரணங்களை மட்டுமே கொடுத்துள்ளார். இவைகளில் நெடுங்கழுத்தல் என் பதே சினைப்பெயர்: பிறசொற்கள் எப்படி சினைப்பெயராகும் என்ற கேள்வி எழுகிறது. அவை உறுப்புக்குறைவு உடைய மனி தனைக் குறிக்கும் சொற்கள். எனவே இவை இரண்டு சந்தே கத்தை எழுப்புகின்றன. சினைப்பெயர் என்பது 1) சினைக் குறைவை-சினையது விகாரத்தைக் குறிக்குமா? 2) சினையை உடைய முதலை-சினை முதலை அது எப்படிச் சுட்டும்?

இளம்பூரணர் தந்த உதாரணங்களைச் சேனாவரையர் அப் படியே ஏற்றுக்கொண்டதால் அவைகளை நியாயப்படுத்த அதே அடிப்படையில் சினைப் பெயருக்குப் பொது விளக்கத்தைச் சேர்த் துள்ளார். 'சினை உடைமையாகிய நிமித்தம் பற்றி முதன் மேல் வரும் பெயர்' என்பது சேனாவரையர் வாசகம். பொதுவாக அவர் உரையைப் படித்தால் நாம் மேலே எழுப்பிய பிரச்சனை

சேனாவரையர் கண்ணுக்குப் படவில்லை என்றே தெரிகிறது. நச்சினார்க்கினியரும் சேனாவரையர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளார்.

தெய்வச்சிலையார் 'சினைப் பெயராவது உறுப்பின் பெயர்' என்று விளக்கி (பெயர்.20) மோவாய் (ஆண்), முலை (பெண்), கை (ஒருமை) தலை (பன்மை) என்ற உதாரணங்களையும் கொடுத்துள்ளது இளம்பூரணருடைய உதாரணமும் சேனாவரை-யருடைய விளக்கமும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு அவர்களுடைய உரையில் உள்ள பிரச்சனையை உணர்ந்து கொண்டுள்ளார் என்பதையும் புலப்படுத்தி விடுகிறது, அங்குச் சினைப்பெயருக்கு நேரடிப்பொருள் கொண்டு உதாரணமும் (பெயர்.23) கொடுத்தால் மேலே எழுப்பிய பிரச்சனை எழாவிட்டாலும் அவர் உரையில் வேறு சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன. 1) 'மோவாய்' என்பதன் பொருள் என்ன? 'வாய்க் குக்கீழுள்ள இடம்' என்ற பொருளும் (–குச்சின் இரைத்த குரூஉ மயிர் மோவாய்' புறம். 257) 'தாடி' என்ற பொருளும் உடையதாகச் சென்னைப்பல்கலைகழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. மோவாய் என்பது ஆண்மைச்சினைப் பெயர் என்பதால் 'தாடி' என்ற பொருளே இங்குக்கொள்ளவேண்டியிருக்கிறது. 2) ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள சிறப்பு உறுப்புகளை ஆண்மைச்சினைப் பெயர், பெண்மைச்சினைப் பெயர் என்று எப்படிக் கூறலாம் 3) கையும், தலையும் எப்படி முறையே ஒருமைச்சினைப்பெயர், பன்மைச்சினைப்பெயர் ஆகும். தெய்வச் சிலையாரே இரண்டாவது கேள்வியை நினைத்துப்பார்த்து சமாதானம் சொல்லியுள்ளார். அவர் பெண்பாலைக்குறிக்க 'முலை எழுந்தாள்' என்றும் அஃறிணையைக் குறிக்க 'முலை எழுந்தது என்று உதாரணம் தந்து விட்டு

> முலை எழுந்தது எனத் தன்வினையான் வரின் அஃறிணைப் பொருளேயாம் பிற எனின், முலை என்பது இருதிணைப் பொருட்கும் உள்ளதோர் உறுபாதலின் ஆண்டு திணை தெரியாமல் பொதுப்பட நிற்கும்: அது முதல் வினையோடு முடியினல்லது திணை விளங்காது என்க,

என்று விளக்கமும் தந்துள்ளார் (பெயர்.26). இதன்படி முலை

என்பது சினைப் பெயராயினும் முதலுக்கு உரிய வினையோடு கூடித்தான் பால்உணர்த்துகிறது என்பதால் சினையாகுபெயராய் முதற்பெயரைக் குறிப்பதால் உயர்திணையிலும் அஃறிணையிலும் பயன்படுகிறது என்று ஆகிறது. எனவே 'முலை' என்பது சினைப் பெயராயினும் பால் வேறுபாடு உணர்த்தசினை முதற் பெயராக மாற வேண்டியிருக்கிறது.

'மோவாய்' என்ற சொல்லைப் பொறுத்தவரையில் 'மோ வாய் வந்தான்' என்ற உதாரணமும் மேலே குறிப்பிட்ட வகை யைச் சார்ந்தது தான்.

'குன்றியன்ன கண்ண குரூஉ மயிர் பின்றாள் வெள்
ளெலி மோவாய்' ஏற்றை எனவும்
'முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை' எனவும்
அஃறிணைப் பொருண்மை உணர்த்தின'

என்று தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார். ஆனால் மோவாய் என்பதால் அஃறிணை பெறப்பட்டது. அவ்வளவு சிறப்பாக இல் லை. எப்படியாயினும் சினைப் பெயர்களை ஆண்பாற் பெயர் பெண்பாற்பெயர் என்று பிரித்தது மொழி அமைப்பை ஒட்டிய பாகுபாடாகக் கொள்ளமுடியுமா என்பது சந்தேகமாக இருக்கி றது. கை என்பதைத் தனி உறுப்பாகக் கருதி ஒருமைச்சினைப் பெயர் என்றும் தலை என்பது கண், செவி, வாய் போன்ற பல உறுப்புகள் சேர்ந்த பகுதியானதால் பன்மைச்சினைப் பெயர் என் றும் கருதினரா என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஆனால் இவை மொழி அமைப்பில் எப்படி வேறுபடுகின்றன என்று காட்டினால் தான் இந்தப் பாகுபாடு சரியானதாக ஏற்றுக்கொள்ளமுடியும். எனவே சினைப்பெயரை நான்கு வகையாப் பிரித்தது மொழி யமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டியதாகக் கருத முடிய வில்லை. இந்தப் பாகுபாடு செய்ததற்கு வேறு ஏதாவது - தர்க்க ரீதியாகவோ தத்துவரீதியாகவே காரணம்இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முயலவேண்டும் மொழி இலக்கணம் சில சமயத்தில் வெறும் மொழியமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டி அமை யாமல் வேறு அடிப்படையிலும் அமைவது உண்டு. இதற்குக் காரணம் இலக்கண ஆசிரியன் வழக்குகளை மட்டும் கொண்டு

இலக்கணம் செய்யாமல், தன்னுடைய சிந்தனையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் செய்வதும் உண்டு.[8]

தெய்வச்சிலையாரைப் பொறுத்த வரையில் இளம்பூரணர் சினைப் பெயருக்குக் கொடுத்த உதரரணங்களைச் சினைமுதற் பெயர்களுக்கு உரியவையாகக் கொண்டுள்ளார். அங்கு பன்மைச் சினை முதற்பெயருக்கு மட்டும் வேறு உதாரணம் கொடுத்துள் ளார். இதுபற்றி அடுத்த பிரிவில் விளக்கப்படும். மேலும் பிற்கால இலக்கணஉரைகளும் இளம்பூரணர் கருத்தையே ஆதரித்து நாம் மேலே எழுப்பிய பிரச்சனைகள் பற்றிக் கவலைப்படாமல் இருந்து விட்டன. ஆனால் வைத்தியநாததேசிகர் மட்டும் இலக்கணவிளக்க உரையில் நாம் மேலே எழுப்பிய உறுப்புக் குறைவு எப்படி சினைப் பெயராகும் என்ற கேள்வியை நினைத்துப் பார்த்து (இ.வி.185) 'முடம் என்பது சினையது விகாரம் ஆதலின் சினை ஆயிற்று' என்ற விளக்கத்தைத் தந்துள்ளார். அப்படியானால் உறுப்புக் குறைவைக்குறிக்கும் சிலசொற்களே சினை என்பதையும் குறிக்கும் என்று ஆகிறது. - புறநானூற்றில் (28.1.3)

சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
என் பேரெச்சம்

என்று எட்டுவகை உறுப்புக் குறை பேசப்படுகிறது.

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் ... ..... சிலம்பு 5.118
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்றுயிர் பெறா மணி. 12.97

என்ற வரிகளும் பழந்தமிழகத்தில் உறுப்புக் குறைவு பற்றிய எண்ணம் பரவலாக இருந்ததைக் காட்டுகின்றன. ஒன்றுக்கு மேற்

8 சங்கத்தமிழில் இறப்பு, இறப்பல் காலம் (Non past tense) என இரண்டுதான் இருந்தாலும் இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் என்று மூன்று காலம் தொல்காப்பியர் கூறியது நேரம் (time) காலம் (tense) அல்ல என்று சமாதானம் சொல்வார்கள். இதற்குக் காரணம் பொதுச் சிந்தனையே தவிர மொழி அமைப்பை ஒட்டிய சிந்தனை அல்ல என்பது தான். இதற்கு நெருநல் (நேற்று), இன்று, நாளை என்ற நேர வேறுபாடும் ஒரு காரணமாகலாம்,

பட்ட உறுப்புக்குறைவும் 'கையில் ஊமன்' (குறுந். 58.4); 'கண்ணில் ஊமன்' (புறம். 238:10) என்று இலக்கியத்தில் குறிக்கப் பெற்றுள் ளன. இப்படிப்பட்ட உறுப்புக் குறைவைச் சினைப்பெயர்கள் குறிக் கிறது என்றால் ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப் பெயர், ஒருமைச் சினைப்பெயர் போன்ற பாகுபாடு செய்தது பற்றியும் அவை திணை விரவி வருவது பற்றியும் பிரச்சனைகள் எழுகின்றன. எனவே இவை பற்றி மேலும் ஆராய வேண்டும்.

அடுத்து, தொல்காப்பியர் பிற இடங்களில் எப்படி, சினைப் பெயர் என்பதைப் பயன்படுத்தியுள்ளார் என்று பார்ப்போம். கிளவியாக்கத்தில் (61)

கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவி

என்பது சினைநிலைப் பெயர்களே ஆகும். அவை இரட்டையாக இருப்பதால் தொடரியலில் ஒருமை வினைமுற்று ஏற்று வரும் என்று குறிப்பிட்டுள்ளார். பெயரியலில் உயர்திணைப் பன்மைப் பெயர் களின் பட்டியலில் பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர் (11.4) என்று கூறுவது பலர்பால் விகுதி ஏற்ற சினைப்பெயர்களே. அதனால் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோரும் பெருங்காலர், பெருந்தோளர் என்ற உதாரணங்களையும் (அதாவது வெறும் சினைப்பெயர்களா அல் லது சினைப் பெருக்கத்தைக் குறிக்கும் பெயர்களா என்பது சந் தேசமாக இருக்கிறது) தெய்வச்சிலையார், கூனர், குருடர், முட வர் ஆகிய உதாரணங்களையும் (அதாவது சினைக் குறையைக் குறிக்கும் பெயர்களையும்) தந்துள்ளார்கள்.

பன்மை சினைப்பெயர் என்பதற்குக் கிளவியாக்கச்சூத்திரத்தில் குறிப்பிட்டகண், முலை, தோள் போன்ற உறுப்புகளைக் குறிப் பதாகக் கொள்ளலாமா என்பதும் ஆராயதகுந்தது. எப்படியாயி னும் முடவன், முடத்தி, செவியிலி போன்ற சொற்களைச் சினைப்பெயர்களாகக் கொள்வது மேலே குறிப்பிட்ட பிரச்சனை களுக்கு இடம் அளிக்கும்.

### 4.1.3 சினைமுதற் பெயர்

சீத்தலைச்சாத்தன், முடக்கொற்றன் (ஆண்), முடக் கொற்றி (பெண்), கொடும்புறமருதி (ஒருமை), பெருங்கால்யானை (பன்மை) என்று இளம்பூரணர் கொடுத்த உதாரணங்களையே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இவர்கள் 'சினை' என்பதற்கு உறுப்புக் குறைவு அல்லதுஉறுப்புப்பெருக்கம் (பெருங்கால்என்பது உறுப்புப் பெருக்கத்தைக்குறிக்கும்?) என்றும் முதற்பெயர் என்பது ஆண், பெண், பன்மைபெயர்களில் இயற்பெயரையும் ஒருமைப்பெயரில் தொழிற் கருத்தா (Agentive suffix) விகுதியையும் குறிப்பதாகக் கொண்டுள்ளார்கள். இங்கு 'முதற்பெயர்' என்பது இயற்பெயரா கக்கருதப்பட்டுள்ளது. நன்னூலார் (சூ282.1 இயற்பெயரை 'முதற் பெயர்' என்றே கூறியிருப்பதும் மேலே எடுத்துக்காட்டப் பட்டது. சேனாவரையருடைய சினை முதற்பெயர் விளக்கம் அதிகபட்சம் ஆண்மை, பெண்மை, பன்மைப்பெயர்களுக்கே பொருந்துவதாக உள்ளது.

> சீத்தலைச்சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதி என்னும் முதற்பெயர் சினைப்பெயரொடு தொடர்ந்து அல்லது பொருள் உணர்த்தாமையின் சினை முதற்பெயர் ஆயின

என்பது சேனாவரையருடைய வாசகம். நச்சினார்க்கினியரும் இதே கருத்தையே சிறிது திருத்தத்தோடு கொடுத்துள்ளார்.

> சீத்தலைசாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப் பெயரோடு தொடர்ந்த அல்லது பொருள் உணர்த்தாது வரும் இயற்பெயராகிய முதற்பெயர்

கொடுத்தவிளக்கப்படி என்பது நச்சினார்க்கினியர் வாசகம், இவர் கள் செவியிலி என்பது ஒருமைச் சினை முதற்பெயராகக் கொள்ள முடியாது. முதற்பெயர் என்பதற்கு முதற்பெயரைக் குறிக்கும் விகுதிகள் (அன். அள், இ முதலியனவற்றைக் குறிக்கும்) என்று கொண்டால் தான் முடக்கொற்றன் முதலிய சொற்களும் செ வியிலி முதலிய சொற்களும் சினைமுதற்பெயரில் அடங்கும். இத னால் முடவன், முடத்தி போன்ற சொற்களும் கூட சினை முதற் பெயரில் சேர்க்கும் தகுதி பெறும்.

முடக்கொற்றன், முடவன் என்ற சொற்கள் சொல்லமைப்பில் வேறுபட்டவையே. முடக்கொற்றன் என்பது இரண்டு முழு பெயர்சொல்பெற்றுத் தொகையாக உள்ளது (எனவே தொடரியலைச் சார்ந்தது). முடவன் என்பது ஒரு முழுப்பெயர்ச்சொல்லும் ஒரு விகுதியும் உடையது. (எனவே சொல்லியலைச் சார்ந்தது). முடக்கொற்றன் என்பது சிறப்புப்பெயர். முடவன் என்பது பொதுப்பெயர். ஆயினும் இரண்டையுமே ஆண்மைச் சினை முதற்பெயர்களாகக் கருதலாம். சினைப்பெயரை உறுப்புக்குறையைக் குறிக்கும் பெயர் என்னும்போது சினைமுதற்பெயர் அதனை யொட்டிய பொதுப்பெயராக அமையலாம். அதனால் தான் தெய்வசிலையார் 'சினைமுதற்பெயராவது சினையையும் முதலையும் உணர்த்தும் பெயர்' என்றும் விளக்கம் கொடுத்து முடவன் (ஆண்), முடத்தி (பெண்), செவியிலி (ஒருமை), தூங்கல் (பன்மை) ஆகிய உதாரணங்களையும் கொடுத்துள்ளார். இங்கு தூங்கல் என்பது எப்படிப் பன்மை சினைப்பெயராக ஆகும் என்பதும் ஏனைய பெயர்கள் திணை எப்படி விரவிப்பயன்படும் என்பதும் ஆராயத்தக்கன. தூங்கல் என்பதற்கு சினை முதற் பொருள் உடையதாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்பேரகராதி குறிப்பிடவில்லை. இவை எப்படி திணை விரவி வருகிறது என்று அடுத்தபிரிவில் விளக்கப்படும்.

### 4.1.4 முறைப்பெயர்

முறைப் பெயரின் பொருள் பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை, எனினும் உரையாசிரியர்கள் தரும் விளக்கம் குறிப்பிடத்தகுந்தது.

> முறைப் பெயராவன தந்தை, தாய் என முறை பற்றி முறையுடைப் பொருள் மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒருவனோடு ஒருவருக்கு வரும் இயைபு

என்று சேனாவரையர் கூறுவது பொருள்நிலையில் தரும் விளக்கம். மொழி அமைப்பு நிலையிலும் முறைப்பெயர் பிற உயர் திணைப்பெயர்களிலிருந்து வேறுபட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது. அது புறநிலையில் நான்காம் வேற்றுமை உருபேற்ற பெயரைத்தழுவி வரும். எனக்கு மகன், கண்ணனுக்குத் தந்தை. எனவே முறைப் பெயரைத் தனி வகையாகக் கருதுவது இலக்கண ரீதியிலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. மேலும் தொல்காப்பியர் விளிமர

பில் உயர்திணைப் பெயர்களோடு சேர்த்துக் கூறியதன் நுட்பம் அறியத்தகுந்தது (சண்முகம், வெளிவர இருப்பவை, ஆ).

முறைப்பெயரில் தொல்காப்பியர் ஆண், பெண் என்ற இரண்டு பாகுபாடே குறிப்பிட்டுப் பன்மை, சிறப்பாக-பலர்பால் விகுதி ஏற்று வருவதைத் தனியே உயர்திணைப் பெயர்களின் பட்டியலோடு (பெ. 11.3) சேர்த்துக்கூறியுள்ளார். முறைப்பெயர்கள் அடிப்படையில் உயர்திணைப் பெயர்கள் என்பது இதனால் தெளிவாகிறது.

## 4.2 திணை விரவி வரும் முறை

விரவுத்திணைச் சொற்கள் எப்படித் திணை விரவி வருகின்றன என்பதைப் பெயரியல் 26 முதல் 29 வரையுள்ள சூத்திரங்கள் வருணிக்கின்றன. இவைகளை உரையாசிரியர் 'இரு திணையும் பால் உணர்த்துமாறு' என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். வினையியலிலும் விரவு வினை என்னென்ன என்பது ஒரு சூத்திரத்தில் தொகுத்துக் கூறப்பட்டு (சூ. 25) அடுத்த ஐந்து நூற்பாக்களில் (26-30) அவை எப்படித்திணை விரவி வரும் என்பதும்விளக்கப்பட்டுள்ளன.

பெயரியலைப் பொறுத்தவரையில் விரவுப் பெயர்களின் வகையையும் தொகையையும் விரிவையும் கூறிய தொல்காப்பியர் அவைகளைப் பால் அடிப்படையில் மறுபாகுபாடு செய்தே திணை விரவி வரும் முறையை விளக்குகிறார். இயற்பெயர் சினைப் பெயர் என்று முதலில் பாகுபாடு செய்தவர் அவைகளின் விரியைப் பெண்மை சுட்டிய பெயர், ஆண்மை சுட்டிய பெயர் போன்று மறு பாகுபாடு செய்து பின்னரே இவை ஒவ்வொன்றும் எப்படித்திணை விரவி வருகின்றன என்பதை விளக்குகிறார். எனவே நாமும் தொல்காப்பியர் செய்த மறுபாகுபாட்டை ஒட்டித் திணை விரவிவரும் முறையைப் பார்க்கலாம்.

### 4.2.1 பெண்மை சுட்டிய பெயர்கள்

பெண்மை சுட்டிய பெயர்கள் என்று பொதுவாகக் குறிப்பிட்டதை முன்னைய சூத்திரங்களின் கருத்தை ஒட்டி இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர், முறைப்பெயர் ஆகிய நான்கு வகையிலும் உண்டு என்பதை உரையாசிரியர்

கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள் அந்தப் பெயர்கள் ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே (26.2) என்று தொல்காப்பியர் கூறியதை 'அஃறிணைப்பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய' என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார்.

| | | | அஃறிணை | உயர்திணை |
|---|---|---|---|---|
| இயற்பெயர் | : | சாத்தி | வந்தது | வந்தாள் |
| சினைப்பெயர் | : | முடத்தி | ,, | ,, |
| சினைமுதற்பெயர் | : | முடக்கொற்றி | ,, | ,, |
| முறைப்பெயர் | : | தாய் | ,, | ,, |

சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றுக்கும் உயர்திணையிலும் அஃறிணையிலும் இலக்கியச்சான்று கண்டுபிடிக்க முடியவில்லை. தாய்/குழவி/ஆகிய இரண்டு முறைப்பெயர்களும் திணை விரவி வந்துள்ளதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

சிறு தாம்பு தொடுத்தப் பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
... ......

இன்னே வருகுவர் தாயர் என்போர்' (முல்லைப்பாட்டு 12-16) இங்கு 'கன்றின் தாய்' என்பதால் 'தாய்' அ.'.றிணையில் கையாளப்பட்டுள்ளது.

நல்லான் நடுங்கு தலைக் குழவி
தாய் காண் விருப்பின் அன்ன

என்ற குறுந்தொகைப் பாடலிலும் (132:4,5) 'ஆன் குழவி தாய்' என்பது அஃறிணை வழக்கே.

'புதல்வன் தாய் புறங் கவைஇயினளே' (குறுந். 359-6) என்ற வரியில் 'புதல்வன்தாய்' என்பதோடு 'தாய் ...கவைஇயினள்' என்பதாலும் 'தாய்' உயர்திணை என்பது வெளிப்பட்டு விடுகிறது.

### 4.2.2 ஆண்மை சுட்டிய பெயர்கள்

இந்தப் பெயர்களும் நான்கு வகையாகி அஃறிணை ஆண்பாலாகிய ஒன்றுக்கும் உயர்திணை ஆண்பாலுக்கு வரும். இளம்பூரணர் தரும் உதாரணம்:

| | | அஃறிணை | உயர்திணை |
|---|---|---|---|
| இயற்பெயர் | சாத்தன் | வந்தது | வந்தான் |
| சினைப்பெயர் | முடவன் | ,, | ,, |
| சினைமுதற்பெயர் | முடக்கொற்றன் | ,, | ,, |
| முறைப்பெயர் | தந்தை | ,, | ,, |

அப்பூதி அடிகள் வரலாறு மூலம் திருநாவுக்கரசர் என்ற ஆண்பாற்பெயர் அவர் வீட்டில் இருந்த அளவைகள் (மரக்கால்) நிறைகோல் (தராசு), பசு, எருமை ஆகிய அஃறிணைப் பொருட்கு மட்டும் அல்லாமல் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டன என்று அறிய முடிகிறது.

……மனை பால் உள்ள
அளவைகள், நிறைகோல், மக்கள் ஆவொடு, மேதி மற்றும்
உளவெல்லாம் அரசின் நாமம் சாற்றும் ஒழுகலாற்றான்

என்று பெரியபுராணமும் (1784) விளக்குகிறது.

சங்க இலக்கியத்தில் ஊமன் என்பது உயர்திணையாக வழங்குகிறது. 'கையில் ஊமன் கண்ணிற் காக்கும்' (குறுந். 584). இங்கு ஊமன் உயர்திணைப் பெயராகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. குறுந்தொகையிலே (224-5) வரும் 'உயர்திணை ஊமன்போல' என்ற தொடரில் உயர்திணை என்ற அடை பயன்படுத்தப்பட்டிருப்பது ஊமன் என்ற பொதுச் சொல் (உயர்திணைக்கும் அஃறிணைக்கும்) என்பதைக் காட்டுகிறதா அல்லது உரையாசிரியர் கூறுவது போல ஊமன் (கோட்டான்) என்ற அஃறிணைச் சொல்லை நீக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பது தெளிய முடியவில்லை. 'ஊமை எண்கு' (பத்து. 10-501) என்ற தொடரில் ஊமை என்ற சினைப்பெயர் அஃறிணைப் பெயரோடும் வந்துள்ளது என்பது தெளிவாகிறது

வன்பறழ் தந்தைக் கடுவன் (குறுந். 26.7.8) என்ற தொடரில் 'தந்தை' அஃறிணை ஆண்பாலையே சுட்டுகிறது. 'குறுந்தொடி தந்தை ஊரே' (குறுந். 233 7), 'சேந்தன் தந்தை' (குறுந். 253 4) என்ற தொடர்களில் அது உயர்திணைப் பெயராகவே உள்ளது.

### 4.2 3 ஒருமை சுட்டிய பெயர்கள்

ஒருமை சுட்டிய பெயர்களில் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் அடங்கும். இவை அஃறிணை ஒன்றன் பாலுக்கும் உயர்திணையில் ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் வரும்.

ஒருமை இயற்பெயர் என்பதற்கு ஊர்ப்பெயர், ஆறுகளின் பெயர் முதலியன என்று கொண்டால் அவை எப்படி உயர் திணையில் ஆண்பால் இயற்பெயராகவும் பெண்பால் இயற்பெய ராகவும் வரும் என்பது மேலே காட்டப்பட்டது.

சினைப் பெயர்களில் செவியிலி என்பதை உதாரணமாகக் கொண்டு இளம்பூரணர் உதாரணம் காட்டியுள்ளார். ஒருமை சுட்டிய சினைப்பெயரும் சினை முதற்பெயரும் எது என்பதே தடுமாற்றமாக இருப்பதால் அவை எப்படி இரண்டு திணைக்கும் வரும் என்பதும் விவாதத்துக்கு உரியது.

### 4 2.4. பன்மை சுட்டிய பெயர்கள்

பன்மை சுட்டிய பெயர்கள் எதைக் குறிக்கின்றன என்பது தெளிவு இல்லாததால் எப்படி இரண்டு திணைக்கும் வருகின்றன என்பதும் கேள்விக்குறியே. எனினும் இவை உயர்திணையில் ஆண்பால், பெண்பாலுக்கும் அஃறிணையில் ஒன்றன்பால், பல வின்பாலுக்கும் ஆகிய நான்கு பாலுக்கும் பொதுவாக வரும் என்று கூறியுள்ளார் (பெயர் 28.)

இனி விரவுப் பெயர்களாகக் கூறிய தனிப்பெயர்கள் எப்படித் திணை விரவி வருகின்றன என்று பார்ப்போம்.

### 4.2.5 தான்/தாம்

தான் என்பது 'ஒருமைக்கு உரித்து' (பெயர். 31) தாம் என்பது 'பன்மைக்கு உரித்து' (பெயர். 30) என்று மட்டுமே தொல்காப்பியர் கூறியுள்ளார். இளம்பூரணர்தான் அவை இரு திணைக்கும் முறை யே ஒருமைக்கும் பன்மைக்கும் உரித்து என்று விளக்கி

தான் வந்தான்/ வந்தாள்/ வந்தது
தாம் வந்தார்/ வந்தன

என்று உதாரணங்களைக் கொடுத்துள்ளார். இதனால், தான் என்பது ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பாலுக்கும் தாம் என்பது பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பாலுக்கும் உரியன என்ற உண்மை தெளிவாகிறது. இரண்டு சொற்களும் இரண்டு திணையிலும் வருவதால் விரவுப்பெயர் ஆயிற்று.

| | |
|---|---|
| 'அறியான் தானும்' ...... ஆண். | குறுந். 74-3 |
| 'தானே அளியளோ' ...... பெண். | ,, 56. 5 |
| 'தான் வந்தன்றே ...... கார்' ஒன்று. | ,, 65. 3 |
| 'சேந்தனர் கொல்லோ தாமே' | |
| (சிறப்பு ஒருமை) — பலர். | ,, 79.6 |
| 'தாமே செல்ப' ,, | ,, 348.1 |
| 'நெஞ்சம் தாம் கலந்தன' பல. | ,, 40.5 |

### 4.2.6 எல்லாம்

'எல்லாம்' என்பது பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே என்று (பெயர் 23.1) பொதுவாகவும் உயர்திணையில் தன்மைப்பன்மையில் வரும் என்று சிறப்பாகவும் (பெயர் 33) தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆனால் உரையாசிரியர்கள் 'எல்லாம்' என்பது எப்படி திணை விரவி வரும் என்பதில் கருத்து மாறுபடுகிறார்கள். இதில் இளம்பூரணர் கருத்தையே சேனாவரையர். நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஆதரித்துள்ளார்கள்; தெய்வச்சிலையார் கொஞ்சம் மாறுபட்ட விளக்கமும் சுப்பிரமணிய சாஸ்திரியார் வேறு விதமான விளக்கமும் கொடுத்துள்ளார்கள்.

#### 4.2.6.1 இளம்பூரணர்

இவர் 'எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தனர் எல்லாம் வந்தன' என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளதால் தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை, பலர்பால், பலவின்பால் ஆகிய நான்குக்கும் வரும் என்று கருதுகிறார் என்பது தெளிவாகிறது.

#### 4.2.6.2 தெய்வச்சிலையார்

> எல்லாம் வந்தன, எல்லாம் வந்தீர் என்றவழி அஃறிணைப் படர்க்கையினும் முன்னிலையிலும் வந்தது. எல்லாம் வந்தேம் என்றவழி உயர்திணை ஆயிற்று

என்று தெய்வச்சிலையார் விளக்கியதோடு உயர்திணையில் பலர் பாலில் 'எல்லாம்' என்பது வராது என்பதை வாதப் பிரதிவாதங் களோடு விளக்கியுள்ளார். அவையாவன:

> 1) உயர்திணைக்கண் எல்லாரும், எல்லீரும் என எடுத் தோதி ஆண்டுத் தன்மைப்பெயர் ஓதாமையானும், 2) எழுத்ததிகாரத்துள் எல்லாம் என்னும் பெயர்க்கு வற்றுச் சாரியை விதித்து உயர்திணையாயின் நம்மிடை வரும் (எழுத்து 190) என ஆண்டும் உளப்பாட்டுத் தன் மைக்கு ஏற்ற சாரியை வரும் என விதித்தமையானும் இப்பெயர் உயர்திணைக்கண் உளப்பாட்டுத்தன்மைக்கே உரித்து என்பது இவ்வாசிரியர் கருத்து என்று கொள்க;

என்பது தெய்வச்சிலையார் வாசகம். இங்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று எதிர்மறைக் காரணம் அதாவது முழு மைப் பதிலீட்டுப் பெயர்களில் உயர்திணைப்பெயர்களாகப் படர்க்கை முன்னிலை முழுமைப் பதிலீட்டுப் பெயர்கள் எடுத்து விளக்கப்பட்டுவிட்டன. எனவே உயர்திணையில் தன்மைப்பன்மை மட்டுமே இன்னும் விளக்கப்படவேண்டியுள் ளது என்பது. அடுத்தது உடன்பாட்டுக் காரணம்: அதாவது எழுத்ததிகாரத்தில் 'எல்லாம்' என்பது தன்மைப் பன்மையாகவும் பலவின் பாலாகவும் மட்டுமே வருணிக்கப் பட்டுள்ளது. இந்தக் கருத்துகள் ஒத்துக் கொள்ளத்தக்கது தான். ஆனால் இந்த வாதங் களின் அடிப்படையில் 'எல்லாம் வந்தீர்' என்பது எப்படிப் பொருந்து என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் அவர் கருத்துப்படி எல்லீரும் வந்தீர்; எல்லாம் வந்தீர் என்று இரண்டு முன்னிலைப் பன்மை வடிவங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அப்படியானால் உயர் திணை முன்னிலை, அஃறிணை முன்னிலை என்ற இரண்டு பன் மைகள் வருகின்றன. எனவே எல்லாம் வந்தீர் என்ற தொடர் சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது

### 4.2.6.3. சுப்பிரமணியசாஸ்திரி

சுப்பிரமணியசாஸ்திரி (1945) 'யாம் எல்லாம் வந்தேம், அவை எல்லாம் வந்தன' என்று தன்மைப்பன்மைக்கும் அஃறிணைப் பன்மைக்கும் ஆக இரண்டு உதாரணங்களைக் கொடுத்திருந்த போதிலும் இங்கு அவை பெயரடைகளாகப் பயன்படுத்தப்பட் டிருக்கின்றனவே தவிரத் தனிப்பெயராக அல்ல. இங்குத் தொல்காப் பியர் குறிப்பிடுவது தனிப்பெயராக வருவது தான், உரையாசிரி

யர்கள் அனைவரும் 'எல்லாம்' என்பது தனிப்பெயராகப் பேசுவ தாலும் அதை முழுமைப் பதிலீட்டுப் பெயர் (pronouns of totality) என்று அவரும் (சுப்பிரமணியசாஸ்திரி 1934:134) பிறரும் (உ-ம் அகத்தியலிங்கம், 1979:129) கருதுவதாலும் தனியாகப் பதிலீட்டுப்பெயராக வருவதே இங்குக் கருதப்படவேண்டும். அப்படியானால்

எல்லாம் வந்தேம் — தன்மைப் பன்மை
எல்லாம் வந்தன -- பலவின்பால் (படர்க்கை)

என்ற உதாரணங்களே பொருந்துவதாகவும், பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே என்பது பன்மைப்பொருளில் தன்மை பன்மை, பலவின்பால் ஆகிய இரண்டில் மட்டுமே வரும் என்று சுட்டுவ தாகவும் கொள்ளவேண்டும். இலக்கியவழக்கும் இந்த கருத்துக்கு அரண் செய்கிறது.

எல்லாம் பாடுகம் (வம்மினோ, பரிசின்மாக்கள்) -- புறம் 32.1 - தன்மைப்பன்மை

எல்லாம் எவனோ (பதடிவைகல்)- குறுந் 321.1 - பலவின் பால்

இவை அல்லாமல் 'எல்லாம்' என்பது தொடரல் உருபனாக (discontinuous morpheme) பெயருக்கு முன்னால் (இடமுன்) வரும்.

எல்லா மனையும் -- புறம் 296.3.

இந்தப் பெயரடையே பெயருக்குப் பின்னால் (குஞ்சரம் எல்லாம். புறம் 308.11) வருவதும் உண்டு. தொல்காப்பியர் பெயரடை யாக-பெயர்க்கு பின்னால் வருவதுபற்றிப் பேசவே இல்லை. பெயர்க்குப்பின்னால் வரும் பெயரடை பற்றி உரையாசிரியர் களிடையே உள்ள கருத்து வேறுபாடு தனி ஆராய்ச்சிக்கு உரியது.

### 4.2.7 முன்னிலை

முன்னிலைப் பெயர்களோடு முன்னிலை வினையும் எப்படி திணை விரவி வருகின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருப்ப தால் இரண்டையும் சேர்த்தே பார்க்கவேண்யிருக்கிறது.

## 4 2 7 1 தொல்காப்பியர்

நீ, நீயிர் என் இரண்டு பெயர்களும் பால் தெரிபில உடன் மொழிப்பொருளே' (பெயர் 34.2) என்று தொல்காப்பியர் கூறுவது அவை பால் காட்டவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. ஆனால் அவரே நான்கு சூத்திரம் தாண்டி முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல் (37.2) என்று அவை பால் உணர்த்தும் முறையைக் கூறியுள்ளார். மேலும் இரண்டு சூத்திரங்களில் நீ என்பது ஒருமைக்கும் நீயிர் என்பது பன்மைக்கும் உரியதாக விளக்கியுள்ளார். வினையியலிலேயே முன்னிலை ஒருமை வினை முற்று 'ஒருவர்க்கும் (உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும்) ஒன்றற்கும் (ஒன்றன் பாலுக்கும்) ஒப்பத் தோன்றும்' (26 3) என்றும் அப்படியே முன்னிலைப்பன்மை வினைமுற்று பலர்பாலுக்கும் பலவின்பாலுக்கும் 'சொல்லோர் அனைய' (27.3) என்றும் விளக்கியுள்ளார். இவற்றால் தொல்காப்பியத்தில் படிப் படியாகத்தான் திணை விரவிவரும் முறை விளக்கப்பட்டிருப் பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் முதலில் பால் காட்டாது; 'எண்' மட்டும் காட்டும் என்று கூறிப் பின்னர் குறிப்பால் பால் உணர்த்தும் (இது விரிவாகப் பின்னால் விளக்கப்படும்) என்றும் வினையியலில் இரண்டு திணைக்கும் பொதுவாக வரும் என்றும் கூறுகிறார். ஆனாலும் உண்டனை போன்ற முன்னிலை வினை முற்று எப்படி மூன்று பால் பெயர்களுக்குப் பொதுவாகவரும் என்பதும் சந்தேகப்படவேண்டியிருக்கிறது. எனவே உரையாசிரி யர்கள் எப்படி விளக்குகிறார்கள் என்பதை முதலில் பார்த்து பிறகு உண்மை என்ன என்று அறிய முயலுவோம்.

## 4.2.7.2. இளம்பூரணர்

'பால்தெரிபிலவே உடன் மொழிப்பொருள' என்பதைஇளம்பூர ணர் 'திணைப் பகுதி தெரிய நில்லா; இருதிணையும் உடன் தோன் றும் என்று பொழிப்புரை எழுதி 'நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றவாறு கண்டுகொள்க' என்று (பெயர். 34. ) விளக்கம் எழுதி வாசகர்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் போய்விட்டார். நீ என்பது 'ஒருமைக்கு உரித்தே' (பெயர். 35) என்பதையும் ஒருவன்,ஒருத்தி, ஒன்று என் பவற்றிற்கெல்லாம் பொதுவாகிய ஒருமை என்று விளக்கிவிட்டு

'நீ வந்தாய்' எனக் கண்டுகொள்க' என்று அதே பாணியில் கூறி விட்டார். பெயரியல் 36 ஆம் சூத்திரத்திலும் 'நீயிர் என்பது பன்மைக்கு உரித்தே' என்று அதேமுறையில் விளக்கம் தந்துள்ளார். ஆனால் வினையியலில் வினைமுற்று எப்படி இரண்டு திணைக்கும் பொதுவாக வரும் என்பது பற்றி எந்தவித விளக்கமும் தராமல் போய்விட்டார்.

4 2.7.3. சேனாவரையர்

> இளம்பூரணரை விட மேலே ஒரு படி சென்று இருதிணைக்கும் உரிய பெயரெல்லாம் தத்தம் மரபின் வினையொடு வந்து திணை விளக்குமன்றே; இவற்றிற்கு அன்ன மரபின் வினையின்மையின் ஒருவாற்றானும் திணை விளக்கா

என்று ஆணித்தரமாக சேனாவரையர் சொல்லி விட்டார். தொல்காப்பியரே 'முன்னத்தால்' அவை பால் உணர்த்தும் என்பதால் இவ்வளவு அழுத்தம் அவருக்கு உடன்பாடாக இருக்காது என்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. எப்படியாயினும் இருவரும் முன்னிலைச் சொற்கள் (முன்னிலை வினையும் உட்படத்தான்) எப்படி திணைவிரவி வருகின்றன என்று விளக்கவில்லை; கல்லாடனாரும் சோனவரையாரின் கட்சியே. நச்சினார்க்கினியர் 'நீயிர் வந்தீர், நீ வந்தாய் என வினையாலும் திணை தெரியாமை காண்க' என்னும்போது உண்மையை எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிட்டார். அதாவது இளம்பூரணர் போல் நம்மிடம் எந்தப் பொறுப்பையும் ஒப்புவிக்க வில்லை; சேனவரையர் போல் வினைமுற்றும் பால் காட்டாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறவும்இல்லை அதே சமயத்தில் பொழிப்புரையில் சொன்ன உண்மையை விளக்க வுரையில் நிரூபிக்க அவர் முன்வரவுமில்லை. காரணம் முன்னிலைச்சொற்கள் உண்மையில் அப்படி அமையாததுதான்.

4.2 7 4 தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையாரும் தொல்காப்பியர் கருத்தைப் பொழிப்புரையாக எழுதியதோடு வேறு ஒருசெய்தியும் குறிப்பிடவில்லை. ஆனால் முன்னிலைப் பெயர்கள் பால் உணர்த்தும் விதத்தை முன்னம் சேர்த்து முறையின் உணர்தல் என்று சொன்னதில்

'முறை' என்பது உலக முறைப்படி என்ற பொருளில் பிற உரையாசிரியர்கள் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டும் 'பின்வரும் சொல்' என்று பொழிப்புரையில் பொருள் எழுதி

> நீ அரசன், நீ குயத்தி, நீ கடல் என்பன முறை வந்த சொல்லினால் பால் விளங்கின. நீயிர் என்பதற்கும் இவ்வாறே உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க

என்று விளக்கமும் கொடுத்துள்ளார். இதனால் வினையியலிலும் இதே முறையில் (26)

> உண்டாயோ மகனே, உண்டாயோ மகளே என்ற வழி உயர்திணை உணரப்பட்டது; உண்டாயோ குயிலே என்றவழி அஃறிணை உணரப்பட்டது; உண்டீரோ மக்காள் என்றவழி உயர்திணை உணரப்பட்டது; உண்டீரோ கிளிகாள் என்றவழி அஃறிணை உணரப்பட்டது. உண்டீரோ மக்கள் ஆண்பன்மை, என்றவழி பெண்பன்மை, விளங்கல் வேண்டின் அதனோடு தொடர்ந்த சொல்லான் உணர்க

என்று விளக்கியுள்ளார். அதாவது தெய்வச்சிலையார் இரண்டு திணைக்கும் பெயர் விரவிவரும் என்பனை ஓரளவு நிரூபித்துள்ளார். எனவே இதனுடைய வன்மை மென்மைகளைப் பார்ப்போம். முன்னிலை படர்க்கைப் பெயரை ஏற்ற வாக்கியங்கள் இலக்கிய வழக்கிலும் காணப்படுவது குறிப்பிடத்தகுந்தது.

(வருந்தினை போலு) நீ மாதவி' (சிலம்பு 13. 51) என்பதில் அஃறிணைப் பெயர் (மாதவி) முன்னிலை ஏற்று வந்திருக்கிறது. இது புறநிலையில் சரியான வாக்கியமே. புதைநிலையில் வேறு விதமாக விளக்க வேண்டியிருக்கும் என்பது சுட்டிக்காட்டத் தகுந்தது. ஆயினும் முன்னிலைச் சொற்கள், பிற விரவுத்திணைச் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன. அதாவது ஏனைய விரவுப் பெயர்கள் படர்க்கையில் திணை-பால் விகுதி ஏற்று வந்த வினை முற்றுகளைக் கொண்டு முடிந்தால் அந்தச் சொல்லின் சரியான திணை-பால் உணர்ந்து கொள்ள முடியும். இதைத்தான் தொல்காப்பியர் தத்தம் வினையொடு அல்லது பால் தெரிபிலவே (பெயர். 18.3,4) என்று விளக்கியுள்ளார். அதுபோல முன்னிலை ஒழிந்த விரவுவினைகள் அவை ஏற்கும் எழுவாய்ப் பெயரால் சரியான திணை-பாலைத் தெரிந்து கொள்ள முடியும். (அவன்

வாழ்க, அது வாழ்க என்ற உதாரணங்களில் வியங்கோள் வினை அது ஏற்ற எழுவாயால் பாலை உணர்த்துகிறது எனலாம்). ஆனால் முன்னிலைச்சொற்களால் அதாவது முன்னிலைப்பெயர் அது ஏற்கும் வினைமுற்றாலோ, முன்னிலை வினைமுற்று அது ஏற்கும் எழுவாய்ப் பெயராலோ சரியான திணை - பால் பாகு பாட்டைப் புரிந்து கொள்ள முடியாது. முன்னிலை 'இடம்' என்பதையும் எண்ணையும் (ஒருமை, பன்மை) மட்டுமே தெரிந்து கொள்ளமுடியும். எனவே தெய்வச்சிலையார் காட்டிய உதாரணங்களும் இலக்கிய மேற்கொள்களும் புறநிலையில் ஒத்துக்கொள்ள முடியுமாயினும் புதைநிலையில் வேறுவிதமாகவே விளக்கப்படும். அப்படியே அவருடைய வினைமுற்று உதாரணங்களின் இலக்கண விளக்கமும் முன்னிலை திணை-பால் காட்டுகிறது என்பது விவாதத்திற்குரியது. தெய்வச்சிலையார் காட்டியது போன்ற உதாரணங்கள் இலக்கிய வழக்கிலும் காணப்படுகின்றன. அதாவது முன்னிலை வினைமுற்று (வம்மின்) படர்க்கை பெயரை (பரிசின் மாக்கள்) கொண்டு முடிந்துள்ளது. 'வம்மினோ பரிசின் மாக்கள்' (புறம் 32). முதலில் இந்த வாக்கியங்களில் எழுவாயாகக் கருதப் படுகிற பெயர்கள் விளிப்பெயர்கள். தெய்வச்சிலையார் காட்டிய பெயர்கள் எகார விகுதி (மகனே) ஏற்றிருப்பதாலேயே விளிப் பெயர்கள் என்பது தெளிவாகிறது. பரிசின்மாக்கள் என்பது உயர் திணையில் அண்மை விளிச் சொல்லாக இருப்பதால்தான் விளி விகுதி பெறவில்லை. மேலும் நன்னூலார் கூறியபடி (303) விளி என்பது

......... படர்க்கையோரைத்
தன்முகமாகத் தான் அழைப்பதுவே.

ஆகையால் படர்க்கைப்பெயர் (மகன்) விளிவிகுதி பெற்று (மகனே) முன்னிலை ஆக்கப்பட்டிருக்கின்றது. அதனால் திணை, பால் காட்டும் பெயர்கள் விளியின் அடிப்படையாக உள்ளனவே தவிர அதன் விளிவிகுதியில் திணை-பாலுக்குரிய விகுதி சேர்ந்து வரவில்லை. படர்க்கைப்பெயர் விளிப்பெயரானதும் அதன் திணை-பால் விகுதி முக்கியத்துவம் இழந்து முன்னிலை என்ற பண்பே ஆதிக்கம் பெறுகிறது.

அதனால்தான் முன்னிலை வினைமுற்றைப் பெறுகிறது[9]

மாற்றிலக்கண மொழியியலார் விளியை வாக்கியத்தின் அக உறுப்பாகக் கருதாது புற உறுப்பு என்று கூறி விளிவேற்றுமைக்கும் அது கொண்டு முடியும் வினைச்சொல்லுக்கும் எந்த விதமான பொருள் தொடர்பும் கிடையாது என்றும் கூறுவார்கள் (உ.ம். அகத்தியலிங்கம் 1979:258). 'மகனே உண்டாயோ' என்பதில் மகனே என்பதைத் தனி உறுப்பாகவும் (வாக்கியமாகவும்) உண்டாயோ என்பதைத் தனி வாக்கியமாகவும் கருதுவார்கள். (உண்டாயோ என்பது வினாவாக்கியம். ஓகார வினா இடைச்சொல் ஏற்று வந்திருக்கிறது. அதனுடைய எழுவாய் 'நீ' என்பது தான். அதாவது 'மகனே! நீ உண்டாயோ' என்பது போலத் தான் புதைநிலையில் அமையும். எனவே இங்கும் முன்னிலை திணை-பால்உணர்த்துகிறது என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. எனவே முன்னிலைச் சொற்கள் ஏனைய விரவுத்திணைச் சொற்களிலிருந்து மாறுபட்டவைதான். முன்னரே குறிப்பிட்டது போல (இரண்டாவது இயலில்) தொல்காப்பியர் திணை-பால் பாகுபாட்டில் அடங்காத சொற்களையும் அடக்க முயற்சித்ததின் விளைவு இது. தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் முன்னிலைச் சொற்கள் எப்படி திணை விரவி வருகின்றன என்று காட்ட முனையவில்லை. தெய்வச்சிலையார் தமிழ் மொழியின் அமைப்பைக் கொஞ்சம் ஊன்றிக் கவனித்ததால் சில வாக்கியங்கள் சாதகமானவை போல அமைந்திருப்பதைக் கண்டுபிடித்துவிட்டார். ஆனால் அவை புறநிலையில் சரியான வாக்கியமாக இருந்தும் புதைநிலையில் அதாவது இலக்கணத்தை

9 பலர்பால் ஆண்-பெண் வேறுபாடு இல்லாதது. உயர்திணைப் பன்மை என்ற பண்பையே வெளிப்படுத்தும் என்று விளக்கம் கூறப்படுகிறது. தலைவி என்ற பெண்பாற் பெயர் பன்மை ஏற்று தலைவியர் என்று கூறும் போது பெண்மை பன்மை என்று உணர்ந்தாலும் பெண்பன்மை என்பது மொழி அமைப்புநிலையில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை, அதற்குக் காரணம் பதிலீட்டுப் பெயரான அவர் என்பதும் வினை முற்றில் வரும் ஆர் (தலைவியர் வந்தார்) என்ற விகுதியும் பெண்பன்மை சுட்டாது உயர்திணைப் பன்மை மட்டுமே சுட்டுவதாகவே கொள்ளப்படுகிறது.

விளக்கும் முறையில் மாறுபட்டன்வ. எனவே அவை சாதகமான உதாரணங்கள் ஆகாமல் போய்விட்டன.

### 4.2.8 பிற விரவுவினைகள்

தொல்காப்பியரே

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே

என்ற சூத்திரத்தின் மூலம் (வினை. 27) எல்லா 'இடத்'துக்கும் திணை–பாலுக்கும் வரும் என்று தெளிவாகவே கூறிச்சென்றுள் ளார். இது ஒரு பொதுநிலையில் அமைந்தது அடுத்த இரண்டு சூத்திரங்களில் சில விரவுவினைகள் அதாவது வியங்கோள், செய் யும் என்னும் முற்று இரண்டும் சில சிறப்புக் கட்டுபாடுகள் கொண்டுள்ளன என்று விவரித்துள்ளார். அந்த நிலையிலும் அவை ஒன்றுக்கு மேற்பட்ட திணை – பாலில் வருவதால் விரவு வினையாகவே உள்ளன.

## 4.3 இலக்கண அடிப்படை

நாம் மேலே விரவுவினைச் சொற்களின் விளக்கத்தையும் அவை திணை விரவி வரும் முறையையும் பார்த்தோம். இப்படி சிலவகைச் சொற்கள் இரண்டு திணையிலும் விரவி வருவதற்கு மொழிஅமைப்பு நிலையில் ஏதாவது காரணம் இருக்கிறதா என்று அறிய முற்பட வேண்டும். ஏனெனில் அதுதான் விரவுத்திணை யின் இலக்கண அடிப்படையைப் புலப்படுத்தி அதன் முக்கியத் துவத்தைக் காட்டும்.

தொல்காப்பியர் நேரடியாக விரவுத்திணையின் இலக்கண அடிப்படையைப் பற்றி விவரிக்கவில்லை. விரவுத் திணையை வருணிக்கும்போது அவர் பயன்படுத்திய சில சொற்களும், சொற் றொடர்களும் இலக்கண அடிப்படையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. ஆனால் உரையாசிரியர்கள் அந்த முறையில் நோக்காது உரைவிளக்கங்களில் இலக்கண அடிப்படைபற்றிச் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள். இலக்கண அடிப்படையைப் பற்றித் தனியே அவர்கள் நினைத்துப் பார்க்காததால் முழு நிலையில் அடிப்படை பொருந்தும் விதம் பற்றியோ எல்லாச்

சொற்களுக்கு உரிய அடிப்படைபற்றியோ தொல்காப்பியர் கூற வும் இல்லை; உரையாசிரியர்கள் விவாதிக்கவும் இல்லை.

### 4.3.1 இலக்கணமும் உலகப்பொருளும்

நச்சினார்க்கினியர் விரவுவினையை விளக்கும்போது (வினை 25) விரவுத்திணை பற்றி ஒரு அடிப்படையான கேள்வியை எழுப் பிப் பதில் சொல்லியிருப்பது இலக்கண ஆராய்ச்சியில் ஒரு புதிய கோணத்தைப் புலப்படுத்துவதாய் உள்ளதால் அது முதலில் குறிப்பிடத் தகுந்தது.

> இரு திணைக்கும் பொதுவாயதோர் பொருள் இன்மை யான் அதனால் நிகழும் விரவுத் தொழில் ஒன்று இன் றால் எனின்... அவ்வினைமுதற் பொருண்மையால் நிக ழும் விரவுத் தொழிலும் உளவாயின:

என்பது நச்சினார்க்கினியர் வாசகம். இங்கு எழுப்பியுள்ள பிரச்சனையைப் பொதுவாகக் கூறினால் உலகப் பொருளுக்கும் இலக்கணக்கூறுக்கும் உள்ள உறவு பற்றியது என்று பொதுமைப் படுத்தலாம். இது மொழியின் மெய்ப்பொருளியல் (philosophy of language) எனப்படும். நச்சினார்க்கினியர் கருத்துப்படி விரவுப் பொருள் அதாவது இரண்டு திணைக்கும் பொதுவான பொருள் இல்லாவிட்டாலும் விரவுவினை உண்டு என்பதே. அவர் விரவுப் பெயர் இருப்பதை ஒத்துக்கொள்வதால் விரவுப்பொருள் இல்லா மல் விரவுப்பெயரும் விரவுவினையும் உண்டு என்று கருதுகிறார் என்று நாம் கூறலாம். உண்மையில் சில இலக்கணக் கூறுக்கு இணையான உலகப் பொருள் உண்டு; வேறு சில இலக்கணக் கூறுக்கு (grammatical category) இணையான உலகப் பொருள் இல்லை. உதாரணமாக, ஆண்பால், பெண்பால் என்ற இலக் கணக்கூறுக்கு இணையாகவும் காலம், இடம் போன்ற இலக்கணக் கூறுக்கு நேராகவும் உலகப் பொருள் உண்டு. ஆனால் இடை/ உரி, வேற்றுமை ஆகியவற்றுக்கு இணையாக உலகப் பொருள் இல்லை. எனவே இலக்கணம் மொழி அமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டி அமைக்கப்படுவதேதவிர இணையான உலகப் பொருள்உண்டா? இல்லையா என்பதைப்பற்றிக் கவலைப்படா தது. உலக அமைப்பு வேறு; மொழிஅமைப்பு வேறு என்ற பொது உண்மையும் நச்சினார்க்கினியர் விளக்கத்தால் தெளிவாகிறது.

### 4.3.2 உரையாசிரியர்கள்

இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோரின் கருத்துத் தழுவலாகவே ஏனையோர் உரை அமைந்துள்ளது. ஆயினும் இளம்பூரணரும், சேனாவரையரும் கருத்து மாறுபடுகிறார்கள். மேலும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகியவற்றின் அடிப்படை வேறு வேறாகவும், பிறவற்றின் அடிப்படைவேறாகவும் இருப்பதால் இவை ஒவ்வொன்றின் அடிப்படையைத் தனித்தனியே பார்ப்பது நல்லது.

#### 4.3.2.1 இயற்பெயர் முதலியன

இங்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் கல்லாடனார் ஆகியோர் கருத்தில் அதிக மாற்றம் இல்லை. எனவே இவர்கள் கருத்தெல்லாம் இளம்பூரணரின் கருத்துத் தழுவலாகவே கொள்ளலாம்.

#### 4.5 2.1.1 இளம்பூரணர்

இளம்பூரணர் பெண்மை சுட்டிய பெயர் என்ற சூத்திர உரையில்

> பெண்மை பற்றிவரும் நான்குபெயரும் அ..றிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய

என்று பொழிப்புரை எழுதிவிட்டு

> சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் . ... ... முறையானே அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணைப் பெயர் ஒருத்திக்கும் (உரியவாய்)[10] வந்தவாறு கண்டு கொள்க

---

10 இளம்பூரணர் உரையில் (கழகப்பதிப்பு, 1963) பெயரியலில் 26 ஆம் சூத்திர உரையில் மட்டும், 'அஃறிணைப் பெண் ஒன்றற்கும், உயிர்திணைப்பெண் ஒன்றற்கும் வந்தவாறு கண்டு கொள்க' என்ற வாசகமே உள்ளது. ஆனால் அடுத்த மூன்று சூத்திரங்களிலும், 'அஃறிணை ஒன்றற்கும் உயர்திணை ஆண்பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க' என்றும் 'அஃறிணை ஒருமைக்கும், அத்திணைப் பன்மைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க' என்றும் காணப்படுவதால் (உரியவாய்) என்ற சொல் இங்கும் இருக்கவேண்டும் என்று கருதி அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

என்று உதாரணமும் விளக்கமும் கொடுத்துள்ளார். இப்படியே ஆண்மை சுட்டியபெயர், ஒருமை சுட்டியபெயர், பன்மை சுட்டிய பெயர் ஆகிய மூன்றுக்கும் பொழிப்புரையும், உதாரணமும் விளக்கமும் கொடுத்துள்ளதால் இயற்பெயர் முதலிய நான்கும் 'இரண்டு திணைக்கும் உரிய சொல்' என்பது அவருடைய கருத்தாகக் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியரின் பொழிப்புரையில் சூத்திரவாசகத்தை ஒட்டி சிறிது வேறுபாடு இருப்பினும் 'அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் பொருந்திய நிலைமையை உடையன', 'மூன்று பாற்கும் ஒரு தன்மைய' என்ற பொழிப்புரைகள் இளம்பூரணர் கருத்திலிருந்து வேறுபட்டதல்ல. கல்லாடனார் உரை நச்சினார்க்கினியரைப் பெரிதும் தழுவியது.

தெய்வச்சிலையாரும் பொழிப்புரையில் 'உயர்திணைக்கும் அஃறிணைக்கும் ஒத்த நிலைமைய' என்று எழுதி 26ஆம் சூத்திரத்தில்

> இவையும் உயர்திணை வினை கொண்ட வழி உயர்திணை எனவும் அஃறிணை வினை கொண்ட வழி அஃறிணை எனவும் கொள்க. இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்

என்ற பொது விளக்கமும் கொடுத்துள்ளார் இவையெல்லாம் அதிகப் பொருள் வேறுபாடு உடையன அல்ல. எனவே இளம்பூரணர் 'இரு திணைக்கும் உரிய' என்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்பெயர் முதலியவற்றின் அடிப்படையை அறிந்துகொள்வோம். இளம்பூரணரின் தொடர் ஒரு சொல் பல பொருட்கும் உரிமை தோன்றினும் என்ற தொல்காப்பிய உரியியல் தொடரை (1.4) நினைவுபடுத்துவதாக உள்ளது அப்படியானால் இவர்கள், இயற்பெயர் முதலியன 'பலபொருள் ஒருசொல்' என்ற கருத்துடையவர்கள்; அதாவது இயற்பெயர் முதலியன பலபொருள் ஒரு சொல்லாக இருப்பதனால் விரவுத்திணையாக அமைந்துள்ளன என்ற கருத்துடையவர்கள் என்று கருதலாமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

4.3.2 1.2 சேனாவரையர்

சேனாவரையர் விரவுப்பெயர்கள் பலபொருள் ஒருசொல் இல்லை என்பதை வன்மையாக மறுத்துள்ளார். மேலே குறிப் பிட்டபடி அவருக்குப் பின்னால் வந்த உரையாசிரியர்கள் இந்தக் கருத்தை ஆதரிக்கவுமில்லை; மறுக்கவும் இல்லை. நச்சினார்க் கினியர் சொல்லதிகாரத்தில் இதுபற்றி ஒன்றும் பேசாவிட்டாலும் எழுத்ததிகார உரையில் இந்தக்கருத்தை ஆதரிப்பது போல் ஒரு விளக்கம் கொடுத்துள்ளார். சேனாவரையர் பெயரியல் 20-ஆம் சூத்திரஉரையில்

> ஒரு நிமித்தத்தான் இரண்டு திணைப் பொருளும் உணர்த்து தலின் விரவுப்பெயர் பொருள்தோறும் நிமித்த வேறு பாடு உடைய பலபொருள் ஒரு சொல் அன்மை அறிக

என்று கூறுவதால் விரவுப்பெயர்கள் ஏன் பலபொருள் ஒருசொல் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்; அதாவது பல பொருள் ஒருசொல், பலப்பல பொருளை வேறுவேறு காரணத் தால் (நிமித்த வேறுபாடு) உணர்த்துவது; ஆனால் விரவுப்பெயர் ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக இன்னொரு திணையின் பொருளை உணர்த்துவது என்பது சேனாவரையர் கருத்து.

சேனாவரையர் இதே காரணத்தினால் உலகம் என்ற சொல் 'இடம், மக்கள் தொகுதி' என்ற இரண்டு பொருள் உணர்த்துவது பல பொருள் ஒரு சொல்லாகக் கருதவேண்டும் என்று இன்னொரு சூத்திர உரையில் (கிளவி. 57 உரை விளக்கம்) வாதாடியபோதும் பலபொருள் ஒருசொல் இல்லாமல் இன்னொரு வகையான சொல் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

> உலகம் என்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கள் தொகுதியையும் உணர்த்தும் ஆகலான், இருதிணைக்கண்ணும் சென்றது அன்றோ எனின்: அற்றன்று: வடநூலுள் உலகம் என்பது இரு பொருட்கும் உரித்தாக ஓதப்பட்டமையின் மக்கள் தொகு தியை உணர்த்தும் வழியும் உரிய பெயரே ஆகலின் ஆகுபெயரன்று; அதனால் ஒரு சொல் இரு பொருட் கண்ணும் சென்றதெனப்படாது இருபொருட்கும் உரிமை யான் இரண்டு சொல் எனவேபடும் என்பது. வேறு பொருள் உணர்த்துதலின் வேறு சொல்லாதலே துணி வாயினும் பலபொருள் ஒருசொல் என்புழி எழுத்தொப் புமை பற்றி ஒருசொல் என்றார்.

(கருத்துச் சிறப்புக்காகத் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.)

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு உலகம் என்ற சொல்லின் இரண்டு பொருளும் எப்படி அமைந்தது என்பதை ஒட்டியுள்ள இரண்டுவித கருத்துகளுக்கு ஏற்ப இரண்டு வகையான விளக்கம் தருவது சொற்பொருளியல் ஆய்வில் சேனாவரையர் காட்டும் நுட்பமாகும். 1) ஆகுபெயராய் 'ஒரு சொல்லின் பொருள் இன்னொரு பொருளை உணர்த்துவது' ஒரு சொல் இரண்டு பொருட்கண்ணும் செல்வது எனப்படுவது. இது பலபொருள் ஒரு சொல் அல்ல. அப்படியில்லாமல் 2) ஒரு சொல் இரண்டு பொருட்கும் உரியது; அவை வெவ்வேறு சொற்கள்; வடிவ ஒப்புமையால் மட்டுமே ஒரு சொல்லாகக் கருதப்படுவது என்பது. இதுவே பல பொருள் ஒரு சொல். சேனாவரையரின் இந்த நுண்ணிய கருத்து இலக்கண உலகில் பாராட்டப்படாமலே போய்விட்டது.

நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்தில் வரும் 'அஃறிணை விரவுப்பெயர்' (சூ. 155) என்ற தொடருக்குத் தரும் விளக்கத்தில் சேனாவரையரின் கருத்தின் சாயல் தென்படுகிறது.

> உயர்திணைப் பெயரோடு அஃறிணை சென்று விரவிற்று என்றது என்னை

என்ற கேள்வியைக் கேட்டுக் கூறிய சமாதானம் விரவுப் பெயர் ஒரு சொல் இரண்டு பொருட்கும் உரியது பெயரல்ல; ஒரு சொல் இரண்டு திணைக்கண்ணும் சென்ற பெயர் என்பது போல விளக்கு கிறார்.

> சாத்தன், சாத்தி, முடவன், முடத்தி என்னும் விரவுப் பெயர்க்கண் உயர்திணை இரு பாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும் பெண்பாலை யும் உணர்த்துதலின் அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்று என்று அவற்றின் உண்மைத் தன் மைத் தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார்:

என்பது நச்சினார்க்கினியர்வாசகம். எனவே நாம் ஒருசொல் பல பொருளுக்கும் உரியதாய் வருவதைப் பலபொருள் ஒருசொல் என்று அழைப்பதுபோல ஒரு நிமித்தத்தால் இரண்டு பொருட் கண்ணும் செல்வதைத் தனிப்பெயர் இட்டு அழைக்கவேண்டும். அதை நாம் பல்பொருட் சொல் என்று குறிப்போம்,

இயற்பெயர் முதலிய விரவுப் பெயர் எப்படி ஒரு நிமித்தத்தால் பலபொருளை விளக்குகிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

> பழந்தமிழர் ஆவையும் எருதையும் அவற்றின் பயன்பாடும் உழைப்பும் பற்றி அருமையாய்ப் பேணி அவற்றுக்குச் சாத்தன், சாத்தி என்னும் மக்கள் பெயரையே இட்டு அழைத்து வந்திருக்கின்றனர். விரவுத்திணைப் பெயர்களில் பெரும்பாலன, மாடுகளுக்கு மனிதப் பெயர் வைத்தமையால் ஏற்பட்டவையே:

என்ற வேலுப்பிள்ளையின் வாசகம் (1966 : 130) உயர்திணைச்சொல் அஃறிணையில் விரவி வருதற்கான சமூகக் காரணத்தைப் புலப்படுத்துகிறது ஆனால் இயற்பெயர்களில் ஆண்மை இயற்பெயர், பெண்மை இயற்பெயர் என்ற இரண்டு மட்டுமே விரவுப்பெயராவதற்கான காரணம் இங்குச் சுட்டப்பட்டிருக்கிறது. சிவத்தம்பி (1982:83) இன்னும் கொஞ்சம் பொதுமைப்படுத்தி

> இயற்கையோடு இயைந்த வாழ்வு எனப் பழந்தமிழ் இலக்கியம் பற்றி எடுத்துக்கூறப்படும் பண்பின் ஓர் அம்சம் இது. உழைப்பு அடிப்படையில் தம்முடன் இயைந்து தமக்கு உதவியாக நின்ற மாடு, எருமைகளை மனித உறவுடன் நோக்கும் தன்மை இதிலே தெஎ்படுவதை நோக்கவேண்டும்.

என்று கூறும்போது முறைப்பெயரும் விரவுப்பெயராக அமைவதற்குரிய சமூகக் காரணம் விளக்கப்பட்டுவிடுகிறது அப்படியே ஒருமை இயற்பெயராகவும் பன்மை இயற்பெயராகவும் இருக்கும் அஃறிணைப் பெயர்கள் உயர்திணை இயற்பெயராய் வழங்கும் வழக்கம் இயற்கையோடு இயைந்த வாழ்வின் இன்னொரு பக்கத்தையும் புலப்படுத்திவிடுகிறது என்று கொள்ளலாம். அதாவது உயர்திணைப்பெயர்கள், அ·.றிணைக்கு ஆகி வந்தது போல அ·.றிணைப்பெயர்களும் உயர்திணை இயற்பெயராய் ஆகி விரவி வருகிறது என்பதே.

சேனாவரையர் விரவுப்பெயர் பொதுவாகப் பலபொருள் ஒரு சொல் அல்ல என்றது சிறப்பாக இயற்பெயர் ஆகிய நான்கு வகைக்கே பொருந்தும். அவரே நீ, நீயிர், போன்றவற்றை வேறு விதமாகக் கொண்டிருக்கிறார் என்பது பின்னால் விளக்கப்படும்.

இனிச் சேனாவரையர் விரவுப்பெயர் பலபொருள் ஒரு சொல் அல்ல; பல்பொருட்சொல் என்று அழைத்ததன் சிறப்பை அறிந்துகொள்ளச் சொற்பொருளியல் வரலாறும், சொற்பொருளியலார் தரும் விளக்கமும் காணவேண்டும்.

உல்மன் என்ற சொற்பொருளியல் அறிஞரின் கூற்று இங்கே குறிப்பிடத்தகுந்தது (1962 : 159)[11]

> ஒரு வடிவம் பல பொருளைக் குறித்து வழங்கும்போது அவைகளை இரண்டு விதமாகப் பாகுபடுத்தலாம். ஒரே சொல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேறு பொருளை உடையதாயிருக்கலாம். இது பிரெயில் காலத்திலிருந்து (அதாவது 1900-ஆம் ஆண்டிலிருந்து) பாலிசெமி (polysemy) என்று அழைக்கப்படுகிறது. ... இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒலியில் (அதாவது வடிவத்தில்) ஒத்திருக்கலாம். அதுவே ஹோமொனெமி (homonymy) எனப்படும் ... ... பாலிசெமிக்கும் ஹோமொனெமிக்கும் இடையே உள்ள வரம்புக்கோடு மெல்லியதாய் இருந்தாலும் அந்த இரண்டும் வெவ்வேறு வகையாகக் கருதத்தக்க அளவுக்கு வேறுபட்டவை

---

11 The same word may have two or more different meanings. This situation has been known since Breil as *Polysemy* ... Two or more different words may be identical in sound (homonymy) ... Although, as will be seen the border line between polysemy and homonymy is some time fluid the types are so distinct that they will have to be considered separately. Ullmann, 1962:159.

இந்தக் கருத்தை லயன்சும் (Lyons, 1968 : 406) ஒத்துக் கொண்டுள்ளார்.

We have · in addition synonymy and homonymy, what has come to be called in the more recent development of traditional semantics, *multiple meaning* (some times called polysemy). The distinction between homonymy and multiple meaning is evident in the organization of the dictionaries, we customarily use: what the lexicographer has classified as homonyms will be listed as different words, whereas multiple meanings will be given under one entry.

அகராதியில் பலபொருள் ஒருசொல் வேறு வேறு சொற்களாகக் கொடுக்கப்படும்; பல் பொருட் சொல் ஒரே சொல்லாகக் கொடுக்கப்படும் என்ற வேறுபாட்டைச் சொல்லியிருப்பதும் இங்கு அறியத்தகுந்தது.

என்பது அவருடைய கருத்து. இங்கு ஹோமொனெமி என்பது பல பொருள் ஒரு சொல். இதற்குச் சேனாவரையர் கொடுத்த விளக்கமும் ('வேறு பொருள் உணர்த்தலின் வேறு சொல்லாதலே துணிவாயினும் பல பொருள் ஒரு சொல் என்புழி எழுத்து ஒற்றுமை பற்றி ஒரு சொல் என்றார்') மிகவும் பொருந்துகிறது. பாலிசெமி என்பது பல்பொருட் சொல்தான். ஒருசொல் இரண்டுக்கு மேற்பட்ட பொருளை உடையது பாலிசெமி என்று உல்மன் முதலில் குறிப்பிட்டு பின்னர் அது ஐந்து காரணங்களால் உண்டாகும் என்று விரிவாக (1962 : 109 - 167) விளக்கியுள்ளார்.[12] சேனாவரையர் 'ஒரு நிமித்தத்தால் இரண்டு பொருள் உணர்த்துவது என்று பெயரியலில் பொதுவாகக் குறிப்பிட்டாலும் கிளவியாக்கத்தில் ஆகுபெயர் ஒரு காரணமாகக் கூறியிருப்பது பாராட்டத்தகுந்தது. எனவே சேனாவரையர் விரவுப்பெயருக்கு இலக்கண அடிப்படை கூறுமுகமாகக் கூறிய விளக்கம் (பலபொருள் ஒரு சொல் என்பது வேறு; பல்பொருட் சொல் என்பது வேறு) சொற்பொருளியலில் குறிப்பிடத்தக்க புதிய கருத்தாக அமைந்திருப்பது அறிந்து மகிழலாம்.

### 4.3.2.2 தான்/தாம்

இரண்டும் 'உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரித்து' என்று மட்டுமே கூறியுள்ளார். அப்படியானால் பலபொருள் ஒரு சொல் ஆகக் கருதவேண்டுமா என்ற சந்தேகம் வருகிறது. எல்லா உரையாசிரியர்களும் இந்த முறையிலேயே உரை எழுதியுள்ளார்கள். ஆயினும் இந்தச் சொற்களைப் பல பொருள் ஒரு சொல் என்று கூற முடியாது. இவை திணை - பால் பாகுபாட்டுக்குள் அடங்கி ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்குப் பொதுவாய் வருவது. யார் என்ற சொல் உயர்திணை மூன்று பாலுக்கும் பொதுவாக வருவது போல எண் அடிப்படையில் இரண்டு திணையிலும் ஒருமைக்கும்

---

12 i) இடம் மாற்றி உரைத்தல் (shift in application), ii) ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு பொதுச்சொல் சிறப்புப் பொருளைப் பெறுதல் (specialization in a social milieu), iii) அலங்கார மொழி (figurative language), iv) பலபொருள் ஒருசொல் பொதுவிளக்கம் பெறுதல் (homonymy reinterpreted), v) பிறமொழிச் செல்வாக்கு (foreign influence) என்பன அவை.

பன்மைக்கும் வருவன இவை. இரண்டு திணையிலும் வருவதால் விரவுப்பெயராகக்கருதப்பட்டிருக்கிறது. இவைகளைப்பலபொருள் ஒரு சொல்லாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இவை இரண்டு திணையிலும் வரும்போது பொருள் மாறுபடுவதில்லை. அப்படியே பல்பொருட்சொல்லாகவும் கருத முடியாது. ஏனெனில் எல்லாஇடத்திலும் படர்க்கை ஒருமை பதிலீட்டுப்பெயர் என்றும், படர்க்கைப் பன்மைப் பதிலீட்டுப் பெயர் என்றும் பொதுப் பொருளே உடையன; மேலும் அவைகளுக்குரிய வினைமுற்று ஏற்றுவருகின்றன.

### 4.3.2.3 எல்லாம்

இளம்பூரணர் முதலானோர் கருத்துப்படி இது எல்லாப் பன்மைக்கும் பொதுவாகவந்து எங்கும் முழுமைப் பதிலீட்டுப்பெயராகப்பயன்படுவதால் தான்/தாம் என்பதுபோலப்பொதுவானது. வேறுவேறு பன்மைக்கு ஏற்ப வேறுவேறு வடிவம் இல்லாததால் ஒரு வகையில் சமனாக்கப்பட்டசொல் (neutralisation) என்று கொள்ளலாம். ஒலியனியலில் அடிநிலை ஒயலின் (archisegment) போல இவையும் உருபனியலில் அடிநிலை உருபனாகவும் கொள்ளலாம் (விளக்கத்துக்கு பரமசிவம் 1980 : 91 பார்க்கவும்).

தெய்வச்சிலையார் பலர்பாலுக்கு மட்டும் வராது என்று கூறினாலும் இதுவும் அடிப்படையில் பொதுச் சொல்லாகவே கொள்ளப்பட வேண்டும். வேண்டுமானால் கொஞ்சம் பொதுமை குறைந்ததாகக் கருதலாம்.

மேலே நாம் விளக்கியபடி தன்மைப் பன்மைக்கும் பலவின் பாலுக்கும் மட்டும் வருவதாகக் கொள்ளும்போது வேறு பல முழுமைப் பதிலீட்டுப் பெயர்கள் (எல்லாரும், எல்லீரும்) இருப்பதால் பகுத்துப் பார்க்கும் எண்ணம் ஏற்படுகிறது. அந்த முயற்சியில் வேறு பலரும் இறங்கியுள்ளார்கள் சேனாவரையர்தான் முதன்முதலில் ஓரளவு பகுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அவர் எல்லாரும், எல்லீரும் என்புழிப் படர்க்கைப் 'பன்மை உணர்த்தும் 'ஆர்' உம் முன்னிலைப் பன்மை உணர்த்தும் 'ஈர்' உம் 'உம்'மை அடுத்து வருவதாக (பெயர்10. உரை) விளக்கியுள்ளார். அடுத்து கால்டுவெல் (1875:408)

எல்லாம் என்பதில் இறுதியிலுள்ள 'ம்' என்பது உம் என்பதன் சுருக்கமாக உள்ளது என்றும் எல்லாரும் என்பதில் உம் என்பதன் முற்றும்மை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அப்படியே எலாம் என்பது தமிழ் இலக்கியத்தில் தன்மைப் பன்மையாகக் கூறப் பட்டிருக்கிறது என்று சுட்டி அங்கு 'ஆம்' என்பதே தன்மைப் பன்மை' பொருள்படும் என்று குறிப்பிட்டுள்ளார்[13] கேரளப் பல்கலைக் கழகத்தார் வினைமுற்றில் இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) எண்/பால் என்ற இரண்டு உருபன்கள் இருப்பதாகக் கருதுவதையொட்டி (உ-ம் சுப்பிரமனியன் சா. வே. 1965:46-49) இஸ்ரேலும் (1973:41) 'எல்லாம்' என்பதில் எல்-என்பதை முழு மைப் பதிலீட்டுப் பெயர்ப் பகுதியாகவும் /அ/ வை தன்மை அல்லது படர்க்கை விகுதியாகவும் /ம்/ என்பதைப் பன்மை விகுதியாகவும், மற்றொரு இடத்தில் (ப.43) எல்லீரும் என்பதில் /ஈ/ யை முன்னி லை விகுதியாகவும் /ர்/ பன்மை விகுதியாகவும் /உம்/ மை முற் றும்மையாகவும் விளக்கியுள்ளார். எனவே எல்லீரும், எல்லாரும், எல்லாம் ஆகிய பதிலீட்டுச் சொற்கள் பகுக்கக் கூடியன என்பது தெளிவாகிறது. தமிழ் இலக்கண மரபுப்படி இடத்தையும் பாலை யும் சேர்த்து ஒரு உருபனாகக் கொண்டால் எல்லாரும், எல்லீரும், எல்லாம் ஆகிய மூன்று சொற்களுக்கும் 'எல்' என்பது முழுமைப் பதிலீட்டுப் பெயர்ப் பகுதியாகும். ஆர் என்பதைப் பலர்பால் விகுதியாகவும், ஈர் என்பதை முன்னிலைப்பன்மை விகுதியாகவும் ஆம் என்பதைத் தன்மைப்பன்மை/பலவின்பால விகுதியாகவும் உம் என்பதை முற்றும்மையாகவும் சொள்ளலாம். அப்படி யானால் இங்கு இரண்டு சிக்கல்கள் எழுகின்றன: 1) பலர்பாலிலும் முன்னிலைப் பன்மையிலும் மூன்று உருபன்கள் இருக்கத் தன்மைப் பன்மைக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாய் இருக்கும் சொல்லில்

---

13 In the same manner *um* in annexed as an auxiliary to some affirmative universals for the purpose of widening their application e.g , *ella.va:um.* Malayalam, 'all' literally and 'all'from *ella:va*: 'all' and *um*, and. This form is abbreviated in Tamil into *e:la:m*; which is regarded and treated by grammarians as a neuter plural. The corresponding epicene plural is *ella:r-um*, all persons. In Tamil poetry *ela:m* is regarded as a plural of the first person, meaning all we, in which *a:m* probably represents *a:m*. We Caldwell (1875:408)

மட்டும் (அதாவது 'எல்லாம்' என்பதில்) இரண்டு உருபன்கள் இருப்பானேன்? 2) ஆம் என்ற விகுதியைத் தன்மைப்பன்மை விகுதி என்றும் பலவின்பால் விகுதி என்றும் குறிப்பிட வேறு ஆதாரம் ஏதாவது உண்டா? ஏனெனில் ஆர், ஈர் என்ற விகுதிகள் அதே பொருளில் வினைமுற்றிலும் வருகின்றன.

முதல் கேள்விக்குப் பொதுவாக மொழியின் அமைப்பு எங்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்று பொதுநிலையிலும் பதில் கூறலாம். உதாரணமாக செய்யும், செய்த எனும் இரண்டு பெயரெச்சமும் ஒரேவித அமைப்பு உடையதில்லை. செய்த என்பது வினைப்பகுதி + கால விகுதி + பெயரெச்ச விகுதி என்று மூன்று உருபன்களைக் கொண்டிருக்கச் செய்யும் என்பது வினைப்பகுதி + விகுதி (இது கால விகுதியாக மொழியியலாளரால் கருதப் படுகிறது) என்ற இரண்டு உருபன்களையே புறநிலையில் கொண்டிருக்கிறது. அமைப்பு ஒழுங்குக்காகப் பெயரெச்சவிகுதியாக சூனியக் மாற்றுருபு இருப்பதாகக் கருதப்படுகிறது. (உ-ம். சுப்பிரமணியன், சா வே. 1965–44) அப்படியானால் எல்லாம் என்பதிலும் முற்றும்மை சூனிய மாற்றுருபு உடையதாகவோ (எல் +ஆம் + ϕ) புணர்ந்து கெட்டதாகவோ கருதலாம். எல்லாம் என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது வேற்றுமை உருபிற்குப் பிறகு 'உம்' தோன்றுகிறது. உதாரணமாக இரண்டாம் வேற்றுமை ஏற்ற வடிவம்,

தன்மைடன்மை: எல்லாநம்மையும் (எல் + ஆம் + நம் + ஐ + உம்

பலவின் பால்: எல்லாவற்றையும் (எல் + ஆம் + வற்று + ஐ + உம்)

இங்கு 'நம்' மும் 'வற்று' ம் சாரியைகள். இந்த வடிவங்களோடு பலர்பால் முழுமைப் பதிலீட்டுப் பெயரான எல்லாரும் என்பதன் வேற்றுமை ஏற்ற வடிவமான எல்லாரையும் (எல் + ஆர் + ஐ + உம்) என்பதை ஒப்பிட்டு நோக்கினால் இறுதியில் வேற்றுமை உருபுக்குப் பிறகு 'உம்' வருவது தெளிவாகும். எனவே முழுமைப்பதிலீட்டுப் பெயராக 'எல்லாம்' என்று வரும்போது 'உம்' புணர்ந்து கெட்டது; அதனால்தான் வேற்றுமை உருபு ஏற்கும்போது வெளிப்படுகிறது என்று கூறிவிடலாம்.

பரிபாடலில் (10.118) (வழக்கம்) எல்லாமும் என்ற வடிவமும் திருவாசகத்தில் எல்லோமும் (திருவெம்பாவை 28.3) என்று வந்திருப்பது குறிப்பிடத்தகுந்தது. எனவே எல்லாம் என்ற சொல்லில் புறநிலையில் இரண்டு உருபன்கள் இருப்பதால் பகுக்காமல் இருக்க வேண்டியதில்லை.

இரண்டாவது கேள்வியான ஆம் என்பதற்குத் தன்மைப் பன்மைப் பொருளும் பலவின்பால் பொருளும் இருந்ததற்கு ஆதாரத்தைப் பார்ப்போம். தொல்காப்பியரே ஆம் என்பதைத் தன்மை விகுதியாக வருணித்துள்ளார்: அம் ஆம் பன்மை உரைக்குத் தன்மை சொல்லே (பெயர் 5). மேலும் தன்மைப் பன்மை முழுமைப் பதிலீட்டுப் பெயர் இருந்ததற்கு இன்னொரு சான்று கிடைக்கிறது. சங்ககாலத்தில் ஆம் என்பது தன்மைப் பன்மை விகுதியாக இருந்ததால் தன்மைப் பன்மை முழுமைப் பதிலீட்டுப் பெயரும் 'எல்லாம்' என்று இருந்தது. சங்க மருவிய காலத்திலும் (அறிந்தோம்-சிலம்பு 7-5-2) இடைக்காலத்திலும் (நின்றோம்-அப்பர் தேவாரம் 965-4) ஓம் என்பது தன்மைப் பன்மை விகுதியாக வழங்கியதற்கு ஒப்ப முழுமைப் பதிலீட்டுப்பெயரும் 'எல்லோம்' (திருவாசகம், திருவெம்பாவை. 3) என வழங்கியுள்ளது. எனவே எல்லாம் என்பதைத் தன்மை முழுமைப் பதிலீட்டுப்பெயர் என்பதும் அதில் ஆம் என்பது தன்மைப் பன்மை விகுதி என்பதும் உறுதிப்படுகின்றன.

ஆம் என்பதைப் பலவின்பால் விகுதியாகக் கருதுவதற்குரிய சான்று இலக்கண நூல்களில் காணப்படவில்லை. எனவே தொன்மை வழக்காக அருகி சில சொற்களிலாவது வழங்கியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

தொல்காப்பியர் பல, சில என்ற பலவின்பால் பெயர்களின் மாற்றுவடிவமாகச் செய்யுளில் இறுதி அகரம் நீண்டு வரும் என்று ஒரு சூத்திரத்தில் (எழுத்து. 213) குறிப்பிடுகிறார்.

பலவற்று இறுதி நீறுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழியான

என்ற அந்தச் சூத்திரத்துக்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பலாஅம், சிலாஅம் என்ற உதாரணங்களைத் தந்துள்ளார்

கள். இங்குள்ள ஆ (அ)ம் என்ற விகுதியைப் பலவின்பால் விகுதியாகக் கருதலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது பழைய வழக்கின் எச்சசொச்சமாகும். மேலும் தென்திராவிட மொழிகளில் ஒன்றான தோடா மொழியில் ஆம் என்பது பன்மைவிகுதியாக பலவின்பாலுக்கும் வழங்குகிறது. (சண்முகம், 1971 இ: 150)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொஹ் | + | ஆம் | → | மொஹாம் | 'பையன்கள்' |
| கூஹ் | + | ஆம் | → | கூஹாம் | 'பெண்கள்' |
| ஈர் | + | ஆம் | → | ஈராம் | 'எருமைகள்' |
| பூஃவ் | + | ஆம் | → | பூஃவாம் | 'பூக்கள்' |

முதலியன. மேலும் தோடா மொழியில் படர்க்கையில் ஒருமை பன்மை வேறுபாடு[14] மட்டுமே உள்ளது என அறிந்து கொள்ள வேண்டும். எனவே ஆம் என்ற பன்மை விகுதி, தமிழில் பலவின் பால் விகுதியாக மட்டும் அருகிய வழக்காகப் பயன்பட்டிருக்கிறது என்று கொள்ளலாம்.

அப்படியானால் 'ஆம்' விகுதி தன்மைப் பன்மையையும் பலவின்பாலையும் உணர்த்துகிறது என்று ஆகிறது. எனவே எல்லாம் விரவுப்பெயராக வருவதற்குக் காரணம் ஒரு விகுதி இரண்டு விதப் பன்மையை (தன்மைப்பன்மை, பலவின்பால்) உணர்த்துவதுதான். அதாவது விகுதி நிலையில் இது பலபொருள்ஒரு சொல்லாக அமைந்ததால் விரவுப்பெயராகக் கருதப்பட்டிருக்கிறது

### 4.3.2.4 நீ, நீயிர்

இளம்பூரணர் 'நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே' (பெ. 35.2) என்பதற்கு ஒருமையாவது: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்பவற்றிற்குப் பொதுமையாகிய ஒருமை என்றும், நீயிர் பன்மைக்கு உரித்தே, என்பதற்குப் பன்மையாவது: பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை என்றும் விளக்கியுள்ளார். எனவே இவை 'பொதுச்சொல்' என்று இளம்பூரணரும் அவரைத்

---

14 அஃத் என்பது 'அவன்/அவள்/அது' என்ற பொருளையும் அஃதாம் என்பது 'அவர்/அவை' என்ற பொருளையும் உணர்த்தும் (சண்முகம், 1971 இ:3).

தழுவிப் பிற உரையாசிரியர்களும் கருதுகிறார்கள் என்று கொள்ள லாம்.

மேலே தான், தாம் என்பனவும் பொதுச்சொல் என்று விளக்கப்பட்டது. ஆனால் வினைமுற்று ஏற்றுவந்தால் அதன் சரியான திணை, பாலை உணர்ந்துகொள்ளமுடியும். ஆனால் முன்னிலைச் சொற்கள் அப்படிப்பட்டதல்ல. முன்னரே குறிப் பிட்டபடி திணை-பால் பாகுபாட்டுக்குள் அடங்காத சொற்களை அவற்றுள் அடக்கியதைப்பற்றி ஒன்றும் கூறாமல் உரையாசிரியர் கள் தொல்காப்பியத்தை நியாயப்படுத்த 'பொதுச்சொல்' என்று மட்டும் கூறிவிட்டார்கள். இதைத் திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பான பொதுமை என்று விதந்து குறிப்பிடவேண்டும்.

## 4.3.2.5 விரவுவினைகள்

தொல்காப்பியர் விரவுவினைகளின் பெயர்களைத் தொகுத் துக் கூறும்போது

பிரிவுவேறுபடும் செய்திய (வினை. 23.5) என்று கூறுவதால் இளம்பூரணர்

> உயர்திணைக்கண் வரின் உயர்திணைக்கே உரிய என்றும்
> அஃறிணைக்கண் வரின் அஃறிணைக்கே உரிய என்றும்
> பிரித்துச் செய்யப்படும்

என்று பொதுவாகவும் முன்னிலை வினைகள் 'இரண்டு திணைக் கும் ஒப்ப உரிய' என்றும் ஏனைய விரவுவினைகள் 'மூன்றிடத் துக்கும் இருதிணை ஐம்பாற்கும் உரிய' என்றும் பொழிப்புரை எழுதியுள்ளதால் விரவுவினைச் சொற்கள் 'பல பொருள் ஒரு சொல்' என்று கருதுகிறாரோ என்று நினைக்க வேண்டியிருக் கிறது.

திரிபு வேறுபடூஉம் செய்திய என்று பாடம் கொண்டாலும்

> பொதுமையிற் ஒருகாற் பிரிந்து ஒருகால் உயர்திணை
> உணர்த்தியும் ஒருகால் அஃறிணை உணர்த்தியும் வேறு
> படும் தொழிலை உடையவாய் இருதிணைச் சொல்லா
> தற்கு ஒத்த உரிமைய

என்று சேனாவரையர் பொழிப்புரை எழுதியுள்ளார். இங்கு பொதுச்சொல் என்ற கருத்தும் பலபொருள் ஒரு சொல் என்ற

கருத்தும் தொனிக்கின்றன. ஆனால் விளக்க உரையில் 'வேறு வேறு உணர்த்தின் அல்லது ஒரு சொற் சொல்லுதற் கண்ணே இருதிணையும் உணர்த்தாமை பெறுதும்' என்று கூறும்போது பல பொருள் ஒரு சொல்லாகக் கருதுவதற்குத் தயங்குகிறரோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

ஏனைய உரையாசிரியர்களின் கருத்து இளம்பூரணரின் கருத்துத் தழுவலாகவே உள்ளது. எப்படியாயினும் விரவி வினையின் இலக்கண அடிப்படை பொதுச்சொல் என்பதா, பலபொருள் ஒருசொல் என்பதா என்பது உரையாசிரியர்களால் தெளிவுபடுத்தப்படவில்லை.

முன்னிலை வினை, முன்னிலைப் பெயரைப் போல திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பானதை அதில் அடக்க முயற்சித்தால் பொதுச்சொல் என்று வேண்டுமானால் கருதலாம்.

பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டும் கூட திணை-பால் விகுதி இல்லாதவை. எனவே அவைகளைத் திணை-பால் பாகுபாட்டுக்குள் அடக்கவேண்டியதில்லை. அப்படியானால் அவைகளைத் தனிப்பிரிவாக விவாதிக்க வேண்டும். வியங்கோள், செய்யும் என்னும் முற்று போன்றவையும் திணை-பால் விகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. எனவே எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வருணித்ததன் மூலம் இலக்கணம் எளிமைப் பட்டு விட்டது. ஆயினும் விரவுவினையின் இலக்கண அடிப்படை வேறுபட்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வியங்கோள், செய்யும், செய்ம்மன வாய்பாட்டு வினைமுற்றுகள், வேறு, இல்லை ஆகிய விரவுவினைகள் தொல்காப்பியர் பொதுவாகக் கூறியபடி எல்லா இடத்துக்கும், திணை-பாலுக்கும் உரிய பெயர்களை எழுவாயாக ஏற்றுவரும்.இவைகளே உண்மையான விரவுவினைகள். அதாவது பெயர்களில் தான், தாம் என்பதுபோல பொதுவாக வருபவை. இவைகளைத் திணை-பால் விகுதியில்லாத முற்றுச்சொற்கள் என்று கூட வருணிக்கலாம். அப்படி வருணித்தால் அவை எப்படிப்பட்ட பெயர்களை எழுவாயாக ஏற்கும் என்பது பற்றித் தனியே விளக்க வேண்டும். விரவு வினை என்று கூறி அவை எல்லா இடத்தும், திணை-பாலுக்கும்

வரும் என்று சொன்னதன் மூலம் அவை ஏற்கும் எழுவாய் பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது. இது ஒரு சிறப்பே ஆகும்.

பெயரெச்சமும் வினையெச்சமும் முன்னிலை போல திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பானவை. ஆனால் அவை அடிப்படையாக வினை வடிவம் என்பதால் அந்தத் தொழிலைச் செய்யும் கருத்தா இருப்பது அவசியம் எனவே அவைகளை விரவுவினையில் சேர்த்ததன் மூலம் எல்லா திணை-பாலையும் கருத்தாவாக ஏற்கும் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கும் ஒரு குறை வேறொரு வகையில் நிறையாக ஆகிவிட்டது.

### 4.3.3. தொல்காப்பியர்

திணை-பாகுபாட்டைப் பற்றிப் பெயரியலிலும் வினையியலிலும் முதலில் வருணிக்கும்போது உயர்திணை, அஃறிணை, விரவுத் திணை ('ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமைய') என்ற பாகுபாட்டை அம்மூவுருபின தோன்றலாறே என்று தான் பெயரியலிலும் (6.5), வினையியலிலும் (4 5) குறிப்பிடுகிறார். இங்கு நச்சினார்க்கினியர் 'உருபு' என்பதற்கு 'உருவு' என்று பாடம் கொண்டுள்ளார். இந்த பாடவேறுபாடு—அதுவும் பகர மெய் வகரமாக மாறியது-பிற்கால பேச்சு மொழியின் செல்வாக்கை (அதாவது இரண்டு உயிர்களுக்கு இடையே வரும் பகரமெய் வகரமாதலை) காட்டுகிறதே தவிர வேறு எந்த சிறப்பையும் உடையதல்ல. எனினும் இந்தச் சொல்லே திணையை மூன்றாகப் பிரித்ததற்கு உரிய காரணத்தை-பிரிப்பின் அடிப்படையைப் புலப்படுத்துகிறது. ஆனால் உரையாசிரியர்கள் 'உருபு' என்பது சிறப்புடையதாகக் கருதாததால் அதற்கு ஏற்றபடி உரை எழுதவில்லை.

| | பெயரியல் | வினையியல் |
|---|---|---|
| இளம். | வாய்பாடு | கூற்று |
| சேனா. & நச்சர் | வேறுபாடு | கூற்று |
| கல்லாடர் | கூற்று | கூற்று |
| தெய்வ. | வடிவு | வேறுபாடு |

வாய்பாடு, வேறுபாடு, கூற்று என்ற மூன்று பொருளும் உணர்த்துகின்றன. பொதுவாக உருபு என்பதற்குச் சென்னைப்

பல்கலைக்கழகப் பேரகராதி 1) வடிவம், 2) நிறம், 3) வேற்றுமை முதலியவற்றைக் காட்டும் இடைச்சொல், என்ற மூன்று பொருள் களையே தந்துள்ளது. எனவே 'வடிவு' (வடிவம்) என்பதே இங்கு பொருத்தமாக இருக்கும். தெய்வச்சிலையார் பெயரியலில் மட்டு மாவது இந்தப் பொருளைக் குறிப்பிட்டிருப்பதும் பாலசுப்பிரமணி யனும் (1981) தன்னுடைய அகராதியில் வடிவு (form) என்றே மேலே குறிப்பிட்ட இரண்டு இடத்திலும் பொருள் எழுதியிருப் பதும் உருபு என்ற சொல்லுக்கு மேலே குறிப்பிட்ட இரண்டு சூத்திரத்திலும் 'வடிவு' என்று பொருள் கொள்வதற்கு ஆதார மாக அமைகின்றன. அதாவது 'அம்மூவுருபின' என்பதற்கு உயர் திணைக்கே உரிய வடிவம், அஃறிணைக்கே உரிய வடிவம், இரண்டு திணைக்கே உரிய வடிவம் என்ற அந்த மூன்று வகையான வடி வங்கள் உடையன என்பது பொருள். இதனுடைய சிறப்பு என்ன? சொல் என்பது வடிவமும் பொருளும் உடையது என்பதைத் தொல்காப்பியரே குறிப்பிடுகிறார். (முழு விளக்கத்துக்கு முதல் இயல் பார்க்கவும்) பெரும்பான்மையான சொற்கள் தனித் தனி வடிவமும் பொருளும் உடையன. சில வடிவங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களும் (பல பொருள் ஒரு சொல்) சில வடிவங்கள் ஒரே பொருளையும் (ஒரு பொருட் பன்மொழி) உடையன. இதையும் தொல்காப்பியர் உணர்ந்திருந்தார் என்பதை (உரி. 1.5.6)

> ஒரு சொற் பல பொருட்கு உரிமை தோன்றினும்
> பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்

என்ற வரிகள் காட்டுகின்றன. எனவே இங்கு ஒரேவடிவு இரண்டு திணையில் வந்து இரண்டு பொருளை உடையதாகி பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் மூன்று விதமாகப் பிரிப் பதற்கு அடிப்படையாக அமைகிறது என்பதே ஆகும். இதைச் சொற் பொருளியலார் பெயருக்கும் (name) பொருளுக்கும் (sense) உள்ள உறவு பற்றியது (referential definition of meaning) என்று குறிப்பிடுகிறார்கள் (உல்மன் 1962: 62) என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. ஆகவே விரவுத்திணை என்று கூறியதற்கு இலக் கண அடிப்படை வடிவுதான். அதாவது ஒரே வடிவு ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் குறித்துவருகிற தன்மையை ஒட்டியது என்பதே.

அடுத்து தொல்காப்பியர் சொற்களை மூன்று திணையாக ஏன் பிரித்துள்ளார் என்ற கேள்வி எழுகிறது. ஒரே வடிவுடைய சொற்கள் இரண்டு திணைக்கும் வரும்போது ஒரே வடிவத்தை இரண்டு திணையிலும் சேர்ப்பதற்குப் பதிலாக அவைகளை ஒரு தனிப்பிரிவாக அமைத்து விட்டார். அதற்காக அவைகளிடையே உள்ள சில பொதுமைகளைக் கண்டு விரவுப்பெயர்களின் வகையும் தொகையுமாகப் பெயரியலில் ஒரு சூத்திரமும் வினையியலில் அதே போல மற்றொரு சூத்திரமும் செய்துவிட்டார். இதனால் இலக்கண வருணனையில் எளிமை ஏற்பட்டுள்ளது. அதாவது இரண்டு திணை என்பது சொல்லியலையும் தொடரியலையும் மட்டுமே ஒட்டியது; மூன்று வகை என்பது அவைகளோடு எழுத்தியலையும் அடிப்படையாகக் கொண்டது. மேலும் இங்கு திணை மூன்று என்றது இலக்கண வருணனையை எளிமையாக்க சொல்லிணக் கத்தில் எழுத்தை அடிப்படையாகக்கொண்டு இலக்கண ஆசிரியன் அமைத்துக்கொண்டது என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இனி ஒரே வடிவம் இரண்டு திணைக்கும் பொதுவாக அமையும்போது அந்தப் பொருள்களுக்கிடையே உள்ள உறவு என்ன? என்னென்ன உறவுகள் இருக்கின்றன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதுபற்றி விரவுத்திணைச் சொற்களை ஒட்டிய தொல்காப்பிய சிந்தனையை முதலில் அறிந்து கொள்ள முயல்வோம்.

தொல்காப்பியர் விரவுத்திணையை விளக்கும்போதும் அவற்றைக் குறிப்பிடும் போதும் பயன்படுத்தியுள்ள தொடர்கள் கவனிக்கத்தக்கன. விரவுத்திணையை 'ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய' (பெயர். 6.4.18.1. வினை. 4.3.25.6) என்றே குறிப்பிட்டது முன்னரே எடுத்துக்காட்டியது தான். இரண்டு திணைக்கும் ஒத்தஉரிமைய என்று கூறியது விரவுத்திணை சொற்கள் தெளிவாகப் பலபொருள் ஒருசொற்கள் என்பதே ஆகும். இது சேனாவரையர் கூறிய 'பொருள் தோறும் நிமித்த வேறுபாடு உடைய பல பொருள் ஒரு சொல்' என்பதிலும் சந்தேகம் இல்லை.

விரவுச் சொற்களை வருணிக்கும்போது பயன்படுத்திய பிற தொடர்களும் இதே கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன.

(ஒன்றற்கும் ஒருத்திக்கும்) 'ஒன்றிய நிலையே' (பெயர். 26-1)

(இப்பாற்கும்) 'ஓரன்னவ்வே' (பெயர். 28-1)

'ஒப்பத்தோன்றும் (ஒருவற்கும் ஒன்றற்கும்)' (வினை. 24-3)

'சொல் ஓர் அனைய' (வினை. 25-3;)

(ஐம்பாற்கும்) 'உரிய' (வினை. 26-2)

என்ற தொடர்களும் அதே பொருளை உணர்த்தி அவையெல்லாம் பலபொருள் ஒருசொல் என்ற கருத்துக்கே ஆதரவாக உள்ளன. அப்படியானால் தொல்காப்பியர் ஒரே வடிவம் இரண்டு வேறு பொருள்களை உணர்த்தும் பலபொருள் ஒருசொல்லாக விரவுத்திணைச் சொற்களைக் கொண்டார் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது முழு உண்மையில்லை என்று மேலே பார்த்தோம். இந்த சந்தேகம் தொல்காப்பியர் விரவுத்திணைச் சொற்களைச் சிறப்பாக விரவுப் பெயர்களைச் சிறு உட்பிரிவுகளாகப் பிரித்துப் பேசியிருப்பதாலும் வலுப்பெறுகிறது

விரவுப்பெயர்களை இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் என்று நான்கு பெரும்பிரிவாகப் பிரித்த பிறகு அவை உயர்திணை ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும், ஒன்றன்பாலுக்கும் உரிய என்று விளக்கியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அந்தப் பெயர்களில் இயற்பெயர், சினைப்பெயர், சினைப்பெயர் ஆகியவற்றை ஆண்மைப்பெயர், பெண்மைப்பெயர், ஒருமைப் பெயர், பன்மைப் பெயர் என்று நான்காகவும் முறைப்பெயரை ஆண்மைப்பெயர், பெண்மைப்பெயர் என இரண்டாகவும் பிரித்துப் பேசியதன் அர்த்தம் என்ன?

சேனாவரையர் ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் என்ற இரண்டு பெயர்களும் ஒருமை உணர்த்திய போதும் ஒருமைப் பெயர் என்ற மற்றொரு பிரிவு செய்வானேன் என்ற கேள்வியைக் கேட்டுச் சமாதானம் சொல்லியுள்ளார்.

> பெண்மைப் பெயரும் ஆண்மைப் பெயரும் ஒருமை உணர்த்துமாயினும் இவை பெண்மை, ஆண்மை என்றும் வேறுபாடு உணர்த்தாது ஒருமை உணர்த்துதலான் இவற்றை ஒருமைப் பெயர் என்றார்;

என்ற சேனாவரையருடைய வாசகம் (பெயர். 29 விளக்க வுரை) விரவுப்பெயர்களில் ஆண்பாலுக்கே உரிய பெயர்கள் பெண்பாலுக்கே உரிய பெயர்கள், ஒன்றன்பாலுக்கே உரிய பெயர்கள் இருக்கின்றன; அவைதான் திணைவிரவி வருகின்றன என்பதையே சுட்டுகிறது. இந்தக் கருத்தையே நச்சினார்க்கினிய ரின் எழுத்ததிகார விளக்கமும் (ஆண்மைப் பெயரையும், பெண் மைப் பெயரையும் பொறுத்தவரையில் 'உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும் பெண் பாலையும் உணர்த்துதலின்' என்பது) சுட்டுகிறது. அப்படியா னால் தொல்காப்பியர் ஆண்மை சுட்டிய பெயர். பெண்மை சுட் டிய பெயர் என்று பாகுபடுத்தியதன் நுட்பமே ஒரு பாலுக்குரிய பெயர்கள் சேனாவரையர் சொன்னது போல ஒரு நிமித்தத்தான் இன்னொருபாலிலும் விரவி வருவது என்பதே. அதாவது இயற் பெயர், முறைப்பெயர் முதலியன பல பொருள் ஒரு சொல் அல்ல; பல்பொருட்சொல் (polysemy) என்பதுதான். ஆனால் துரதிருஷ்டவசமாகத் தொல்காப்பியர் தான் செய்த பாகுபாட் டின் அடிப்படை நுட்பப்படி அந்தச் சொற்களின் திணை விரவி வரும் முறையை அவர் வருணிக்கவில்லை. அதாவது பெண்மை சுட்டிய பெயர்கள் அடிப்படையாக உயர்திணைக்கு உரியது என் றால் திணை விரவி வரும் முறையை வருணிக்கும் போது அந்தப் பெயர்கள் ஒன்றன் பாலுக்கும் வரும் என்று மட்டுமே சொல்லிச் சென்றால் போதுமானது. பெண்மை சுட்டியபெயர் ஒருத்திக்கும் ஒன்றற்கும் ஒன்றிய நிலையே என்று விளக்கியிருக்க வேண்டிய தில்லை. ஏனென்றால் பெண்மை சுட்டிய பெயரே ஒருத்திக்கு உரியதால் அதையும் சேர்த்துச் சொன்னது அனாவசியமாகிவிடு கிறது. எனவே, 'ஒன்றற்கும் இயலும் வழக்கத்தான' என்பது போலவே இறுதி வரி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியே ஆண்மை சுட்டிய பெயர்களை வருணிக்கும் போதும் ஒன்றற்கும் ஒருவற்கும் உரிய நிலையே என்று கூறியதற்குப் பதிலாக 'உரிமையும் உடைத்தே ஒருவற்கென்ப' என்பது போன்ற வாச கம் அமைந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆண்மைப் பெயர், பெண்மைப்பெயர் என்ற பாகுபாடு சிறப்புடையதாக அமையும். அப்படியானால் ஏன் தொல்காப்பியர் அந்த முறை யில் வருணிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஒரே வடிவம்

இரண்டு பொருள் உணர்த்துதலில் இரண்டு வகை இருக்கிறது என்பது இன்று நமக்குத் தெளிவாகப் புலனாகிறது ஒன்று: பல பொருள் ஒரு சொல்லாய் இரண்டு வேறு பொருளைத் தொடர்பும் காரணமும் இல்லாமல் உணர்த்துவது. இன்னொன்று: பல் பொருட் சொல்லாய் ஆகுபெயர் போலத் தனக்குரிய பொருளையும் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளையும் உணர்த்துவது. இரண்டாவது வகையில்தான் இயற்பெயர் முதலியன அடங்கும். ஏனெனில்ஆண்மைப்பெயர், பெண்மைப்பெயர் முதலியன அடிப்படையாய் ஆண்பால், பெண்பால் இயற்பெயர் களாய் இருந்தே அஃறிணைப் பொருளின் இயற்பெயர்களையும் உணர்த்துகின்றன. இந்த வேறுபாடுகளை முழுவதும் மனதில் கொள்ளாததால்-வேறுவிதமாகச் சொன்னால்-பலபொருள் ஒரு சொல், பல்பொருட்சொல் என்ற இரண்டு வகையாகப் பொருள் உணர்த்தலாம் என்பதைத் தெளிவாக உணராததால் பெயர்ச் சொற்கள் திணை விரவி வரும் முறையை வருணிக்கும்போது நாம் எதிர்பார்ப்பது போல (அஃறிணைக்கும் வரும் என்று) பல் பொருட்சொல் என்பதாகத் தொல்காப்பியர் விளக்கவில்லை; பலபொருள்ஒருசொல் போல வருணித்துவிட்டார்.

இங்கு இரண்டு பொது உண்மைகளை வற்புறுத்துவது தொல் காப்பியம் பற்றியும், தொல்காப்பியர் அல்லது நூலாசிரியர் கருத்து பற்றியும் நாம் மேலே விளக்கிய முறையில் ஏற்படக்கூடிய ஐயத் தைப் போக்கும். 1) தொல்காப்பிய சூத்திரம் இப்படி இருந்தால் கோட்பாடு நிலையில் முரண் இல்லாமல் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதே தவிர சூத்திரத்தைத் திருத்த வேண்டும் என்று கூறப்படவில்லை எனினும் இந்த முறை விஞ்ஞான ஆராய்ச்சியில் கடைப்பிடிக்கும் முறைதான். முன் நூலில் காணப் படும் நுட்பத்தை முழுவதும் ஏற்றுக்கொண்டு அதற்கேற்பப் பழைய கருத்தைத் திருத்தி அமைத்துக்கொள்வது. மொழியியல் ஆய்விலும் இந்த முறை காணப்படுகிறது. மொழியியல் வரலாற்றை அறிவுவளர்ச்சி வரலாறாகப் பார்க்கும்போது தான் இது புலப்படுகிறது. சேனாவரையர் இந்த முறையைப்பின் பற்றித் தன்னுடைய கருத்தை (விளி. 3) வலியுறுத்தியுள்ளதும் சிறப்பாகச் சுட்டிக்காட்டத்தக்கது (சண்முகம், வெளிவர இருப் பவை, ஆ.) இந்த முறையை மறுவருணனை (restatement) என்று

அழைப்பார்கள் (விளக்கத்துக்குச் சண்முகம், 1980 அ:14 பார்க்கவும்) 2) தொல்காப்பியர் போன்ற சிறந்த நூலாசிரியர்களின் நூலில் கருத்துத் தெளிவின்மையோ அல்லது முரணோ எப்படி ஏற்படும் என்ற ஐயம் எழலாம். எப்பொழுதுமே எல்லாக் கருத்துகளும் ஒரே காலத்தில் புலப்படுவதில்லை; ஒரே ஆசிரியரால் புலப்படுத்தப்படுவதும் இல்லை. சிறந்த ஆசிரியர்கள் சில கருத்துகளை மிகவும் தெளிவாகச் சொல்லிச் சென்றிருக்கும் சமயத்தில் வேறு சிலவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தாது சென்று விடுவதும் உண்டு; அப்படிப்பட்ட கருத்துகளையே பிற்கால அறிஞர்கள் தெளிவுபடுத்தித் தனிபெயர் கொடுத்து எல்லோருக்கும் தெரிகிற கருத்தாக மாற்றிவிடுவார்கள். உதராணமாக மொழியியல் வரலாற்றில் புளூம்பீல்டு விளக்கிய ஒலியனியல் கோட்பாட்டுக்கும் அவர் வருணனையில் அதாவது மொழியாய்வில் மேற்கொண்ட கோட்பாட்டுக்கும் இடையே உள்ள முரண்பாட்டைச் சுட்டிக் காட்டி அவர் மொழி ஆராய்ச்சியில் மேற்கொண்ட கோட்பாட்டை ஒட்டியே பிற்காலத்தில் விதிமுறை ஒலியனியல் (systematic phonology) என்ற புதிய கோட்பாடு வளர்த்துள்ளார்கள்.

தமிழ் இலக்கண வரலாற்றிலும் இப்படிப்பட்ட உண்மையைப் பார்க்கலாம். தொல்காப்பியர் தொழிற்பெயர் என்று கூறியதை நன்னூலார் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என்று வேறுபடுத்தியுள்ளார். அப்படியே தொழிற்பெயரில் பொருட் தொழிற்பெயர், வினைத்தொழிற்பெயர் என்ற வேறுபாடு நச்சினார்க்கினியர் செய்துள்ளார் (பெயரியல் 9. விளக்கத்துக்கு சண்முகம், வெளிவரஇருப்பவை அ, பார்க்கவும்)

மேலைநாட்டு மொழியியல் வரலாற்றிலும் பல பொருள் ஒரு சொல், பல்பொருட்சொல் என்ற வேறுபாடு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் தெளிவுபடுத்தப்பட்டதாக மேலே குறிப்பிட்டோம். தமிழைப் பொறுத்தவரையில் தொல்காப்பியரின் உள்ளத்தைச் சேனாவரையர் புரிந்துகொண்டு இரண்டையும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருப்பதும் மேலே விளக்கப்பட்டது.

---

15 In his actual practice and to some extent in thcoritical wr tings. Bloomfield deviated in two principal ways from this concept of the phoneme. இதன் முழு விளக்கத்திற்கும் Anderson (1974: 226) பார்க்கவும்.

ஆயினும் சேனாவரையர் தன்னுடைய கருத்துக்கு ஆதரவாகத் தொல்காப்பிய வருணனையிலிருந்து சான்று காட்டி விளக்காது தனியே தன் உள்ளத்தில் தோன்றிய கருத்துபோலக் கூறி தொல் காப்பிய வருணனையில் உள்ள குறையை எடுத்துக் காட்டாமல் போய்விட்டார். மேலும் எல்லா விரவுப்பெயர்களுக்கும் பொருந் துவது போலச் சேனாவரையர் கூறியதும் பொருந்தாது போய் விட்டது. எனினும் அவருக்குப் பின்வந்த உரையாசிரியர்கள் சேனாவரையருடைய கருத்தை ஏற்று குறையை நிறை செய்யா மல் முழுவதும் புறக்கணித்ததற்கு அந்தக் கருத்தின் சிறப்பை அவர்கள் உணராததே காரணம்.

சுருக்கமாக விரவுப்பெயர்களின் இலக்கண அடிப்படையாகக் கீழ்க்கண்டவற்றைச் சொல்லலாம் 1) விரவுத்திணை என்பது சொல்லிலக்கண விளக்கத்தில் எழுத்தியல் அடிப்படை கொண் டது. அதுதான் ஒரே வடிவுடைய சொற்களை இரண்டு திணை யிலும் சேர்ப்பதற்குப் பதிலாகத் தனிப்பிரிவு ஏற்படுத்தியதன் மூலம் இலக்கண வருணனையை எளிமைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. 2) இப்படி அமைக்கப்பட்ட விரவுத்திணைச் சொற்களில் அ) இயற்பெயரும் உறவுப்பெயரும் பல்பொருட் சொல் என்ற அடிப்படையில் அமைந்தது. சினைப்பெயர், சினை முதற்பெயர் ஆகியன எவைகளைக் குறிக்கின்றன என்பதே விவாதத்துக்கு உரியதாக இருப்பதால் இவை எப்படி விரவுத் திணையாக ஆகிறது என்பதும் சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது. ஆ) எல்லாம் என்பது விகுதிநிலையில் பல பொருள் ஒரு சொல். இ) தான், தாம், ஒருவர், வியங்கோள், செய்யும், செய்ம்மன போன்ற வினைமுற்றுகள் திணை-பால் பாகுபாட்டுக்குள் அடங் கிய பொதுச் சொற்கள். இவைகளை மேலே குறிப்பிட்டபடி உரு பன் சமனான அடிநிலை உருபன்கள் என்று குறிப்பிடலாம்.

## 4.4 பிற இலக்கணக் கூறுகளில் விரவு

தொல்காப்பியர் விரவுத்திணையை வடிவ ஒற்றுமை அடிப் படையில் ஒரு தனிப்பிரிவாகக் கருதியது போல வேறு இலக்கணக் கூறுகளை வருணிக்கும்போது புதிய பாகுபாடுகளை அமைந்துள் ளாரா என்று பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் இலக்கண

வருணனைக்கான அடிப்படை எங்கும் ஒரு மாதிரியாகக் கையாளப் பட்டிருக்கிறதா என்ற உண்மையை அறிந்து கொள்ளமுடியும்.

தொல்காப்பியர் விரவுத்திணை அமைத்தது போல வேறு எந்த இலக்கணக்கூறுக்கும் விரவுவகை அமைக்கவில்லை. அப்படி யானால் தமிழ்மொழி அமைப்பில் அப்படிப்பட்ட வகை பிற இலக் கணக்கூறுகளில் அமைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை போலிருக்கிறது என நாம் எண்ணலாம். ஆனால் அதன் உண் மையைத் தெரிந்து கொள்ள பிற இலக்கண ஆசிரியர்களோ ஆராய்ச்சியாளர்களோ அப்படிப்பட்ட விரவுவகையைப் பற்றிப் பேசியுள்ளார்களா என்று பார்க்க வேண்டும்.

இலக்கணக்கொத்தில் சாமிநாத தேசிகர் (பதினேழாம் நூற் றாண்டு) வினைச்சொல் அமைப்பில் வடிவ ஒற்றுமை அடிப்படை யில் பல பொதுச்சொற்களைக் கூறியுள்ளார். (சூ. 66, 67)

1) முதல்நிலைத் தனிவினையைச் செய்யப்படுபொருள் குன்றா வினை, செயப்படுபொருள் குன்றிய வினை, பொதுவினை என்ற மூன்று வகையைக் குறிப்பிட்டு முடி, மடி, கெடு போன்றவற்றைப் பொதுவினைக்கு உரிய உதாரணங்களாகத் தந்துள்ளார். (66. 8)

2) தொடர் வினையில் (பகுபதச் சொற்கள்) i) பிறவினை, பொதுவினை என்றும் ii) விதிவினை (உடன்பாட்டு வினை), மறைவினை (எதிர்மறை), பொதுவினை என்றும் iii) செய்வினை செயப்பாட்டுவினை, பொதுவினை (66,8-19) என்றும் பல இலக் கணக்கூறுகளில் பொதுச்சொற்களை அமைத்துள்ளார். தொடர் வினைகளைப் பொதுவாகப் பகுக்கும் முறையால் வேறுபடுத்த லாம் எனவே அவைகளையெல்லாம் வெறும் வடிவ ஒற்றுமை கொண்டு பொதுப்பிரிவு ஏற்படுத்த வேண்டியதில்லை. முதல் நிலைத் தனிவினை என்பது பகாப்பதம் ஆனதால் அந்தப் பாகுபாடு ஏற்றுக்கொள்ளத்தகுந்ததே. தொல்காப்பியர் வினைச் சொற்களைச் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படு பொருள்குன்றாவினை என்று பாகுபாடே செய்யாததால் அங்கு பொதுவினை அமைக்கவில்லை என்று ஒருவர் வ௱திடலாம்.

கால்டுவெல் திராவிட மொழிகளில் அடிச்சொற்களைப் பாகு படுத்தும்போது பெயரடிகள், வினையடிகள், பெயருக்கும் வினைக்

கும் பொதுவான அடிகள் (பொது அடிகள்) என்று மூன்றாகப் பிரிக்கலாம் என்று குறிப்பிடுகிறார் (1875:192)[16] இந்த அடிப்படையில் தமிழ் அடிச்சொற்களையும் மாணிக்கம் (1972:10)[17] அதே மூன்று விதமாகப் பிரித்துள்ளார் அவர் பொதுஅடிச்சொற்களை 1) வடிவமும் பொருளும் ஒத்தவை (அணி 'நகை' (பெயர்) அணிதல் (வினை); 2) வடிவம் ஒத்து பொருள் ஒவ்வாதவை. வில் 'அம்பு' (பெயர்), விற்றல் (வினை): ஓடு 'வீட்டுக்கூரை மேல் போடுவது' (பெயர்), ஓடுதல் (வினை) என இரண்டாகப் பிரித்ததோடு,

வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலை காலமொடு தோன்றும்

என்ற சூத்திரத்தில் (வினை. 1) தொல்காப்பியர் 'வேற்றுமை கொள்ளாது' என்று சொன்னதற்குக் காரணம் பொது அடிச்சொற்கள் இருப்பதே என்றும் விளக்கியுள்ளார். 'வேற்றுமை கொள்ளாது' என்று எதிர்மறை விளக்கமாகச் சொன்னது சில அடிச்சொற்கள் (roots) வேற்றுமையும் ஏற்கும் என்று நாம் எடுத்துக்கொள்ளமுடியாது. இது உரையாசிரியர்களுடைய வேலை போன்றது. நமக்குத் தெரிந்த கருத்தை நூலாசிரியர் மேல் ஏற்றிக் கூறுவது. ஆயினும் தமிழ்மொழி அமைப்பில் சொல் வகைப்பாட்டில் அடிப்படையாகப் பெயர், வினை என்ற இரண்டு வகை இருப்பதாகக் கொண்டுள்ளதால் வடிவ ஒற்றுமை அடிப்படையில் பெயர், வினை, பொது அடிச்சொல் என மூன்றுவகை இருப்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தொல்காப்பியர் பெயரியலில் சொல்லெனப்படுவ பெயரே வினையென்று, ஆயிரண்டென்ப (சூ. 4) என்று உருபனியல்-தொடரியல் அடிப்படையில் கூறியவர் வடிவு அடிப்படையில் பெயர், வினை, பொது

16 Dravidian roots may be arranged in three classes என்று குறிப்பிட்டு இரண்டு பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார் ஆனால் அவர் விளக்கத்திலிருந்து 1) வினை, 2) வினை-பெயருக்கும் பொதுவானவை 3) பெயர் என்ற மூன்று இருப்பது புலனாகிறது. Caldwell (1875: 192).

17 It is generally said that there are three kinds of roots in Tamil, viz, verbal roots, nominal roots, and the roots common to both noun and verb. மாணிக்கம், (1972: 10)

(பெயர்-வினை) என்ற மூன்று வகைப்படுத்தலாம் என்று கூற வில்லை. தொல்காப்பியர், முன்னரே குறிப்பிட்டது போல திணை-பால் பாகுபாடு மிக முக்கியமான இலக்கணக்கூறாகக் கருதிவிட்டதால் அதை முழுமையாக உருபனியல்-தொடரியல் அமைப்பு நிலையில் மட்டுமில்லாது எழுத்து அமைப்பு நிலை யிலும் பார்த்து விரவுத்திணை என்ற பாகுபாடு செய்துவிட்டார். ஆனால் வேறு எந்த இலக்கணக் கூறுக்கும், சிறப்பாகப் பெயர், வினை பாகுபாட்டுக்கும் எழுத்து நோக்கில் அவைகளின் வடிவத் தைப் பார்த்து விரவுச்சொல் அமைக்காமல் போய் விட்டார்.

பொதுவாக இலக்கணக்கொத்திலும் பிற இலக்கண நூல் களிலும் வடிவ ஒற்றுமை அடிப்படையில் இலக்கணக் கூறுகளைப் பாகுபாடு செய்யும்போது ஒரு நிமித்தம் பற்றி இரண்டு பொருளை உடைய பல்பொருட் சொற்களைச் சேர்த்துக்கொள்ளாது பொருள் முழுவதும் வேறுபட்டு வரும் பலபொருள் ஒரு சொல்லாக வருவனவற்றையே பாகுபாடு செய்துள்ளார்கள்[18] தொல்காப்பி யத்தில் ‘எல்லாம்’ என்ற ஒரு சொல் மட்டுமே பலபொருள் ஒரு சொல் என்ற பிரிவில் அடங்குகிறது. இயற்பெயர் போன்ற பல்பொருட்சொற்களையும் தொல்காப்பியர் விரவுத்திணையில் அடக்கியது போலப் பிறர் அடக்கவில்லை; அடக்கவும் மாட்டார் கள். ஆயினும் தொல்காப்பியர் வருணனை குறை உடையதாகக்

18 ஆங்கிலமொழி இலக்கணத்தின் சொல்வகைப்பாட்டினைப் பற்றிப் பேசும்போது இப்படிப்பட்ட முறையை நாம் பார்க் கலாம். ஆங்கிலமொழியில் அடிப்படையாக பெயர் (N) பெயரடை (A), வினை (V) என்று மூன்று சொல்வகைப்பாடு இருக்கிறது என்று முதலில் குறிப்பிட்டு, பிறகு வடிவ அடிப்படையில் பெயருக்கும், பெயரடைக்கும் பொதுவான சொற்களும் (NA- அமெரிக்கன் போன்றவைகள்), வினைக்கும், பெயரடைக்கும் பொதுவான சொற்களும் (VA-க்ளீன் clean-போன்றவை), பெயருக்கும், வினைக்கும் பொதுவான சொற் களும் (NV - வாக் walk - போன்றவை), பெயருக்கும் பெயரடைக்கும், வினைக்கும் பொதுவானவை (NAV-ப்ளூ blue-போன்றவை) என்றும் ஹாக்கட் (Hockett 1958: 227) வர்ணித்துள்ளது குறிப்பிடத்தக்கது இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொல்வகைப்பாட்டுக்குரியவை (NA, VA, NV, NVA குறிப்பிட்டவைதான்) விரவுவகையில் அடங்கும்.

கருத வேண்டியதில்லை, ஏனெனில் இயற்பெயர், முறைப்பெயர் போன்ற பெயர்ச்சொற்களின் சில பாகுபாடுகள் இங்கே விளக்க முடிந்துவிட்டதும் இலக்கண வருணனையில் பொதுமையும் எளிமையும் ஏற்பட்டுள்ளதும் நன்மையாகக் கருதலாம் எனவே ஒரு வகையில் குறை உடையதாயினும் அதில் சில நிறைகள் அமைந்துவிட்டன.

## 4.5 வழக்கும் இலக்கணமும்

தொல்காப்பியப் பாயிரமே

வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் பொருளும் சொல்லும் நாடி

என்ற இலக்கணத்தின் அடிப்படையைக் குறிப்பிடுகிறது. எனவே இலக்கண ஆராய்ச்சியில் இலக்கண உண்மைகள் எப்படி இலக்கியத்தில் பயின்று வந்திருக்கின்றன என்று பார்ப்பது ஒருமுறை; இதுவே பரவலாகவும் காணப்படுகிறது. இன்னொருமுறை இலக்கிய வழக்குகள் எப்படி இலக்கணம் ஆக்கப்பட்டிருக்கின்றன என்று பார்ப்பது. பொதுவாக இந்த முறை தொல்காப்பியத்தைப் பொறுத்தவரை அதாவது சங்க இலக்கிய வழக்குகளைத் தொல் காப்பிய இலக்கணத்தோடு ஒப்பிட்டு தொல்காப்பியம், சங்க இலக்கியத்துக்கு முந்தியது என்ற கால ஆராய்ச்சிக்கே பயன் படுத்தப்பட்டு வந்திருக்கிறது. சமீபகாலத்தில் இலக்கியக் கிளை மொழி பற்றிய உண்மையும் அதாவது அக்காலத்தில் வழங்கிய பிற கிளைமொழிகள் பற்றி எதிர்மறையான அறிவும்-புலப்படுத்துவதாகவும் விளக்கப்பட்டிருக்கிறது (சண்முகம். 1971அ., 1971ஆ.). மேலும் கிடைத்த வழக்குகளைக் கொண்டு இலக்கணம் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது? கிடைக்கும் வழக்குகளையும்-வழக்கில் உள்ளவற்றின் மொழி அமைப்பு உண்மைகளையும் விளக்கும் முறையில் இலக்கணம் உள்ளதா? இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள பொதுமை, புதிய வழக்குகளுக்கு இடமளிக்கிறதா? என்றெல்லாம் ஆராய்ந்தால் இலக்கண ஆசிரியனின் இலக்கணம் அமைக்குந் திறனை அறிந்துகொள்ள முடியும். இந்த நோக்கில் விரவுத்திணைச் சொற்களின் இலக்கணத்துக்கும் வழக்குக்கும் உள்ள தொடர்பை இங்கு புரிந்துகொண்டு சிறப்பாக இலக்கணம் உருவாக்கப்பட்டிருக்கும் முறையை அறிந்துகொள்வோம்,

### 4.5.1 இயற்பெயர்

ஆண்மை இயற்பெயரும், பெண்மை இயற்பெயரும் அஃறிணை இயற்பெயர்களாக வரும் என்பதற்குச் சான்றுகள் சங்க கால இலக்கியத்தில் இல்லை. எனவே உலகவாழ்க்கை யொட்டியே தொல்காப்பியர் இலக்கணம் அமைத்திருக்க வேண்டும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இடைக்காலத்தில்தான் ஆண்மை இயற்பெயர் பிற உயர்திணைக்கும்[19] அஃறிணைக்கும் வழங்கப்பட்டதற்கு மேலே இலக்கியச்சான்று தரப்பட்டது. பெண்மை இயற்பெயர் அஃறிணைப் பொருளின் இலக்கிய வழக்குக்குச் சான்று காணவேண்டும்.

தொல்காப்பியர் எல்லாவகையான இயற்பெயர்களும் இரண்டு திணையிலும் வரும் என்று கூறியுள்ளார். ஆனால் உலக வழக்கில் அப்படி அமையவில்லை. இதில் இரண்டு விதத்திலும் கட்டுப்பாடு காணப்படுகிறது: 1) எல்லா உயர்திணை இயற்பெயர்களும் அஃறிணை இயற்பெயர்களாக வழங்கினவா? என்பது அறிய வேண்டும். அப்படி வழங்கியிருக்க முடியாது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் எந்தெந்த உயர்திணை இயற்பெயர்கள் அஃறிணையில் இயற்பெயர்களாக வழங்கின என்பதை ஆராயவேண்டும்; 2) உயர்திணைப்பெயர்கள் அஃறிணைக்கு இயற்பெயராக வழங்கும்போது கூட எல்லா அஃறிணை பெயர்களுக்கும் இயற்பெயர்கள் இட்டு வழங்கப்பட்டனவா என்று ஆராய்ந்தால், அதற்கும் இல்லை என்றே பதில் சொல்ல

---

19 அப்பூதியடிகள் வரலாறு இன்னொரு உண்மையையும் புலப்படுத்துகிறது. உயர்ந்தோரின் பெயர்களைப் பிற மனிதர்க்கும் இடுவது என்பதே அது. வான்மீகியார் போன்ற சங்ககாலப் புலவர்களின் இயற்பெயர்கள் இந்த பழக்கம் முன்னாளிலேயே துவங்கிவிட்டதைக் காட்டுகிறது. இன்றும் லெனின், காந்தி, நேரு, அண்ணாதுரை என்ற பெயர்கள் வழங்குவதும் அந்த உண்மையை உறுதிப்படுத்தும். ஆனால் இது இயற்பெயர்களைப் பண்பாட்டு நோக்கில் பார்ப்பவர்களுக்கு மட்டுமே சிறப்பானது. மொழியியல் நோக்கில் உயர்திணைப் பெயர்களே பிற உயர்திணைப் பொருளில் விடுவதால் சிறப்பு எதுவும் இல்லை இதைப்போலவே தெய்வப் பெயர்கள் இயற்பெயர்களாக பரவலாக வழங்கப்படுவதும் மொழியியல் நோக்கில் சிறப்பில்லாததால் தொல்காப்பியராலோ பிற இலக்கண ஆசிரியர்களாலோ குறிப்பிடப்படவில்லை,

வேண்டியிருக்கும். ஏனெனில் மரம், செடி, புழு, பூச்சி போன்ற வற்றிற்கெல்லாம் இயற்பெயர் இட்டு அழைத்திருக்க முடியாது.

தமிழகத்தில் நூற்றுக்கணக்கான உயர்திணை இயற்பெயர் கள் வழங்கிருக்க வேண்டும். அவையெல்லாம் அஃறிணை இயற் ப்பெயர்களாக வழங்கியிருக்க முடியாது. எனவே என்னென்ன உயர்திணை இயற்பெயர்கள் அஃறிணை இயற்பெயர்களாக வழங் குகின்றன; அவைகளிடையே காணப்படும் பொதுமை என்ன என்பதைக் காண வேண்டும். குறிப்பிட்ட சில உயர்திணை இயற் பெயர்களே அஃறிணை இயற்பெயர்களாகச் சங்ககாலத்திலும் வழங்கியிருக்கவேண்டும் என்று ஊகிப்பது சரியாகவே இருக்கும். ஆனால் தொல்காப்பியர் எல்லா உயர்திணைப் பெயர்களும் அஃறிணை இயற்பெயர்களாக வரும் என்று கூறியதால் சங்க காலத்தில் அப்படிப்பட்ட வழக்கு இருந்திருக்கவேண்டும்; பிற் காலத்தில்தான் மாறிவிட்டது என்று கொள்ளமுடியாது. அப் படியானால் தொல்காப்பியர் ஏன் இப்படி இலக்கணம் அமைத் தார் என்ற கேள்வி எழுகிறது. இலக்கண ஆசிரியர் செய்யக்கூடிய 'பொதுமை உண்டாக்கல்' என்ற உத்தியைப் பின்பற்றி அப்படிச் சொல்லியிருக்கக் கூடுமே தவிர வேறுகாரணம் இருக்கமுடியாது.

எல்லா உயர்திணை இயற்பெயர்களும் திணை விரவி வராத தைப் போலவே உயர்திணை இயற்பெயர்கள் அ. .றிணையில் வரும்போது எல்லா அஃறிணைப் பொருளுக்கும் உயர்திணை இயற்பெயர் சூட்டப்படுவதில்லை. மாடுகளுக்கு மட்டுமே இயற் பெயர் இட்டு வழங்கியிருக்கவேண்டும் என்ற வேலுப்பிள்ளை கருத்து மேலே குறிப்பிடப்பட்டது. அதாவது அ.'.றிணையில் மாட்டுக்கு மட்டும் பொருந்துவதாக அவர் கருதுகிறார். இங்கும் கூட எல்லா மாடுகளும் மனிதப்பெயர் இட்டு அழைக்கப்பட்ட னவா என்பது சந்தேகமே. வீட்டில் இருக்கும் மாடுகளுக்கு - இன் னும் பொதுவாகச்சொன்னால் செல்லமாக வளர்க்கும் விலங்கு கள், பறவைகளுக்கு மட்டுமே மனிதப் பெயர் இட்டு அழைத் திருக்கலாமே தவிர பிற எல்லா அ.'.றிணைப் பொருளுக்கும் உயர் திணை இயற்பெயர் வைத்து அழைத்திருக்க வாய்ப்பு இல்லை. அதாவது உயர்திணை இயற்பெயர்கள் என்று குறிப்பிட்ட வற்றில் சிலவகை அ' றிணைப் பொருள்களுக்கு மட்டுமே விரவி

வந்தாலும் தொல்காப்பியர் எல்லா அ.'.றிணைப்பொருளுக்கும் பொருந்துவது போல இலக்கணம் அமைத்தது 'பொதுமைப்படுத்து தல்' என்ற உத்தியை ஒட்டியே தவிர அவர்கால வழக்கை ஒட்டி அல்ல. ஆகவே உலக வழக்கை ஒட்டி இலக்கணத்தை நோக்கும் போது இலக்கண ஆசிரியன் கையாண்ட பொதுமைப்படுத்துதல் என்ற உத்தி புலப்பட்டு விடுகிறது.

ஒருமை இயற்பெயர் என்பது நாடு, நகரம் ஆறு, மலை ஆகியவற்றின் குறிப்பிட்ட பொருளின் பெயர் என்று மேலே பார்த்தோம். இங்கும் எல்லா ஒருமை இயற்பெயர்களும் உயர் திணை இயற்பெயர்களாக அமைந்திருக்க முடியாது; அவைகளில் சில பெயர்களே உயர்திணை இயற்பெயர்களாக உலகவழக் கில் அமைந்திருக்க முடியும். ஆனால் தொல்காப்பியர் அந்தக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தே பொதுமைப்படுத்தியுள்ளா ர்.

இப்படியே பன்மை இயற்பெயர்களிலும் உயர்திணை இயற் பெயர்களாக சிலவே வந்திருக்கமுடியும். இப்படி திணைவிரவி உலகவழக்கில் வருவதற்கு இருக்கும் கட்டுப்பாடுகளை அலட்சி யப்படுத்தியே தொல்காப்பியர் எல்லாப் பன்மை இயற்பெயர் களும் உயர்திணையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்பெயர் களாக அமையும் என்று பொதுமைப்படுத்தி இலக்கணம் அமைத்துவிட்டார்.

இயற்பெயர்கள் திணை விரவி வரும் என்று தொல்காப்பியர் கூறியது வெறும் வழக்கை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கூறியதல்ல; பல புதிய வழக்குகளுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் பொதுமைப்படுத்திக் கூறியது என்று உணர்ந்து கொள்ளவேண்டும். இது மொழியியல் நோக்கில் வருணனை நிறைவு (descriptive adequacy) என்று அழைக்கப்படுகிறது. (விளக்கத்துக்கு, சண்முகம் 1980 அ. 64, 89 பார்க்கவும்).

### 4.5.2 முறைப்பெயர்

முறைப்பெயர்களையும் ஆண்மை சுட்டிய பெயர், பெண்மை சுட்டிய பெயர் என்று பகுத்ததால் அவை அடிப்படையில் உயர் திணைக்குரியதாய் அஃறிணையில் துணைநிலையாய் பயன்படும் என்று கூறியுள்ளார். இங்கும் உயர்திணையில் வழங்கும் எத்தனை

பெயர்கள் அஃறிணையில் எந்த எந்தப் பொருளுக்கு உரியது என்பதையும் வழக்கையொட்டி அறியவேண்டும்.

மருமகன், நாத்தூண் (நாத்தனார்). மைத்துனன் ஆகிய சொற்கள் அஃறிணைப் பொருள்களிடையே வழங்குவதற்கு வாய்ப்பே இல்லை. அப்படியே அஃறிணைப் பொருள்களிடையே வீட்டில் வாழும் விலங்குகளுக்கு மட்டுமே ஓரளவு பொருந்தும். இயற்பெயரைப் போலவே இரண்டு நிலையிலும் (எல்லா முறைப் பெயர்களும் அஃறிணைக்கு வழங்குவதிலும் அஃறிணைக்குள்ளே பொருந்தும் பெயர்களிலும்) கட்டுப்பாடு வழக்கில் இருப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றால் அது பண்பாட்டு ஆய்வாளனின் கடமையாய்க் கருதித் தொல்காப்பியர் மொழியமைப்பில் பொதுமையாய் விளக்கிவிட்டார் என்றே கருதவேண்டும்.

தொல்காப்பியர் கூறிய முறைப்பெயர்கள் உயர்திணைப் பொருள்களுக்கு இடையேயும் அஃறிணைப் பொருள்களுக்குள்ளேயும் வழங்குவதே ஆகும். ஆனால் இலக்கிய வழக்கில் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் இடையேயும் முறைப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு செடியை 'அக்கா' என்று உறவு கொண்டாடும் தலைவியை நற்றிணை காட்டுகிறது. (172.3 4)

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே

இங்கு புன்னைமரத்தை நுவ்வை (அக்கா) என்று தலைவி கூறுகிறாள். அதுபோல இராமாயணத்தில் குரங்குகளுக்கிடையே உறவுச் சொற்கள் விரிவாகவே பயன்படுத்தப்படுவதும் மனிதனுக்கும் குரங்குக்கும் உறவு கற்பிக்கப்படுவதும் பலரும் அறிந்ததே இராமன் சுக்கிரீவனைத் தம்பியாக ஏற்றுக்கொள்வது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் இடையே காணப்படும் உறவாகும்.

'நீ என்னுயிர்த் துணைவன் என்றான்' (கிட்கிந்தாகாண்டம் 8.27.4) என்று 'நண்பன்' ஆக முதலில் ஏற்றுக்கொண்டாலும் பின்னர்

………… … குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்………
…………………… … … …
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தான் நுந்தை

(யுத்தகாண்டம் 452) என்று இராமன் கூறும்போது 'தம்பி' உறவு வெளிப்பட்டு விடுகிறது. சுக்கிரீவனைத் தசரதனின் புதல்வன் என்று கூறும்போதும் முறைப்பெயர் கையாளப்பட்டுள்ளது. எனவே உயர்திணைக்கும் அஃறிணைக்கும் இடையே காணப்படும் உறவு முறை பண்பாட்டின் சிறப்பு அம்சமாகும். இது மொழியின் சாதாரணப் பயன்பாட்டிலிருந்து மாறுபட்ட வழக்கு. ஆதலால் இலக்கண ஆசிரியன் கவலைப்படவில்லை போலும் பண்பாட்டு ஆய்வாளன் சிறப்பாகக் குறித்துக் கொள்ளத்தக்க வழக்குகள் என்று இலக்கண ஆசிரியன் ஒதுக்கியிருக்க வேண்டும்.

வழக்கு நோக்கில் இலக்கணத்தைப் பார்க்கும்போது வழக்கை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு இலக்கணம் அமைக்காமல் விஞ்ஞானிக்குள்ள பரந்துபட்ட நோக்கோடு பொதுமைப்படுத்திக் கூறுதலும் சில வழக்குகளை இலக்கணத்துக்குள் கொண்டு வராது ஒதுக்கி விடுதலும் அறிந்துகொள்ள முடிகிறது. முன்னது பொது மைப் படுத்துதல் என்ற இலக்கண உத்தியையும், பின்னது (சில வழக்குகளை ஒதுக்குவது) இலக்கணத்தின் வரம்பையும் புலப் படுத்துகிறது.

## 4.5.3 சினைப்பெயர்

வழக்கில் மனித உறுப்புகளும் அஃறிணைப் பொருளின் உறுப் புகளும் ஒரே பெயரை உடையனவாக (தலை, கண், கால், மூக்கு முதலியன) அமைந்துள்ளன. எனவே தான் சினைப்பெயர்களை விரவுப் பெயர்களாகத் தொல்காப்பியர் கருதியிருக்கலாம். அந்தப் பெயர்களில் ஆணுக்கும், பெண்ணுக்கும் உயர்திணையில் சிறப் பாக அமைந்த உறுப்புகளும் அஃறிணை பொருளுக்குச் சிறப்பாக அமைந்த உறுப்புகளும் (கொம்பு, வால் போல்வன) அடங்கும். ஆயினும் சிறப்பாக அமைந்த உறுப்புகளைக் கொண்டு ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்ற பாகுபாடு செய்தது பொருந் துமா என்ற கேள்வி முன்னமே எழுப்பப்பட்டது. ஏனெனில் எல்

லாச் சினைப்பெயர்களுமே அஃறிணையைச் சேர்ந்தனவே. ஆகவே இந்தப் பாகுபாடு (சினைப் பெயர்களை ஆண், பெண், ஒன்று, பல என்று பிரித்தது) மொழி அமைப்பு அடிப்படை என்றுகொள்ள முடியாது. இதனால் இவை திணை விரவிவரும் என்பதும் பொருந்தாது போய் விடுகிறது. அப்படியானால் தொல்காப்பியர் இப்படி இலக்கணம் அமைந்ததற்குக் காரணம் என்ன? அதாவது மொழிஅமைப்பு அல்லாமல் வேறு எதோ இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

### 4.5.4 சினை முதற்பெயர்

உறுப்புகளின் பெயர் பொதுவாகவும் சிறப்பாகவும் இருப்ப தால் அவைகளை ஒட்டிய முதற்பெயர்கள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். அப்படி என்னென்ன பெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன என்று ஆராயவேண்டும். மேலும் அவை திணை, விரவி வழங்கினவா என்பதையும் பார்க்கவேண்டும். மனிதஇயற் பெயர்களை ஒட்டிய சினை முதற்பெயர்கள் (முடக்கொற்றன் முதலிய போலவோ) ஆண், பெண்பால் விகுதி சேர்ந்த சினை முதற்பெயர்கள் (முடவன். முடத்தி முதலியன போலவோ) அஃறி ணை ஒட்டிய சினை முதற்பெயர்கள் வழங்கியிருக்க முடியுமா? என்பது சந்தேகமே. மேலும் அவை விரவுப்பெயர்களாக ஆளப் பட்டிருக்குமா என்பதும் பெரிய கேள்விக்குறியே அப்படியானால் தொல்காப்பியர் எப்படி பொதுமைப்படுத்தி இலக்கணம் செய் தார் என்ற கேள்வி வழக்கு நோக்கிலிருந்து பார்க்கும் போது எழத்தான் செய்கிறது. எவ்வளவு தூரம் தொல்காப்பியர் அமைப்பு அழகை (neatness of pattern) மனதில் கொண்டு இலக்கணம் அமைத்தார்? எவ்வளவுதூரம் எதாவது புற செல்வாக்குக்கு உட் பட்டு இப்படி இலக்கணம் அமைத்தார் என்ற முறையிலேயே பதில் அமைய முடியும். இந்த இரண்டு சமாதானமும் நாம் இன்றைய நோக்கில் தருபவையாக இருந்தாலும் பாயிரமும் இவற்றிற்குத் துணை செய்வனபோல அமைந்திருக்கிறது என் பதும் சுட்டிக்காட்டத்தகுந்தது. உண்மையில் தொல்காப்பிய ஆராய்ச்சிக்குச் சிறப்பாகவும் இலக்கண ஆராய்ச்சிக்குப் பொது வாகவும் பல கோட்பாடுகளை பாயிரம் குறிப்பிட்டுள்ளது. அவை களில் 1) இலக்கணம் இலக்கிய வழக்கையும் ('செய்யுள்') உலக

வழக்கையும் ('வழக்கு') அடிப்படையாகக்கொண்டது என்பதோடு 2) 'முறைப்பட எண்ணுதல்', 3) 'முந்துநூல் காணுதல்' என்ற மேலும் இரண்டு அடிப்படைகளையும் சேர்த்துக் கூறியது சிறப்பு மிகுந்தது. அமைப்பு அழகு என்று இன்று பேசப்படுவதுதான் 'முறைப்பட எண்ணுதல்' என்பதன் வளர்ச்சி என்றும், புறச் செல்வாக்கு என்பது 'முந்துநூல் காணுதல்' என்றும் கூறுவது பொருத்தமாக இருக்கும். எனவே வழக்கு நோக்கில் இலக்கணத்தை நோக்கும்போது இலக்கணம் உருவாகும் முறையும் ஆசிரியன் இலக்கணத்தை உருவாக்கும் முறையும் தெளிவாகின்றன.

— o —

## துணை நூல்கள்


அகத்தியலிங்கம் ச.

"மொழியியல் சொல்லியல் - I பெயரியல்", அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச, & இராமசுந்தரம்

1969 தொல்காப்பிய முதற் நூற்பா - "செந்தமிழ்' 65:1-8.

அகத்தியலிங்கம், ச. & செ. வை. சண்முகம்

1970 *The Language of Tamil Inscriptions*, 1250-1350 A. D. Annamalainagar.

அகத்தியலிங்கம், ச. & கா. பாலசுப்பிரமணியன்

1974 "இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்", அண்ணா மலைநகர்.

அகத்தியலிங்கம், ச. & க. முருகையன்

1972 "தொல்காப்பிய மொழியியல்", அண்ணாமலை நகர்.

அரங்கராசன், ச. ம.

1979 "பொருள்கோள்", மருதூர்.

இராகவஐயங்கார், மு

1959 "கட்டுரைமணிகள்" (நாராயண ஐயங்கார் பதிப்பு), மானாமதுரை.

இஸ்ரேல், மோ.

1973 *The Treatment of Morphology in Tolka:ppiyam*, Madurai.

1976 ''இலக்கணஆய்வு : பெயர்ச்சொல்", மதுரை.

கந்தசாமி, சோ. ந.

1961 Paripa:ṭal - A Linguistic study, Pt III-Dictionary, Unpublished M.Litt., thesis, Annamalainagar.

சண்முகதாஸ், அ.

1982 "*தமிழ்மொழி இலக்கண இயல்புகள்*", *யாழ்ப்பாணம்.*

சண்முகம், செ. வை.

1971அ. *சங்க இலக்கிய மொழி அமைப்பு-"ஆராய்ச்சி"* 2. *பக்.* 326-34.

1971ஆ. Some problems of Old Tamil phonology, *Indo-Iranian Journal*, 13.30-48.

1971இ. *Dravidian Nouns* (a comparative study), Annamalainagar.

1972 *வேற்றுமை பற்றித் தொல்காப்பியர் "தொல்காப்பிய மொழியியல்"* பக். 267 - 308 *அண்ணாமலைநகர்.*

1974 *பழந்தமிழில் கிளை மொழிகள் - "இலண்டன் தமிழ்ச் சங்க மலர்"* பக். 56 - 61. இலண்டன்.

1978அ. *தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு - "மொழியியல்"* 2. 1. 75-100.

1978ஆ. "*எழுத்துச் சீர்திருத்தம்*", *அண்ணாமலைநகர்.*

1980அ. "*எழுத்திலக்கணக் கோட்பாடு*", *அண்ணாமலைநகர்.*

1980ஆ. *சொல்லின் வகைகள் - "ஆய்வுக்கோவை"* 12-2. 142 - 48 *அண்ணாமலைநகர்.*

1981அ. *சங்கத் தமிழில் நேரப்பெயர்கள்-"மொழியியல்"* 3. 4. 39-64.

1981ஆ. *தொன்னூல் விளக்க சொல்லதிகார முதற் நூற்பா - "ஆய்வுக்கோவை"* 13 - 2. 354-8 *அண்ணாமலைநகர்.*

1982அ. *உரியவை உரிய பெயர் வயினான - "ஆய்வுக் கோவை"* 14 - 4, 9 84 *அண்ணாமலைநகர்.*

1982ஆ. *விரவுப் பெயர்கள் பால் உணர்த்தும் முறை - "மொழியியல்"* 5. 3. 1-30.

1982இ. *திணை-பால் பாகுபாடு - "மொழியியல்"* 6. 1. 35-70.

1983அ. *விரவுத் திணை - "மொழியியல்"* 6.4.1-73.

1983ஆ. *இளங்கோ தமிழ் - "ஆய்வுக்கோவை"* 15-4.

*(வெளிவர இருப்பவை)*

அ. *தொல்காப்பியத்தில் பெயர்ச்சொற்கள் - Journal of Tamil Studies*

ஆ. *விளிமரபில் விரவுத்திணை - "மொழியியல்"*

சிவத்தம்பி, கா.

1982 *"இலக்கணமும் சமுக உறவுகளும்", சென்னை.*

சிவதாணு, சி.

1983 Tolka:ppiyar's classification of words: A reconsideration, *"ஆய்வுக்கோவை"* 15.2. 135-8, *அண்ணாமலைநகர்.*

சீனுவாசவர்மா, கோ.

1977 *"கிளைமொழியியல்", அண்ணாமலைநகர்.*

சுந்தரம், இராம.

1978 *"சொல் புதிது சுவை புதிது", சென்னை.*

சுப்பிரமணியம், வி. ஐ.

1955 Personal names in sangam literature, *Indian linguisttics,* 16 170-8.

சுப்பிரமணிய சாஸ்திரி, பி. சா.

1930 *"தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை" சென்னை.*

1934 *History of grammatical theories in Tamil in relation to the grammatical literature in Sanskrit,* Madras.

1945 *Tolka:ppiyam Collatika:ram* (English translation) 2nd Edn. 1979. Annamalainagar.

சுப்பிரமணியன், ச. வே.
1965 *Descriptive grammar of Cilappatika:ram*, Madras.
1972 தொல்காப்பியரின் சொற்பாகுபாடு - "தொல்காப்பிய மொழியியல்" பக். 135-42. அண்ணாமலைநகர்.

சுப்பிரமணியன், சி.
1972 கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர் - "தொல்காப்பிய மொழியியல்" பக். 155-70 அண்ணாமலைநகர்.

சுப்பிரமணியன், ந.
1961 பண்டைத் தமிழர் பெயரிடு முறை - "பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர்" பக். 307-10, சென்னை.

திண்ணப்பன், சுப.
1972 தொல்காப்பியத்தில் இலக்கணக் குறியீட்டுச் சொற்கள் - "தொல்காப்பிய மொழியியல்" பக். 363-84 அண்ணாமலைநகர்

திருமலை, மா. சு.
1983 "பாடல் பயிற்றுமுறை", அண்ணாமலைநகர்.

நடராசப்பிள்ளை, ந.
1980 தேர்வுக் கட்டுப்பாடுகளும் மொழிகற்பித்தலும் - "மொழியியல்" 4. 1 & 2. பக். 309-19

நயினார், நா.
1982 "பேரும் பெருமையும்", நாகர்கோயில்.

பரமசிவம், கு.
1980 A neutralisation in progress, *A Festschrift for Prof. M. Shanmugam pillai*, Madurai.
1983 "இக்காலத் தமிழ் மரபு", மதுரை.

பாலசுப்பிரமணியன், கா.
1978 The concept of sentence structure in Tolka: ppiyam in *Studies in Early Dravidian Grammars*, Annamalnaiagar.

1981 அ. 'A Descriptive grammar of Tolka:ppiyam' unpublished Ph.D. thesis, Annamalai university, Annamalainagar.

1981 ஆ. 'Index of Tolka:ppiyam' - unpublished. Annamalainagar.

மாணிக்கம், வ. சுப.

1972 *A study of Tamil verbs*, Annamalainagar.

மாணிக்கம், T. S.

1963 'Loanwords in Tamil' unpublished M.Litt. thesis Annamalai university, Annamalainagar.

மீனாட்சிசுந்தரம், கா.

1973 சொற்பகுப்பு: அன்றும் இன்றும் - "ஆய்வுக்கோவை" - 5. 793-8 சென்னை.

மீனாட்சி சுந்தரன், தெ. பொ.

1961 'The Tamil of the seventeenth century', *Collected papers of T P. Meenakshisundaran* Annamalainagar.

1965 *A History of Tamil language*, Poona.

1974 உரிச்சொல் - "இலக்கண ஆய்வுக்கட்டுரைகள்' பக். 121-38 அண்ணாமலைநகர்

முத்துசண்முகன்,

1971 "இக்கால மொழியியல்" (முதற்பகுதி), மதுரை.

வரதராசன், மு.

1947 "மொழிநூல்", சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - மறுமதிப்பு, சென்னை. 1974

வேலுப்பிள்ளை, ஆ.

1966 "தமிழ் வரலாற்று இலக்கணம்", சென்னை.

வைத்தியநாதன், எஸ்.

1971 *Indo-Aryan loan words in old Tamil*, Madras.

**Anderson, R. A.**
1974 *The organisation of Phonology*, Newyork.

**Bornstein, D. D.**
1977 *An Introduction to Transformational grammar* Massachusette.

**Burrow, T.**
1956 *The Sanskrit Language*, London.

**Caldwell, R.**
1875 *A comparative grammar of the Dravidian or South Indian family of languages*, Revised edn. Reprinted in 1956, Madras.

**Chomsky, N.**
1965 *Aspects of the theory of syntax*, Massachrusette

**De Sassure, F.**
1916 *Course in general linguistics* Third edn. by Charles Bally and Albert Sechehaye. Peter Owen Ltd. London 1960.

**Hockett, C. F.**
1955 *A manual of phonology*, Baltimore.
1958 *A course in modern lingiustics*, Newyork.

**Lakoff, G.**
1970 *Irregularity in Syntax*, Newyork.

**Leech, G. N.**
1974 *Semantics*, Harmonds worth, Penguin.

**Lyons, J.**
1968 *Indroduction to theoretical linguistics*, Cambridge.

**Panini**
Ashta:dhya:yi (translated by Srisa chandra Vasu as *The Ashta:dhya:yi: of pa:nini*, Reprinted: Motilal Banarsidas. New Delhi. 1981.

**Pei, M. A. & Gaynor, F. (Ed.).**
1954 *A dictionary of linguistics*, Newyork.

**Robins, R. H.**
1967 *A short history of linguistics*, London.
1976 'Some continuities and discontinuities in the history of linguistics' in *History of linguistic thought and contemporary linguistics*, Berlin.

**Ullmann, S.**
1962 *Semantics: An introduction to the science of meaning*, Oxford.

**Quirk et al.**
1972 *A grammar of contemporary English*, London-

அகராதிகள்

*Index des mot de la litterature tamoule ancience*, Pondicherry, 1967-68.

*Tamil lexicon* (*vols.* 1-6) *and supplement*, Madras university 1924-39.

இலக்கணம்

இலக்கணக் கொத்து
*சுவாமிநாத தேசிகர் - ஆறுமுக நாவலர் (பதிப்பு) சென்னை* 1956

இலக்கணத் தொகை - சொல் (பதிப்பு)
*ச. வே. சுப்பிரமணியன் நாகர்கோவில்*, 1971.

இலக்கண விளக்கம்-சொல்லதிகாரம்
*வைத்தியநாத தேசிகர் - சரசுவதி மகால் நூல் நிலையம் (பதிப்பு) தி வே. கோபாலையர்* 1971.

இலக்கண விளக்கச் சூறாவளி-
*சிவஞான-முனிவர். ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை.* 1952.

சுவாமிநாதம்
*(உரையும் பதிப்பும்), செ.வை. சண்முகம், அண்ணாமலை நகர்*, 1976.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை. *சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன் - கழகப்பதிப்பு, சென்னை.* 1972.

தொல்காப்பியர் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை, *கழகப் பதிப்பு, சென்னை.* 1950.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணர் உரை, *சுந்தரமூர்த்தி விளக்க உரையுடன் - கழக வெளியீடு, சென்னை,* 1963.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார். உரை *கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, தஞ்சாவூர்.* 1929.

தொல்காப்பியம், சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, *சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன், கழக வெளியீடு, சென்னை.* 1963.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, *தேவநேயப் பாவாணர் குறிப்பு உரையுடன் - பூவராகப் பிள்ளை விளக்கவுரை இணைப்புடன், கழகப் பதிப்பு. சென்னை.* 1966, 1970.

தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் உரை *கணேசையர் விளக்கவுரையுடன், சுன்னாகம், முதல் பதிப்பு,* 1938, *இரண்டாம் பதிப்பு,* 1955.

தொல்காப்பியம் மசால்லதிசாரம், சேனாவரையர் உரை *சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, அண்ணாமலைநகர்.* 1961.

தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் உரை *கோமளபுரம், இராசகோபால் பிள்ளை பதிப்பு,* 1867.

தொல்காப்பியம், சொல்லதிகார உரைக்கோவை, *முதற் பாகம்: பதிப்பாசிரியர்கள், ஆபிரகாம் அருளப்பன் & வி. ஐ. சுப்பிரமணியம், திருநெல்வேலி,* 1963.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கல்லாடனார் உரை. *சுந்தரமூர்த்தி விளக்க உரையுடன், கழகப்பதிப்பு, சென்னை.* 1964.

தொல்காப்பியம், பொருளதிகாரம் பேராசிரியர் உரையுடன்.
*கழக வெளியீடு, சென்னை.* 1972.

நன்னூல் மூலமும் உரையும்,
*மயிலைநாதர் உரை, உ,வே.சா. பதிப்பு, சென்னை.* 1946

நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும்,
*உ வே.சா. பதிப்பு, சென்னை,* 1953.

நன்னூல் விருத்தியுரை,
*சங்கர நமச்சிவாயர் இயற்றி சிவஞானமுனிவர் திருத்தியது கழக வெளியீடு, சென்னை.* 1974.

பிரயோக விவேகம் மூலமும் உரையும்,
*சரசுவதி மகால் நூல் நிலையப் பதிப்பு,*
*தி. வே கோபாலையர், தஞ்சாவூர்.* 1979.

## இலக்கியம்

அப்பர் தேவாரம்.
*சொக்கலிங்கத்தம்பிரான் பதிப்பு, தருமை ஆதீனம். தருமபுரம்.* 1957.

கம்பராமாயணம்,
*வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி பதிப்பு, சென்னை.* 1971

சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்குநல்லார் உரையும்,
*உ, வே. சா. பதிப்பு, சென்னை.* 1968.

திருக்குறள் உரைவளம்,
*அறத்துப்பால் – தண்டபாணிதேசிகர் பதிப்பு, தருமபுரம்.* 1950.

திருத்தொண்டர் புராணம் மூன்றாம் பகுதி இரண்டாம பாகம்,
C. K. *சுப்பிரமணிய முதலியார் உரையுடன், கோயம் புத்தூர்.* 1954.

திருவாசகம்,
*ப. இராமநாத பிள்ளை விளக்க உரையுடன், கழக வெளியீடு, சென்னை.* 1976.

நாலாயிர திவ்யப பிரபந்தம்.
*மயிலை மாதவதாஸன் பதிப்பு, சென்னை. 1950.*

நேயர்விருப்பம்,
*அப்துல்ரகுமான். அகரம், சிவகங்கை. 1978.*

பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை,
*பண்டிதர் சு, அருளம்பலவனார் இயற்றியது, யாழ்ப் பாணம். 1960.*

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு,
*உ. வே. சா. பதிப்பு, சென்னை. 1952.*

# COLLILAKKAṆAK KO:ṬPA:ṬU

# 1

## (GRAMMATICAL THEORIES)

## TOLKA:PPIYAM - I PART

by

*S. V. SHANMUGAM*

1. TOLKA:PPIYAR'S CONCEPT OF 'COL'
2. CLASSIFICATIONS OF WORDS
3. GENDER-NUMBER CLASSIFICATION
4. COMMON CLASS